# ஊழியம் மற்றும் தலைமைக்கான பயிற்சி

நிலை: Pastor

பாடப் தலைவர் : 11

**<u>நிலைகள்:</u>**



5. ஊழியர்
4. தலைவர்
3. கிறிஸ்தவ தலைவர்
2. சீடர்
1. Beginner

# ஊழியம் மற்றும் தலைமைக்கான பயிற்சி

**<u>நோக்கம்</u>**

- **உண்மையான ஒரே கர்த்தரை அறிந்து கொள்ள**
  (வளருதல் / பக்குவம் அடைதல்)

  - யோசுவா 1:8, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்."

  - 2 பேதுரு 3:18 "நம்முடைய **கர்த்தரும்** இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

  - 2 தீமோத்தேயு 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

  - கொலோசெயர் 1:27-28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

- மற்றவர்களும் அவரை அறியச் செய்தல்
  (பெருகுதல் / உருவாக்குதல்)

  - 2 தீமோத்தேயு 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

  - 2 தீமோத்தேயு 3:16-17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளயிருக்கிறது."

  - எபேசியர் 2:10, "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

  - 2 பேதுரு 1:8, இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது.

(அறிவிலே பெருகுதல்; நடத்தையிலே பக்குவமடைதல்; ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துதல்)

**பொருளடக்கம்** பாடப்புத்தகம் எண்:11

- ஒரு பிரசங்கத்தையோ அல்லது வேதாகம பாடத்தையோ ஆயத்தம் செய்வது எப்படி (5 அதிகாரங்கள்)
  (புத்திமதிகள், ஏட்டுப் பிரசங்கம், விளக்கமளிக்கும் பிரசங்கம், வரலாற்று பிரசங்கம், பிரசங்கிப்பவர்)

- பிரசங்கத்தையும் பாடங்களையும் ஆயத்தம் செய்வது எப்படி (4 அதிகாரங்கள்)
  (நீங்கள் ஏன் முன்கூட்டியே திட்டமிட வேண்டும், முன்கூட்டியே திட்டமிடுவது எப்படி, ஆராய்வதற்கு நேரத்தையும் இடத்தையும் தேர்ந்தெடுங்கள், உங்கள் பிரசங்கத்தையோ அல்லது பாடத்தையோ ஆயத்தம் செய்தல்)

- நம் கர்த்தராகிய இயேசு மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் ஆகியோரின் பாடங்களை போதித்தல்
  (பிரசங்கிக்கவும் படித்துக்கொடுக்கவும் தேவையான அடிப்படை கட்டுரைகளுக்கான உதவிகள்)

- நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளும் விளக்கங்களும்

- இயேசு கிறிஸ்துவின் உவமானங்கள்

- இயேசு கிறிஸ்துவின் அற்புதங்கள்

- வேதாகமத்திலே கூறப்பட்டுள்ள முதலாவது காரியங்கள் (அவற்றின் முக்கியத்துவமும் அவசியமும்)

- பிரபலமான வேதாகம பாத்திரங்களும் அவர்களுடைய பெயர்களின் பொருளும்

- வேதாகமத்தின் பொன் அதிகாரங்கள் (ஆராய்வதற்காகவும் தியானிப்பதற்காகவும்)

# ஒரு பிரசங்கத்தை அல்லது வேத பாடத்தை ஆயத்தம் செய்வது எப்படி?

## அதிகாரம் 1 - பிரசங்க இலக்கியம்

தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தல் என்பது மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்ட சலுகைகளில் மிகவும் பிரதானமானது. மேலும் அது மகத்தான பொறுப்புகளில் ஒன்றுங்கூட தேவனுடைய பைத்தியம் எனப்படும் பிரசங்கத்தின் (I கொரி 1:21) மூலமாக தேவன் தம்மை மனிதர்களுக்கு வெளிப்படுத்த சித்தமானார். இந்த தேவனுடைய ஞானமானது மனிதரை கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் விசுவாசத்தினாலே நித்திய இரட்சிப்புக்குள் நடத்தி செல்கிறது. அது அவர்களை தேவனுடைய சாயலாகவும் அவருடைய ரூபத்திலும் மறுரூபம் அடையச் செய்கிறது. (II கொரி 3:18) அதற்கு போதுமான பிரசங்கமும் போதிக்கும் ஊழியமும் கூடிவரும் சபையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அத்தியாவசியமானவை ஆகும்.

## A. பிரசங்க இலக்கியம் என்றால் என்ன?

பிரசங்கிக்கும் கலையே பிரசங்க இலக்கியம் (Homiletics) என்பதாகும். அது homileo என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வந்ததாகும். Homileo என்பது "கூட்டத்தில் இருந்து" என்று அர்த்தம் கொண்டு அதாவது சம்பாஷிக்க அல்லது தொடர்பு கொள்ள என்று பொருள்படும்.

அப் 20:11 homileo என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஜீவனுள்ள வேதாகமம் என்பதில் எவ்வாறு மொழிபெயர்க்கப்ப பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும். பின்பு அவர்கள் ஏறிப்போய் "அப்பம் பிட்டு, புசித்து விடியற்காலமளவும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து பின்பு புறப்பட்டான்". பவுல் இன்னொரு நீண்ட பிரசங்கம் செய்தான்.

பிரசங்க இலக்கியம் என்பது பிரசங்கம் செய்தல், தூது கொடுத்தல் ஆகிய பிரசங்கம் செய்யும் கலையோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றையும் குறிக்கும். நல்ல பிரசங்கங்கள் (பேச்சின் மூலம்) தொடர்பு கொள்ளுதல் என்பது நல்லதான பகிர்ந்தளித்தலோடு கூடிய ஐக்கியத்தில் பிறக்கிறது.

ஆகவே பிரசங்கம் செய்வதில் இருவகைத் தனிப்பட்ட இயல்புகள் அடங்கியுள்ளன. முதலாவதாக- தெய்வீகமான இரண்டாவதாக மனுஷீகமான அம்சங்களாகும். பிரசங்கம் செய்தல் (Homiletics) என்பது மனுஷீக அம்சத்தைப் பற்றிய படிப்பாகும்.

## பிரசங்கம் செய்வதில் செயலூக்கத்துடன் ஈடுபடுவது எப்படி?

பிரசங்கம் செய்வது என்பது தெய்வீக சத்தியத்தை மனுஷீகமான ஆள்தன்மை மூலம் பேச்சுத் தொடர்பு கொள்ளும் கலையாகும். ஒரு பிரசங்கியார் இன்றியமையாத தொடர்பு கொள்பவர் ஆவார். அவர் தேவனிடமிருந்து சத்தியத்தைப் பெற்றுக் கொண்டு அதை செயலூக்கத்துடன் மனிதர்களுக்குத் தொடர்பு படுத்துகிறார். தேவன் வெளிப்பாடு கொடுக்கிறார். மனிதன் அதை முன்வைத்து அறிமுகப்படுத்துகிறான்.

இதை நன்றாகவும் பயனுள்ள வகையில் செயலாற்றுவதற்கு அவன் சில காரியங்களை நன்றாகச் செய்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

## 1. கர்த்தருக்காக காத்திருத்தல்.

முதலாவதாக அவன் தேவனிடம் எப்படிக் காத்திருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அந்த பிரசங்கம் செய்பவர் தேவனுடைய சமூகத்தில் எப்படி அமர்ந்து காத்திருக்க வேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டு தன்னுடைய சொந்த ஆவிக்குள் தேவன் பேசும் சப்தத்தையும் பிரித்தறிய வேண்டும்.

எந்த விதமான போதனையும், தத்துவமும் பயனுள்ளதுமான நீண்ட செய்திகள் தேவனுடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் தொடங்குகிறது. ஏனென்றால் அவரே எல்லாவிதமான சத்தியத்திற்கும் நதி மூலமானவர். அவரே சகல அறிவுக்கும் சுரக்கும் ஊற்றனானவர். இந்த செயலூக்கமுடைய பிரசங்கியாரின் முதலாவது கடமையாவது தேவனுடைய யோசனைகளை எப்படி பெற்றுக்

கொள்வதென்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். தெளிவான கர்த்தருடைய சப்தத்தை மிக ஆபூர்வமாகவே அவரால் கேட்க முடியும்.

தெய்வீகமான சத்தியம் அவரது ஆவியில் அமைதியாக இறங்கி வரும், காலைப் பனியைப் போல, அந்த வருங்காலத்து பிரசங்கியார் கட்டாயமாக தேவனுடைய சமூகத்தில் அமர்ந்து காத்திருக்க வேண்டும். தேவன் தம்மோடு தளரா உழைப்போடு தேடுபவர்களுடன் எப்பொழுதுமே பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கும் விலையேறப் பெற்ற சிந்தனைகளையும், சத்தியங்களையும் காத்திருக்கும்பொழுது பெற்றுக் கொள்வார். தேவனோடு அவரது சமூகத்தில் நேரத்தைக் கழிப்பதை ஓர் பழக்கமாக ஏற்படுத்திக் கொள்வது நல்லது. ஒவ்வொரு நாளிலும் ஒரு சிறு பகுதி நேரத்தை தேவனுடைய சமூகத்தில் செலவழிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. ஒவ்வொரு நாளிலும் ஒரு சிறு பகுதி நேரத்தை தேவனுடைய சமூகத்தில் வந்திருந்து அவருக்காகப் பொறுமையுடன் கர்த்திருப்பதற்கென்று ஒதுக்கி விடவேண்டும். ஆகவே நீவிர் வெகு விரைவில் தேவனுடைய சப்தத்தை உங்களது ஆவியினுள் பேசுவதை எப்படி தெரிந்து கொள்வது என்பதைக் கற்றுக் கொள்ளலாம்.

நாம் தேவனுடைய சமூகத்திற்குள் ''ஒரு பிரசங்கத்தைக் கற்றுக் கொள்ளலாம்'' என்ற நோக்கத்தோடு போகக் கூடாது. நாம் கர்த்தருடைய சமூகத்தில் போயிருந்து முதலாவதாக நம்மை ஒழுங்காகத் தவறாது அவருடைய பரிசீலனைக்கும் ஆலோசனைகளுக்கும் நம்மை வெளியில் காண்பிக்க வேண்டியது அவசியமாகும். அவருடைய பிரசன்னத்திற்குள் அடுத்த நாளுக்கென்று ''ஒரு பிரசங்கம் தேவை'' என்பதால் அவசரப்பட்டு செல்வது நிச்சயமாகவே கர்த்தருடைய ஆச்சரியமான சத்தியங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதோர் இருதயத்தின் தன்மையாகாது. நாம் சத்தியத்தை அதனுடைய பாதிப்பை நம்மில் காட்டும்படி அதற்கு ஓர் சந்தர்ப்பத்தை அளித்து நாம் பிறருடன் அந்த சத்தியங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்னதாக அதை அனுமதிக்க வேண்டும்.

## 2. வேதாகமத்தைப் படித்துக் கற்றுக் கொள்ளுதல்

இந்த பிரசங்கியார், தன்னுடைய வேத புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு தேவனுக்கு முன்பாக வர வேண்டும். இந்த விதமாக தேவனுக்கு முன்பாக பொறுமையுடனும், அமைதியுடனும் அமர்ந்து காத்திருக்க கால நேரத்தை வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய வசனத்தின் மீது ஆவிக்குரிய அக வெளிச்சத்தையும் அகத் தூண்டுதலையும் தரும்படி கேள். ஜெபத்துடன் ஆலோசனைக்காகவும் ஞானத்திற்காகவும் கற்பித்து வழிகாட்டுதலுக்காகவும் இவற்றிக்காக தேடி பெற்றுக் கொள். வேதாகமத்தை உன் முன் விரித்து வைத்து அவருடைய சமூகத்தில் அமர்ந்து அதைப் படி.

சில சமயங்களில் ஒரு ஒழுங்கான நடைமுறையில் பின்பற்றி வருவது நல்லது. நீ முந்தின நாள் படித்து நிறுத்தி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து படிக்கவும். இது உன்னை ஒரே சீராக வேதாகமத்தை படித்து வர உதவுகிறது. அங்கே இங்கே என்று படிப்பதற்கு பதிலாகவும், வேதாகமத்தின் பெரிய பகுதிகளை வீணாகப் புறக்கணிப்பதையும் தவிர்க்கிறது. மற்ற நேரங்களில் நீ பரிசுத்த ஆவியானவரின் தூண்டிப் பேசுதலுக்காக காத்திருந்து எங்கு படிக்க வேண்டும் என்பதை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த வழியில் சென்றால் நீ பாதையை தவறவிட வேண்டியதில்லை.

## 3. ஒரு குறிப்பு நோட்டுப் புத்தகத்தை கையகத்தே வைத்திரு.

ஒரு நோட்டுகப் புத்தகத்தில் தேவனுக்கு முன்பாக அமைதியாக அமர்ந்து காத்திருக்கும் நேரத்தில் உன் மனதில் வெளிப்படுத்தப்பட்டு வரும் சிந்தனைகளையும், கருத்துக்களையும் குறித்து வைத்துக் கொள்வதற்கு அவசியமானது. இந்த யோசனைகள் உன் மனதில் புதிதாக இருக்கும்பொழுதே குறித்து வைக்கப்படாவிட்டால் இந்த ஆச்சரியமான சத்தியத்தை ஒருவர் எவ்வளவு சீக்கிரம் மறந்து விடக்கூடும் என்பது ஆச்சரியமானது. நீ ஜெபத்துடன் வேதாகமத்தைப் படித்து வரும்பொழுது உன் மனதில் எழும்பும் விசேஷ குறிப்புள்ள பகுதிகளை எழுதி வைக்கும் பழக்கத்தை அப்பியாசித்து கொள்ளவும். ஒரு சிறப்புத் தலைப்பு தானாகவே உன்னில் தோன்றுமானால் அதை நீ எவ்வளவு தூரம் பின்பற்றிப் போகமுடியுமோ அவ்வளவு தூரம் பின்சென்று, அந்தத் தலைப்பின் மீது உனக்குத் தோன்றும் எல்லாவற்றையும் குறித்து எழுதி வைக்கவும். இந்த விதமான வழியில் நீ வெகுவிரைவில் பிரசங்கத்திற்கான கருப்பொருட்களை ஒட்டு மொத்த மூலமாக அபிவிருத்தி செய்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த நோட்டுப் புத்தகத்திலுள்ளவற்றை ஏதாவது ஒரு தடவை ஊன்றி ஊடுருவிப் படிக்கவும். இதனால் உனது சிந்தனைகள் உன்னுடைய இருதயத்தில் விரிந்து மலரும். மேலும் சில சிந்தனைகள் உன் இருதயத்திலே வாரங்களாக தொடர்ந்து ஆக்ரமித்து நிற்கும். நீ அதைத் தியானம் செய்யச் செய்ய தொடர்ந்து விரிந்து கொண்டே போகும். தேவனுடன் அவருடைய வார்த்தையைப் பற்றிப் பேசும் பழக்கத்திற்குள் வந்து விடு. நீ சமயங்களில் விளங்கிக் கொள்ள முடியாத காரியங்கள் இருக்குமானால் பரிசுத்த ஆவியானவரிடம் அதனுடைய அர்த்தத்தை வெளிப்படுத்துமாறு கேட்கவும். மேலும் வெளிப்படுத்தும் ஆவியைக் கேட்டுப் பெற்றுக் கொள். (எபேசியர் 1:17).

தேவன் மெதுவாக அதற்கான விடைகளை உன்னுடைய ஆவியில் திருப்பும் வேளையில் தேவனுக்கு முன்பாக அமைதியாகவும் பொறுமையாகவும் காத்திருந்து கற்றுக் கொள்ளவும். அவைகள் உன் மனதில் தோன்றும் பொழுது அவ்வண்ணமே குறித்து வைத்துக் கொள். உன் நோட்டுப் புத்தகத்தில் அந்த சத்தியத்தை எழுதி வை. அதை உன் ஞாபகத்திற்கு நம்பி விட்டு விடாதே. மேலும் சிறந்த ஞாபக சக்தி கூட அந்த விஷயங்களை எழுதி வைத்துக் கொள்வதால் பலப்படுத்தப்படும்.

## 4. தேவனுடைய வார்த்தை (வசனம்)யால் சுத்திகரிக்கப்படும்.

தேவனிடமிருந்தே வார்த்தையைத் தேடும் மனப்பான்மையையும் அதை ஓய்வு நாள் காலையில் பிரசங்கம் செய்யலாம் என்பதையும் தவிர்த்து விடு. ஆகவே எப்பொழுதுமே ஆவிக்குரிய குண்டுகளுக்காகத் தேடி பார்த்துக் கொண்டு அவைகளை யாராவது ஒருவர் மேல் குறிபார்க்கலாம் என்பதையும் விட்டு விடு. உன் சொந்த இருதயத்தின் முதன்மையான தேவைகளைக் கண்டு தீர்மானம் செய்து அறிந்து கொள். தேவன் தம்முடைய வசனத்தின் மூலமும் பரிசுத்த ஆவியினாலும் உன் இருதயத்தில் கிரியை செய்யட்டும். கர்த்தருடைய வசனம் முதலாவதாக உன்னைக் கழுவி சுத்திகரிக்கட்டும்.

தேவன் சுத்திகரிப்பின் வழியைப் பற்றி உன்னுடன் என்னத்தைப் பகிர்ந்து கொண்டார் என்றும் தன்னை சீர்திருத்திக் கொள்ளும் வழியைப் பற்றியும் பேசுவது ஓர் நேர்த்தியான நல்ல பிரசங்கம் ஆகும். நீ உன்னுடைய ஆத்துமாவை போஷித்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. பிரசங்கிமார்கள் தவறி விழுந்து விடக் கூடிய பொறிகளில் ஒன்று, அவர்கள் தங்களது கூடிவரும் சபைக்காக ஆகாரத்தை தேடுவதில் மிகவும் முனைந்து இருப்பதால் தங்களது ஆத்துமா ஆவிக்குரிய நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இது ஊழியத்தில் ஏற்படக் கூடிய விபத்துகளில் ஒன்றாகும். இதன் சிந்தனை சாலோமோனுடைய உன்னதபாட்டில் இவ்விதமாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ''என்னைத் திராட்சத் தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள்'' என் சொந்த திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை (உன்னதபாட்டு 1:6).

சில சமயங்களில் ஒரு போதகர் தனது (சபையின்) மந்தையின் ஆவிக்குரிய நலனைக் குறித்து ஈடுபாடு கொண்டிருப்பார். அதனால் தனது ஆவிக்குரிய நலனையோ பரிதாபமாக புறக்கணிப்பார். இது போன்ற ஒரு முக்கியமான காரணத்தால் ஊழியர்கள் தோல்வி அடைவார்கள். ஒரு போதகர் தனது ஆவிக்குரிய நலனை எக்காரணத்தைக் கொண்டும் புறக்கணிக்கக் கூடாது. ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாய் இருப்பதாக'' (கொலோ 3:16a) அது உன்னுடைய சொந்த ஜீவியத்திலும் அனுபவத்திலும் வல்லமையாக வளர்வதாக. ஆகவே பின்னர் நீ பிரசங்கம் செய்யும்பொழுது அனுபவத்தின் மூலமாக ஊழியம் செய்வாய். ஆதலால் நீ ஏதோ ஒரு சமயக் கோட்பாட்டைப் பற்றி பேசுபவராக இல்லாமல் நீ, நீயாகவே பூரணமாக மனதளவில் புரிந்து கொண்டும் அனுபவத்தில் கண்டறிந்ததுமான காரியங்களை பகிர்ந்து கொள்வதாகும்.

பின்வரும் வாக்கியங்கள் இதைக் கற்பிக்கின்றன. பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்தி பங்கடைய வேண்டும். (II தீமோத் 2:6) நீயாகவே நட்டதும் அறுவடை செய்ததும் (ஆவிக்குரிய பிரகாரமான கருத்தில்) நீ முதலில் அதில் பங்கு பெற்று (அனுபவத்தில்) மற்றவர்களுக்கு அதைப் போஷிக்கு முன் செய்ய வேண்டும். நீ முதலில் சாப்பிட்டு ருசிக்காத ஒன்றைக் கொண்டு மற்றவர்களைப் போஷிக்கக் கூடாது. நீ முதலாவதாக நீயாகவே நடந்து செல்லாத வழிகளிலும் சோதனைகளிலும் மற்றவர்களை நடத்திச் சென்று வழிகாட்ட முயற்சிக்கக் கூடாது.

தேவனுடைய வசனம் உன்னில் உருவாகும் பொழுது (உனக்குள் வாசம் செய்யும் பொழுது) நீ தேவனிடமிருந்து வரும் செய்தி ஆவாய். நீ பிரசங்கங்களை மட்டுமே பேசும் ஒருவனாக இல்லாமல், தன்னுடைய ஜீவியமும் வாழ்க்கை நெறியும் ஊழியத்தில் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் பலத்தையும் உன்னை அறிந்தவர்கள் நீ பேசுவதை கேட்கும் பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

## B. இந்த பிரசங்க இலக்கியத்தை (Homileticss) பற்றி பொய்யான சில கருத்துக்கள்.

இந்த பிரசங்க இலக்கியத்தைக் குறித்து மக்கள் செய்யக் கூடிய ஏறக்குறைய நான்கு பொதுவான தவறுகள் உண்டு.

### 1. "ஆயத்தம் செய்வது அவசியமல்ல"

முதலாவதான இந்த தவறான கருத்தாவது பிரசங்கம் செய்வதற்கு ஆயத்தம் செய்வது அவசியமல்ல என்பதாகும். அது விசுவாசக் குறைவை சுட்டிக் காண்பிக்கிறது. இந்த விதமான பார்வையின் பக்கம் சாயும் மக்கள் கொண்டுள்ள அபிப்ராயமாவது உண்மையான விசுவாசமானது மனதை ஆயத்தம் செய்யும் எந்த விதமான முயற்சியை வெறுத்து ஒதுக்கித் தள்ளுகிறதென்றும் பிறகு ஜனங்களாலாகிய சபைக்கு முன்னால் சும்மா நிற்க வேண்டும் என்றும், அச்சமயத்தில் தேவன் தாமே பேச வேண்டிய வார்த்தைகளைத் தருவார் என்பதாக உணருகிறார்கள். இதைப் பற்றிய அவர்களுக்கு விருப்பமான வேதாகம வசனமாவது (சங் 81:10) "உன் வாயை விரிவாய் திற. நான் அதை நிரப்புவேன்" என்பதாகும். இந்த சங்கீதத்தின் சந்தர்ப்பமானது இந்த வசனம் பிரசங்கம் செய்வதோடு எந்தவித சம்பந்தத்திலும் ஒன்றும் செய்வதற்கில்லை என்றும் வெளிப்படுத்துகிறது. இந்த மாதிரியான ஆட்களுக்கு வேதாகம சம்பந்தமான பகுதியைப் புறக்கணிப்பது அவர்களுக்கே உரித்தான போக்கு ஆகும். அது ஒரு பொறுப்பற்றதும் சூதற்ற எளிமையான மனப்போக்கையேக் காட்டிக் கொடுக்கிறது. இந்த வகையான நபர் அடிக்கடி முட்டாள் தனத்தையே பேசுவதாக அறியப் படுகிறார்கள். நாம் தேவனை அந்த மனுஷனுக்காகப் பழி சொல்ல விரும்ப மாட்டோம். அங்கே சந்தேகமின்றி அகத் தூண்டுதலுக்காக ஓர் இடம் இருக்கிறது. மேலும் அங்கு நியாயமானதோர் இடம் ஆயத்தம் செய்வதற்கும் இருக்கிறது.

### 2. "மனுஷீக பலமே (சக்தியே) போதுமானது"

இரண்டாவது வகையான தவறு ஏறக்குறைய வரம்புக்கு மீறிப் போகிறது. இந்த சமயத்தில் பூரணமானதோர் நம்பிக்கை வைக்கப்படுகிறது. மனுஷீக பெலத்தின் மேல் பரிசுத்த ஆவியானவர் பேரில் சிறிதளவோ சார்ந்திருப்பதில்லை. ஆனால் இயற்கையான திறமை பயிற்சியின் காரணமாகவும், முன்னேற்றத்தின் காரணமாகவும் தன்னம்பிக்கையைத் தருகிறது. அத்தகைய பயிற்சி நிச்சயமாக ஒரு கவர்ச்சி மிகுந்த சந்தேகத்தை நீக்கக்கூடிய பேச்சைத் தரலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் அந்த தூதுகளின் பேரில் இறங்கினால் மாத்திரமே அந்த செய்திகள் கர்த்தருடைய ஜீவனை மக்களிடையே பொழிய முடியும்.

உண்மையாகவே ஒரு செயலூக்கமான ஊழியத்தில் தெய்வீகமானதும் மனுஷீகமானதுமான இருவகை அம்சங்களும் தேவையாக இருக்கிறது. நிச்சயமாகவே தேவன் தாமே சுறுசுறுப்பான ஜெபத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகவும் கவனத்துடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் கூடியதோர் செய்தியை ஆசீர்வதித்து அபிஷேகம் செய்வார். உன்னுடைய பிரசங்கத்துக்குரிய ஆயத்தமானது ஆழ்ந்த சிந்தனையுடன் கூடியதாகவும் தளரா ஊக்கமான ஜெபத்துடனும் செய்யப்படட்டும். உன்னுடைய பிரசங்க ஆயத்தமானது ஆழ்ந்த சிந்தனையுடைய ஆயத்தமாகவும் ஊக்கமான ஜெபத்துடன் இருக்கட்டும். உனக்குள்ள சிறந்ததையுடையவனாக இருக்கும்படி தீர்மானித்துக் கொள். ஆயினும் உன்னுடைய நம்பிக்கை உன்னிடத்தில் அல்ல தேவனிடத்தில் இருக்க வேண்டும். எப்பொழுதுமே தேவனுடைய இன்றியமையாத அபிஷேகமும் ஆசீர்வாதமும் உன் பிரசங்கத்தின் மேல் இருக்க வேண்டுமென்று அவரையே நம்பியிருப்பாயாக.

### 3. அந்த பிரசங்க இலக்கியம் ஆயத்தமாக்கப்பட்ட பிரசங்கங்களுக்காக வழிவகை செய்கிறது.

சில பிரசங்கிமார்களிடையே இந்த பிரசங்க இலக்கியத்தின் கொள்கைகளை ஒரு தடவை புரிந்து கொண்டால் இது அவர்களை அதற்காக படிக்கும் பணியிலிருந்து தளர்த்தியும் மேலும் அவர்கள்

எப்பொழுதும் விரைவாக ஊக்கமான செய்திகளையும் பிரசங்கங்களையும் ஆயத்தம் செய்யக் கூடிய திறமைகளைப் பெறுவார்கள் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் பிரசங்க இலக்கியம் என்பது அவ்வளவு சீக்கிரமாகவும், எளிதாகவும் பிரசங்கங்களை ஆயத்தம் செய்யும் வழிமுறை அல்ல. மேலும் தளரா உழைப்புடன் கூடிய படிப்புடனும் ஆயத்தத்தின் அவசியத்தையும் அகற்றி விடுவதில்லை. அது மிகவும் அந்த தூது அல்லது செய்தியின் பொதுக் கருத்தை மிகையின்றி எளிதாக்குவதுடன், உன்னுடைய சபையினர் கேட்டு அதைத் தொடர்ந்து புரிந்து கொள்ளக் கூடியதோர் வகையில் அதை விரிவுபடுத்த உறுதி செய்கிறது.

### 4. அதற்கு தேவையானதெல்லாம் நீண்ட பிரசங்கத்தைப் பற்றிய பிழையற்ற சரியான அறிவு மாத்திரமே.

ஒரு பிரசங்கமானது நன்றாக சிந்தனையுடனும் சரியாக ஆயத்தம் செய்யப்பட்டிருந்தாலும் அதை செயலூக்கமுடையதாகவும் பெருக்கமடையச் செய்யக்கூடிய தன்மைகளில் குறைவு பட்டிருக்கலாம். Homiletics என்பது மனுஷன் சம்பந்தப்பட்ட பிரசங்கத்தின் ஆயத்தமாகும். ஆனால் அதற்கு தெய்வீகம் நமக்குத் தேவை. இந்த தெய்வீகம் இல்லாவிட்டால் நமது பிரசங்கம் மனுஷீகமாகவும் வல்லமை அற்றதாகவும் இருக்கும். நாம் பிரசங்கம் செய்வதில் அதிகமான கெட்டிக்காரர் ஆகும்பொழுது நாம் தேவனுடைய உதவிக்காகவும் அபிஷேகத்திற்காகவும் தேவனைச் சார்ந்திருத்தல் குறைவாக இருக்கும். இது நம்முடைய ஊழியத்தை மனித செல்வாக்குடையதான அளவிற்கு (மட்டத்திற்கு) குறைத்து விடும்.

## C. பிரசங்க ஆயத்தத்தின் மேல் தாக்கத்தையுடைய சில ஏதுவான காரணங்கள்.

- நீ யாருக்காக பேசுகிறாய்?
- அந்தக் கூடிவரும் கூட்டத்தின் நோக்கம் என்ன?
- அங்கு யாரெல்லாம் கூடி இருக்கக் கூடும்?
- அதற்காக சிறப்பான பண்பான அம்சங்களும் தேவைகளும் இருக்கிறதா?

## D. பிரசங்கங்களில் ஆறு வகையானவை.

1. **சுவிசேஷ பிரச்சாரமானதாக**, இரட்சிப்பையும், சொஸ்தமாக்குதலையும் அழுத்தம் தந்து உணர்த்தல்.
2. **பக்தியுடன் ஈடுபாடுடையதாக**, ஜனங்களை தாங்கள் தேவன் பேரில் கொண்ட அன்பில் தூண்டி எழுப்புதல்
3. **மேய்ப்பனுக்குரிய ஈடுபாடு**, ஆத்துமாக்களின் நலன் சார்ந்ததும் அதற்கு சம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்த்தல்
4. **தத்துவ போதனைக்குரிய**, கிறிஸ்தவ ஜீவயத்தின் நல்லொழுக்க நெறிகளையும் கொள்கைகளையும் அழுத்திப் பேசுதல்.
5. **அறநெறிக்குரிய**, கிறிஸ்தவ வாழ்க்கையின் அறநெறிகளையும், தத்துவங்களையும் வலியுறுத்துகிறது.
6. **சிறப்பான சந்தர்ப்பங்களுக்காக**, நிகழ்ச்சிகள் திருமணம், அடக்க ஆராதனைகள், ஞானஸ்நானம் முதலியன

## E. பிரசங்க இலக்கியத்தின் நான்கு இடைபடும் பகுதிகள்

பிரசங்க இலக்கியம் சம்பந்தப்படும் 4 பெரிய இடைபாட்டு பகுதிகள் உள்ளன.

### 1. பொதுக் கருத்து

இந்தப் பகுதி செய்தியின் மூலத் தோற்றத்து அகப்பொருளை பெற்றுக் கொள்வதைச் சார்ந்தது. அது தேவனிடமிருந்து ஒரு செய்தியை தலைப்பை எப்படித் தெரிந்து கொள்வது என்ற கலையாகும். அதற்காக எவ்வாறு ஆரம்பக் கருத்துக்களையும் செய்திக்கான கருப்பொருளையும் பெற்றுக் கொள்வது என்பதைப் பகிர்ந்தளிப்பதாகும். அடிக்கடி சிந்தனை வித்துக்கள் மனதில் விதைக்கப்படும். இவற்றில் பல இருதயத்திலே பல மாதக் கணக்காக வேரூன்றி தங்கி இருந்து மற்றவர்களுடன் பகிர்ந்து

கொள்ளக் கூடிய பரிமாணத்திலும் அளவிலும் வளர்ந்து விடுகிறது. அனுபவத்தின் மூலமாக ஒருவர் சத்தியத்தை தேவனுடைய மக்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய மார்க்கத்தைக் கண்டறியக் கூடிய திறமையை விருத்தி செய்து கொள்ளக் கூடும்.

நீவிர் கர்த்தருடைய வார்த்தையை தியானிக்கும் பொழுது அங்கே ஒரு குறிப்பிட்ட அம்சத்தின் உள்ளணர்வுத் தூண்டுதல் ஏற்படக்கூடும். ஏதோவொன்று தீடீரென உனக்காகப் பிரகாசிக்கிறது. அது ஏறத்தாழ பக்கங்களிலிருந்து குதித்து வருவதுபோல் தோன்றும் திடுக்கென ஒரு அகத் தூண்டுதல் உனக்குள் வரும். அது நீ ஒரு தங்கக் கட்டியை கண்டெடுத்தது போல் ஆகும். நீ அதை உடைத்துத் திறந்து அதன் மதிப்பை ஆராய்ச்சி செய்யும்படி தரித்திருந்து காத்திருக்க முடியாதிருக்கலாம்.

## 2. அதில் அடங்கியுள்ள துணை இயல்புகள்

ஒரு குறிப்பிட்ட சத்தியத்தின் பேரில் அகத் தூண்டுதல் எழுச்சி பெற்றால் நீ அதை ஆராயத் தொடங்கி பிரித்தெடுத்து அந்த சத்தியத்தில் எதெல்லாம் அடங்கியிருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்கத் தொடங்க வேண்டும். இங்கேதான் உன் குறிப்பு நோட்டுப் புத்தகத்தின் அவசியமான முக்கியத்துவம் இடம் பெறுகிறது. நீ ஜெபத்துடன் தியானத்தில் கொண்டு உன் மனதில் வருகின்ற ஒவ்வொரு சிந்தனையையும் கவனத்துடன் எழுதி வைப்பாயாக.

இந்த சமய மட்டத்தில் அந்த பொருள் தலைப்பு உன் மனதில் ஏற்படுத்தும் ஒவ்வொரு கருத்துக்களையும் சாதாரணமாக நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைக்கவும். அந்த தியான சிந்தனையோடு நீ நிடித்து நின்று அந்த பொருள் தலைப்பு பற்றிய சிந்தனைகள் அனைத்தையும் அந்தத் தலைப்பில் பொதிந்திருக்கும் சத்தியத்தின் கூடுமானவரை எல்லா பகுதிகளையும் வெளிப்படுத்தப்பட்டது என்று நீ உணர்ந்த நிலைக்கு நீ வருமட்டும் அதில் நீடித்து நிற்கவேண்டும். இந்த மட்டத்தின் அளவில் அதனுடைய நேர்த்தியும் ஒழுங்கையும் பற்றிக் கவலைப்படாதே. நீ பெற்றுக் கொண்டிருக்கிற அகத் தூண்டுதலின் பிரவாகிக்கும் வேகத்தோடு நீ இணைந்து போக வேண்டியிருப்பதால் நீ அடிக்கடி விரைவாக எழுத வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நீ எல்லாவற்றையும் நோட்டுப் புத்தகத்தில் எழுதி விட்டாய் என்பதை மட்டும் நிச்சயப்படுத்திக் கொள். பின்னர் அதைப் பிரித்து வகைப்படுத்தலாம்.

## 3. கட்டடம் எடுப்பித்தல்.

உன்னுடைய கருப்பொருள் தலைப்பை முழுமையாக பிரித்து வகைப்படுத்திய பின்னர், நீ கண்டுபிடித்த அதன் உள் அடங்கிய சத்தியத்தின் தன்மைகளை அட்டவணைப்படுத்தியதற்கு பிறகு அந்த சிந்தனைகளை ஒழுங்கு முறையாக ஒருங்கிணைத்தல் வேண்டும். ஏனென்றால் இந்த பொருள் தலைப்புக்கு ஜெபத்துடன் கூடிய ஆழ்ந்த சிந்தனையைத் தரக்கூடும் என்பது மிகவும் அவசியமானதாகும். இந்த பொருள் தலைப்பை மற்றவர்கள் முன் பேச வைக்கும் பொழுது உனக்குப் பெரிதும் உதவும்.

இந்த தலைப்பின் பகுதிகளை ஒரு சரியான வரிசையிலும் முன்னேறுதலிலும் தொகுப்பதால் இந்த விதத்தில் இது உனக்கு அதிகமாக உதவக் கூடும். முன்னேறுதலான சிந்தனைகளை விரிவுபடுத்துதல் மற்றவர்கள் உன் பேச்சைத் தொடர்ந்து அதன் காரணகாரிய ரீதியில் புரிந்து கொள்ள உதவும். உன்னுடைய பேச்சின் முன் வைத்தல் ஏகமாக குழம்பி இருந்தால் அது மக்கள் உன் பேச்சின் செய்தியை கிரகித்துக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கும். பிரசங்கத்தின் கட்டுக் கோப்பானது அதை எவ்வளவு எளிதாக உனது சபை மக்கள் செவி கொடுத்துக் கவனிப்பவர்களுக்கு விளங்கிக் கொள்ள வைப்பது அதன் நோக்கமாகும். இதுவே பிரசங்கத்தைக் கட்டி எழுப்புவதன் சராம்சமாகும். பிரசங்கம் செய்யும் ஒவ்வொருவரும் இதை அப்பியாசித்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

## 4. செய்தி தொடர்புகள்.

கடைசியாக, நாம் செய்தியை அறிமுகப்படுத்தும் பகுதிக்கு வருகிறோம்.
சத்தியத்தின் மிகவும் தெளிவான செயலூக்கமுடைய செய்தி தொடர்பு வழியானது.

- செவி கொடுத்து கேட்பவர்களின் ஆத்துமாவையும் இருதயத்தையும் கையகப்படுத்தும் வகையில் உன் பொருள் தலைப்பை எப்படி அறிமுகப்படுத்தி வைப்பது?

- உன்னுடைய கேட்கும் பார்வையாளர்கள் மிகச் சுலபமாக நீ அவர்களுக்கு கொடுக்க விரும்பும் செய்தியாகிய சத்தியத்தின் எண்ணக் கோட்டை பின்பற்றி வருவதற்கேற்ப உன் சிந்தனைக் கோர்வையை ஒரு ஒழுங்கான போக்கில் கொண்டு வர அப்பியாசம் செய்வது எப்படி.
- அந்த கேட்டு கவனிப்பவர்களை தகுதியான மெய்ப்பாடுகளால் ஊக்குவித்து திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். (யாக் 1:22)

இந்த பொதுக் கருத்துக்களில் பிரசங்கம் ஆயத்தப்படுத்துவதற்கு இன்றியமையாத அம்சங்களை உள்ளே பெற்றுள்ளன. அவற்றைப் பற்றி முழுவதுமாக இந்தப் படிப்பின் பின் பகுதியில் பேசுவோம்.

## F. பிரசங்கம் ஆயத்தம் செய்வதில் மூன்று விதமானவை

### 1. எழுதப்பட்ட பிரசங்கங்கள்.

இந்த எழுதும் முறைக்கு ஆயத்தம் செய்வதற்காக அதிகமான கால அவகாசம் தேவைப்படுகிறது. அதற்காக மிகவும் ஏராளமான குறிப்புகள் தேவைப்படுகிறது. சில சமயங்களில் செய்தி முழுவதுமே முன்னதாக எழுத்தில் வடிவமைக்கப்படவேண்டும். பிரசங்கம் செய்பவருக்கு தாம் எதை மாத்திரம் சொல்ல விரும்புகிறார் என்பதும் எதை எப்படி சொல்வதற்கு விரும்புகிறார் என்பதும் தெரியும். ஒவ்வொரு சிந்தனையும் பூரணமாக எழுதப்பட்டு விடுகிறது. இதற்கு பல பக்கங்கள் குறிப்புகளுக்காக வேண்டியிருக்கும். மேலும் வாக்கிய அமைப்புகளுக்காகவும், சரியான வார்த்தைகளை உபயோகப்படுத்துவதற்காகவும் மிகுதியான கவனம் அளிக்கப்படும். பேசப் போகிற அந்த பிரசங்கத்தின் ஒவ்வொரு அம்சமும் அதிக நுணுக்கமான விவரங்களுடன் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

இந்த விதமான ஆயத்த முறைக்கு அனுகூலங்களும் பிரதி கூலங்களும் உண்டு. அதற்கு அனுகூலமாவது அந்த பிரசங்கம் முழுவதிலுமே எல்லா விவரங்களுக்கும் ஜாக்கிரதையான கவனமே முக்கியமான தலைப்பாக இருக்கிறது. இப்படியே அந்த இடத்திற்கு வேண்டியதான சத்தியத்திற்குட்பட்ட எல்லா பகுதிகளுக்குமே போதுமான விளக்க முறைகள் தரப்பட வேண்டும். எதையுமே சந்தர்ப்பத்திற்கு விட்டுவிட முடியாது. அதை முன் வைக்கும் பொழுது பேசும் பாணியானது பூரணமான சகலத்தையும் உட்படுத்தி பேசும் பொருளை தகுதியாக்க உறுதி செய்யவேண்டும்.

இந்த விதமான பிரசங்க பாணியின் பிரதி கூலமாவது அது அடிக்கடி ருசிகரமற்றதும் கேட்பவர்களின் கவனத்தை ஈர்க்காததுமாகிறது. இந்த விதமான பிரசங்கம் செய்யும் பாணியாவது எளிதில் மிகவும் சுவராஸ்யமற்றதாக ஆகிவிடும்.

### 2. எலும்புக் கூடு போன்ற குறிப்புகள்

இது பொதுவாக வழக்கில் பயன்படுத்தும் முறையாகும். இதுவே மிகவும் செயலூக்க பயனுடையதானதொன்றாகக் கருதுகிறேன். குறிப்புகள் குறைந்த அளவில் எடுக்கப்பட்டு, போதுமான செய்தி விளக்க குறிப்புகளைக் கொண்டு அவ்வப்போது ஞாபக சக்தியை தூண்ட பயன்படுகிறது. இந்தச் சுருக்கமான குறிப்புகள் செய்தியின் எலும்புக் கூடாக உருவாகிறது. இவைகள் தாமே அதற்கு வடிவமும் கட்டும் தரும் எலும்புகளாக பிரசங்கிப்பவர் சொல்ல விரும்பும் செய்திக்கு உகந்தளிக்கிறது. அவர் பேசும்பொழுது அதற்கு எலும்புகளின் மேல் சதையை வைத்து அந்த பிரசங்க தூதுக்கு ஒரு உடம்பாகிய வடிவத்தைத் தருகிறார். மேலும் அவர் அவரது சிறு குறிப்பு நோட்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டதும் அதனால் தூண்டி எழுப்பப்பட்ட சிந்தனைகளுக்கு விரிந்த விளக்கத்துடன் பேசுகிறார்.

இந்த பிரசங்க முறையானது பிரசங்கிப்பவருக்கு அதிகமான வளைந்து கொடுக்கும் தன்மையைத் தருகிறது. அவர் தமது நோட்டு புத்தகக் குறிப்புகளால் அதிகமாகக் கட்டப்படுவதில்லை. அவர் தாம் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் பொழுதே தனக்குள் அடிக்கடி வெளிப்படும் அகத் தூண்டுதல்களுக்கு அவருடைய பிரசங்கமானது மிகவும் திறந்து காட்டப்படுகிறது. அவரது பிரசங்கம் செய்யும் போக்காவது மிகுந்த இயற்கையானதாக வெளிப்பட்டும் அதில் அக்கறை உண்டாக்கக் கூடியதாகவும் அமைந்துவிடும். ஆனாலும் அந்த செய்தியின் அடிப்படையின் அமைப்பாவது, அவருடைய மனதை போகும் பாதைக்கு ஒருமுகப்படுத்துகிறது. அவரால் அந்த பிரசங்கத்திற்கு போதுமானதும் அந்த பேசும் தலைப்புக்கு நன்றாக சிந்தனை செய்து அனைத்துக்கும் விரிவாக்கம் தருவார். ஆனால் அவர் அந்த செய்தியை அறிமுகப்படுத்தும் விதமானது செவி கொடுத்துக் கேட்பதற்குக் கடினமானதாக இருக்காது.

## 3. அகத் தூண்டுதல் பெற்ற பிரசங்கம்

இந்த விதமான பிரசங்கம் செய்யும் பணியானது இயல்பாய் சொற்களால் தானாகவே வருகிறதும் மேலும் வழக்கமான குறிப்புகளின் உதவியின்றி பிரசங்கம் செய்யும்பொழுது முன்பாக அறிமுகம் செய்வதாகும். இந்த செய்தி தலைப்பிற்கு பல சமயங்களில் முன்னதாகவே மிகுதியான கவனமாக சிந்தனைகள் கொடுக்கப்படுகிறது. ஆகவே ஆத்துமாவிலும் இருதயத்திலும் செய்திக்கு இன்றியமையாத அம்சங்கள் நிரம்பி நிற்கின்றன.

இந்த விதமான பேசும் பாணி அதிகமான அகத்தூண்டுதல் உண்டாக்கும் செய்திகளை பிரசங்கம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. சுவிசேஷகர்களுடைய செய்திகள் இந்த வழிகளில் செயலூக்கத்துடன் பிரசங்கிக்கப்படலாம். இந்த செய்திகள் இருதயத்திலிருந்து உதித்து அத்துடன் பலமுள்ள உணர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டு செல்கிறது. இந்த விதமான பிரசங்கம் மனக் குளிர்ச்சியுடன் தூண்டுதலாகவும் திறமையும் அனுபவமும் நிறைந்த ஒருவர் பிரசங்கம் செய்யும் பொழுது அமையும். அது உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதுடன் இருதயத்தையும் வசன ஞானத்தால் நிரப்புகிறது.

இந்த விதமான பிரசங்க பாணியில் இரண்டு வகையான சாத்தியமாகக் கூடிய பலவீனங்கள் உண்டு. முதலாவதாக அடிக்கடி அதில் அர்த்தமுள்ள கருத்துக்களுக்குக் குறைவு ஏற்படலாம். கேட்பவர்களின் இருதயமும் ஆத்துமாவுங் கூட நல்லொழுக்கத்தில் கட்டப்படாமல் போகலாம். இரண்டாவதாக பிரசங்கத்தின் போக்கு அதீதமான உணர்ச்சி வசப்பட்டு பகுத்தறிவுக்கு புறம்பானதாகவும் நம்பிக்கையூட்டி தெளிவு படுத்துவதில் குறைவு பட்டும் இருக்கலாம்.

## 4. சாராம்சம்

எலும்புக் கூடு போன்ற குறிப்புகளின் உபயோகம் மற்ற இருவகை பாணியான பிரசங்கம் செய்வதன் சிறப்பம்சங்களை ஒன்றாக இணைத்து விடுவதால் அதை பயன்படுத்துவது நலம் என்று யோசனை கூறுவேன். அந்தக் குறிப்புகள் மிகவும் பாரமாக இல்லாதபடியால் அதனுள் வழுக்கி சென்று விடக்கூடும். அவருக்கு வளைந்து கொடுக்கக் கூடிய இடம் இருக்கிறது. அவர் பிரசங்கம் செய்யும்பொழுதே அவருடைய ஆத்துமா புதிய அகத் தூண்டுதலுக்காகத் திறந்திருக்கிறது. மற்றொரு விதத்தில் அதற்கு மாறாக அவருக்கென்று ஒழுங்கான சிந்தனைத் திட்ட அமைப்பு முன் இருக்கிறது. அவர் தனது சபைக்கு முன்பாக நின்று கொண்டு ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி இணைக்கப்படாத கருத்துக்களை குறிப்பான நோக்கும் ஏதுமின்றி நின்று பேசுபவரல்ல.

எலும்புக் கூடு குறிப்புகள் போதனைக்கும் பிரசங்கம் செய்வதற்கும் ஏற்றது. போதிக்கும் பாணியானது வழக்கமாக அந்த பொருள் தலைப்பைப் பற்றி கற்பிக்க பூரணமான பாட ஆயத்தம் தேவைப்படுகிறது. ஆகவே சில குறிப்புகள் மிகவும் அத்தியாவசியமானவை. ஒரு உபாத்தியாயருக்கு தன்னுடைய பாடத்தைக் கற்பிப்பதற்கு பாடக் குறிப்புகளின் உதவியின்றி பாடம் முழுவதையும் கற்பிப்பது கடினமாகும். ஆகவே தான் எலும்புக் கூடு வகை குறிப்புகளின் அணுகுமுறையை நன்கு கற்றுணர்ந்து கொள்வதில் ஒரு முனைப்பட்டுச் செயல்பட நான் ஊக்கப்படுத்துவேன். உன்னுடைய படிப்பு காலத்தில் இந்த நடைமுறையை உபயோகித்துக் கொள். நீ வேதாகமத்தைப் படித்து தியானம் செய்யும்பொழுது, சுருக்கமானதும் அகத்தூண்டுதல், நீ பெற்றுக் கொள்ளும் வெளிப்பாடுகளைக் குறித்து வைக்க அப்பியசித்துக் கொள். இது உன்னுடைய செய்தியை பிரசங்கம் செய்யும்பொழுது உன்னுடைய செய்தியை கட்டி எழுப்பும் கட்டத்தில் பெரிதும் உதவும். குறிப்பு எடுப்பதன் பாணியில் கொண்டுள்ள பரிச்சயம் நீ பிரசங்கம் செய்யும்படி எழுந்து நிற்கும் பொழுது மிகவும் பயன்படும். அது உன் மனதை ஒரு ஒழுங்கான எண்ணத்தின் நல்ல அமைப்பை பெறுவதில் பயிற்சி பெற உதவுகிறது. இது உன்னை நீ பேசும் பொழுது மிகத் தெளிவாக பேசவும் பிரசங்கிக்கவும் கேட்பதற்கு எளிதானதாக்குகிறது.

# G. பிரசங்கத்தின் ஏழு வகைகள்.

நான் உங்களுக்கு ஏழு வகையான வேறுபட்ட பிரசங்க முறைகளை அறிமுகப்படுத்த விரும்புகிறேன். அவை ஒவ்வொன்றும் பின்னால் அமைந்துள்ள கருத்துக்களை சுருக்கமாக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். அதை எப்படி உபயோகிப்பதென்பதையும் விளக்கிக் கூற முயற்சிப்பேன். ஒரு போதகர் ஒவ்வொரு விதமான பிரசங்க முறையுடனும் பரிச்சயமாக இருக்க வேண்டும். இது அவருடைய

ஊழியத்திற்கு கூடுதலான பல்சுவைத்திறன் அளிக்கக்கூடும். மேலும் வாரத்துக்கு வாரம் அவரது செய்திகளைக் கேட்கும் ஒரு கூடி வரும் சபைக்கு அதிகமான அக்கறையுள்ளதாகச் செய்யும். மேலும் ஒரு கடந்த கால கட்டத்தில் வேதாகம சத்தியங்களுக்கு மிகுந்த கூடுதலான விரிந்த பிரச்சாரம் கொடுக்கக்கூடும். எந்த ஒரு பிரசங்கம் செய்பவரது ஊழியமும் எல்லாத் துறைகளிலும் தகுதி பெறச் செய்யும்.

## 1. வேதபகுதி பிரசங்கம்

இந்த விதமான பாணியில் வழக்கமாக வேதாகமத்தில் மிகச் சிறியதானதோர் வசன அடிப்படையாகக் கொண்டது. உண்மையாகவே அந்த பெயர் சொல்வது போல அது பொதுவாக ஒரே வேதாகம வசனத்தின் பேரில் ஒரு முனைப்படுத்துகிறது. அதில் தகுந்ததோர் வேதாகம வசன பகுதியை தெரிவு செய்வதில் இடைபடுகிறது. பிறகு நீவிர் அதை ஆழ்ந்து துப்பறிகிறீர். அதைப் பிரித்து வகைப்படுத்தி அந்த பகுதியில் அடங்கியுள்ள சத்தியம் அனைத்தையும் கண்டு பிடிக்கிறீர். பிறகு அந்த சத்தியத்தை ஒழுங்கானதோர் முற்போக்குள்ள முறையில் கேட்பவர்கள் அதை சுலபமாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாகத் தரப்படுகிறது.

## 2. தலைப்பு பிரசங்கம்

இங்கே பிரசங்கம் செய்வோர் தன்னுடைய கூடிவரும் சபைக்கு ஒரு குறிப்பிட்ட தலைப்பை முன் வைத்து அறிமுகம் செய்கிறார். உதாரணமாக அவர் தமது தலைப்பாக ‘‘நீதிமானாகுதல்’’ என்பதை எடுத்துக் கொள்ளலாம். முதலாவதாக அவருடைய நோக்கம், இந்த கவர்ச்சியால் மயக்கச் செய்கிற தலைப்பைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறதென்பது எல்லாவற்றையும் கண்டு அறிவது ஆகும். பிறகு அவர் வேதாகமத்திலுள்ள எல்லா ஒத்து வாக்கியங்களையும் அவர் பெறும் கருத்துக்களான சிந்தனைகளையும் வரிசையாக ஓர் பொது அமைப்பாக வைப்பார். பிறகு அவர் தமது தலைப்பை பூரணமாகவும், விசுவாசத்துடனும் கூடுமானவரை விரிவாக்குவார். அவருடைய செயலூக்கமாவது தமது சபையினருக்கு அவர்கள் அந்த முக்கியமான தலைப்பைப் பற்றி அறிய வேண்டியதெல்லாவற்றையும் அவர்களுக்குச் சொல்லுவதுதான்.

ஆகவே இந்த முயற்சியை ஒரே ஒரு படிப்பு வகுப்பில் இதைச் செய்ய முடியாமல் இருக்கலாம். மேலும் இதற்காக ஒரு வரிசையான செய்தித் தொடரை அல்லது படிப்பு வகுப்புகளை ஆயத்தம் செய்து தர வேண்டியதிருக்கும். இது அந்தத் தலைப்பைப் பற்றி முழுவதுமாக போதனை செய்வதைப் பற்றி உறுதி செய்கிறது. எந்த விதமான தலைப்பு ஒத்து வாக்கிய வேதாகமம் இப்படிப்பட்டதோர் பிரசங்கத்தை ஆயத்தம் செய்யும்பொழுது மிகவும் விலையேறப் பெற்றதும் பயன் அளிக்கக் கூடியதும் ஆகும். அங்கே அந்த குறிப்பிட்ட தலைப்புக்கு சம்பந்தப்பட்ட ஒத்து வாக்கியங்களை ஒருவர் வெகு விரைவில் கண்டுபிடிக்கக்கூடும். ஒரு நல்ல ஒத்து வாக்கியமுள்ள வேதாகமம் மிகுந்த உதவியாக இருக்கும். இது உனக்குக் கொடுக்கப்பட்ட பொருள் தலைப்பை வேதாகமம் முழுவதிலுமே தேடி கண்டுபிடித்து தொடர்ந்து வர உதவும்.

## 3. மாதிரியான எடுத்துக்காட்டு பிரசங்கங்கள்

வேதாகமத்தில் மேல் தளத்திற்குக் கீழ் மறைந்து கிடக்கும் பலவிதமான எடுத்துக் காட்டுகளை வெளிக்குக் கொண்டுவந்து அந்த செய்தியைப் பரப்பும் கலையாகும். ஒரு விதமான என்பது ஒரு நபர், ஒரு பொருள் அல்லது ஒரு சம்பவமானது (வருங்காலத்தில்) பின்னால் வரக்கூடிய ஏதோ ஒருவர் அல்லது ஏதோ ஒன்றிற்கு தீர்க்கதரிசன அடையாளமுடையதாக இருக்கும். அது சம்பந்தப்பட்ட அந்த நபர் அல்லது சம்பவத்திற்கு ஒத்தும் (ஒன்றுபோல் அமைந்த) அமைப்புப் பாணியைப் போன்றது. வேதாகமத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ளும்போது அது சில சமயங்களில் வேதாகமத்தில் கூறப்படும் நபரையோ அல்லது சம்பவத்தையோ வருங்காலத்தில் வரும் ஒன்றிற்கு முன் நிழலாட்டமாகக் குறிப்பிடுகிறது. உதாரணமாக யாத்திராகமத்தின் பஸ்காவின் ஆட்டுக்குட்டி கிறிஸ்துவுக்கு முன் மாதிரியாக எடுத்துக்காட்டாக உள்ளது. பஸ்கா ஆட்டுக் குட்டியைப் பற்றி ஒவ்வொரு விவரமும் கிறிஸ்துவின் இரட்சிப்பைத் தரும் பங்காக ‘‘தேவ ஆட்டுக்குட்டியாக’’ அவர் நிறைவேற்றப் போவதை தீர்க்க தரிசனமாகக் கூறுகிறது. (யோவான் 1:29) ஒவ்வொரு தீர்க்கதரிசன அடையாளமும் கிறிஸ்து சர்வ லோகத்தின் பாவங்களுக்காக மரித்ததினால் நிறைவேற்றப்பட்டது.

வேதாகமத்தில் எடுத்துக்காட்டுகள் அனைத்துமே வருங்காலத்தில் சம்பவிக்கப் போகிறவைகளை, பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்தது என்று குறிப்பிடப்படுகிறது. (எபி 8:5; 10:1) அவைகள் நிழலாய் மாத்திரம் இருக்கின்றன (எபி 10:1) அப்படிப்பட்ட மனிதர்களும் சம்பவங்களும் சூரியனை தங்களுக்கு பின்னாகப் பெற்று நடப்பவர்களைப் போன்றதாகும். அவனது சரீரம் வருங்காலத்திற்குள் ஒரு நிழலைப் போடுகிறது. அது அவனுக்குள் முன்பாக வருங்காலத்தில் வரப்போகும் காரியங்களின் வடிவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தேவனுடைய நியாயப்பிரமாணம் வரப்போகும் நல்லவைகளுக்கான ஒரு நிழலாகும். அது வரப் போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது. (எபி 10:1) இந்த நன்மைகள் கிறிஸ்துவுக்குள் வரும் நன்மைகளுக்கு நிழலாய் இருக்கிறது. பழைய உடன்படிக்கையின் பரிசுத்த நாட்களுங்கூட பின் காலத்தில் வருபவைகளுக்கு நிழலாய் இருக்கிறது. (கொலோ 2:17) அந்த பரிசுத்த நாட்கள் தாங்களாகவே பூரணப்பட்டவைகள் அல்ல. அவைகள் நிறைவேற்றப்படுவதன் ஒரு பகுதியின் நோக்கமாவது இனிமேல் வரவிருக்கும் காரியங்களை ஒரு தீர்க்கதரிசனமான படமாக ஒளிப்பரப்பிக் காட்டுவது தான் வேதாகமத்து மாதிரிகளை அர்த்தம் விளங்க விளக்குதலும், விளக்கிக் கூறுதலும் ஆகியவை விசேஷித்த பயிற்சி பெற்ற பணியாகும். அதற்கு வேதாகமத்துத் தலைப்புகளில் முதிர்ச்சி பெற்றவர்களும் நுண்ணறிவு வாய்ந்தவர்கள் ஆகியோரின் திறமையை தகுதியாக பெறுகிறது. இளைய பிரசங்கிமார்கள் (பிரசங்கம் செய்யும் ஆரம்ப கால பிரசங்கிமார்கள்) மிகவும் ஆழமான மாதிரியான சத்தியங்களை பிரசங்கிக்க முயல்வதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் திறமையில்லாத விளக்கவுரைகள் எல்லா வகையான துரதிர்ஷடமுள்ள தவறுகளுக்குக் கொண்டு போய்விடும்.

ஒரு ஆழமானதும், பூரணமானதுமான முழு வேதாகமத்தை பற்றியுமான அறிவு இந்த விதமான மாதிரியை விளக்கங் கூறி வருவதற்கு முயற்சி செய்பவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. அந்த முறையான போதனைகள் வேதாகமம் முழுவதாலும் ஆதாரத்துடன் விளக்கம் பெறுவதுடன், வழிகாட்டப் படவும் வேண்டும். நீ முதலாவதாக வேதாகமத்து எடுத்துக்காட்டு மாதிரிகளை முதன் முறையாக போதிக்க முயற்சிப்பாயானால் தயவுசெய்து பின்வரும் கொள்கைகளை மனதில் வைத்துக் கொள்ளவும்:

1) எளிதான மாதிரிகளை உபயோகிக்கவும். எளிய மாதிரிகளில் ஆரம்பிக்கவும். ஏனென்றால் அதில் பொதிந்துள்ள கருத்துக்கள் வெளிப்படையானவை.
2) ஓர் விதமான அகன்ற விளக்கவுரையைப் பின்பற்றவும் அந்த மாதிரியின் மிகச் சிறிய விவரத்தை விளக்கஞ் சொல்ல முற்படாதே. சத்தியத்தின் மேலோட்டமான அகன்ற பகுதிகளை பின்பற்றவும்.
3) தத்துவ ஞானத்துடன் பேசாதே. அந்த எடுத்துக் காட்டை போதிப்பதில் தத்துவத்துடன் நிற்பதைத் தவிர்த்து விடு.
4) அந்த சத்தியத்தின் தத்துவத்தை விளக்கிக் கூறுக. அந்த போதனைக்குரிய மாதிரிகளில் உன்னுடைய தத்துவஞான ஸ்தானத்தை அடிப்படையாக்காதே. அந்த மாதிரிகள் சத்தியத்தின் தத்துவத்தை விளக்கம் பெறச் செய்யவேண்டும். அதில் அவர்களை நிறுத்த முயற்சிக்காதே.
5) தவறுகளைத் திருத்துவதற்கு மனந்திறந்திரு. உன்னை விட அறிவில் பூரணப்பட்டவர்கள் பிழை திருத்தும் பொழுது திறந்த மனதுடன் இரு.

## 4. சாதாரணமாக பொருள் விளக்குகிற நீண்ட செய்திகள்

இந்த விதமான முறையால், வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அடங்கியுள்ள அர்தத்தையும் சத்தியத்தையும் விளங்குமாறு எடுத்துச் சொல்ல முயற்சிக்கிறோம். அந்த பகுதி வசனத்திற்குள் அடிக்கடி மறைந்து பொதிந்து கிடக்கிற சத்தியத்தை வெளிக் கொண்டு வந்து விளக்கஞ் சொல்ல விரும்புகிறோம். இது தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் போதிப்பதற்கு மிகச் சிறந்த முறையாகும். (தேவனுடைய ஆலோசனைகள் ஒன்றையும் பவுல் மறைத்து வைக்கவில்லை) (அப் 20:27).

நீவிர் வேதாகமத்தில் ஒரு புத்தகத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டு அதிகாரம் அதிகாரமாக அர்த்தத்தை விளக்கலாம். ஒரு வேளை வாரத்திற்கு ஒரு அதிகாரம் போதிக்கலாம். அதை வசனம் வசனமாக விளக்கிப் போதித்து அதன் முக்கியத்துவத்தையும் சத்தியத்தையும் போதித்து கொண்டு செல்லும் பொழுது பின்பற்ற வேண்டும். இது ஒரு தொடர்ச்சியான வேதபாட படிப்பாக எடுத்துக்கொண்டு அது

முடிவதற்கு வாரங்களோ மாதங்களோ ஆகலாம். எனவே சில ஆண்டு காலங்களில் அந்த கூடிவரும் சபையினர் வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியுடன் பரிச்சயமாவதுடன் அவர்களுடைய ஆவிக்குரிய அறிவு பெருக்கத்தையும் நன்னடைத்தையைக் கட்டி எழுப்புவதற்கு தேவன் அவர்களுக்குப் போதித்து வர விரும்பும் சத்தியத்தின் வெளித் தாக்கத்துக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

## 5. வாழ்க்கை வரலாற்று பிரசங்கங்கள்

வாழ்க்கை வரலாறு என்பது ஒருவரைப் பற்றிய கதையாகும். ஆகவே இந்த முறையால் நாம் வேதாகமத்தில் சந்திக்கும் பல கதா பாத்திரங்களின் வாழ்க்கைப் பற்றிய படிப்புக்கு உள்ளாக்கப்படுகிறோம். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வாழ்க்கை வரலாறும் நமக்கு முக்கியமான தனிச் சிறப்புடையது. ஒவ்வொரு வாழ்க்கையிலும் நமக்கு ஏதோ ஒன்றைக் கற்பிக்கிறது. வேதாகமத்து கதா பாத்திரங்களைப் பற்றிய படிப்பு மிகவும் மகிழ்ச்சிக்கும் ஆழ்ந்த மனப் பீரிதிக்கும் உரியது. ஒரு குறிப்பிட்ட மனிதனைத் தெரிந்து கொள். அவரைப் பற்றி வேதாகமத்தில் கூறப்படும் ஒத்து வாக்கியங்கள் அனைத்தையும் படிக்கவும். உன் மனதில் தோன்றும் ஒவ்வொரு சிந்தனையையும் நோட்டுப் புத்தகத்தில் குறிப்பெடு.

பிறகு அந்த சிந்தனைகளை கால வரிசையில் கிரமப்படுத்தி அதாவது எந்த காலக் கிரமத்தில் அவை இருந்தனவோ அந்த வரிசையில் தொகுக்கவும்.

- அந்த மனிதனுடைய பிறப்பை பற்றி படித்தறிக.
- அவருடைய வளர்ந்து வந்த சந்தர்ப்பங்களை கருத்தில் கொள்க.
- தேவனுடைய ஈடுபாடு அவருடைய ஜீவியத்தை இடைபட்டதென்பதை நடுமையமாகப் பார்க்கவும்.
- கர்த்தருடைய ஈடுபாட்டுக்கு அவன் எவ்வாறு பிரதியாக செயல்பட்டான்?
- அதிலிருந்து அவரைப் பற்றிக் கற்றுக் கொண்டதென்ன?
- அவர் வாழ்க்கையில் ஜெயமடைந்தவர், ஆனால் அவரை ஜெயமடையச் செய்தது என்ன?
- அவருடைய ஜீவியம் தோல்வியில் முடிந்தால் அவன் எங்கே தவறாகப் போய்விட்டான்?
- அவருடைய ஜீவியத்திலிருந்து நாம் கற்றுக் கொள்வதென்ன?

இவைகள் அனைத்தும் அக எழுச்சியைத் தூண்டும் விஷய ஞானமான காரியங்களாக நாம் வேதாகமத்தில் சந்திக்கும் செல்வாக்கு மிகுந்த புருஷர்.்.ஸ்தீரிகள் இடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியவை ஆகும்.

## 6. பிரித்தெடுத்து வகுத்துக் கூறும் பிரசங்கங்கள்

இந்த வகையான பிரசங்கங்கள் ஒரு தலைப்பை அதனுள் பொதிந்துள்ள மிகுந்த அளவான சத்தியத்தை அதனள்ளிருந்து வெளியில் கொண்டு வந்து அதை விவரமாக பிரித்து வகுத்துக் கூறுவதுடன் சம்பந்தமுடையது. இந்த சத்தியங்களிலிருந்து அதற்குள் மறைந்திருக்கும் கொள்கைகளைப் பற்றிப் போதிக்கலாம்.

## 7. உருவகக் கதைகளை அல்லது உவமையை அடிப்படையாகக் கொண்ட தூது (ஒன்று போன்றுள்ள அல்லது அதற்குச் சமமான ஒன்றைக் கொண்டு விவாதித்தல்)

இயேசுவின் போதனைகளில் பெரும்பான்மையானவை உவமைபளின் வடிவத்தில் அமைந்ததாகும். அவர் சத்தியத்தை நேர்கோட்டு சமத்தில் இருந்த ஒன்றைக் கொண்டு கற்பித்தார். வேதாகமத்து ஆசிரியர்கள் எளிமையான இயற்கைத் தலைப்பைக் கொண்டு ஆவிக்குரிய சத்தியங்களைப் போதித்தார்கள். அவைகளில் ஒன்றுபோல் அமைந்த காரியங்களை ஒப்பிட்டு பார்த்தலும், சமமான காரியங்களிலிருந்து காரணகாரியமறியும் நடைமுறையும் இடம் பெறும். இந்த உருவகக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட பிரசங்கம். ஒரு உவமையில் அடங்கியுள்ள சத்தியத்தை தொடர்புப்படுத்தி சொல்ல முயற்சிக்கிறது.

## அதிகாரம் 2 - வேதபகுதி பிரசங்கம்

வேதபகுதி பிரசங்கம் ஆயத்தம் செய்வதை வெகு கூர்மையாக பரிசீலனை செய்வோம். நான் ஏற்கனவே இந்த முறையை பற்றி இது ஒரு பிரித்து பகுத்து வேதாகமத்தின் சிறியதோர் பகுதியைப் பற்றி, வழக்கமாக ஒரே ஒரு தனிப்பட்ட வாக்கியத்தையோ அல்லது சுருக்கமானதோர் சொற் கூற்றை விளக்கம் கூறுவதாகும்.

## A. ஒரு வேதபகுதியை எடுத்து வைத்துக் கொள்வதன் அனுகூலங்கள்

**1. அது உள்ளார்ந்த ஆர்வத்தை இழுத்துப் பிடித்துக் கொள்ளுகிறது.**
ஓர் ஆர்வத்தை இழுத்துக் கொள்ளும் வசனத்தை மக்களுக்கு உரத்து அறிவிப்பது அந்த சபை மக்களுடைய ஆர்வத்தை உடனடியாக இழுத்துக் கொள்கிறது. இவ்வாறு உற்று கவனிக்கும் சபையினரைத் தருகிறது. அவர்கள் நீவிர் எவ்வாறு அதைப் பற்றிப் பேசப் போகிறீர் என்பது குறித்து அவர்கள் உள்ளத்தில் இரகசியமாக ஈர்க்கப்படுவார்கள். அந்த வாக்கியத்தில் இருந்து நீவிர் பிரசங்கத்தில் கொண்டு வரப் போகிற சிந்தனைகள், மறைபொருட்கள் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவார்கள். விரும்புகிறவர்கள் அகத் தூண்டுதல் பெற்றும், விழிப்புணர்வுள்ளவர்களாகி உங்களுக்கென்று விருப்புடன் கவனித்துக் கேட்கும் சபையினர் உங்களுக்கு கொடுக்கப்படுவார்கள்.

**2. மனது அங்குமிங்கும் அலைவதைத் தடுக்கும்படியாக**
ஒரு குறிப்பிட்ட வசனமானது பிரசங்கிப்பவரை தன்னுடைய பொருள் தலைப்பை விட்டுவிட்டு அங்குமிங்கும் அலைவதைத் தடுத்து விட உதவி செய்கிறது. தனது தலைப்புப் பொருளிலிருந்து அதை முன் வைத்துப் பிரசங்கம் செய்வதிலிருந்து அங்குமிங்கும் ஓடித் திரியும் ஒரு பிரசங்கியாரது பேச்சில் அனுகூலமான ஆர்வத்தை தேக்கி வைத்துக் கொள்வது அதைக் கேட்கும் சபையினருக்கு மிகவும் கடினமாக இருக்கும். மேலும் ஒரு குறிப்பிட்ட வேதாகம வசனப் பகுதியை தெரிந்து கொண்டு பேசும் உம்முடைய தலைப்பில் இருந்து நீவிர் தெரிந்து கொண்ட சந்தர்ப்ப சூழ்நிலைமை ஆனது அப்படிப்பட்ட அலைவதைத் தடுக்கவும் உம்மைக் கவனித்துக் கேட்பவர்களின் ஈடுபாடுள்ள ஆர்வத்தைத் தக்க வைத்துக் கொள்ளச் செய்கிறது.

**3. உமது பிரசங்கத்தை வேதாகமத்துப் படி அமைத்து வைத்துக் கொள்ளும் படியாக**
வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை உமது பேச்சின் நடு மையமாகக் கொள்வது உம்மை (அதாவது பிரசங்கம் செய்பவரை வேதாகமத்து முறையைப் பின்பற்றச் செய்கிறது. வேதாகமத்திலிருந்து நேரடியாகத் தெரிந்து கொண்ட ஒரு பகுதியை பேச முன் வைக்கும்பொழுது உம்முடைய பிரசங்கமானது வெளிப்படையாகவே வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதாகிறது. இதற்குப் பின்னர் பேசப் போகும் விதமாவது உமது தலைப்புப் பொருளை ஆதாரப்படுத்தி மற்ற வேண்டியதுமான ஒத்து வாக்கியப் பகுதிகளைக் கொண்டு சாட்சியாக நிரூபிக்கப்படவேண்டும். இதற்கு எதிர்மறையாக நீ சபைக்கு அறிவித்த தலைப்பானது வேதாகமத்தை அல்லாவிட்டால் அது மனோ தத்துவத்தையோ, சமூகத்தையோ கலாச்சாரத்தையோ சார்ந்ததாக இருக்குமானால் உன்னுடைய தலைப்பானது பொதுவாக அதே மூலத்திலிருந்து கிடைத்தாக வேண்டும். பொதுவாக இது நல்லதல்ல. நாம் “திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு” என்று பிரசங்கிக்குமாறு கட்டளை பெற்றிருக்கிறோம். (II தீமோத் 4:2)

**4. இது துணிவை அதிகரிக்கிறது.**
வேதாகமத்திலிருந்து பிரசங்கம் செய்வது துணிவையும் அதிகாரத்தையும் பிரகடனஞ் செய்வதை அதிகரிக்கிறது. நீவிர் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்பொழுது ஒரு விசேஷித்த ஆவியின் அபிஷேகம் அதன் மேல் இறங்குகிறது. தேவன் தாமே தமது வார்த்தைகளை அபிஷேகம் செய்கிறார். வேதாகமத்திலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்கியங்கள் மிகவும் உள்ளுணர்வுடனும் நிச்சயமான நம்பிக்கையுடனும் முன் வைக்கப்படக்கூடும். ஏனென்றால் நீவிர் உம்முடைய சொந்தமான கோட்பாடுகளை முன் வைக்காமல் நீவிர் மக்களோடு இடைபடும்பொழுது உமக்கு தேவன் அந்தத் தலைப்பின் மேல் என்ன சொல்ல வருகிறார் என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே தான். நீவிர் அதை பிரகடனஞ் செய்யும் பொழுது அத்துடன் மிகுதியான கனமும் அதிகாரமும் கூடவே உடன் கொண்டு போகப்படுகிறது. “வேதாகமம் சொல்லுகிறது” என்று ஆரம்பித்து குறிப்பிட்ட வசனத்தைப் படித்தும் அல்லது அதை மக்களுடன் பகிர்ந்து கொண்டும் பிறகு விளக்கமான

அர்த்தத்தை அதற்குத் தர வேண்டும். அந்த சீஷர்கள் ‘‘கர்த்தருடைய வார்த்தையை’’ பிரசங்கித்துக் கொண்டு போனபொழுது தான் கர்த்தர் அவர்களுடன் ஊழியத்தில் இடைபட்டார். மேலும் அந்த வசனங்களை அடையாளங்களோடு உறுதிப்படுத்தினார். ‘‘அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.’’ (மாற்கு 16:20)

**5. கொடுக்கப்பட்ட செய்தியை மீண்டும் நினைவு படுத்துவதில் உதவி செய்கிறது**
ஒரு நல்ல வேதாகமப் பகுதி கவனித்துக் கேட்பவர்களின் மனதில் செய்தியை நிலை நிறுத்த உதவுகிறது. அவர்கள் உம்முடைய செய்தியைத் திரும்பவும் ஞாபகப்படுத்திக் கொள்ளும் பொழுது அதுவும் அந்த வேதாகமப் பகுதியே நீவிர் உம்முடைய செய்தியை அடிப்படையாகக் கொண்டு பேசியதைனயே அடிக்கடி நினைவு கூறப்படுவதாக இருக்கும்.

## B. வேதபகுதி (அ) வசனத்தை எப்படி தெரிந்தெடுப்பது?

**1. வேதாகமத்தைத் தவறாமல் ஒழுங்காகப் படித்து வருக**
நீங்கள் ஒரு திறமை வாய்ந்த செயலூக்கமான பிரசங்கி ஆக வேண்டுமென்று விரும்பினால் நீஙகள் வேதாகமத்தை ஒழுங்காகப் படித்து வரவேண்டும். வேதாகமம் வாசிப்பதில் அதன் சம்பந்தமாக நல்லதொரு பழக்கத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைப் படிப்பதற்கென்று ஒரு விசேஷித்த நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். எப்பொழுதுமே உம்மோடு ஒரு சிறிய வேதாகமத்தை உடன் எடுத்துச் சென்று, உம்முடைய ஓய்வு நேரங்களில் வேதாகமப் பகுதிகளைப் படிப்பதால் உம்முடைய நேரத்தை பயனுள்ளதாகச் செலவழிக்கலாம்.

**2. வேதாகமத்தைப் படித்துப் பார்க்கவும்**
அதை ஏனோ தானோவென்று வெறுமனே படித்தல் கூடாது. மேல் தளத்துக் கீழே தோண்டு. நீ படிக்கும் சத்தியங்களைக் குறித்து தராள உழைப்புடன் தியானம் செய்யவும். உன்னுடைய மனதில் அதை உருட்டிப் புரட்டிப் பார்க்கவும். அதை ஒவ்வொரு கோணத்திலும் இருந்து பார்க்கவும். நீ படித்தப் பகுதியை பிரித்து வகுத்துப் பார்க்கவும். அதை உம்முடைய மனதில் அக்கு அக்காகப் பிரித்து பின் அவைகளை ஒன்று சேர்க்கவும்.

அவைகளை சாதுவாக மென்று அசை போடவும் (அதாவது அந்த உணவை திரும்பமென்று ஜீரணம் செய்யவும்) ஒரு பசு புல்லை மேய்கிறபோது அது புல்லை தின்கிறது. பிறகு விழுங்குகிறது. அதை வயிற்றிலிருந்து திரும்ப வாய்க்கு கொண்டுவந்து திரும்பமென்று தின்கிறது. ஆகவே நீவிர் உன்னுடைய மனதில் அதை ஆழ்ந்து சிந்தனை செய்யும்பொழுது நீவிர் அந்த சிந்தனையை பற்றி நினைத்துப் பார்க்கவும். அதன் மேல் சிந்தனை செய்யவும். திரும்பவும் ஞாபகப்படுத்தவும். அவற்றைத் திரும்பத் திரும்ப மனதில் கொண்டு வந்து அதைத் தொடர்ந்து மேலும் ஆழமாக கருத்தில் கொள்ளவும்.

உம்முடைய மனதில் எவ்வளவுக் கெவ்வளவு தேவனுடைய வசனத்தாலும் வேதாகமத்து தியானங்களால் நிரப்பப்பட்டும் இருக்கிறது. நீவிர் பிரசங்க பீடத்தில் நின்று செய்தி கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது அவ்வளவு அதிகமான மன நிறைவிலிருந்து பேச வேண்டும். ‘‘பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.’’ (யோவான் 14:26) ஏனென்றால் நீவிர் அவற்றை உம் இருதயத்தில் வைத்திருந்து அவரை (பரிசுத்த ஆவியானவரை) அவ்வாறு செய்ய விட்டுவிட வேண்டும்.

**3. எப்பொழுதுமே ஒரு குறிப்பு நோட்டுப் புத்தகத்தை உன்னோடு வைத்துக் கொள்ளவும்**
நீவிர் உம்முடைய வேதாகமத்தை வாசிக்கும்பொழுதெல்லாம் உம்மோடு தாளையும், பேனாவையும் வைத்துக் கொள்ளும் பழக்கத்தை கொள்ளவும். உமக்குள் எழும்பும் ஒவ்வொரு துண்டலான உள்ளுணர்வுத் தூண்டலையும் நீவிர் பெற்றுக் கொள்ளும்பொழுது குறித்து வைத்துக் கொள்ளும் நல்ல பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளவும். நீவிர் ஒரு நோட்டுப் புத்தகத்தை உபயோகிப்பதால் அது ஒரு ஆவிக்குரிய நாட் குறிப்பாக ஆகிவிடும். பல மாதங்களுக்குப் பிறகு அந்தக் குறிப்புகளை ஞாபகப்படுத்தும்பொழுது அவற்றிலிருந்து புதிய உள்ளக் கிளர்ச்சியான தூண்டுதல்களைப் பெறலாம். எவ்வளவுக்கதிகமாய் தியானம் செய்கிறோமோ அதற்கதிமான தலைப்புகளில் தோன்றும் சிந்தனைகளால்

ஆனதோர் தொகுப்புக் குறிப்பாக உண்டாக்கப்பட்டு அவைகளிலிருந்து நேர்த்தியான பல பிரசங்கங்களையும், செய்திகளையும் தகுதியான நேரங்களில் ஆயத்தம் செய்ய உதவும்.

**4. ஒரு ஜெபத்தோடு கூடிய மனப்பான்மையை எப்பொழுதும் கொண்டிருக்கவும்**

இதற்காக நீ எப்பொழுதுமே முழங்காலில் நிற்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. நான் உள்ளத்தில் உண்டாகிற மனப்பான்மையைப் பற்றியே நான் குறிப்பிடுகிறேன். உன்னுடைய சரீரம் நிற்கும் நிலையையும் பற்றி அல்ல. இலட்சியமாக ஜெபம் என்பது தேவனுடன் நாம் செய்யும் ஆவிக்குரிய சம்பாஷணை ஆகும். அது ஒரு இரு வழிப் பாதையான உரையாடல் ஆகும். நீ கர்த்தருடன் பேசுகிறாய். ஆனாலும் அவரும் உன்னுடன் பேசக் கூடும். அவருடைய சப்தத்தை நீ கேட்டு அறிந்து கொள்ளும்பொழுது நீ உனக்குள்ளே ஒரு தொடர்ச்சியான அகத்தூண்டுதலைக் கண்டு கொள்வாய்.

**5. பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஞான ஒளியைத் தேடிக் கொள்**

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தைகளின் மீது கொண்டுவரக் கூடிய ஞான ஒளிக்கு மேல் மிகுந்த விலையேறப் பெற்ற மதிப்பையும், முன்னுரிமையும் வைத்துக் கொள். பரிசுத்த ஆவியானவர் மிகுந்த உணர்ச்சி வசப்படக்கூடிய ஆளாவார். மேலும் அவர் துக்கமடைந்து துரத்தப் படவும் கூடும். ஆகவே அவருடன் அமைதியானதும், தாழ்மையுள்ளதுமான உணர்ச்சியுடைய ஆவியை உண்டாக்கிக் கொண்டால் அவர் அதனுடன் ஈடுபடுவதில் அன்பு கொள்வார். உனக்கு பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியம் பெருகுமானால் உன்னுடைய ஜீவியத்தையும், ஊழியத்தையும் சிறக்கும் படியாக பல அதிசயமான சத்தியங்களை உனக்கு அறிமுகப்படுத்துவார்.

**6. உன்னுடைய பிரசங்க வாக்கியமானது**

**a: வேதாகத்துப்படி அதிகாரமுடையாதாக.** இந்தப் பிரசங்கத் தலைப்பாவது வேதாகமம் போதிப்பதோடு உள்ளபொது அபிப்ராயத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். மேலும் அந்த வேதாகப் பகுதியிலிருந்து ஒரு வாக்கியத்தை எடுத்துக் கொண்டு வேதாகமத்தில் உறுதிப்படுத்திக் காண்பிக்கப்படாத ஏதோ ஒன்றை போதிக்கக் கூடும். அதனால் ''வேதாகமத்தில் இருந்து பொருள் நிலைநிறுத்தப்படாத வசனமானது ஒரு சாக்குப் போக்காகும்'' என்று பொதுவாக அறியப்படும். எப்பொழுதுமே உமது வசன பகுதியை அதன் ஸ்தான நிலையிலிருந்து அதன் வெளிச்ச வெளிப்பாட்டில் படித்தறிக. உம்முடைய பிரசங்கத் தலைப்பை அந்த வாக்கியத்திற்கு முன்னாகவோ அல்லது பின்னாகவோ வரும் வசனங்களால் உறுதிப்படுத்தாத ஒன்றை உமது தலைப்பின் மூலமாக சொல்வதற்கு முயற்சிக்கக் கூடாது. எப்பொழுதுமே வேதாகமம் முழுவதின் மூலமாக அந்த வசனத்தைப் பற்றி சொல்லப்படும் கருத்தின் வெளிப்பாட்டில் அதை விளக்கஞ் செய்து முன் வைக்க முயற்சி செய்யவும்.

**b: பூரணமாக.** உம்முடைய பிரசங்கத் தலைப்பாகிய வசனமானது சத்தியத்தைப் பற்றிய பூரணமான சொற் கூற்றாக எப்பொழுதும் இருக்கவேண்டும். சில பிரசங்கிமார்கள் வசனத்தில் ஒரு பகுதியான சொற்றொடரை மாத்திரம் எடுத்துக் கொண்டு வசனத்தின் வேதாகமத்து ஸ்தான நிலையைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இது ஒரு உண்மையற்ற செயலாகும். அது ஆண்டவருடைய வசனத்தை புரட்டுவதாகும். ''தேவ வசனத்தைப் புரட்டாமலும்'' (II கொரி 4:2) இது எந்த வழியிலும் தவிர்க்கப்பட வேண்டியது. இது உம்முடைய வசனத்தை பொய்யான வேதாகம முறைப்படி அல்லாது போதிக்கும் விதமாகும். இதன் காரணமாக நீயும் தவறுவாய். உன்னை கவனித்து கேட்பவர்களையும் தவறச் செய்வாய்.

**c: நியாயமான வழியில் சுருக்கமாக பேசவும்.** வேத புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பிரசங்கத் தலைப்பாவது ஒரு தகுந்த காரியத்திற்கு பொறுத்தமான குறுகிய வேதாகமத்து அடிப்படையான சொற்கூற்றாக இருக்க வேண்டும்.

**d: எல்லா அம்சங்களும் அடங்கியதாக இருத்தல் வேண்டும்.** இந்த பிரசங்கம் சுருக்கமானதாக இருந்தாலும், உங்களுடைய தலைப்பு எல்லா அம்சங்களும் பொருந்தியதாக இருக்கவேண்டும். அது சுருக்கமாக அமைந்து நீவிர் பகிர்ந்து கொள்ள விரும்புவதன் சராம்சமாகவும் போதுமானதாகவும் இருத்தல் வேண்டும். நீவிர் உங்கள் தலைப்பைக் கூடிவரும் சபைக்குப் படித்துக் காட்டும் பொழுது நீங்கள் சொல்ல விரும்பும் சத்தியத்தின் பரந்த அளவைப் பற்றிய ஓர் நியாயமான கருத்தை

பெறுதல் வேண்டும். பின்னர் உங்கள் தலைப்பு அறைகூவும் விஷயத்தின் எல்லைகளுக்குள் நீவிர் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

## c. அந்த தலைப்புக்கு உங்கள் அணுகுமுறை

**1. அதற்கான வார்த்தைகளை நன்கு ஜீரணித்துக் கொள்**

அந்தத் தலைப்பை பலமுறை படிக்கவும். உங்கள் இருதயத்தில் அதை சிந்திக்கவும், அதன் பேரில் தியானம் செய்யவும். மனப்பாடம் செய்யவும். உனக்குத் தானே பேசிப் பழகிக் கொள்ளவும். அந்த தலைப்பைப் பற்றி முழுவதுமாக பரிச்சயப்படுத்திக் கொள்ளவும்.

**2. அதைப் பேசும் பாஷையின் விதத்தை நிர்ணயிக்கவும்**

அது புத்தகத்தில் எழுதப்பட்ட விதத்தில் முன் வைக்கப்படவேண்டுமா? அல்லது உவமைகளால் சொல்லப்படவேண்டுமா? அதை ஆக்கியோன் தான் சொன்னதை எழுதின பிரகாரமே கொடுக்கும்படி செய்கிறாரா அல்லது அவரது வார்த்தைகள் உவமானங்களாக எடுத்துக் கொள்ளப் படவேண்டுமா?

**3. அதன் செய்தியை பிரித்து பார்த்து பரிசீலனை செய்யவும்**

அது அந்த வாக்கியத்தை அறுத்துப் பார்க்க உதவும். அதை மூன்று அல்லது நான்கு பாகங்களாகப் பிரிக்கவும். அந்த வசனத்தில் எவ்வளவு அடங்கியிருக்கிறதென்பதையும் அது என்ன போதிக்கப்போகிறது என்பதையும் கண்டுபிடித்துக் கொள்.

**4. அதன் வார்த்தைகளை ஆராய்ந்து துப்பறியவும்**

அந்த வார்த்தைகள் மூலக் கூற்றாக என்னத்தை தன்பால் கொண்டுவந்து சொல்ல வந்ததை கண்டுபிடிக்க முயற்சி செய்யவும். அதற்காக ஒரு கிரேக்க அல்லது எபிரேய சொல்லகராதியை பெறுவதற்கு அதிர்ஷ்டசாலியாய் இருப்பீரென்றால் அந்த அகராதியில் அந்த வார்த்தைகளை மூல பாஷையாகிய எபிரேய அல்லது கிரேக்க மொழிகளில் தேடி பார்க்கவும். அதற்கென்று ஒரு சிறப்பான முக்கியத்துவம் இணைக்கப்பட்டு உள்ளதா? மேலும் அதனை எழுதியவர் அந்தக் குறிப்பிட்ட வார்த்தையை உபயோகிப்பதற்கென்று ஏதேனும் விசேஷமான காரணம் இருக்கிறதா? இந்த விதமான படிக்கும் முறையானது அதை எழுதியவர் அதற்கு சிறப்பாகப் பொருந்தக் கூடியதை சொல்லும்படி விரும்பியிருப்பாரா? என்பதை நீவிர் விளங்கிக் கொள்ள உதவி செய்யும்.

**5. அது கொண்டிருக்கும் முன்னேற்றத்தை அறிந்து கண்டு கொள்ளவும்.**

அதை எழுதினவர் முன்னேற்ற விரிவாக்கம் செய்ய விரும்புகிற சத்தியக்கோடு என்னவாக இருக்கும்?

**6. அந்த வசனம் இடம் பெற்றுள்ள இடத்தையும் நேரத்தையும் கருத்தில் கொள்க**

**a. வேதாகமத்து இடம் காலம்.** அதற்கு முன்னும் பின்னும் வரும் வசனங்கள் சொல்லுகிற தென்ன? அந்த வசனம் எடுக்கப்பட்டுள்ள முழு அதிகாரத்தையும் அதற்குள்ள தொடர்பையும் கருத்தில் கொள்க. மேலும் அதை நீ கண்டு தெரிந்தெடுக்கும் பகுதியான சுவிசேஷம் அல்லது நிருபங்களுடன் சேர்த்து அதன் வெளிப்பாட்டில் கருத்தறிந்து கொள்ளவும். அதன் மேலோட்டமான சத்தியம் அப்புத்தகத்தில் கூறப்பட்ட படி புரிந்து கொண்டதற்கு நிச்சயப்படுத்திக் கொள்ளவும். அதற்கு அடிப்படையான சத்தியத்தையும் விவரங்களையும் படித்து கற்றறிந்து கொள்ளவும்.

**b. வரலாற்று காலத்து இடமும் சந்தர்ப்பமும்.** அந்த காலத்து கலாச்சாரம் எழுதப்பட்டதன் மீது பாதிப்பு கொண்டதா? எந்த ஜனங்களுக்காக இந்த வார்த்தைகள் எழுதப் பட்டனவோ அவர்கள் எழுதப்பட்டதைப் பற்றி வேறு விதமான கருத்துப் பார்வையை நாம் நமது சந்தர்ப்ப சூழ்நிலைமையில் கொண்டிருப்பதை விட கொண்டிருப்பார்களா? அப்படியென்றால் அதற்கு சமமான முக்கியத்துவம் என்னவாக இருக்கும்?

**c. வரலாற்று காலத்து இடமும் சந்தர்ப்பமும்.** இந்தச் சொற்கூற்று எக்காலத்தில் எழுதப்பட்டது? இந்த விதமாக எழுதப்பட்ட சொற்கூற்றைப் பாதிப்பு ஏற்படுத்தி விட அக்காலத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது? அந்தக் காலத்தில் எழுதப்பட்டவை, எவைகளைப் பற்றி சொல்லப்பட்டதோ அவைகளின் மீது அக்காலத்து சம்பவங்கள் குறிப்பிடக் கூடிய ஆதிக்கத்தை கொண்டிருந்தனவா?

**d. புவியியல் சம்பந்தமான காலமும் இடமும்.** இதை எழுதியவர் இந்தப் பகுதியை எழுதும் பொழுது எங்கிருந்தார்? அவர் எந்த ஜனங்களுக்காக எழுதினாரோ அவர்கள் எங்கு இருந்தார்கள்? அவர்கள் இருந்த பூகோளப் பகுதிக்கு அதில் சொல்லப்பட்டவைகளின் மேல் ஏதாவது தாக்கம் உடையதா?

**e. முழுவதுமான வேதாகமத்து இடமும் காலமும்.** வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (II தீமோத் 3:16) தலைப்பின் ஒவ்வொரு பாகமும் முழு பகுதியுடன் ஒத்துப் போகும்படி அதை உண்மையுடன் வியாக்கியானம் செய்யவேண்டும். அதன் சந்தர்ப்ப இடத்திலிருந்து எந்த வேதாகமப் பகுதியையும் நீக்கி விடக்கூடாது. அவைகள் முழு வேதாகமம் போதிக்கும் முழுமையான வெளிப்பாட்டின் மூலமாக வியாக்கியானம் செய்யப்படவேண்டும். வேதாகமம் (தன்னை) வேதாகமத்தை வியாக்கியானம் செய்ய வேண்டும். ஒரு வேத பகுதியை பற்றி நாம் கொடுக்கும் விளக்கமானது வேதாகமம் முழுவதுமாக எதைப் போதிக்க விரும்புகிறதோ அதற்க ஒத்துப் போக வேண்டும்.

## D. உம்முடைய பிரசங்கத்தின் பல பகுதிகளையும் ஒழுங்குபடுத்தி வரிசைப்படுத்துதல்.

போதனை விஷயங்களை ஒரு ஒழுங்கான முறைப்படி வரிசைப் படுத்துதல் என்பது ஒரு அரிதான அனுகூலத்தை பிரசங்கம் செய்பவரும் அவரது பிரசங்கத்தைக் கேட்பவர்கள் ஆகிய இருவருக்குமே கொடுக்கிறது. பிரசங்கம் செய்பவருக்கு என்றால் பிரசங்கம் செய்யப்படும் தலைப்பைப் பற்றிய தெளிவானதோர் புரிந்து கொள்ளும் ஆற்றலைத் தருகிறது. அவருடைய சிந்தனைகள் ஒழுங்கற்ற நிலையையோ அல்லது குழப்பத்தையோ உண்டாக்குவதில்லை. அது அவருக்கு தான் பேசப்போகிற தலைப்பைப் பற்றிய மிகப் போதுமான நடத்தும் முறையைத் தந்து உதவுகிறது. ஆனால் அவரது பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கோ, பொதுவாக அதை அவர்கள் புரிந்து கொள்ளவும், அந்தப் பேச்சின் பொருளைக் கருத்தறிந்து கொள்ளவும் எளிதாக உதவி செய்கிறது.

**1. ஒரு தலைப்பின் சுருக்க விவரம் உனக்கு என்ன செய்கிறது?**
ஒரு தலைப்பின் நல்ல சுருக்க விவரமாவது உம்முடைய போதக விஷயங்களை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தும் நல்லதோர் எளிதான முறையாகும்.

a. அது உன்னுடைய பிரசங்கத் தலைப்பபைப் பற்றிய விஷயத் தொகுப்பை கவனமாகப் பிரித்துப் பகுத்து அறியவும் செய்கிறது. இவ்வாறு செய்யும்பொழுது முடிவாக நீவிர் தொகுத்த விஷயங்களில் மிகவும் சிறந்தவைகளையே தெரிந்து எடுத்துக் கொள்ளச் செய்கிறது.

b. அது உன் பிரசங்கத்தை நடத்தும் முறையிலும் அந்த பிரசங்கத்தை முன் வைத்து முன்னேறச் செய்யும் பொழுது வரக்கூடிய பலவீனமான பகுதிகளை வெளியில் கொண்டு வந்து காட்டுகிறது.

c. அந்த போதனை விஷய தொகுப்பிலிருந்து மிகுதியான பகுதிகளை தெரிந்தெடுக்க உதவுகிறது. ஏனென்றால் அதற்கென்று பொருத்தமானதும் இன்றியமையாதவைகளை மட்டும் எஞ்சியிருக்க மற்றவற்றைக் குறைத்து விட வேண்டும்.

d. நீவிர் சொல்ல விரும்பும் யாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள எளிதாகவும் அதை ஒரு முன்னேறும் ஒழுங்கானதோர் பாணியில் முன் வைத்துப் பேசவும் உமது எழுத்து குறிப்புகளின் மேல் குறைந்த பட்சமான சார்பினையும் கொள்ளும்படி எளிதாக்குகிறது.

e. அது உமது பிரசங்கத்தைக் கேட்பவர்கள் நீவிர் சொல்லும் பொருளை விரிவாக்கம் செய்வதைக் கேட்பதற்கு எளிதாக்குகிறது. ஏனென்றால் அது ஒழுங்கான காரணகாரிய முறையில் செய்தித் தொடர்பாகிறது.

**2. உமது நோட்டு புத்தகம் குறிப்புகள் பற்றியது**

a. அவைகளை சுருக்கமாக வைத்துக் கொள்க. எலும்புக் கூடு வகையான குறிப்புகளை பயன்படுத்த அப்பியாசிப்பதால் அவைகளை ஒரே வீச்சுப் பார்வையில் பார்க்க முடியும்.

b. அவைகளை ஒழுங்காக வைக்கவும். எல்லா நேரங்களிலும் அவற்றை எளிதாக தொடர்ந்து படித்துப் பார்க்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும்.

c. அவைகள் பரந்த தன்மையில் விளங்கிக் கொள்ள தக்கதாக இருக்கட்டும். நீவிர் பேச விரும்புகிற தலைப்பின் எல்லா அம்சங்களையும் சேர்த்துக் கையாள முயற்சிக்க வேண்டும்.

d. புதிய கருத்துக் கோட்பாடுகளின் மேல் முழு கவனத்தையும் செலுத்தவும். உமது சிந்தனைகளை சிறிய வாக்கியங்கள் ஆக செய்து கொள்ளவும். உம்முடைய சிந்தனைகளை பளிங்கை போல் ஆக்கிக் கொள்க. கற்றுக் கொண்டு அவைகளை எளிய வாக்கியங்களாக சொல்ல வேண்டும். ஒரு தத்துவ கோட்பாட்டைச் சுருக்கியும் ஒரே வாக்கியத்தில் சொல்வதற்கு பழகிக் கொள்ள வேண்டும்.

e. சுருக்கமான குறிப்புகளாக செய்து கொள்ளவும். அந்தக் குறிப்புகள் உன்னுடைய ஞாபக சக்தியை குத்திக் கிளறுவதற்காகவே இருக்கிறது. ஒரே ஒரு குறிப்பான அடையாளமுள்ள வார்த்தை நீ உன்னில் நினைவுபடுத்திக் கொண்டு சொல்ல விரும்புகிறதோர் நிகழ்ச்சியை நினைவுபடுத்தி உன்னுடைய வார்த்தையைக் கேட்கும்படி கூடியிருக்கிற கூட்டத்தினரோடு பகிர்ந்து கொள்ள உதவும்.

f. அந்தக் குறிப்புகளைப் படிப்பதற்கு சுலபமானதாக எழுதிக் கொள்ளவும். உன்னிடம் ஒரு தட்டச்சு இயந்திரமோ அல்லது அச்சு இயந்திரத்தோடு கூடிய கணணியோ இருக்குமானால் நீவிர் அச்சு இயற்றப்பட்ட குறிப்புகளைப் படிப்பதற்கு எளிதாக இருக்கும். அப்படி அல்லவென்றால் உனது குறிப்புகளை தெளிவாகவும், படிப்பதற்கு எளிதாகவும் இருக்கும்படி அச்சடித்துக் கொள்ளலாம். எப்பொழுதும் உன் குறிப்புகளை ஏனோதானோ என்று கிறுக்கி எழுதக் கூடாது. ஏனென்றால் பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு அக்குறிப்புகளைக் குறித்து ஆழமாகச் சிந்தித்து நீவிர் எழுதியதை இன்னதென்று கண்டுபிடிக்கும் படியாக நேரிடும்.

## E. புத்தகத் தலைப்பான பிரசங்கத்தின் கட்டுமான அமைப்பு

உம்முடைய பிரசங்கத்தின் சுருக்கமான விவரம் வழக்கமாக மூன்று பெரிய பகுக்கப்படாத தனிமங்களால் ஆனது.

- அறிமுகம்
- சத்தியத்தின் முக்கியமான பிரசித்தம்
- முடிவுரையும் வேண்டுகோள் விடுத்தலும்

நாம் இவற்றை அதிகமான விவரமாக கீழே வரும் பகுதிகளில் பரிசீலனை செய்வோம்.

### 1. அறிமுகம்

உம்முடைய அறிமுகமாவது உமது செய்தியின் முக்கியமானதோர் பகுதியாக இருக்கலாம். ஏனென்றால் நீவிர் உம்முடைய சபையினரின் கவனத்தை இப்பொழுது ஆரம்ப காலத்தில் பெறாவிட்டால் உம்முடைய பிரசங்கத்தின் எஞ்சிய பகுதியைக் கவனிப்பதில் மிகக் குறைந்த கவனத்தைக் தரலாம். இந்த அறிமுகம் சில சமயங்களில் உம்முடைய செய்தி தலைப்பின் ஒரு சுருக்கமான உருவமாக எடுக்கலாம். உம்மை கவனிக்கும் கூட்டத்திற்கு நீவிர் பேசப் போகிற தலைப்பின் திட்டத்தையும் பேசும்படியாக எடுக்கப் போகிற பேச்சின் பரிமாணத்தையம் சுருக்கமாகக் கூறலாம். மேலும் இந்தத் தலைப்பை எப்படி பேசுவதற்கு திட்டம் செய்திருக்கிறீர் என்பதையும் விளக்கலாம். இந்த வழிமுறையால் அவர்களுடைய போஷாக்கு ஆசையை கூர்மையாக்கி அவர்கள் அதிகமாகக் கேட்கும்படி கூர்மையானவர்களாக ஆக்கலாம்.

**a. உம்முடைய அறிமுகப் பேச்சு எதைச் சாதிக்க வேண்டும்:**

– ஆர்வத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காக அந்த அறிமுகமானது கேட்பவர்களின் ஆர்வத்தையும் கற்பனை சக்தியையும் உடனடியாக கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

– ஒத்துணர்வை ஏற்படுத்திக் கொள்க. அந்த அறிமுகம் (செய்தி கொடுப்பவர்) உமக்கும் உமது பிரசங்கத்தை கேட்பவர்களுக்கும் இடையே ஒத்துணர்வை ஏற்படுத்திக் கொள்க.

– அதை ஒப்புக் கொள்ளுதலுக்கு இடம் தருக. அது மக்களிடமிருந்து ஒரு ஒப்புக் கொள்ளுதலை உமக்குத் தரவேண்டும். நீவிர் அவர்களுடைய ஆர்வம், நம்பிக்கை மரியாதையைப் பெற்றாக வேண்டும்.

– அவர்களுக்குச் சொல்லி தெரியப்படுத்துக. அது அவர்களுக்கு நீவிர் பேசப் போகிற பொருள் தலைப்பு என்னதென்றும் அதை எப்படிப் பேசப் போகிறீர் என்பதையும் தெரியப்படுத்த வேண்டும்.

– அதைப் பற்றி நிச்சயமாக நம்பச் செய்யவும். அந்த அறிமுகமானது கேட்பவர்களை உம்முடைய செய்தியின் தலைப்பைக் குறித்து நிச்சயமாக நம்பும் படி செய்து அவர்களுடைய எச்சரிக்கையான கவனத்தை உம்முடைய செய்தியின் மீதியான பகுதிகளுக்கும் பெறவேண்டும்.

உம்முடைய அறிமுகப் பகுதியில் ஏதோ தவறு செய்தது போல வருத்தம் தெரிவித்து ஒரு பொழுதும் ஆரம்பிக்கக் கூடாது. ‘‘துரதிர்ஷ்டவசமாக எனக்கு போதுமான நேரம் கிடைக்கவில்லை. ஆதலால் அந்த செய்தி ஒரு நல்ல செய்தியாக இருக்காது என்று அஞ்சுகிறேன்.’’ என்று ஒரு சமயத்திலும் சொல்லக் கூடாது. அது அப்படி இருக்குமானால் அந்த அதிர்ஷடம் குறைந்த மக்கள் சீக்கிரமே

போதுமானவற்றைக் கண்டு பிடித்துவிடுவார்கள். அவர்களுக்கு அதைச் சொல்ல தேவையில்லை. அந்த விதமான வருத்தம் தெரிவித்தலானது உன்னுடைய திறமையில் உன்னுடைய நம்பிக்கையை குறைத்து நிச்சயமாகவே அது உம்முடைய செய்தியில் மக்களுடைய நம்பிக்கையை அதிகரிக்கும் படி செய்யாது!

**b. ஒரு நல்ல அறிமுகத்தின் சிறப்பியல்புகள்:**

– அது நீ சொல்லப் போவதைத் தவிர, அதற்கு மேல் அதிகமாக வாக்குக் கொடுப்பதில்லை. சில சமயங்களில் பிரசங்கம் செய்பவர் ஒரு நாடக பாணியான அறிமுகத்தை செய்திக்குத் தரலாம். அவர் மேற்கொண்டு வருவதைப் பற்றி கவனிப்பவர்களுக்கு உணர்ச்சியூட்டுகிறது. அவர்களுக்கு ஆச்சரியமானதும் அறிவூட்டக் கூடியதுமான செய்தியை தருவதாக வாக்குப் பண்ணுகிறார். அந்த செய்தியானது அவரால் வாக்குப் பண்ணப்பட்ட மட்டத்தை அடையாவிட்டால் அது ஒரு திடீர் வீழ்ச்சியாக ஆகக்கூடும். அவரது நிகழ்ச்சியை கவனிப்போர் ஏமாற்றமடைவார்கள். மேலும் அவரிடம் கொண்டுள்ள நம்பிக்கையையும் இழந்து விடுவார்கள்.

– அது மிகவும் உணர்ச்சிவசத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது. ஆகவே உம்மால் நிலை நிறுத்த முடியாத ஒரு அளவை ஏற்படுத்திக் கொள்வது கூடாது. ஆகவே உம்முடைய அறிமுகம் தன்னடக்கமுடையதாக இருக்கட்டும். அப்பொழுது உம்மை கவனித்துக் கேட்பவர்கள் அந்த பிரசங்கமானது தாங்கள் எதிர்பார்த்ததை விட ஆர்வத்தைத் தூண்டுவதாகக் கண்டுபிடிக்கும் பொழுது மகிழ்ச்சியுடன் வியப்படைவார்கள்.

– அது ஒரு நீண்ட அறிமுகமாக இருக்கக் கூடாது. இது ஒரு அறிமுகமே அன்றி பிரசங்கம் அல்ல என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

– அது உம்முடைய பிரசங்கத்துடன் வெளிப்படையான தொடர்பு உடையதாக இருக்க வேண்டும். அந்த அறிமுகம் பிரசங்கத் தலைப்புக்குள் நடத்திச் செல்ல வேண்டும். ஆகவே அது உம்முடைய செய்தியுடன் இன்றியமையாத தொடர்புடையதாக இருக்கவேண்டும். அது நீவிர் பகிர்ந்து கொள்ள விரும்பும் பிரசங்கத் தலைப்பின் விஷய சராம்சமாக இருக்க வேண்டும். அது நீவிர் விளக்கிக் கூற விரும்பும் சத்தியத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு கதையாகக் கூட இருக்கலாம்.

– அது மிகுந்த கவனத்துடன் ஆயத்தம் செய்யப்படவேண்டும். உம்முடைய அறிமுகமான ஆரம்பமானது உம்மை கவனித்துக் கேட்பவர்களின் கவனத்தைப் பெறவிருப்பதால் அதற்கு நிச்சயமாகவே கவனத்துடன் பெற்ற சிந்தனையும் ஆயத்தமும் தகுதியாகிறது. உம்மை கவனித்துக் கேட்பவர்களின் ஸ்தானத்தில் வைத்து நிறுத்திப் பார்க்கவேண்டும். ஆகவே உம்மைத் தானே கேட்டுப் பார்க்கவும். எது என்னுடைய கவனத்தை வெற்றியாக அடைவதற்கு உதவும்? நான் சொல்ல விரும்புவதெல்லாவற்றிலும் எந்த விதமான குறிப்பிட்ட அம்சம் என்னுடைய கவனத்தை ஈர்க்கும்? இந்த விதமாக உமது கற்பனையை உபயோகித்தால் நீவிர் உமது அறிமுகப் பேச்சு எந்த விதமான பாணியில் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

– அது ஒரு சமானியமான மாற்றிச் செல்லும் போக்கை உமது பிரசங்க தலைப்புக்குள் உண்டாக்கும். மேலும் மிகவும் சரியாக முன் வைக்கப் பட்டால் எங்கே உமது அறிமுகப் பேச்சு முடிகிறதென்பதும் பிரசங்கத் தலைப்பு ஆரம்பிக்கிறதென்பதை உம்மைக் கவனித்துக் கேட்பவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிய வராது.

இந்த விதமான அறிமுகம் எல்லா விதமான செய்திகளுக்கும் பொருந்தும். இது தனித்தனியான தெளிவான பல பிரிவுகளாக அல்லது குறிப்புகளாக இருக்கக் கூடாது. எல்லா விதமான குறிப்புகளும் நடுமையமான பொருள் தலைப்பை அல்லது வேதாகமப் பகுதிக்கு தொடர்பு உடையதாக இருக்க வேண்டும்.

**2. உமது செய்தித் தலைப்பின் முக்கியமான (சரீரமாகிய) பகுதி**

உம்முடைய பிரசங்க பொருள் தலைப்பை மூன்று முக்கியமான பகுதிகளாகப் பிரித்து வைத்துக் கொள்ளும் படிக்கு ஆலோசனை சொல்லுவேன். இந்த பாகங்கள் ஒரே நீளமான அளவில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அங்கே ஓர் இயற்கையானதும் (சாதாரணமான) காரண காரியமானதும் பரபரப்பில்லாத முன்னேற்றமுடையதாய் ஒரு குறிப்பிலிருந்து மற்றொரு குறிப்பிற்குக் கடந்து செல்ல வேண்டும்.

இந்த விரிவான பாகங்கள் நீவிர் அதை முன் வைத்து பிரசங்கிக்கும்பொழுது வெளிப்படையாக இருக்க வேண்டிய தேவை இல்லை. ஆகவே "இப்பொழுது என்னுடைய மூன்றாவது குறிப்பு" என்று சொல்லுகிற முறையைத் தவிர்ப்பது நல்லது. ஒரு வேளை அந்த பாகப் பிரிவுகள் பின் வருவது போன்று அமையலாம்:

**A. சத்தியத்தை முன்னிலைப் படுத்திக் கூறுக.**

1. அதை பிரகடனஞ் செய்யவும்.
2. விளக்கிக் கூறவும்.
3. அதைத் தெளிவு படுத்தவும்.

**B. அந்த சத்தியத்தை விரிவாக்கு**

1. அதை வளரச் செய்யவும்.
2. சாராம்சப் படுத்து.
3. நிரூபித்துக் காட்டு

**C. உச்ச நிலை**

1. உன்னுடைய முடிவுரையை முன் வைக்கவும்.
2. இதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ளக் கூடும்?
3. நாம் அதை எப்படி நடைமுறையில் பொருத்தி செயலாக்கலாம்?

## 3. முடிவுரை

மனத்திற்கு வேண்டுகோள் விடுக்கவும். உமது பிரசங்கத்தை சராம்சமாகத் தரவும். திரும்பவும் அதை எடுத்துச் சொல்லவும். (மனச் சாட்சிக்கும்) சித்தத்திற்கும் வேண்டுகோள் விடுக்கவும். அவர்களை செயல்பட வற்புறுத்தவும். உணர்ச்சிகளைத் தூண்டவும். நோக்கத்தை நிறைவேற்றும்படி முயற்சி செய்யவும்.

# F. எப்படி உமது பிரசங்கத்தை ஆயத்தம் செய்வது?

### 1. முதலாவது ஒரு சாதாரணமான திட்டத்தை ஆயத்தப்படுத்து

ஒரு புறவரி அமைப்பு உமது பிரசங்க விஷயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு செயலூக்கமுள்ள ஒரு முறையாகத் தந்து உதவுகிறது. ஒரு தடவை நீவிர் ஒரு நல்ல புறவரி அமைப்புத் திட்டத்தை உருவாக்கும் விதத்தை நன்கு கற்றுக் கொண்டால் நீவிர் அதை மிக எளிதானதாகவும், வசதியான தாகவும் உமது நீண்ட பிரசங்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

உம்முடைய பிரசங்கத் தலைப்பை பரிசீலித்து மதிப்பீடு செய்யும்பொழுது ஒரு பெரிய காகிதத்தில் உமக்குள் வரும் ஒவ்வொரு சிந்தனையையும் தவறாமல் குறித்து வைக்கவும். அந்த விஷய விவரங்களை அதன் பிழையற்ற சரியான வரிசை முறையில் ஒழுங்கு படுத்தி வைப்பதைப் பற்றி கவலைப்படவேண்டாம். ஒவ்வொரு நியாயமான சிந்தனையையும் உம்முடைய மனதில் அந்த தலைப்புப் பொருளைப் பற்றிக் கருத்தில் கொள்ளும் பொழுது எழும் சிந்தனைகளை தவறாது குறித்துக் கொள்ளவும்.

### 2. உமது முக்கியமான போக்கு சிந்தனைகளைத் தெரிந்தெடுக்கவும்.

இதில் பொதுவாக மூன்று முக்கியமான சிந்தனைகளை எளிதில் கண்டு கொள்ளலாம்.

- அந்த பெரிய காகிதத்தில் நீவிர் எழுதியுள்ள மூன்று முக்கியமான விஷயக் குறிப்புகள் எவை? அவற்றை சாதாரணமான வரிசையில் எழுதிக் கொள்.
- எந்த குறிப்பு முதல் இடத்தைப் பெறவேண்டும்?
- அதற்காகப் போடப்பட வேண்டிய அஸ்திபாரமான விஷயக் குறிப்பு யாது?

அதை உமது முதல் எண் தலைப்பாக எழுதிக் கொள்ளவும். அவைகளை பெரிய முதல் எழுத்துக் களால் (Capital Letters) எழுதிக் கொண்டு கோடிட்டுக் கொள்ளவும்.

இப்பொழுது உம்மையே கேட்டுக் கொள்ளவும்: எந்த விஷயக் குறிப்பு முதல் எண் பெற்றக் குறிப்பை அடுத்து இயல்பாகவே பின்வரும்? இப்பொழுது உமக்கு ஒரே ஒரு முக்கியமான சிந்தனை அந்த விஷய தொகுப்பின் முடிவுரையாக அமைய வேண்டிய குறிப்பு மாத்திரம் எஞ்சியுள்ளது. இது அப்பொழுது எண் 3 ஆன குறிப்பாகத் தொடர்ந்து இடம் பெறும். ஆகவே அவற்றை காகிதத்தில் இதே போல் குறித்துக் கொள்ளவும்:

1. முக்கியமான தலைப்பு எண் 1
   a. சிறு தலைப்பு
   b. சிறு தலைப்பு
   c. சிறு தலைப்பு
2. முக்கியமான தலைப்பு எண் 2
   a. சிறு தலைப்பு
   b. சிறு தலைப்பு
   c. சிறு தலைப்பு
3. முக்கியமான தலைப்பு எண் 3
   a. சிறு தலைப்பு
   b. சிறு தலைப்பு
   c. சிறு தலைப்பு

இப்பொழுது உம்முடைய சாதாரண புறவரிக் குறிப்புத் திட்டத்தில் உள்ள மீதியான விஷய விவரங்களை படித்துப் பார்க்கவும். அவற்றை நீர் எழுதி வைத்துள்ள முக்கியமான குறிப்பிட்ட பெரிய தலைப்பின் கீழ் அதன் கிரமப்படி வரிசைப்படுத்துக. இவைகள் ஒவ்வொன்றும் அதற்குத் தகுதியான பெரிய தலைப்புகளாகிய எண் 1,2,3 என்பதன் கீழ் இடம் பெற்று வைக்கப்படட்டும். ஒவ்வொரு சிந்தனையும் ''ஒரு துணைத் தலைப்பாகிறது''. அவற்றை a,b,c என்று எண் தந்து குறிக்கவும். உம்முடைய சிந்தனைகளும் மற்ற விஷயக் குறிப்புகளும் இப்பொழுது ஒரு ஒழுங்கான வரிசை அமைப்பின் கீழ் வருகின்றன. இது அந்த பொருள் தலைப்பைப் படிப்பதற்கு உமக்கு இலகுவாக இருக்கிறது.

## பிரசங்கத்திற்கான உதாரணங்கள்

**உதாரணம் 1.** யோவான் 3:16ல் சொல்லப்படும் யாவராலும் நன்கு அறியப்படுகிற வசனமானது, ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' (யோவான் 3:16) என்பதைக் கொண்டு இந்த மாதிரியை விளக்கிக் காட்டும்படி அனுமதியுங்கள்.

**முகவுரை**

மகா அன்பையுடையவர்கள் என்று சொல்லப்படுகிற அநேகரை உலகம் நன்கு அறியும். ஆனால் சந்தேகமின்றி கருதப்படுகிற அந்த ஒருவரைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எல்லாரையும் நேசிக்கிற மகா அன்புள்ளவர். அவர் தாமே தேவன் ஆனவர். அவர் அதிகத் திரளான எண்ணிக்கையுள்ள மக்களை நேசிக்கிறார். அதுவும் அன்பின் மிக உன்னதமான பண்புள்ள அன்பு ஆகும். அந்த அன்பினால் அவர் தூண்டப்பட்டு செய்யக் கூடிய மகத்தான தியாக பலியைச் செய்தார்.

1. தேவன் உலகம் முழுவதற்கும் ஆகக் கொண்ட உன்னதமான தேவ அன்பு
   a. அவர் சர்வ உலகத்தையும், மனித வர்க்கத்தையும் சிருஷ்டித்தார்.
   b. அவர் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களையும் சமமாக நேசிக்கிறார்.
   c. அவர் அவர்கள் (உலகில்) எல்லாரையும் தமது இராஜ்ஜியத்தில் நித்திய நித்தியமாக வசிக்க விரும்புகிறார்.
2. அந்த பேரன்பு தம்முடைய ஒரே பேறான குமாரனை அருளிச் செய்யும்படி செய்தது.
   a. பிதாவாகிய தேவனுக்கு குமாரனாகிய (கிறிஸ்து) எவ்வளவு விலையேறப் பெற்றவர் ஆவார். எந்த உலகப் பிரகாரமான தகப்பனும் தன் குமாரனை அந்த அளவுக்கு நேசிக்கவில்லை.
   b. கர்த்தருடைய தியாகம் (பலி) எவ்வளவு
   c. தேவன் மகத்தானவர். இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இலவசமாகத் தந்தார். (உலகிலுள்ள ஒவ்வொருவருக்காகவும்)
   d. நம்முடைய பாவங்களுக்கும் குற்றங்களுக்கும் பரிகாரமாக மரணமடையும்படி அவரைத் தந்தருளினார்.

3. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாக
   a. இந்த விதமான ஆச்சரியமானதோர் கொடையானது (offer) யாவருக்கும் இலவசமாக் கிடைக்கிறது.
   b. தேவன் உலகத்தில் மிகவும் மோசமானவனையும் (கெட்டுப் போனவனையும்) நேசிக்கிறார்.
   c. இரட்சிப்பானது இயேசுக் கிறிஸ்துவின் மூலமாக விசுவாசத்தினால் கிடைக்கும் இலவசமான ஈவு ஆகும்.

**முடிவுரை**

இப்பொழுது தேவன் தம்மால் வழங்கப்படக்கூடிய மகத்தான ஈவைத் தர விரும்புகிறார். அது கிறிஸ்துவுக்குள்ளான நித்திய ஜீவனாகும். அத்தகைய ஆச்சரியமான ஈவை நீ புறக்கணித்தாலும் அல்லது மறுத்தாலும் நீ மிகவும் முட்டாள் ஆவாய். ஆகவே தாமதமில்லாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்.

**உதாரணம் 2.** நாம் இப்பொழுது சுவிசேஷத்திலிருந்து ஒரு சாதாரணமான கதையைக் கவனிப்போம். லூக்கா 8:41-48ல் நாம் இங்கே பன்னிரண்டு வருஷங்களாக பெரும்பாடு உள்ளவளாக இருந்து பின்னர் கிறிஸ்துவிடம் வந்தாள். அப்பொழுது உடனே சொஸ்தமாக்கப்பட்டாள் என்ற கதையைப் படிக்கிறோம். அவள் சொஸ்தமடைந்தவளாக அவளுடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் ஒரு ஆழமான சமாதானம் பெற்றவளாகத் திரும்பிப் போனாள். நமது பிரசங்கத் தலைப்பானது 48ம் வசனத்திலிருந்து எடுக்கப்பட்ட ''சமாதானத்தோடே போ'' என்ற சொற்றொடராகும். (இது உம்முடைய செய்தி தூதுவின் தலைப்பாகவும் இருக்கலாம்)

**முகவுரை.**

நிச்சயமாகவே ஒவ்வொரு மனிதனும் உள்ளத்தில் சமாதானமும் பாதுகாப்பும் உடையதாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிப்பான். இந்த ஜீவியத்தில் பல காரணங்களால் நமது உள்ளத்து சமாதானம் திருடப்பட்டு விடும். சிலுவைகளில் ஒன்று நோய் வாய்படுதல். ஒருவருக்கு ஒரு அபாயகரமான நோயினால் பீடிக்கப்படும் பொழுது உள்ளான சமாதானத்தை நிலைப்படுத்தி வைத்திருத்தல் கடினமானதாகும். நமது இருதயமானது நிச்சயமற்ற தன்மையாலும், நம்பிக்கையின்மையாலும் நிரம்பப் பெற்று இருக்கும்.

இங்கே இந்த விதமான நோய்வாய்ப்பட்ட நபரின் கதை சொல்லப்பட்டுள்ளது. அவள் பன்னிரண்டு வருஷங்களாக வியாதியாய் இருந்தாள். அவள் அநேக வைத்தியர்களிடம் போயிருந்தாலும் அவளுக்கு உதவி செய்ய அவர்களில் ஒருவராலும் முடியவில்லை. உண்மையாகவே அவள் மேலும் நோயினால் கஷ்டப்பட்டாள். ஒரு நாள் அது ஒரு நல்ல நாள் அவள் இயேசுக் கிறிஸ்துவைச் சந்தித்தாள். இந்த அற்புதமான சந்திப்பினால் அவளுடைய நீண்ட நாள் வியாதியிலிருந்து உடனே சொஸ்தமானாள். மேலும் அவள் இருதயத்தில் ஓர் ஆழமான உள்ளான சமாதானத்தினால் (உணர்வினால்) ஆசீர்வதிக்கப்பட்டாள்.

அதே இயேசுக் கிறிஸ்துவும் இன்று நம்முடைய ஜீவனையும் ஆசீர்வதிக்கக் கூடும். நாம் இந்த கதையை உற்று கவனித்துப் பார்ப்போம். எப்படி அவள் சொஸ்தமாக்கப்பட்டாள் என்றும் நாமும் எப்படி சொஸ்தமடையக் கூடும் என்பதையும் கண்டறிவோம்.

1. இந்த ஸ்தீரிக்கு சமாதானம் இல்லை
   a. அவள் தொடர்ந்து பன்னிரண்டு வருஷங்களாக அடிக்கடி நோய்வாய் பட்டிருந்தாள்.
   b. அவள் தன்னுடைய பணம் எல்லாவற்றையும் செலவழித்தாள். இப்பொழுது அவளுக்கு கையில் காசில்லை.
   c. அவள் ஏமாற்றமடைந்து திருப்தியற்றவள் ஆனாள்.
   d. அவள் அவநம்பிக்கை அடையுமாறு சோதிக்கப்பட்டாள். அவளுக்கு யாருமே உதவி செய்ய முடியாது போலத் தோன்றியது. இன்னுங் கூட பலர் தனித்தவர்களாகவும், அவநம்பிக்கையுள்ளவர்களாகவும், பாதுகாப்பு இல்லாத உணர்ச்சியுடையவர்களாகவும் அந்த ஸ்தீரியைப் போலவே அதே மாதிரியாக இருக்கிறார்கள்.

2. அவள் எப்படி கிறிஸ்துவிடம் வந்தாள்

a. அவள் அவர் (கிறிஸ்து) யாரோ மற்றொருவருக்குச் செய்ததைப் பற்றி கேள்விப்பட்டாள்.
b. அவளும் அவர்களைப் போலவே அவருடைய சொஸ்தமாக்குதலை அடையத் தீர்மானித்தாள்.
c. அவள் விசுவாசத்தில் தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டாள். அவள் தனக்குள் தானே சொல்லிக் கொண்டதாவது, ‘‘நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமடைவேன்’’ என்று சொன்னாள். (மாற்கு 5:27)
d. அவள் அநேக தடைகளைத் தகர்த் தெறிந்தாள்.
e. அவள் கிறிஸ்துவண்டை வந்தாள்.
f. அவள் விசுவாசத்தினால் அவரைத் தொட்டாள்.
g. அவருடைய வல்லமை அவளுக்குள் பிரவகித்தது. உடனே அவள் முழுவதும் சொஸ்தமானாள்.

3. அவளது இரட்சிப்பு

a. அவருடைய சீஷர்களாலும் அவளுக்கு உதவி செய்ய முடியவில்லை. அவளுடைய தேவையையும் அவர்களால் அறியக் கூடவில்லை. மனிதர்கள் கூட நமக்கு உதவி செய்ய முடியாத சமயங்கள் உண்டு.

b. கிறிஸ்து அவளுடைய (பாவ) அறிக்கையை செய்யும்படி விரும்பினார். ‘‘என்னைத் தொட்டது யார்?’’ அவரைத் தொட்டவர் யார் என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். அவளது வெளியரங்கமான அறிக்கையைப் பெற விரும்பினார். ரோமர் 10:10 சொல்லுகிறதாவது, ‘‘நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்’’.

c. கிறிஸ்து அவளை ‘‘மகளே’’ என்று அழைத்தார். அவளை தேவனுடைய குடும்பத்தில் ஒருத்தியாக ஏற்றுக் கொண்டார்.

d. அவர் அவளைப் பார்த்து, ‘‘சமாதானத்தோடே போ’’ என்று சொன்னார். அந்த சொன்ன நேரத்திலிருந்து அவள் உண்மையான சமாதானத்தை அறிந்தாள். நிச்சயமற்ற சந்தேக நிலைமையும், வருங்கால அச்சமும் அவளை விட்டு அகன்று போயிற்று. தேவ சமாதானம் அவளது இருதயத்தையும் ஆத்துமாவையும் நிரப்பிற்று.

e. அவளுடைய விசுவாசமே அவளை பூரணமாக சொஸ்தமாக்கியது. (லூக்கா 8:48) தேவன் ஒவ்வொருவரும் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் பூரண சுகம் பெற்றவர்களாக இருக்கும்படி வாஞ்சிக்கிறார்.

**முடிவுரை.**
அவள் மறுசாயல் பெற்றவளாகத் திரும்ப போனாள் நீ விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை வந்தால் நீயுங்கூட மறுசாயல் பெறுவாய்.

## சராம்சம்

வேதாகமத்திலிருந்து இப்படிப்பட்ட சம்பவங்களை அறுத்தும், பிரித்து சோதித்தும் பார்க்க அப்பியாசம் செய். அந்தக் கதையின் மூன்று பெரிய சிந்தனைக் கருத்துக்கள் அல்லது பாகங்களை கண்டுபிடிக்க முயற்சி செய்யவும். நீ அந்த மூன்று முக்கியமான பகுதிகளையும் தீர்மானஞ் செய்த பிறகு அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக பிரித்துப் பரிசீலனை செய்து பிறகு அதில் அமைந்துள்ளதுமான பாகங்களாக உடைத்து எடுக்கவும். அந்த முக்கியமான சொல் பொருள் பகுதிகளில் நான்கு அல்லது ஐந்து சிறிய சத்தியங்கள் அடங்கி இருக்கும். அந்த வெவ்வேறு பகுதிகளையும் அக்கு அக்காகப் பிரித்துப் பார்க்கவும். அவைகளை ஒழுங்குபடுத்தி வரிசைப்படுத்துக. பின்பு அவைகளை அதன் நடைமுறைப்படி வரிசைபடுத்து. இது உனக்கு சிறந்த அப்பியாசமாகும். அது முதலில் சுலபமாக உனக்கு வராமல் இருக்கலாம். ஆனால் விடா முயற்சி செய். அதைத் திறம்படி கற்றுக் கொள்ளுமாறு தீர்மானஞ் செய்து கொள்க. சிறிது காலம் பொறுத்து அது உனக்கு சுலபமாக ஆகி விடும்.

நான் அடிக்கடி பிரசங்கம் கட்டும் பணியை ஒரு வீட்டைக் கட்டி நிற்கும் கட்டுமானத்திற்கு ஒப்பிடுவேன். அதன் அறிமுகம் அந்த இல்லத்திற்கு இட்டுச் செல்லும் பாதை போலாகும். அது உன்னை முன் திறந்த வாசல் வழியாக முன் வாசலுக்கு அதன் மூலமாக உள்ளே போக உதவி செய்யும். ஒவ்வொரு பெரிய தலைப்பும் அந்த வீட்டிலுள்ள அறையைப் போன்றது. அதனுடைய துணைச் சிறு தலைப்புகள் அங்குள்ள அலங்கார தளவாடங்களாகும். உதாரண விளக்கங்கள்

ஜன்னல்களைப் போல உள் அறைகளில் கட்டப்பட்டு அலங்கார மரத்தினாலான தளவாடங்களுக்கு அந்த அறையில் வெளிச்சம் தருபவை. (உதாரணங்கள் ஆனவை எளிய எடுத்துக்காட்டுகளாக அதிலுள்ள ஆழமான சத்தியங்களைப் புரிந்து கொள்ளுமாறு பயன்படுபவையாகும்) இந்த விதமான பிரசங்கங்களை ஆயத்தம் செய்யும்பொழுது இந்த உவமானத்தை மனதில் கொண்டு ஆயத்தம் செய்யவும்.

## அதிகாரம் 3 - வியாக்கியான பிரசங்கம் (தெளிவாகப் பொருள் விளக்கும்)

இங்கே நாம் வேதாகமப் பகுதிகளை வியாக்கியானம் செய்யும் கலையைப் பற்றி விளக்குவோம். பொருள் விளக்கஞ் செய்தல் என்பது வியாக்கியானம் செய்தல் அல்லது விரிவாக விளக்கிச் சொல்லுதல் என்று கருத்துப்படும். அதாவது ஒரு தலைப்பின் பொருளை விவரமாக அல்லது விரிவாக எடுத்துரைத்தலாகும். உதாரணமாக நீவிர் யோவான் எழுதிய சுவிசேஷத்தை விளக்கிச் சொல்லலாம் எனத் தீர்மானிக்கலாம். அதாவது அதிகாரம், அதிகாரமாகச் சொல்வது. முதலாம் அதிகாரத்தில் ஆரம்பித்து அதன் அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் வசனம் வசனமாக வியாக்கியானஞ் செய்து பொருள் விளக்கம் செய்ய முற்படக் கூடும். நீங்கள் ஒவ்வொரு வாரம் தோறும் ஒவ்வொரு அதிகாரமாகப் போதித்து முடிவாக அந்த புத்தகம் முழுவதையுமே விளக்கிக் கூறுவதாகும்.

## A. பொருள் விளக்கஞ் செய்யும் பிரசங்கத்தின் அனுகூலங்கள்

இது வேதாகமத்தைக் கற்றுக் கொடுக்கும் சிறந்த போதனை முறையாகும். அது சில குறிப்பிட்ட அனுகூலங்களைப் பெற்றது. மேலும் அப்பியாசிக்க நல்லதொரு பாணியாகும். இங்கே சில வெளிப்படையான அனுகூலங்கள் இந்த முறையைப் பற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**1. அது ஒரு வேதாகமப் போதனை முறை**

இயேசு தாமே இந்த முறையை அடிக்கடி பின்பற்றினார். அவர் பழைய ஏற்பாட்டு வேதாகமப் பகுதியைத் தெரிந்து கொண்டு அதன் அர்த்தத்தை தம்மை கவனித்துக் கேட்பவர்களுக்கு விளக்கியும் வியாக்கியானமும் செய்வார்.

பேதுரு அப்போஸ்தலனும் இந்த முறையைப் பெந்தெகொஸ்தே நாளிலே கையாண்டார். அவர் பழைய ஏற்பாட்டு பகுதிகளில் தாவீது இராஜாவைக் குறித்து பேசும் பகுதிகளை எடுத்துக் கொண்டு அந்த திரள் கூட்டத்தினருக்கு அதன் உண்மையான அர்த்தத்தை விளக்கிக் கூறினார். அவர் மிகவும் கவனத்துடன் அந்த வேதாகமப் பகுதிகளில் மறைந்துள்ள தீர்க்கதரிசன மறைபொருளை எடுத்துக் காட்டி, அவைகள் எப்படி கிறிஸ்துவைப் பற்றிக் சுட்டிக்காட்டி குறிக்கின்றனவென்றும் அவ்வண்ணமே எவ்வாறு மேசியா எனப்படுகிறார் என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

மறுபடியும் ஸ்தேவான் இந்த பொருள் விளக்க முறையை அப்போஸ்தலர் அதிகாரம் 7ல் உபயோகிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே வேதாகமத்தில் பொருள் விளக்க பிரசங்க முறைக்கானதும் நேர்த்தியானதுமான உதாரணங்கள் நிரம்பப் பெற்றுள்ளன.

**2. அது வேதாகமத்து பிரசங்கிமார்களையும், வேதாகமம் சம்பந்தப்பட்ட கூடிவரும் சபைகளையும் உண்டாக்குகிறது.**

வேதாகமத்தை விளங்கஞ் செய்தல் உன்னுடைய ஊழியத்தில் போதுமான வேதாகம உபதேசம் இருக்கிறதை உறுதி செய்கிறது. நீவிர் ஒரு அதிகாரத்தை வசனம் வசனமாக எடுத்து பிரசங்கம் செய்யும்பொழுது சபையினர் தேவனுடைய வசனத்தால் நிரப்பப்படுகிறார்கள்.

**3. அது பரிசுத்த ஆவியானவரின் மறுபடியும் வலிமை கொடுக்கும் நிரப்புதலை வரவேற்கிறது.**

தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய வசனத்துடன் எப்பொழுதுமே ஆமோதிக்கிறார். (I யோவான் 5:7) ஆகவே எவ்வளவுக்கு அதிகமாய் வசனத்தைப் பிரசங்கிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய் சுவிசேஷ பிரபலத்தின் மீது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய வசனத்தை உறுதிப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறார். அவைகளை பல அதிகமான சமயங்களில் அடையாளங்களோடும் அற்புதங்களோடும் நிறைவேற்றுகிறார். (மாற்கு 16:20)

**4. மேலும் அவர் வேதாகமத்தின் மீது ஆழமான ஆர்வத்தை உண்டாக்கி உற்சாகப்படுத்துகிறார்.**

வேதத்தை நீவிர் அதிகமாக மக்களுடன் பகிர்ந்து கொள்ளும்பொழுது மக்கள் அதில் அதிகமான பசியுடையவர்கள் ஆகிறார்கள். அவர்கள் வெகுவிரைவில் வேதாகமத்தைத் தாங்களாகவே ஆழமான மட்டங்களில் படிக்கும்படி ஆரம்பிப்பார்கள். அவர்களுடைய ஜீவியம் மறுரூபமாக்கப்படும். அவர்கள் வசனத்தால் மறுபடியும் பலம் பெற்று வல்லமை அடைவார்கள். உங்களுக்கு வேதாகமம் சார்ந்த ஒரு திருச்சபை உண்டாகி இருக்கும்.

## B. ஆலோசனைகளாகக் கூறப்படும் நடைமுறைகள்

**1. மிகவும் பொருத்தமான வேதாகமத்துப் பகுதியை கவனத்துடன் தெரிந்தெடுக்கவும்**

தெரிந்தெடுக்கும் பகுதி உம்மை கவனித்துக் கேட்பவர்களுக்கு ஜீவனையும் பலத்தையும் தந்து கிரியை செய்வதொன்றாக இருத்தல் அவசியம். ஒரு பகுதி உம்மை ஆர்வம் உள்ளவராக்குகிறது என்பதற்காகவும் அல்லது மயக்குகிறதென்பதற்காகவும் ஆகிய காரணங்களுக்காக மாத்திரம் தேர்ந்தெடுக்கக் கூடாது. மேலும் வாக்குவாதம் பிரிவினை, சச்சரவு ஆகியவை உண்டாக்கும் பகுதிகளையும் தேர்ந்தெடுத்தல் கூடாது.

நீ தேவனுக்காக ஓர் வாய்க்காலாக இருக்க விரும்புகிறாய். ஏனென்றால் உன் மூலமாக தேவன் தம்முடைய வார்த்தைகளை தம்முடைய மக்களுடன் பேசக்கூடும். ஆகவே நீவிர் தேவனுடைய சித்தத்தை மக்களுக்காகப் பெறும்படிக்கு அவர்கள் மேல் உமக்குப் பொறுப்பைக் கொடுத்திருக்கபடியால் நீவிர் அந்தப் பொறுப்புக்குரியவர் ஆவிர். இந்த ஊழியம் சாகும் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட மகத்தான உரிமையாகும். மேலும் இது பயங்கரமான பொறுப்புகளில் ஒன்றாகும்!

**2. மக்களுக்கு அவர்களுடைய தற்கால நிலைமைக்கேற்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்**

தேவன் எப்பொழுதும் அவருடைய மக்களோடு பேச விரும்பும் தற்கால சத்தியத்தை வைத்திருக்கிறார் (II பேதுரு 1:12) தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் ஒரே தொடர்ந்த முன்னேறுதலும் வளர்ச்சி அடைதலும் இருக்கும். அவர் ஒவ்வொரு சபையின் விசுவாசிகளுக்கும் ஓர் குறிப்பிட்ட நோக்கத்தை வைத்திருக்கிறார்.

ஒவ்வொரு கூடிவரும் சபையும் தேவன் தங்களுக்காக குறித்து வைத்துள்ளதோர் குறிப்பிட்ட நோக்கத்தை அதன் போக்கில் முன்னேறி சென்று கொண்டிருக்க வேண்டும். இதை நிறைவேற்றும்படி அவருடைய குறிப்பிட்ட சத்தியமானது ஒரே சீராக ஊழியத்தில் கிரியை செய்யப்பட வேண்டும். சில சமயங்கள் பின்வருமாறு உம்மையே வினாவாகக் கேட்டுக் கொள்வது உபயோகமுள்ள பயிற்சியாய் இருக்கும். ‘‘இந்த ஜனங்களுடன் நான் பேசுவது கடைசி சந்தர்ப்பமாக இருக்குமானால் அவர் கேட்க வேண்டிய முக்கியமான காரியம் என்ன? என்பதுதான்.’’ இந்த விதமான சிந்தனையோடு பிரசங்கம் செய்வது உமக்கு உதவியாக இருக்கும். தேவன் மக்களுக்காக தாம் கொண்டுள்ள நோக்கத்தில் மக்கள் வளர்ச்சி அடைவதற்கும் முதிர்ச்சி பெறுவதற்கும் ஏற்றவகையில் உம்முடைய தலைப்புகள் பொருத்தமாகவும் இன்றியமையாதவையாகவும் இருப்பதற்கு உறுதிப்படுத்தும்.

**3. அந்த வேதாகமப் பகுதியை ஒவ்வொரு கோணத்திலிருந்தும் கவனமாகப் படிக்கவும்.**

அந்தப் பகுதியை பல தடவைகளில் படித்துப் படித்து அது உமக்கு பரிச்சயமாகும் வரைக்கவும் படிக்கவும். பின் வசனம் வசனமாகக் கவனத்துடன் படிக்கவும். வேதாகமத்தில் மற்றொரு வாக்கியத்துடன் துல்லியமான இணைப்பு இருக்குமானால் அப்பொழுது அந்தப் பகுதியையும் சேர்த்துப் படிக்கவும். உமக்கு ஒத்துவாக்கிய புத்தகம் ஏதாவது இருக்குமானால் அதையும் எந்த விதத்திலாகிலும் படிக்கவும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உமது இருதயத்தை பரிசுத்த ஆவியானவர் உம்முடன் இடைபடும்படி பகிர்ந்து கொள்ளும் எந்த சிந்தனைக்கும் திறந்ததாகவும், விழிப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

**4. உம்முடைய பொருள் தலைப்பை முற்றிலும் சரியாக புரிந்து கொள்ள முயற்சிக்கவும்**

எப்பொழுதும் அந்தப் பகுதியில் பொதிந்துள்ள கருப்பொருள் தலைப்பைக் கண்டுபிடித்துக் கொள்ளவும். இந்தப் பகுதியைத் தூண்டி எழுப்பும்பொழுது பரிசுத்த ஆவியானவர் எதைச் சொல்லும்படி முயன்றார்?

இந்த போதனை சத்தியத்தின் நடு நாயகமான இருதயப் பகுதி எது? இந்தப் பகுதியின் மூலமாக தம் ஜனங்களுக்கு தேவன் என்ன சொல்ல விரும்புகிறார்?

**5. ஒரு திட்டமான புறநோக்கை (இலட்சியத்தை) உன் மனதில் கொண்டிருக்கவும்.**
உம்முடைய புறநோக்காவது தேவனுடைய புறநோக்கத்தோடு முழுமையான இணக்கத்தில் இருக்கவேண்டும். அவர் உம்மோடு இந்த வேதாகமப் பகுதியின் மூலமாக உம்மோடு இடைபட விரும்புகிறார் என்பதை உணருவீரானால் உம்முடைய கடமையாவது எவ்வளவு விசுவாசத்துடன் கடமையை ஆற்ற வேண்டுமோ அவ்வளவு விசுவாசத்துடன் செயல்பட வேண்டும். ஆகவே இந்த செய்தியில் நீவிர் மூழ்கி நனைந்து செயல்படுதல் வேண்டும். தேவன் என்ன சொல்கிறார் என்பதை மட்டும் மனதில் புரிந்து கொள்ளுதல் போதுமானதாகாது. அவர் (ஆவியானவர்) என்ன உணர்கிறாரோ அதை நீவிரும் உணர வேண்டும். அவர் தம்முடைய இருதயத்தையும், ஆத்துமாவையுங்கூட தொடர்பு படுத்தி விரும்புகிறார். தேவனுடைய வார்த்தைகள் உம்முடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் பொங்கி ஓடவேண்டும். அவருடைய ஜனங்களுக்கு தேவனுடைய செய்தியை புரிந்து கொள்ளும் முறையில் ஒலி பரப்புச் செய்வதில் நீர் தேவனுடைய கருவியாக செயல்பட வேண்டும். நீவிர் அவருடைய பேசும் வாயாக இருத்தல் வேண்டும். நீவிர் உம்முடைய இருதயத்தை மக்களுடன் ஈடுபடுத்துமாறு அழைக்கப்படவில்லை. அவருடைய சிந்தனைகளை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவே அழைக்கப்பட்டீர்கள். இந்த விழிப்புணர்வு உம்மை தூண்டி எழுப்பும் ஏதுவாக இருக்கவேண்டும். இது உம்முடைய பிரசங்கத்திற்கு ஒரு கட்டாய வற்புறுத்தலான காரணமாக அமைய வேண்டும்.

**6. உம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து பேசுக.**
நீவிர் செயலூக்கத்துடன் சத்தியத்தை தொடர்பு படுத்திச் சொல்ல வேண்டுமானால் அது உம்முடைய சொந்த ஜீவியத்தில் தேவன் செயல்பட்டு கிரியை செய்த ஏதோ ஒன்றாகவாவது இருக்க வேண்டும். அநேக பிரசங்கிமார்கள் கோட்பாடுகளை முன்வைத்துப் பேசுவார்கள். அவர்கள் சில சமயங்களில் தேவையற்ற நடைமுறை சம்பந்தமில்லாத பயனற்றவைகளையும் பேசுவார்கள். எந்த ஒரு மனுஷனும் தனது ''மறுபடியும் பிறந்த அனுபவத்தை'' ஐயந்திரிபுற பிரசங்கிக்க முடியாது. ஏனென்றால் தானே அந்த மறுபடி பிறத்தல் என்ற அனுபவத்திற்குள் சென்றாலன்றி அதை பிரசங்கிக்க முடியாது.
நீவிர் அதை செயலூக்கத்துடன் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றால் அதை உண்மையாகவே உம்முடைய சொந்த ஜீவியத்தில் அனுபவித்திருக்க வேண்டும். அந்த பிரசங்கியார் ஜீவனுள்ள நிருபமாக அழைக்கப்பட்டிருக்கிறார். அவர் அந்த சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. அதை தன் ஜீவியத்தின் பழக்கத்தில் கைக்கொண்டும் செய்து காட்டியும் ஆக வேண்டும். அவர் தான் பிரசங்கிக்கும் எல்லாவற்றிற்கும் வாழ்ந்தும் காட்ட வேண்டும்.

**7. அதை அர்த்தம் உள்ளதாக்குக**
Exegesis என்பது: ''உண்மையான அர்த்தத்தை வெளியில் கொண்டு வருதல்'' என்று பொருள்படும். அந்த வேதாகம முக்கியத்துவம் உம்மைக் கவனித்து கேட்பவர்களுக்கு தெளிவாக விளங்கும் வரை எடுத்துரைப்பதற்கு உமது சக்திக்கு முடிந்தவரை உறுதிப்படுத்துவது உம்மைச் சார்ந்த பொறுப்பாகும். எப்பொழுதுமே உமது பேசும் பொருள் தலைப்பை எளிதாக்க முயற்சிக்கவும். இதைத் தான் இயேசுவும் செய்தார் என்பது கண்கூடு. அவருடைய ஊழியமானது வல்லமையாகவும் செயலூக்கம் உடையதாகவும் இருந்ததற்கு ஒரு முக்கியமான காரணமாகும். அவர் ஆழமான சர்ச்சைகளைத் தெரிந்து கொண்டு அவற்றின் தீர்வுகளை மிகவும் எளிதாக்கினார்.

நவீன காலத்து பிரசங்கம் செய்பவர்கள் இதற்க எதிர்மறையையே செய்கின்றனர். அவர்கள் மிகவும் எளிதான பிரசங்கத் தலைப்புகளை எடுத்துக் கொண்டு அவற்றை மிகவும் ஆழமானதாகவும் சிக்கலானதாகவும் ஆக்குவதால் அதைக் கேட்பவர்கள் தாங்கள் கேட்பதில் மிகக் கொஞ்சத்தையே விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது. அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு எளிதானதோ அதற்கேற்ப அந்த அளவுக்கு நல்லது.

**8. அதை நடைமுறைப் படுத்துக.**
உங்களுடைய செய்தியானது மக்களுக்காகப் பெற்றிருக்கும் நடைமுறைப் படுத்துதலை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு எப்பொழுதுமே முயற்சிக்கவும். கிறிஸ்தவர்களுக்குள்ளே அடிக்கடி நேரிடும் அபாயமானது ''அதிகமான (வேதத்தைப் பற்றிய) அறிவும் மிகக் குறைவான நடைமுறை

கிரியைகளுமே.'' அநேகக் கிறிஸ்தவர்கள் பல ஆண்டுகாலமாகப் பிரசங்கங்களைக் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் ஜீவியத்தில் மாறுதல்களோ அல்லது அந்தப் போதனைகளால் நடைமுறையில் வெளிப்பாடுகளும் ஏற்படுவதில்லை.

நீவிர் மக்களுக்கு பிரசங்கிப்பதோடு மட்டும் திருப்தியடையந்து விடக்கூடாது. உம்முடைய முடிவுரைகளை மிகவும் அதிகத் தெளிவாக முன் வைக்கவும். மக்கள் தேவனுக்காக கருத்துடன் பிரதி கிரியைகளை எப்படி செய்வதென்று சொல்லுவதற்கு முயற்சிக்கவும். உம்முடைய செய்திகளுக்குப் பிறகு, பின்தொடரும் பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தி அதில் மக்கள் இடைபட்டு ஈடுபாடு கொள்வதுடன் கேட்பவர்களாக (வசனத்தை) மட்டுமல்ல அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்கும்படி முயற்சியுங்கள்.

## C. தேவையான போதனை விஷயங்களைச் சேகரித்தல்

வேதாகமப் பகுதியைப் படிப்பதற்குங் கூடுதலாக நாம் எப்படி வேண்டிய போதனைக்குரிய விஷயங்களைச் சேகரிக்கிறோம்? இங்கே நீவிர் உம்மைத் தாமே கேட்டுக் கொள்ளக்கூடிய சில வினாக்கள் தரப்படுகின்றன:

**1. நான் இந்த பொருள் தலைப்பைப் பற்றி எப்பொழுதாவது கேள்விப்பட்டோ அல்லது படித்தோ இருக்கிறேனா?**

உம்முடைய ஞாபக சக்தியை தூண்டி விட்டு கிளறி விடுங்கள். ஒரு வேளை இந்தத் தலைப்பைப் பற்றி எப்பொழுதோ ஒரு தடவை ஒரு நல்ல புத்தகத்தில் படித்திருக்கலாம். அது என்ன புத்தகம்? இந்த பொருள் தலைப்பைக் குறித்து என்ன கூறியது? உம்முடைய ஞாபக சக்தியை முன்னுக்கு கொண்டு வந்து அதைப் பற்றிய சிந்தனைகள் உம்முடைய விழிப்புணர்வு மனதின் தளத்திற்கு கொண்டுவரும் மட்டும் சிந்தனை செய்க.

ஒரு வேளை இந்தத் தலைப்பை பிரசங்கம் செய்வதைக் கேட்டிருக்கலாம். அதைப் பற்றி சொல்லப் பட்டதென்ன? அது எப்படி முன் வைக்கப்பட்டது. அதைப் பற்றி அடிக்கடி சொல்லப்பட்டவைகளில் ஒன்று உம்முடைய இருதயத்தில் சிந்தனை வித்தாக உருவாகி இருக்கலாம். இதிலிருந்து ஒரு தொடர் வரிசையான சிந்தனைகள் வரக்கூடும்.

**2. இந்தத் தலைப்பைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் எனக்கு எப்பொழுதாவது தெரியப்படுத்தியது என்ன?**

இந்த இடத்தில் தான் ஒரு குறிப்பு நோட்டுப் புத்தகம் வைத்திருப்பதன் நல்ல பயன் உணரப்படும். சில வேளைகளில் பல மாதங்கள், வருஷங்களுக்கு முன்னால் எழுதி வைத்தவை கூட பயன்படும். தேவன் தாமே சில உமக்குப் பிரியமான சிந்தனைகளையும் உள்பார்வைகளையும் இந்த பொருள் தலைப்பின் பேரில் தந்திருக்கலாம். நீவிர் இந்த சிந்தனைகளை எழுதி வைத்திருக்காவிடில் இவற்றைத் திரும்ப ஞாபகப்படுத்திக் கொள்வதில் பிரச்சனை ஏற்படலாம்.

ஆனால் ஒரு குறிப்பு நோட்டுப் புத்தகத்தை நீவிர் வைத்திருந்தீரானால் அதில் உம்முடைய தியானக் குறிப்புகளை எழுதி வைத்திருந்தாலும் அவைகளை திரும்பவும் திரும்பிப் போய் பார்த்து அன்று பரிசுத்த ஆவியானவர் உமக்கு அதைப் பற்றிக் காண்பித்த என்ன என்பதை பரிச்சயமாக்கிக் கொள்ள முடியும். நீவிர் அப்படிப்பட்ட நோட்டுப் புத்தகக் குறிப்பை வைத்திருக்காவிட்டால் நீவிர் எங்கோ ஓர் தனிப்பட்டதோர் இடத்திற்கு அமைதியாகப் போய் இருந்து இந்தத் தலைப்பைப் பற்றி எந்தவொரு தடைகளுமின்றி தியானம் செய்தல் நல்லது. இவ்வாறு தியானிப்பது உமக்குப் பரிசுத்த ஆவியானவரால் கற்பிக்கப்பட்ட சத்தியங்களை திரும்ப ஞாபகத்தில் கொண்டு வர உதவி செய்யும்.

**3. இந்த பொருள் தலைப்புக்கு சம்பந்தப்பட்டவைகளை நான் எப்பொழுதாவது கவனித்து இருந்தேனா?**

அடிக்கடி நாம் கருத்தில் கொள்ளும் பொருள் தலைப்பின் மீது அதிகமான வெளிச்ச வெளிப்பாடு தருகிற விஷயங்களை கவனித்திருப்போம். நாம் கருத்தில் கொண்டிருக்கிற தலைப்பைப் பற்றிய சத்தியத்தின் ஏதோ ஒரு அம்சத்தை விளக்கும் சம்பவங்களை நமது அனுபவத்திலிருந்து நமது ஞாபகத்திற்குத் திரும்பக் கொண்டு வரலாம். சில சமயங்களில் இயற்கையில் நாம் கவனித்த ஏதோ ஒன்று தேவனுடைய வசனத்தில் நாம் படித்துக் கொண்டிருக்கிற கோட்பாட்டை

உறுதிப்படுத்துவதாக இருக்கலாம். இயற்கையிலிருந்து பெறும் உதாரணங்கள் சில சமயங்களில் வேதாகமச் சத்தியங்கள் பேரில் மிகுந்த வெளிச்சமான வெளிப்பாடுகளைக் கொண்டு வருகின்றன. இந்த இயற்கையின் தேவன் ஆனவரோ இந்த வேதாகமத்தின் தேவனும் ஆவார்!

**4. இந்த தலைப்பைப் பற்றிய சிந்தனைகள் உமக்கு எப்பொழுதாவது ஏற்பட்டது உண்டா?**

நமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பைப் பற்றிய முந்திய சிந்தனைகள் நம்முடைய மனதின் விழிப்புணர்வுதளத்திலே புதைந்து கிடக்கின்றன. அவைகளை மறுபடியும் மனதின் மேல் தளத்திலே திரும்பக் கொண்டு வருவது அவசியமாகும். இவைகளை ஆழ்ந்த தியானத்தின் பொழுது கொண்டு வர முடியும்.

நாம் அமைதியாக அமர்ந்திருக்கும் பொழுது, வேதாகமத்தின் மீது நமது மனதைச் செலுத்தும் பொழுது புதைந்திருக்கும். சிந்தனைகள் மேல் மட்டத்தில் திரும்பவும் மிதந்து வரும். நான் எனது மாணவர்களுகக்கு அடிக்கடி கூறுவதாவது, ''உங்களது ஞாபக சக்தியை உந்தித் தள்ளுங்கள். அதை வேலை செய்யுமாறு செய்யுங்கள், அதை உங்களுக்காக கிரியை செய்யும்படி இடைபடுவதால் அதற்குக் கேடு உண்டாக்கி நாசம் ஆக்க மாட்டீர்கள். அதை அபிவிருத்தி மாத்திரமே செய்ய முடியும்.'' என்று கூறுவேன். இதைச் செய்வதற்கு ஒரு பொழுதும் அஞ்ச வேண்டாம். அமர்ந்து, கவனத்தைச் செலுத்துங்கள். உங்களுடைய சிந்தனைகள் என்னவென்பதை அறிய சித்தமாயிருங்கள். உங்களது மனதை அவற்றால் மறுபடியும் புத்துணர்ச்சி அடையச் செய்யுங்கள்.

**5. யாரை அல்லது எதைச் சந்தித்து இந்தத் தலைப்பின் பேரில் கலந்து ஆலோசனை பெறலாம்?**

ஒரு உடன் பிரசங்கம் செய்பவருடன் வேதாகமத்துத் தலைப்புகளை கலந்து உரையாடுவதும் தூண்டி எழுப்புவதும் மிகவும் பயனுள்ள மதிப்புப் பெற்ற அனுபவமாகும். இந்த விதமான செயலுக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த சந்தர்ப்பத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்க. இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே அது ஒழுக்கத்தைக் கட்டி எழுப்பவும் தெளிவான விளக்கம் தந்து அறிவு பெறவும் உதவுகிறது. இந்த விதமான பயிற்சியானது பிரசங்கிப்பவர்கள் ஒன்று கூடிவரும் ஒவ்வொரு சமயத்திலும் நடைபெற வேண்டும். ஒழுக்கத்தைக் கட்டி எழுப்பும் வேதாகமப் பொருள் தலைப்புகளில் உரையாடுதல் செய்வது மிகுந்த அளவில் நன்மை பயப்பதுடன் உண்மையான ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கட்டி பாதுகாக்கிறது. உம்முடைய விஷய அறிவையும் அனுபவத்தையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும். நல்ல ஆராய்ச்சியான விவாதத்தாலும், அடிக்கடி உரையாடுவதாலும் உம்முடைய வேதாகம அறிவை ஒன்று சேர்த்து கூட்டிக் கொள்ளலாம். அந்த விதமான தங்கமான சந்தர்ப்பங்களை நீவிர் ஒன்று கூடி வரும்பொழுது வீணாக ஆக்கிக் கொள்ளக் கூடாது.

## D. உம்முடைய பிரசங்கப் பொருளை ஆயத்தம் செய்தல்

உங்களுக்குப் பொருத்தமான சம்பந்தப்பட்ட பகுதியை கண்டுபிடித்துக் கொண்டால் அதை பின்வருமாறு பயன்படுத்துக.

**1. அதைப் பற்றி திறந்த மனத்தோடு இருக்கவும்.**

அந்த தலைப்புப் பொருள் பற்றிய முன்னால் கொண்டிருந்த கருத்துக்களை தூரத்தில் வைத்து விடவும். உமது மனதை திறந்ததாகவும் குறைகளைக் கண்டுபிடிக்காது பெற்றுக் கொள்ளவும் புதிதாக ஒன்றைக் கற்கவும் ஆயத்தமாக இருக்கட்டும். நாம் உண்மையாகவே ஆவிக்குரிய பிரகாரமாக வளர வேண்டுமென்றால் நாம் வேதாகமத்தில் ஒரு பொழுதும் கோடிட்டு படித்திராத பகுதிகளைப் படித்து அறிதல் அவசியம் என்று யாரோ ஒருவர் கூறியிருக்கிறார்.

அடிக்கடி நமக்கு ஸ்திரமாக உறுதி செய்யப்பட்ட கோட்பாடுகள் இருக்கின்றன. நாம் ஏற்கனவே விசுவாசித்திருப்பவற்றை நிச்சயிக்கிறவைகளையே மாத்திரம் பார்த்தறியும் போக்கில் இருக்கிறோம். நாம் தேவனுடைய வசனத்தை திறந்த மனதோடும், உண்மையோடும் அணுகவேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளைப் பற்றி பயனற்றதாகவோ அல்லது செயலூக்கமுடையதல்ல என்றோ கருதாதே. ஏனென்றால் உமது சமயப் பாரம்பரியம் உம்முடைய மனதை நீவிர் தற்காலிகமாக

நம்புவதைத் தவிர பிறவற்றை நம்புவதிலிருந்து அடைத்துப் போடுகிறது. (மாற்கு 7:13) தேவன் உமக்குக் கொடுக்க விரும்பும் எல்லாவற்றின் மொத்த அறிவையும் நிச்சயமாகப் பெறுவதில்லை. தேவன் உம்மோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் எந்தவொரு புதிய சத்தியத்தையும் கற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கவும்.

**2. அதைப்பற்றி முழுவதுமாக விசாரணை செய்யவும்**

அந்தப் பகுதியைப் பிரித்து பரிசீலனை செய்க. அதைப் பற்றிய வினாக்களை எழுப்புக. அவைகளைப் பாகங்களாகப் பிரித்து முற்றிலுமாக ஆராய்ச்சி செய்க. இதை திறந்த மனதுடன் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுக்கவும். தேவனிடமிருந்து புதிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துதலையும் எதிர்பார்க்கவும். நீவிர் முன்னால் ஒருக்காலும் கவனத்தில் பெற்றிராத சத்தியங்களை உய்த்துணர எதிர்பார்க்கவும்.

தேவனுடைய வார்த்தையானது ஒரு சுரங்கத்து சுழல் தண்டு போன்றது. எந்த அளவுக்கு ஆழமாகப் போகிறாயோ அதற்கதிமாக விலையேறப் பெற்றப் படிவங்களைக் கண்டு பிடிக்கலாம். சில மனிதர்கள் மேல் தளத்தைச் சுற்றித் தோண்டிப் பார்ப்தோடு திருப்தி அடைந்து விடுகிறார்கள். அவர்களுடைய முடிவுரைகள் அனைத்தும் எப்பொழுதும் மேற்போக்கானவைகளாகவே இருக்கின்றன. மற்றவர்களுக்கு ஏற்கனவே தெரிந்தவைகளையே பகிர்ந்து கொள்ள அவர்களால் முடிகிறது.

ஒரு செயலூக்கமான போதனையின் இரகசியமாவது மக்களுக்கு தங்களுக்கு முன்னால் தோன்றாத பகுதிகளின் சத்தியத்தை விசாரித்து அறிவதாகும். இந்த மாதிரியான வழியில் நீவிர் புதியதும் புத்துணர்ச்சிக் கொடுக்கக் கூடியதுமான சத்தியத்தை அந்த விதமான அறியாத மக்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

**3. அதைப் பற்றிய புதிதாகத் தோன்றும் மூல சிந்தனையைச் சிறிது செய்து பார்க்கவும்.** நீவிர் தாமே உண்டாக்கிக் கொண்ட பள்ளமான வண்டித் தடத்தில் உமது இருதயத்தை நீடித்து தங்கும்படி செய்யாதிருப்பீர்களாக. பரிசுத்த ஆவியானவரை உமது இருதயத்தை வெளிச்சமாக்கும்படி விசுவாசிப்பீராக. நீவிர் ஒருக்காலும் அறியாத ஏதோ ஒன்றை அவர் உங்களுடன் பகிர்ந்து கொள்வார் என்று நிச்சயமாயிருக்கிறேன். அதை வேதாகமத்தின் மற்ற பகுதிகளிடன் ஒப்பிட்டு சோதனை செய்க. வேதாகமத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் முழு சரீரமாகிய சத்தியத்தையும் எந்த ஒரு சத்தியமும் உண்மை அல்ல என்று மறுத்துக் கூறுவதில்லை. அதையும் சோதனை செய்து பார். அதையும் உன்னுடைய சக பிரசங்கம் செய்பவருடன் அதாவது உன்னைவிட அதிகமாய் வேதாகமத்தை நன்கு அறிந்தவருடன் மாத்திரமேயன்றி உனக்குத் தெரிந்து உன்னுடன் எப்பொழுதும் ஆமோதித்துச் சொல்பவரையல்ல. சோதனை செய். உமக்கு மூலமாகிய சிந்தனையைப் பெற்றாலும் அஞ்ச வேண்டியதில்லை. ஆகவே பரிசுத்த ஆவியாகிய காற்று வீசி உன் மனத்திலுள்ள நூலாம் படையை அகற்றிவிடட்டும்.

**4. ஒப்புக் கொள்ளத்தக்க படைக்கும் ஆற்றலுள்ளதாகச் செய்யவும்**

தேவன் தாமே சிருஷ்டிகர். அவருடைய வார்த்தையானது படைக்கும் ஆற்றலுடையது. தேவன் படைத்த ஒவ்வொன்றையும் தமது வார்த்தையினாலே படைத்தார். தேவனுடைய வார்த்தை கட்டுக்கடங்கியதல்ல. அது மேலும் ஒரு படைக்கும் ஆற்றலுடைய வல்லமையான வார்த்தையாகும். இரட்சிக்கப்பட்ட உள்ளங்களில் அது விடப்படும் பொழுது அது சிருஷ்டித்தும் மறுபடியும் உருவாக்கவும் கூடும்.

ஆகவே தேவனுடைய வல்லமை பொருந்திய வார்த்தையின் சிருஷ்டிப்பின் ஆற்றலைப் பற்றி எப்பொழுதும் ஜாக்கிரதையாக இரு. அதை ஒரு விசுவாச மனப்பான்மையுடனும் எதிர்பார்ப்புடனும் கையாளப் பழகு. ஆகவே அது படைக்கும் ஆற்றலை நிரம்பப் பெற்றது என்பதை எப்பொழுதும் மனதில் பேணி வைத்துக்கொள். நீ என்றுமே விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு சக்தியும் திறமையும் அதற்கு உண்டு. எப்பொழுதுமே அது நீ புரிந்து கொள்ளவதற்கு மேல் பெருக வைக்கும் திறனை பெற்றது.

அது ஒரு ஆச்சரியமான வார்த்தை என்பதை ஞாபகத்தில் வைக்கவும். தேவன் தாமே தமது வார்த்தையில் இருக்கிறார். அவருடைய படைக்கும் மரபணுக்கள் அதனுள் அடங்கியுள்ளது. உம்முடைய ஊழியமானது இந்த படைக்கும் திறமையை உமக்கு செவிகொடுத்து கேட்பவர்களின் ஜீவியத்தில் உயிரூட்ட வேண்டுமென்பதே நோக்கமாக இருக்கவேண்டும்.

**5. அதைக் கட்டி எழுப்பும் வகையில் பயன்படுத்துக.**

நீவிர் தேவனுடன் கூட இருக்கும் உடன் வேலையாள் என்பதை நினைவில் கொள்க. (II கொரி 6:1) (உடன் வேலையாள்) நீவிர் ஏதோ ஒன்றைக் கட்டி எழுப்புவதில் ஈடுபாடு கொண்டிருக்கிறீர்கள். அதை அழிப்பதற்கல்ல தேவனுக்கடியில் உங்களுடைய வேலையானது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டி எழுப்புவதுதான். ஆகையால் நீவிர் கொடுக்கும் செய்திகள் கட்டி எழுப்புவதாக இருக்க வேண்டும். அதை அழிப்பதற்காக அல்ல. சில சமயங்களில் உங்களது வற்புறுத்துதல் (இருதயத்தை) ஆராய்வதாக இருக்கும். நீவிர் கொடுக்கும் செய்தியின் வசனமாவது உங்களைச் செவிகொடுத்துக் கவனிப்பவர்களின் இருதயத்தை ஆராய்ந்து அறிதலுக்கும் மனந்திரும்புதலுக்கும் கொண்டுவரலாம். அவர்களது எதிர் கிரியையாவது மனம் நொறுங்குதலும் கண்ணீருமாக இருக்கலாம். ஆனாலும் அவர்களை அப்படி இருக்கும்படியாக விட்டு விடக்கூடாது. எஸ்றாவையும் நெகேமியாவையும் கருத்தில் கொள்க. (நெகேமியா 8:5-12) சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு அவர்களது சிறையிருப்பின் காலத்தில் கனமான வார்த்தைகளைப் பேசினார். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் விளக்கத்தைக் கவனித்துக் கேட்டபொழுது அவர்கள் தங்கள் சிறையிருப்பின் காலத்தில் அதை விட்டு எவ்வளவு தூரம் விலகி போனோம் என்று உணர்ந்தார்கள். இது அவர்களை கண்ணீர் விட்டு அழும்படி செய்து மனந்திரும்படியாக தரையை நோக்கி குனிந்திருக்கும்படி செய்தது. அதன் தீர்க்கதரிசிகள் அவர்கள் இப்படி சிறிது நேரம் செய்யும்படி அனுமதித்தார்கள். பிறகு அவர்கள் அழுகையையும் துக்கிப்பதையும் நிறுத்தும்படி செய்து அந்த ஜனங்களை காலூன்றி நிற்கச் செய்தார்கள். அவர்களுக்கு (தீர்க்கதரிசிகள்) சொன்னதாவது ''நீங்கள் போய் கொழுமையானதைப் புசித்து, மதுரமானவைகளைக் குடித்து விசாரப்பட வேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பலன்'' என்றார்கள். (வசனம் 10) ஜனங்களை அடிக்கடி கண்டனத்திற்குக் கீழ் கொண்டு வர வேண்டாம். உங்களது இறுதியான இலக்காவது அவர்களை கட்டி எழுப்பிப் பார்த்தும், பலப்படுத்தியும் நன்னெறியில் கட்டப்படுவதும் அவசியமாகும். இதை நிறைவேற்ற வேண்டுமானால் நீவிர் கட்டி எழுப்பும் படியான ஊழியம் செய்யவேண்டும்.

**6. அதை ஒப்பிட்டு படித்தறிக**

வேதாகமம், வேதாகமத்து வசனங்களோடு ஒப்பிடப்படவேண்டும். அதை வேதாகமத்து முழு வசனத்துப் பிரகாரமான அடிப்படையில் வியாக்கியானம் செய்யப்படவேண்டும். நீவிர் வேதாகமத்தை ஒரே சீராகப் படிக்க வேண்டும். ஏனென்றால் ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.'' (II தீமோத் 2:15 மொழிபெயர்ப்பு)

**7. அதற்கு நடைமுறைப்படி முடிவுரை தரவும்**

செயலூக்கமான வேதாகமப் பிரசங்கமும் போதனையும் ஒரு நடைமுறைக்கான முடிவுரையையும் ஒப்புக் கொடுத்தலையும் பெற்றிருக்க வேண்டும். ஊழியம் என்பது மனதிற்குப் போதிப்பது மட்டுமல்ல ஜீவியத்தை உருவாக்குவதுங்கூட. உமக்கு எப்பொழுதுமே ஒரு நடைமுறையான முடிவுரையும் இருக்க வேண்டும். உங்களது சபையினருக்கு அர்த்தமுள்ள பிரதியுத்தரத்தை தரும்படி யோசனை கூற வேண்டும். மக்களாகப் பட்டவர்கள் நீவிர் கொண்டுவந்த சத்திய வசனத்திற்கு பிரதிக் கிரியை செய்ய வேண்டும்.

## E. ஒரு பொருள் விளக்க உரையான செய்தியைக் கொடுத்தலாவது

**1. அந்த வேதாகம வசன பகுதிக்கு திருப்பவும்**

உமது கூடிவரும் சபையினரை வேதாகமத்தில் தகுந்த வசன பகுதியைத் திருப்பிக் கொள்ளச் செய்ய வேண்டும்.

**2. அந்த வேதாகமத்துப் பகுதியை உரத்த சத்தத்தில் படிக்கவும்**

நீவிர் ஓர் அதிகாரத்தை விளக்கவுரை சொல்ல வேண்டுமானால் அதை மக்களுக்குப் படித்துக் காட்டி விடவேண்டும். ஒரு வேளை அந்த சபையினர் வேதாகமத்து பகுதியை உம்முடன் சேர்ந்து பகிர்ந்து வாசிக்கலாம். அதாவது ஒவ்வொருவரும் ஒன்று அல்லது இரண்டு வசனங்களைப் படிக்கலாம்.

**3. உம்முடைய செய்தித் தலைப்பை அறிமுகம் செய்க.**

அதை நீவிர் எவ்வாறு பிரசங்கிக்க போகிறீர் என்பதை விளக்கிச் சொல்லவும். மேலும் செய்தி

வருவதற்கு உம்முடைய பயனையும் நோக்கத்தையும் விளக்கிக் கூறி அதன் காரணமாக மக்கள் உம்முடன் ஒத்துழைக்கச் செய்யவேண்டும்.

**4. அந்த பகுதியை திரும்ப சத்தத்தை உயர்த்தி படிக்கவும்**

மறுபடியும் அந்த அதிகாரத்தை வாசிக்கும்படி நீவிர் தீர்மானஞ் செய்யலாம். ஒரு நேரத்தில் ஒரு வசனமாக அதைப் படிக்கும்பொழுது அதற்குப் பொருத்தமான வியாக்கியானத்தையும் ஒவ்வொரு வசனத்திற்கும் தரவேண்டும்.

## F. ஏழு கொள்கைகளான கோட்பாடுகள்.

இந்தக் குறிப்பிட்ட பகுதியில் நான் உங்களுக்கு ஏழு வகையான இன்றியமையாதவனவும் அதீதமான முக்கியத்துவமுமுள்ள கோட்பாடுகளை அறிமுகம் செய்ய விரும்புகிறேன். இவை குறிப்பாக விளக்கவுரையான பிரசங்கத்திற்கு உரியது. அவற்றை ஞாபகத்தில் வைத்து நீவிர் தேவனுடைய வசனத்தை விளங்கஞ் செய்து பிரசங்கம் செய்யும் பொழுதெல்லாம் கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

**1. பிழையறக் கூறுக**

உம்முடைய வியாக்கியான உரையானது எளிதில் புரியக் கூடியதாயிருக்கும்படி உறுதி செய்து கொள்க. புதிரான விஷயங்களை மிக ஆழமாகப் பேசுவதற்கு முயற்சி செய்தல் கூடாது. செயலூக்கமுடைய விளக்க உரை செய்திகள் தருவது அதற்கு சம்பந்தப்பட்ட தொடர்புடைய வசனப் பகுதிகளை எவ்வளவு சுலபமாகப் புரிந்து கொள்ளச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு புரிந்து கொள்ள வசதி செய்வது தான். ஆகவே உன்னை புத்திசாலியாகவோ அல்லது உனக்குள்ள அறிவை பெரிதாகக் காட்டிக் கொள்ளவோ முயற்சிக்கக் கூடாது. ஜீவ அப்பம் பிட்குதலை உம்முடைய முழு சபையினரும் நீவிர் செய்யும் வற்புறுத்தலான அழுத்தத்தை எளிதில் பின் தொடர்ந்து வரும்படி உதவும் ஓர் வழியில் அதைச் செய்து காட்டவும்.

**2. சீரான தொடர்பு**

உம்முடைய வியாக்கியான கருத்துக்களை நீர் விளக்கிச் கூறும்பொருள் தலைப்புடன் ஒத்துப் போகும்படி கொண்டு போக வேண்டும். உமக்கு மனதில் தோன்றும் பல தவறான வழிகளில் அலைந்து திரியாது அப்படி அலைந்து திரியும் சோதனையைத் தவிர்க்கவும். உம்முடைய பொருள் தலைப்பை விசுவாசத்துடன் தொடர்ந்து கவனிப்பவர்களின் மனதில் அதைத் திரும்பவும் கொண்டு வந்து வலிமையூட்டவும்.

அதைத் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு அஞ்ச வேண்டாம். அப்படித் திரும்பத் திரும்பச் சொல்லுதல் ஒரு சத்தியத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதற்கு குறிப்பிட்டதோர் அளவு அவசியமாகிறது.

**3. இசைவு பொருத்தம்**

'இசைவாக பொருத்த' என்பதற்கு 'ஒன்றாகச் சேர்த்து இணைத்தல்' என்று அர்த்தமாகும். ஆகவே உமது சிந்தனைகளை ஓர் தெளிவான ஒற்றுமையைப் பெற்றிருக்க வேண்டும் என்று நிச்சயப் படுத்திக் கொள்ளவும். ஒரு நபர் இசைவு பொருத்தமின்றி பேசுவாரானால் அவர் இசைவு பொருத்தமின்றி ஒற்றுமை குறைந்து பேசும் ஒருவர் ஆவார். மேலும் அவருக்குதான் பேசி நிறுத்த முயற்சி செய்யும் குறிப்புடன் அதை இணைப்பது சில சமயங்களில் முடியாதது ஆகிவிடும்.

ஆகையால் உமது சிந்தனைகளை வெளியிடுவது என்பதற்கு கண்கூடான ஒற்றுமையுடன் இருத்தல் வேண்டும். மேலும் சிந்தனையிலிருந்து மற்றொரு சிந்தனைக்கு திரிந்து அலைய வேண்டாம். மிகவும் துல்லியமாகவும் சுருக்கமாகவும் பேசவும். உம்முடைய சிந்தனைகள் இசைவு பொருத்தத்துடன் ஒன்றுடன் ஒன்று நன்றாக இணைந்தும் ஒன்று மற்றொன்றினை ஆதரித்து நிறைவு உண்டாக்கும் படியும் செய்வதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**4. தொடர்ச்சி**

அங்கே ஒரு தெளிவான சிந்தனைக்கு முன்னேற்றம் வேண்டும். உம்முடைய தலைப்பை முன் வைத்தலானது தொடர்ந்து உமது சபையினரை முன் வைக்கப்போகும் செயலூக்கத்துடன் நகர்த்திச் செல்ல வேண்டும். ஒவ்வொரு குறிப்பும் மிகவும் துல்லியமான முன் போகும் குறிப்பைத் தொடர்ந்து

போக வேண்டும். உமது விமரிசன கருத்துக் குறிப்புகள் ஒன்றிலிருந்து மற்றொருன்றுக்குத் தொடர்ந்து பெருகி ஓடி ஐக்கியத்தையும் தெளிவான பெருகுதலும் முன்னேற்றமும் உண்டாக்க வேண்டும். உம்முடைய இறுதியான இலக்கை நோக்கி மெதுவாக நகர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

**5. மிகவும் சுருக்கமானதாக**

மிகவும் சுருக்கமாக இருப்பதே அதன் இலக்காகும். உம்முடைய சபையார் நீவிர் தொடர்ந்து பேசுவதையே விரும்புவது அவர்கள் தாங்கள் இருபது நிமிடங்களுக்கு முன்னதாக முடித்து விடவேண்டும் என்று விரும்புவதை விட மிகவும் சிறந்ததாகும். பேச்சை நீடித்து பேச்சுக்காக மாத்திரம் பேசும் சோதனை விருப்பத்தைத் தவிர்க்கவும். அங்குமிங்கும் அலைபாய்ந்து அலையும் பழக்கத்திற்கு ஆளாகுதல் கூடாது. அது உமக்குச் செவி கொடுத்து கேட்பவர்களை குழப்பத்திற்கு ஆளாக்கும். மேலும் ஒரு நல்ல ஆலோசனையான புத்திமதியாவது எழுந்து நில், நின்று பேசு, முடித்து விடு என்பது ஆகும்.

**6. புரிந்து கொள்ளப்படக்கூடிய இயல்பு**

இந்த குறிப்பு ஆனது முந்திய குறிப்பை மறுப்பது போல் தோன்றும் அதாவது நான் புத்தியாகக் கூறியதான சுருக்கமாக உரைத்தல் பற்றியது. புரிந்து கொள்ளக்கூடிய இயல்பாவது அந்தத் தலைப்பைப் பற்றி பூரணமாக பேசுதல் அல்லது பிரசங்கிப்பதைக் குறிக்கும். ஆனால் இதைப் பற்றி முரண்பாடு கிடையாது. ஒரு பொருள் தலைப்பைப் பற்றி முழுவதுமாகவோ பேசவோ அல்லது பிரசங்கிக்கவோ முடியும். ஆனாலும் சுருக்கமாகவும் சொல்ல முடியும். அதாவது புரிந்து கொள்ளக் கூடிய இயல்பாகப் பிரசங்கிப்பது நீண்ட நேரமாக பேசுவது என்பதற்கு அவசியமாகாது. ஏனென்றால் சபையினர் உமது பேச்சின் உரத்த குரலின் காரணமாகக் களைப்பு அடைவார்கள். இந்த இரண்டையும் சமநிலைப்படுத்த முயற்சி செய்க.

**7. முடிவுரை**

இங்கே முக்கியமானதோர் குறிப்பு. நீவிர் பேசிய எல்லாவற்றிற்கும் பொதுவான முடிவுரை யாது? அதன் முடிவான பயன் யாது. உம்முடைய வார்த்தைகள் எதைச் சாதிக்கும்?
ஆரம்பத்திலிருந்தே உமது பிரசங்கத்தின் முடிவுரை உமது பேச்சு முழுவதிலும் ஆட்கொண்டு நிற்கவேண்டும். தளரா முயற்சியுடன் நீவிர் அதை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்க வேண்டும். விசுவாசத்துடன் ஊழியம் செய்க. தேவன் தாம் வாஞ்சிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும்படியான எதிர்பார்ப்புடன் கடந்து செல்க.

அந்த வாஞ்சிக்கும் படியான பலா பலனை சாதித்து அடைவது உனது பொறுப்பல்ல என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவும். அது தேவனுடைய கிரியையாகிய வேலையாகும். நீவிர் தேவனை நோக்கியே பார்க்க வேண்டும். மனிதரை நோக்கி அல்ல. விசுவாசத்துடன் அவரே (தேவனே) பெருக்கத்தைத் தரும்படி எதிர்பார்க்கவும்.

## அதிகாரம் 4 - வாழ்க்கை வரலாறு சார்ந்த பிரசங்கம்

## A. வாழ்க்கை வரலாற்று பிரசங்கத்தால் பெறக்கூடிய அநுகூலங்கள்

இந்த வகையான பிரசங்கங்கள் வேதாகம கதாப்பாத்திரங்களின் ஜீவியத்திலும் முன் மாதிரியிலும் இருந்து நமக்கு போதிப்பது சம்பந்தமாக விரித்துச் சொல்வதாகும். அந்த கதா பாத்திராங்களைப் பற்றி அவர்கள் ஜீவியத்திலிருந்து எவ்வளவு கற்றுக் கொள்ள முடியுமோ அதற்கான விவரமான படிப்பும் தேவைப்படுகிறது. வேதாகமத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்படுகிற பண்புகளில் ஒன்றாவது நமக்கு அறிமுகம் ஆகிற அந்தக் கதையில் உள்ள கதா பாத்திரங்கள் அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அவ்வண்ணமே நமது முன் வைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பலவீனங்களை மூடி மறைக்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளாது அவர்களுடைய பலத்தையோ அல்லது நற்பண்புகளையோ மட்டும் வெளிப்படுத்துவதில்லை.

வேதாகமத்தின் மகா பெரிய கதா நாயகர்களில் பலருக்கு மாம்சீகமான குறைபாடுகள் இருந்தது. அவர்களும் நம்மைப் போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாய் இருந்தார்கள் என்று நாம் அறிகிறோம். சகல மனிதருக்கும் பொதுவான சோதனைகளையே அவர்கள் சந்தித்தார்கள். ஆனாலும் பல சமயங்களில் அவர்களுடைய பதிலான செயல் இன்றைய சராசரி கிறிஸ்தவனுடைய செயலான பதிலைவிட சற்று வித்தியாசமாக இருந்தது.

இந்த எல்லாவித வேதாகம வரலாற்றிலும் ஒரே ஒரு பூரணமான மனிதர் ஒருவர் இருக்கிறார். அவரே மனிதனான இயேசுக் கிறிஸ்து. விசவாசமுள்ள மகா கதா பாத்திரங்கள் கூட வெளிப்படுத்தப்பட்ட மனுஷர்களாகவே இருந்தனர். நிச்சயமாகவே இது நம்மை அவர்களுடன் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள உதவுகிறது. இத்தகைய மனிதர்கள் ஸ்தீரிகளின் வாழ்க்கையிலிருந்து அதைப்பற்றிப் படிப்பதன் மூலமாக கற்றுக் கொண்ட சத்தியங்களை விளக்கிக் கூறும் கலையானது மிகுந்த விலையேறப் பெற்றது ஒன்றாகும். அதுவே ஒரு போதகர் மிகுந்த பயன் கொடுக்கக் கூடிய பிரசங்கம் செய்யும் பாணியாக உபயோகிக்கலாம்.

# அது வாழ்க்கையின் மெய்ம்மையோடு இடைபடுகிறது
அது மனுஷீக ஜீவியத்தின் மெய்ம்மையோடு இடைபடுகிறது. அதனுடைய பலம், பலவீனங்களோடும் ஈடுபாடு கொள்கிறது. நமக்கு முன் சென்றவர்களினுடைய போராட்டங்கள், வெற்றிகள், தோல்விகள் முதலானவற்றிலிருந்து அடிக்கடி நாம் மிகுதியாகக் கற்றுக் கொள்ளக் கூடும்.

# நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய உதாரணம் ஆவார்கள்.
அவர்கள் நமது நல்ல பயனுக்காக உதாரணமாக இருக்கிறார்கள். நம்முடைய சொந்த வேதனையான அனுபவங்களிலிருந்து அல்ல அதைவிட நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்காகவே தான்.

## B. எப்படி அதை ஆரம்பிப்பது?

**★ வேதாகமத்திலிருந்து கதா பாத்திரங்களை தெரிந்தெடுத்துக் கொள்ளவும்.**
வேதாகமத்திலுள்ள மகா கதா பாத்திரங்களான, ஆபிரகாம், மோசே, யோசுவா, தாவீது, பேதுரு போன்றவர்களைப் பற்றி படித்து இந்த விதமான பிரசங்கம் செய்யும் பாணியை ஆரம்பிக்கலாம். இந்த மாதிரியான மனிதர்களுடைய செயல்பாடுகளே தேவன் மனித குலத்தோடு கொண்டுள்ள இடைபாட்டின் வரலாற்றைப் பிரகாசம் அடையச் செய்கின்றன. அவர்களிடமிருந்தும் ஜீவியத்திலிருந்தும் கற்றுக் கொள்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. மேலும் வேதாமத்தில் பெயர் பெற்ற ஸ்தீரிகளும் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியமும் விசேஷமாய் செய்தியை கொடுக்க இருக்கிறது.

**★ அவர்களுடைய வாழ்க்கையைப் படித்துப் பார்க்கவும்**
ஒரு மனிதனுடைய பி றப்பைக் குறித்துச் சொல்லுகிற வரலாற்றை முதன் முதலாகப் படித்து அரம்பிக்கவும். அவர் அல்லது அவளுடைய பெயர்களுக்குள்ள அர்த்தத்தைக் கண்டு பிடிக்கவும். ஏனென்றால் வேதாகமத்துப் பெயர்களில் மிகுதியானவற்றிற்கு மிகுந்த சிறப்படையாளங்கள் உண்டு. அவர்கள் அதாவது அவர்/அவள் ஜீவியத்திற்காக கொண்டிருந்த நோக்கத்திற்கு அதிகமான விசேஷித்த கவனம் கொடுக்கவும்.

a. தேவன் அவர்? அவள் மூலமாக எதை நிறைவேற்ற விரும்பினார்?
b. அவர் எப்படி தம்முடைய (தேவன்) தம் நோக்கத்தைத் தெரியப்படுத்தினார்?
c. அந்த நபருடைய பிரதி செயல் யாது?
d. தேவன் அவன்/அவளுடன் இடைபட்டதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்.
e. அங்கே அவர்களை பற்றி அவன்/அவள் நாம் விழிப்பாய் இருக்கக் கூடிய அபாயங்கள் உள்ளனவா?
f. அவர்களுடைய அவன்/அவள் ஜெயத்தைப் பற்றிய இரகசியம் யாது?
g. அவன்/அவள் இவர்களுடைய ஜீவியத்தின் முடிவுரை யாது?

## c. ஒரு வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய செய்தித் தூதை எப்படி ஆரம்பிப்பது?

இந்த வரலாற்று கதா நாயகர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பல மிகுதியான போதனைகள் உண்டு.

# தாவீது இராஜாவின் வாழ்க்கை வரலாறு

நாம் இங்கே தாவீது இராஜாவின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டு அதைப் பற்றி ஒரு வாழ்க்கை வரலாற்று பிரசங்கத்தை உதாரணமாகத் தரலாம்.

**தலைப்பு: ‘‘தாவீது என் இருதயத்திற்கு ஏற்றவன்’’** (அப் 13:22)

**முகவுரை.**

அவனுடைய பெயருக்கு அர்த்தமாவது, ‘‘தேவனுக்குப் பிரியமானவன்’’, என்பதாகும். மேலும் அவன் ‘‘தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன்’’ என்று அழைக்கப்பட்டான். ஏன் தேவன் அவனை இவ்வாறு அழைத்தார்? தேவனுடைய இருதயத்திற்கு பிரியமாயிருக்க எது ஏற்றதாக இருந்தது? ஆகவே நாம் இந்த மனுஷனிடமிருந்து வெளிப்படையாகவே அதிகமானவற்றைக் கற்றுக் கொள்ளலாம்.

1. **தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதன்**
   a. தாவீதுக்கு தேவனுடைய இருதயத்தில் ஓர் விசேஷமான இடம் இருந்தது.
   b. தேவன் ஒரு மனிதனிடத்தில் இவ்வளவு மகிழ்ச்சியைக் கண்டு கொள்வது மிகவும் ஆச்சரியமானது.

2. **அவன் ஒரு பூரணமான மனிதன் அல்ல.**
   a. அவனுடைய பலவீனம் எல்லாருக்கும் தெரிய வந்தது. ஆனாலும் தேவன் அவன் பேரில் கொண்டிருந்த உணர்வை மாற்றவில்லை.
   b. நாமும் பூரணமாவதற்குத் தூரமாக இருக்கிறோம். ஆனாலும் தேவன் நம்மிடத்தில் மகிழ்ச்சியை கண்டு கொள்ளலாம்.

3. **அவன் ஒரு மனிதனாகவே இருந்து ஆளான மனுஷன்.**
   a. பலமும் பலவீனமும் கலந்த கலவைக்கு ஓர் சரியான மாதிரியான உதாரணம்.
   b. தேவனை சந்தோஷப்படுத்த விரும்பினாலும் பல தடவை அவரை மனமடிவு அடையச் செய்தான்.
   c. அவனுடைய வாழ்க்கையில் தேவனுடைய இராஜ்ய பாரத்திற்காக ஏங்கினான். ஆனால் அடிக்கடி தன் சொந்தக் காரியங்களையே செய்தான்.
   d. புகழின் உச்சிக்கு ஏறினான். ஆனாலும் துக்ககரமான ஆழங்களுக்குள் கீழே இறங்கி மூழ்கினான்.
   e. தாவீது மிகச் சக்தி வாய்ந்த மகா மனிதன் அல்ல. உண்மையாகவே நம்மை போலவே மனுஷீகத்து மனிதனாய் இருந்தான்.

4. **பெரியதோர் பணிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டான்**
   தேவன் தாவீதை பார்வைக்கு பலமிக்க அவனுடைய மூத்த சகோதரருக்குள் இவனைத் தெரிந்து கொண்டார். மனிதன் வெளித் தோற்றத்தால் ஈர்க்கப்படுவான். தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். தேவனுடைய சிறந்த மேன்மையான ஊழியக்காரரில் சிலர் வெளித் தோற்றத்தில் அழகானவர்கள் அல்ல.

5. **அவன் சோதிக்கப்பட வேண்டியதிருந்தது.**
   a. தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்படவேண்டும்.
   b. இயேசு வனாந்தரத்திலே சோதிக்கப்பட்டார். (மத் 4: 1-11)
   c. உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றி எரிகிற அக்கினியைப் புதுமையென்று திகையாமல் இருப்பீர்களாக. (I பேதுரு 4:12)
   d. கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிறுத்துவாராக. (I பேதுரு 5:10).

6. **தாவீது பத்சேபாளின் மூலமாகச் சோதிக்கப்பட்டான்** (II சாமு 11)
   a. அவன் ஆவிக்குரிய பிரகாரமாக பாதுகாப்பின்றி இருந்தான்? அவன் இப்பொழுது 50 வயதுள்ளவன். 20 ஆண்டுகள் இராஜாவாக இருந்தான். ஒருவருடைய பாதுகாப்பு வட்டத்தை இழப்பது எவ்வளவு சுலபம்?
   b. அவன் அதீதமான சுய நம்பிக்கையுடன் இருந்தான்? மாம்சீகக் கரத்தை ஒருக்காலும் நம்பாதே.

c. சோம்பலுக்கான நேரமானது அவனது வீழ்ச்சிக்கு இழுத்துச் சென்றது. அவன் யுத்தக் களத்திற்கு போயிருக்க வேண்டும். சாத்தான் அவனுடைய சோம்பலின் நேரத்தை அனுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

d. பிரபஞ்சத்து ஐசுவரியம் மாம்ச இச்சையை உண்டாக்குகிறது. பவுல் அப்போஸ்தலன் (தன் சரீரத்தை ஒடுக்கி) தான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு தன் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்தினான். (I கொரி 9:27)

e. அந்த சோதனையான இச்சை அவன் மனதில் இன்னும் இருக்கும்பொழுதே அதை மேற்கொள்ளத் தவறி விட்டான். எல்லா சோதனைகளும் சிந்தனையில் தோன்றுகிறது. இந்த இடந்தான் அதை சுலபமாகத் தோற்கடிக்கத் தகுதியான ஸ்தலமாகும். சிந்தனைகளையும் கற்பனைகளையும் அகற்றி விடு. (II கொரி 10:5) அதைத் தோற்கடிக்கத் தவறினால் நாசத்தில் கொண்டு போய் விடும். (யாக் 1:14-15)

7. **அவனுடைய மனந்திரும்புதல்** (சங் 51:1-10)

தாவீதுடைய உண்மை அவனுடைய மனந்திரும்புதலில் இருந்தது. அவனை தேவனுக்குப் பிரியமானவன் ஆக ஆக்கியது.

a. அவனுடைய மீறுதல்களை ஒப்புக் கொண்டான். அதற்காக மற்றவர்கள் மேல் பழி சொல்ல முயற்சிக்கவில்லை.
b. இந்தப் பாவத்தில் முற்றிலுமாக மனங்கசந்தான் மனந்திரும்பினான்.
c. அவன் மெய்யாகவே பாவ மன்னிப்பைத் தேடினான்.
d. சுத்திகரிப்புக்காகக் கதறினான்.
e. அவன் சுத்தமான இருதயத்தையும் நிலைவரமான ஆவியையும் வேண்டினான்.

8. **அவனுடைய துன்பம் அனுபவித்தல்** (சங் 32:3-4; 77:2-6)

a. பாரமான குற்றவுணர்வினால் இரவும் பகலும் குத்துண்டான்.
b. ஆழ்ந்த துக்கவுணர்வினால் கண்ணீர்
c. எலும்புகள் உலர்ந்து போயிற்று.

9. **தேவன் எதை நிறைவேற்ற விரும்பினார்.** (சங் 51:6,10,17)

a. உள்ளத்தில் உண்மை இருக்க
b. சுத்த இருதயம் நிலைவரமான ஆவி

10. **இந்த வேலையாள் என்னவாக இருக்க வேண்டும்?**

a. பணிவானதும் தாழ்மையானதுமான ஆத்துமா
b. மெய்யாகவே மகிழ்ச்சியான மனிதன்.
c. தேவனுடைய உற்சாகமான ஆவி தங்கும்படி
d. தேவனுடைய இருதயத்திற்கேற்ற மனிதன்.

இது ஒரு சுருக்கமான எளிய உதாரணமாக வாழ்க்கை வரலாற்று பிரசங்கத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். வேதாகமத்தில் உள்ள சில மகா பெரிய கதாபாத்திரங்களைப் பற்றி படித்தறிந்து கொள்ள சில நேரங்களைச் செலவழிக்கும் படியாகத் தீர்மானஞ் செய்து கொள். அவர்களுடைய ஜீவியத்திலிருந்து முக்கியமான சத்தியங்களை எடுத்துப் போதிக்கக் கூடும். அங்கு தாவீதுடைய ஜீவியத்தில் நம் ஜீவியத்திற்குச் சமமான பல காரியங்கள் உண்டு. தேவன் நாம் வளர்ச்சி அடைந்து தேவனால் அழைக்கப்பட்ட அந்தப் பணிக்கு நம்மை தகுதியுடையவர்களாக்கும் படி தேவனை அனுமதிக்கவேண்டும். தாவீதோடும் மற்ற வேதாகமக் கதா பாத்திரங்களோடும் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய முக்கியமான பாடங்கள் அவர்கள் ஜீவியத்தில் இருக்கலாம். மற்றவர்களுடைய ஜீவியத்திலிருந்தும் தவறுகளிலிருந்தும் நாம் அப்படிப்பட்ட பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமானால் அது எப்பொழுதும் நல்லதோர் காரியமாகும். இந்த விதமான கற்றுக் கொள்ளுதலானது அதே விதமான சோதனைகளும் நமது சொந்த ஜீவியத்தில் நேரிடக்கூடிய அனுபவங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்க முடியும்.

# அதிகாரம் 5 - பிரசங்கம் செய்பவர்

செயலூக்கமான பிரசங்கித்தல் என்பது இரண்டு முக்கியமான காரணங்களால் பெரிதும் ஏற்படும் பலாபலன் ஆகும். ஒன்று தெய்வீகமானது மற்றொன்று மாம்சீகமானது. இவை இரண்டும் இன்றியமையாதனவாகும். மனிதன் இல்லாவிட்டால் தேவனும், தேவன் இல்லாவிட்டால் மனிதனும் கிரியை செய்ய முடியாது. இந்த படிப்புகளில் நாம் முக்கியமாக மாம்சீகமான மனித அம்சத்தைப் பற்றியே பேச விரும்புகிறோம்.

## A. ஆளுமை தன்மைகளுக்கான வழிகாட்டும் முறைகள்

ஒரு மூத்த பிரசங்கியாரை இளைஞரான ஊழியர்களின் கூட்டம் ஒரு கேள்வியைக் கேட்டனர். "பிரசங்கம் செய்வதில் மாம்சீகமான அம்சத்தில் முக்கியமான காரணமானது என்ன?" என்று வினவினார்கள். உடனே அவர் மறுமொழியாக "ஆளுமை தன்மை" என்றார். அவர்கள் மேலும் தொடர்ந்து ஆனால் எங்களுக்குச் சொல்லுங்கள், ஆளுமைத் தன்மை என்றால் என்ன? என்றனர். "ஆ! அதுவா" எனக்கு அது மாத்திரம் தெரிந்திருந்தால் என்றார். ஆகவே பிரசங்கம் செய்வதில் தெய்வீக சத்தியமானது மனித ஆளுமை தன்மை மூலமாக கொடுத்து தொடர்பு கொள்வதில் அடங்கி உள்ளது. ஆகவே ஆளுமை தன்மையை விருத்தி செய்து கொண்டு அதை சரியான முறையில் பயன்படுத்துவது முக்கியமானதாகும்.

யாரோ ஒருவர் செயலூக்கமான பொதுவான சொற்பொழிவு தருவதை பகுத்து அலசியிருக்கிறார். இங்கே நான் பொதுவாக சொற்பொழிவு ஆற்றுவதை பிரசங்கம் செய்வதிலிருந்து இந்த விதமாக வேறு படுத்திக் கூறுகிறான்.

<u>ஒரு செயலூக்கமான பேச்சில் அடங்கியுள்ளவை.</u>

- பேச்சின் தலைப்புப் பொருள்
- பேச்சின் அணுகுமுறை முடிவுரை ஆகியவற்றின் மனோதத்துவம்
- செயலூக்கமான முன் வைத்துப் பேச்சு
- ஆளுமை தன்மை

ஆகவே 10% சதவிகித ஆளுமை தன்மையின் உப உதவி அந்தப் பேச்சு முழுவதையும் (புளிப்பாக்குகிறது) பக்குவப்படுத்துகிறது. அது ஒரு ஸ்வாரஸ்ய மற்ற பேச்சிற்கும் கவர்ச்சியான சொற்பொழிவுக்கும் இடையே வித்தியாசத்தை உண்டாக்கலாம். ஆகையால் நான் பிரசங்கம் செய்பவரின் ஆளுமை தன்மைப் பற்றி சில பக்க இடங்களை அதற்காக பயன்படுத்தலாம் என்றும் விரும்பக் கூடியதென்றும் உணருகிறேன். பின்வருவன அதற்காகக் கொடுக்கப்படும் எளிய வழி காட்டி முறைகளாகும்.

**1. உன் மட்டில் நீயாகவே இரு**

சற்று இளைப்பாறி ஆசுவாசப் படுத்திக் கொள். இயற்கையாகவும், பாதிப்புமின்றி இருக்கவும். செயலூக்கமான பேசுவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறதொன்று இளைப்பாறி இருப்பதுதான். மனப்பதட்டம் நடுக்கத்தை உண்டாக்குகிறது. அழுத்தத்தின் காரணமாக ஞாபக சக்தி சீராக வேலை செய்வதில்லை. பேச்சும் சரளமாக வருவதில்லை. உன்னுடைய மன அழுத்தம் உன் சபையினருக்கும் தொடர்பு படுத்தி தெரிவிக்கப்படுவதால் அவர்களும் மன அழுத்தம் அடைகின்றனர். ஆகவே நீ இளைப்பாறுதலாக இருக்க வேண்டுமானால் உன் பிரசங்கத்தை தேவனிடம் ஒப்புக்கொடுப்பது தான். உன்னால் முடிந்ததை நன்றாகச் செய். பலா பலன்களை தேவனிடம் விட்டு விடவும்.

**2. (மற்றவர்களைப் பார்த்து) அவர்கள் பாவனைகளைப் பின்பற்றாதே**

தேவன் உன்னைத் தெரிந்து கொண்டதன் காரணமாவது அவர் உன்னைப் பயன்படுத்துவதற்காகத் தான். உன்னில் மாத்திரம் உனக்கே சிறப்பாக அமைந்த அம்சங்கள் உண்டு. தேவன் அவற்றை உபயோகப்படுத்துவதில் நோக்கம் உண்டு. எந்த ஒரு பிரசங்கம் செய்வர் போல நாம் அவரைப் பின்பற்ற பாவனை செய்வது பெரிய தவறாகும். அந்த நபர் எவ்வளவு செயலூக்கமாகப் பேசினாலும் அவரை பின்பற்றி அவர் போல செய்வதால் உன்னுடைய ஊழியத்தை மேன்மைப் படுத்தி விரிவாக்கம் செய்ய முடியாது. அவ்வாறு செய்ய நினைப்பது தாவீது சவுலுடைய போராயுதங்களை அணியும்படி

முயற்சி செய்தது போல் ஆகும். அது அவனுக்கு சரிவரப் பொருந்தாதது. அது அவனுக்கு அதிகமாக உதவாமல் தடையாக இருந்திருக்கும். (I சாமு 17:38-39).

நீ யாரோ ஒருவரைப் போல பாவனை செய்யும்படி முயற்சி செய்து கொண்டிருந்தாலும் உன் பேச்சை கவனிப்பவர்கள் விரைவில் அதை அறிந்து கொள்வார்கள். அவர்கள் உன் பிரசங்கமானது முழுவதுமாக உண்மையல்ல என்றும் மனமார்ந்தல்ல என்பதையும் அறிந்து கொள்வார்கள். அது ஆழமற்றதாகவும் மேற்போக்காகவும் செய்தியைப் பரப்புவதாகத் தெரிந்து கொள்வார்கள். நீ முழுவதுமாக ஓய்வு எடுத்துக் கொள்வதாகவோ அல்லது இயல்பாக இருப்பதாகவோ நீ, நீயான ஆளுமையுடையவனாக இருந்தாலன்றி அவ்வாறு இருக்க முடியாது. உன்னுடைய ஊழியமும் போலியான பகட்டுடையதாகவும் செயற்கையாகவும் காணப்படும். மற்ற பிரசங்கம் செய்பவர்களைக் கேட்பதாலும் கவனிப்பதாலும் நீ நிச்சயமாகவே கற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்களைப் போல் பாவனையாகச் செய்ய முயன்றாலோ ஒன்றையும் நீ ஆதாயமாகப் பெறப்போவதில்லை. நீ, நீயாகவே இருக்கும்படியாகத் தீர்மானித்துக் கொள். நீ உன்னிலே தானே சிறந்தவனாக ஆகக் கூடும்.

### 3. உனக்குத் தானே உண்மையாயிருக்கவும்

நேர்மையும், உண்மையுமே ஒரு பிரசங்கம் செய்பவருக்கு அத்தியாவசியமானவை. நீ தேவனுக்காக ஒரு வாய்க்காலாக இருக்கிறாய். பேசும் வாயாகவும் இருக்கிறாய். அதாவது தேவன் தாமே உன் மூலமாக மக்களுடன் பேசுவதற்காகத் தான். ஆகையால் உண்மையாகவும், மாய்மாலத்திலிருந்து விடுபட்டும் வஞ்சனையற்றும் இருக்கும் ஒரு பாத்திரத்தையே தேவன் விரும்புகிறார்.

### 4. பரிசுத்தமானதோர் பாத்திரமாக இருப்பாயாக

உன்னைக் கவனித்துக் கேட்பவர்கள் உன்னைவிட உயர்ந்து எழும்புவார்கள் என்பது முடியாததாகும். உன்னுடைய ஜீவியம் மாசுபட்டதென்றால் உன்னை கவனித்து கேட்பவர்களையும் மாசுபடுத்துவாய். உன்னுடைய ஆவியில் கசப்பு இருக்குமானால் அதை உன்னைக் கவனித்து கேட்பவர்களுக்கும் தொடர்பு படுத்துவாய். நீ குற்றம் கண்டுபிடிப்பவர் என்றால் உன்னுடைய பிரசங்கத்தின் மூலமாக அது வெளிப்படும். உன்னுடைய சபையினரும் கூட குற்றம் கண்டு பிடிப்பார்கள். நீ உன்னைத் தானே எதிர்மறையான மனப்பான்மையுடன் கட்டுபட்டு இருக்க அனுமதித்தால் மக்களும் எதிர்மறையாகச் செயல்படுவார்கள். நீ உன் ஜாதியின் படியே உன் சந்ததியை பிறந்து பெருகச் செய்வாய். (ஆதி 1:12,21) அதாவது உன்னை மறுபடியும் ஜெநிப்பிக்கிறதோர் விதமான மனிதனாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உன்னுடைய ஊழியத்தின் பலனாகிய கனி அந்த விதமான வகையானதாகவும் கூட இருக்கும்.

### 5. நேர்மையாக இரு

நேர்மையாக இருத்தல் என்பது பசாங்கும் வஞ்சனையும் செய்யாது இருத்தலாகும். அதன் அர்த்தமாவது உன் புறத் தோற்றத்தைப் போலவே உண்மையாகவே நீ அவ்வாறு அதே ஆளாகவே இருக்கவேண்டும். நீ பொது வெளியிடங்களிலும் நீ தனியாக இருக்கும்பொழுது இருப்பது போலவே காணப்படவேண்டும். அவ்வாறின்றி இருத்தல் கூடாது. நீ நேர்மையாகவும், உண்மையுள்ளவனாகவும் மனமார்ந்தவனாகவும் இருக்கவும். அநேக பிரசங்கம் செய்பவர்கள் தங்களுக்கென்று ஒரு பகிரங்கமான பொது தோற்றத்தை உண்டாக்கி கொள்கிறார்கள். அவர்கள் மத சம்பந்தமான எடுப்பான தோற்றம் பெற்றிருக்கிறார்கள். இந்த விதமான மத சம்பந்தமான மாய்மாலத்தையும் தேவனுடைய வெறுப்புக்குரியதை புறக்கணித்து விடு. தேவன் நிச்சயமாகவே அந்த விதமான பொய்யான தோற்றத்தை விரும்புவரல்ல. மக்களும் அதைப் பற்றி முட்டாள்கள் ஆக மாட்டார்கள், நீண்ட நாட்களுக்குங்கூட.

### 6. தெளிவானதோர் குறிக்கோளையும் புற நோக்கையும் வைத்திருக்கவும்.

ஒருவன் வாழ்க்கையில் உண்மையானதோர் புறநோக்கைப் பெற்றிருப்பானானால் அவனுடைய ஆளுமை தன்மை சரியான முறையில் உருவாகியிருக்கும். உன்னுடைய ஜீவியம் தேவனுடைய வசனத்தைப் போதிக்கும் செயலூக்கமுடைய ஊழியக்காரனாக மெய்யாகவே அர்ப்பணிக்கப்பட்டிருக்குமானால் உன்னுடைய ஆளுமை தன்மையும் அந்த இலக்கை நோக்கியே உருவாக்கப்பட்டிருக்கும். அது சத்தியத்தைப் பரப்புவதற்கு தகுந்த உருவத்தை எடுத்திருக்கும். இந்த விதமான அர்ப்பணிப்பு உன்னுடைய ஆளுமை தன்மையைத் தேவனுடைய சார்பாக பேசுபவனாகத் தகுந்த விதத்தில் சிறந்ததோர் வளர்ச்சி அடையும்படி பலப்படுத்தும்.

உன்னுடைய பிரசங்கத்தை ஒரு பழக்கமாக ஆகிவிடும் படி அனுமதிக்காதே. இது மனிதனுக்குக் அரிதாகக் கிடைக்கக் கூடிய தேவனுடைய உன்னதமான அழைப்பாகும். தேவன் உன்னை அவருடைய மகிமையான சத்தியத்தைப் பிரபலப்படுத்தும்படி அழைத்திருப்பாரானால் முழுமனதுடன் அந்த அழைப்பின் முடிவான பூரணமான வளர்ச்சியை பின் தொடர்ந்து செல்லும்படியாக உன்னையே முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ளவும். அது உன்னுடைய ஜீவியத்தின் முக்கியமான காரியமாக இருக்கட்டும். எப்பொழுதுமே அதை இரண்டாந்தர ஸ்தானத்தில் உள்ள நபருக்குத் தள்ளி விடும்படி அனுமதிக்காதே.

### 7. முழுமனதுடனும் செயல்படு

அரைகுறை மனதுள்ள மக்களால் எதுவும் பயனுள்ள ஒன்றைச் சாதிக்க முடியாது. மதிப்புள்ள யாதொன்றும் செலவில்லாமல், பணிவாக பிரசங்கம் செய்வதற்கு உன்னையே முழுமனதுடன் கொடுத்துவிடு. அது உன்னை உறிஞ்சி செயலாக்கட்டும். அதை உன்னுடைய ஜீவியத்தின் முக்கியமான காரியமாகக் கொண்டு உன் மேல் சுமத்தப்பட்ட தேவனுடைய உன்னதமான அழைப்புக்கு உன்னை ஒவ்வொரு வழியிலும் தகுதியாக இருக்கும்படி தீர்மானம் செய்து கொள்.

## B. பிரசங்கம் செய்வதில் தன் ஆளாகவே ஈடுபாடு கொள்ளுதல்

### 1. இயற்கையான இயல்பு

விட்டேத்தியாகவும், நீ நீயாகவும் இருக்கப் பார். தேவன் உன்னுடைய ஆளுமை தன்மையை தன்னுடைய வார்த்தையைப் பரப்புவதற்கு ஒரு வாய்க்காலாக விரும்புகிறார். அதற்காகவே உன்னைத் தெரிந்து கொண்டு உன்னை அழைத்திருக்கிறார். உன்னைப் பற்றித் தானே வெளிப்படையாக கனிவிரக்கம் கொள்ளாதே. உன்னைத் தான் நீயே ஏற்றுக்கொள். தேவன் உன்னை ஏற்றுக்கொண்டார். யாரும் நீயாக இருக்க முடியாது. நீயும் யாராகவோ இருக்க முடியாது.

### 2. முதன்மையான தோற்ற இயல்பு

உன்னுடைய செய்தியும், அதை பிரசங்கிக்கும் விதமும் உன்னுடைய சொந்த படைப்பாக இருக்கட்டும். தேவன் தாமே ஒவ்வொருவரையும் மற்றவரை விட வித்தியாசமாகப் படைத்திருகிறார். நம்மில் உள்ள இணையற்ற தன்மையையும் பார்த்து மகிழ்கிறார். அது மனிதவர்க்கத்திற்கு பல திறப்பட்ட திறன்களையும் தந்து உதவுகிறது. உனக்கு தேவனால் தரப்பட்ட இந்த இணையற்ற ஆளுமை தன்மையை உபயோகப்படுத்தி தேவன் தாமே அவருடைய சித்தத்தை உன் ஜீவியத்தின் மூலமாக தாம் விரும்பியிருக்கிற விசேஷித்ததும் இணையற்றதுமான வழியில் செயல்பட அவரை அனுமதிக்கவும்.

### 3. எளிமையான தன்மை

எளிமையை பற்றி சிறிது அதீதமான கவர்ச்சியும், வசீகரமும் உண்டு. வெளிப்படையாக மிகவும் சிக்கலாகவும் ஆழமாகவும் பேச முயற்சிக்க வேண்டாம். ஆழமாகப் பேசி மனிதரின் உள்ளத்தில் பதியச் செய்ய வேண்டியதில்லை. நீ அவர்களுக்கு ஊழியம் செய்யவே இருக்கிறாய். அவர்கள் மனிதில் ஆழமாக பதிய வைக்க வேண்டியதில்லை.

### 4. வசீகரிப்புத் தன்மையான பண்பு

இந்த உலகம் எப்பொழுதாவது ஓர் வசீகரமும் கவர்ச்சியும் கலந்து ஆளுமை உடையவர் இருப்பவராக ஒருவரைப் பார்த்திருக்குமானால் அவர் தான் இயேசுக் கிறிஸ்து. நான் குறிப்பாக சரீரத் தோற்றத்தைக் குறித்து பேசவில்லை. ஏசாயா சொன்னதாவது “அவரைப் பார்க்கும்போது, நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.” (ஏசாயா 53:2) கிறிஸ்துவினுடைய வசீகரத் தன்மையாவது முக்கியமாக அவருடைய சரீரத் தோற்றத்தில் இல்லை. அவருடைய நல்லொழுக்கம் ஆளுமை தன்மையுமே மிகுந்த வசீகரம் உடையதாய் இருந்தது. அவருடைய காலத்து சராசரி மனிதர்கள் மிகுந்த மன உற்சாகத்துடன் அவருக்கு பதில் செயல் கொடுத்தார்கள். வேதாகமம் சொல்கிறது, “அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடு கேட்டார்கள்.” (மாற்கு 12:37) ஜனங்கள் அவரிடம் திரளாகக் கூடி வந்தனர். காந்த இரும்பானது இரும்புத் துகள்களைக் கவர்ந்திழுப்பது போல் அவர் பால் ஈர்க்கப்பட்டனர். அவரிடம் ஓர் இனிமையான அருள் பாலிக்கும் பண்பு இருந்தது. அது அவருக்கு மிகுந்த கவர்ந்து ஈர்க்கும் பண்பைக் கொடுத்தது. அவர் எங்கு சென்றாலும் அவருடைய ஆளுமைத் தன்மையுடைய காந்த சக்தி தன் பங்குக்கு ஜனங்களைத் திரளாகக் கூட்டிச் சேர்த்தது. பரிசுத்த ஆவியானவர் உன்னிலுங்கூட இத்தகைய ஈர்க்கும் காந்த சக்தியை விருத்தி செய்யலாம்.

### 5. (புறத் தூண்டுதல் இல்லாத) தனிச் சிறப்பியல்பு

தனது இயல்புக்கு மாறாக செயல்படாதே. சுதந்திரமாகவும் முட்டுக் கட்டையின்றியும் இயற்கையான இயல்புடன் செயலாற்று. இயல்பான தனிச் சிறப்பு என்பது எவ்விதமான கட்டாயமும் வன்முறை மேற்கொள்ளுதலுமின்றி காரியங்கள் சுலபமாகத் தாமாகவே நடைபெறுவது என்று அர்த்தமாகும். பாரமாகவும் இயற்கைக்கு மாறாகவும் இருக்கும் சமய சார்பான பேசும் பாணியை வளர்க்கக் கூடாது. உமது செய்தி பரப்பும் விதமான பாணியாவது சுதந்திரமாகவும் இயல்பாகவும் பெருகட்டும். உன்னை கட்டுகளால் கட்டப்படும் செயல்களின் கட்டுக்குள்ளும் இயங்காதே.

### 6. சூழ்நிலைக்கு ஒப்பாகத் தகுதியாக்கிக் கொள்ளும் பண்பு

ஒரு நல்ல பிரசங்கம் செய்பவர் வளைந்து கொடுக்கவும் பல வேறுபட்ட சந்தர்ப்பங்களுக்கு தக்கபடி தன்னை மாற்றிக் கொள்ளவும் கற்றுக் கொள்ள வேண்டும். நீர் பிரசங்கம் செய்யப் போகும் ஒவ்வொரு கூட்டமும் ஏதோ ஒரு விதத்தில் மற்றவைகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலைமையிலும் பரிசுத்த ஆவியானவர் என்னத்தை நிறைவேற்றும்படி வாஞ்சிக்கிறார் என்பதை கண்டு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விசுவாசிகளின் கூடுகையிலும் ஓர் குறிப்பிட்ட நோக்கத்தை அல்லது இலக்கை அடையும்படி வைத்திருக்கிறார். அந்த விதமான காரியத்தை நிறைவேற்றுவதில் பிரசங்கம் செய்பவர் திறவுகோலாகப் பயன்படுகிறார்.

நீர் ஓர் பிரசங்கம் செய்யும் நிகழ்ச்சியான சமயத்தில் உமது மனத்தின் அணுகுமுறையில் நீர் வளைந்து கொடுக்காமலும் பழமை விரும்பியுமாக இருக்க முயற்சித்தல் கூடாது. உம்முடைய மனதைத் திறந்ததாகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாயும் வைத்திருக்க முயற்சிக்கவும். உமது ஆவியில் கர்த்தரிடத்தில் தொடர்ந்து காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உம்முடைய ஆவியைத் திறந்ததாக அவருடைய மெல்லிய சத்தம் உமக்குள் பேசும்படி திறந்து வைத்திருக்க வேண்டும். இது சாதாரணமான திருச்சபை ஆராதனைக்கும் தேவனுடன் அவருடைய வசனத்தின் மூலமாக இடைபாடு கொள்வதற்கும் இடையே எல்லா வகையான வித்தியாசத்தையும் உண்டாக்கக் கூடும். பரிசுத்த ஆவியானவரால் இந்தக் கூட்டங்களில் பல வேறுபட்ட மனோ பாவங்களையும் உண்டாக்க முடியும். சில சமயங்களில் அவர்கள் மகிழ்ச்சியும் ஆர்வமுள்ளவர்களாகவும் மற்ற நேரங்களில் அமைதியாகவும் மரியாதையாகவும் இருப்பார்கள். இந்த விதமான மனோ பாவங்களைக் கண்டறிந்து கொள்ளும் திறமையால் அறிந்து கொண்டு பரிசுத்த ஆவியால் உண்டாக்கப்பட்ட இந்த விதமான இணையற்ற சூழ்நிலைமையை சாதகமாக்கிக் கொள்வது தேவனால் வாஞ்சிக்கப்படுகிற பலா பலனை அறுவடை செய்யும்படியாக உதவக் கூடும்.

ஓர் கிறிஸ்தவ ஆராதனை/ஊழியத்தில் தேவன் அசைவாடும் வழியை கண்டறிந்து அவருடன் இணைந்து செல்வதே அதன் வெற்றிக்குத் திறவுகோல் ஆகும்.

### 7. ஆற்றல் வாய்ந்ததாக

பிரசங்கம் செய்வதில் ஒரு திகிலூட்டக்கூடிய வல்லமையானது அந்த குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக இணையற்ற தன்மையில் வெளிப்படக்கூடும். இந்த விதமான வல்லமையான அதிகாரமுள்ள வெளிப்பாடானது அதைக் கண்கூடாகப் பார்ப்பதில் அச்ச மூட்டுவதாக இருக்கும். பேதுரு அப்போஸ்தலன் இந்த விதமான அச்ச மூட்டும் வல்லமையை பெந்தெகொஸ்தே நாளில் எடுத்துச் சொல்லி விளக்குகிறான். (அப் 2ம் அதி) இந்தக் காலம் வரைக்கும் அவன் தன்னை அச்சமுள்ளவனாகவும் பயந்தவனாகவும் காண்பித்திருந்தான். அவனுடைய கோழைத்தனமானக் கிறிஸ்துவை மறுதலித்தது இதை நிரூபித்துக் காட்டியது. ஒரு சாதாரணமான வேலைக்காரி முன்னால் கூட இயேசுவை அங்கீகரிக்க மறுத்தது. அவனுடைய அதைரியத்தையும், பாதுகாப்பு இல்லாமையையும் வெளிப்படுத்தியது. ஆனால் அவன் பெந்தெகொஸ்தே நாளில் (உருமாற்றம்) மறுரூபமாக்கப்பட்டான். அந்த நாள் காலைப்பொழுதில் அவன் பிரசங்கம் செய்யும்படி நிற்கும்பொழுது நாம் ஒரு வித்தியாசமான பேதுருவைப் பார்க்கிறோம். இந்த மனிதன் பயம் ஏதுமின்றி தேவனுடைய வசனத்தைத் திரளான கூட்டமான மக்களுக்கு முன்பாக அதிகாரப் பூர்வமாக புகழ்ந்து பிரபலப்படுத்திய பொழுது இந்த மனிதனைப் பற்றி ஏதோ ஒரு மகிமையைக் காணப் பார்க்கிறோம்.

இந்த விதமான ஒரு பிரசங்கம் செய்பவரை நாம் செயல்பாட்டில் பார்க்கும்பொழுது அங்கே ஓர் இராஜ கம்பீரம் நமது ஆத்துமாவைத் தூண்டி சிலிர்க்க வைக்கிறது. இந்த விதமானதோர் தனித்தன்மை பெற்ற இயல்பான நடப்புகளுக்குள் என்ன அடங்கியுள்ளது என்பதை யாரால் விளக்கிக் கூற

முடியும்? நான் டாக்டர் பில்லி கிரகாம் பேசும்பொழுது கேட்கக் கிடைத்த சிலாக்கியமான சமயங்களைத் தெளிவாக நினைவு கூறுகிறேன். இந்த அபூர்வ மனிதரின் பிரசங்கத்தின் மூலமாக எப்படிப்பட்ட வல்லமையும் அதிகாரம் வெளிப்படுகிறது? அது தேவனுடைய வல்லமையும் மனிதனுடைய கூட்டுறவின் சேர்க்கையினால் உண்டாகிறது. ஒரு சாதாரண மனித குலத்தைச் சேர்ந்தவன் எப்படி ஆச்சரியப்படக் கூடியதோர் விதத்தில் தேவனுடைய ஞானமும் ஆலோசனையும் மனிதனுக்குக் கொண்டு வரும்படியாக ஒரு கால்வாயாக ஆக முடியும் என்பதற்கு இங்கே ஓர் உதாரணமாகும்.

மெய்யாகவே பிரசங்கம் செய்தல் என்பது ஒரு உன்னதமானதும் பரிசுத்தமானதுமான ஊழியமாகும். இந்த விதமான வேலைக்கு அழைக்கப்பட்ட ஒரு நபர் தான் உண்மையாகவே கனம் பெற்றவனாக உணர வேண்டும். இந்த விதமான பிரசங்கம் செய்யும் பங்கை நிறைவேற்றும் படி அழைக்கப்பட்டவர் யாராயிருந்தாலும் தன்னை அதற்கென அர்ப்பணித்துக் கொண்டு அதன் மிகச் சிறந்த உயரமான மட்டத்தளவில் செயலூக்கத்துடன் இடைபடுவதை உறுதி செய்ய வேண்டும்.

## C. இன்றியமையாத தளவாடங்கள்

மேலும் நாம் இந்த செயலூக்கமான பிரசங்கத்திற்கு இன்றியமையாத மூன்று காரியங்களைக் நோக்கிக் கவனிப்போம். அவை தரிசனம், மொழி புலமை, குரல் வளம் முதலியனவாகும்.

### 1. தரிசனம்

ஒவ்வொரு பிரசங்கம் செய்பவருக்கும் தரிசனம் ஒன்று அவசியமாகும். இதன்படி அவருடைய ஊழியத்தின் மூலமாக தேவனுக்குள் அவர் அடையக்கூடிய இலட்சியத்தை நான் கருத்தில் கொள்கிறேன். நமது தரிசனமாவது நாம் வாழ்க்கையின் மூலமாக இயங்கி அந்த முடிவான ஆதாயத்தை அடைவதே நான் கொண்டுள்ள இலட்சியக் கோட்பாடாகும். நீ தேவனுக்காக முடிவாக என்னவாக இருக்கப் போகிறாய் என்பதும் அவருடைய மகிமைக்காக நீ நிறைவேற்றக் கூடிய ஊழியம் என்பதும் ஒரு கனவாக இருக்கும் என்று நீ சொல்லக் கூடும்.

ஒவ்வொரு பிரசங்கம் செய்பவருக்கும் அவரை ஊக்கப்படுத்தி செயல்பட வைக்கும்படி ஒரு தரிசனம் அவசியமாகும். அவருக்கென்று திட்டவட்டமானதும் முடிவானதுமான ஒரு இலக்கை நோக்கி ஓடும் படியாகவும் விடா முயற்சியுடன் தொடர ஒன்றும், சாதித்து வெற்றி பெற ஒன்றும், தன்னையே தியாகம் செய்யத் தகுந்த ஒன்றையும், அவருக்குள் இருக்கும் சிறந்த திறமையை வெளிப்படுத்தும்படி ஒன்றுபடுத்தப்பட்ட ஒரு இலட்சியமும் தேவையாகும்.

அநேகமாக பிரசங்கம் செய்பவர்கள் ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ போதுமான அளவு ஏமாற்றத்தைச் சந்திக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு ஏதோ ஒன்று தேவைப்படுகிறது. அதன் மூலமாக இந்த ஏமாற்றத்தைச் சந்தித்து இதற்கு எதிர்த்து நின்று காலப்போக்கில் எல்லாவற்றையும் பயனுள்ளதாக ஆக்கும்படி ஆகிறது. முடிவாக தேவன் உனக்காக வைத்திருக்கும் நோக்கத்தைப் பற்றிய உள்ளார்ந்த விழிப்புணர்வு இல்லாவிட்டால் நீ ஏமாற்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு தெய்வீகமாக உனக்கு நியமிக்கப்பட்ட இலக்கை அடைய முடியாமல் தோற்றுப் போவாய்.

### 2. மொழி புலமை

ஒரு பிரசங்கம் செய்பவரின் மொழி புலமையாவது அவர் அறிந்திருக்கிற வார்த்தைகளின் எண்ணிக்கையிலும் அவருக்கு நன்கு தெரிந்த வார்த்தைகளிலும் மொத்தமாக அடங்கியிருக்கிறது. வெளியரங்கமாக ஒரு பிரசங்கம் செய்பவர் தம்முடைய அழைப்பைத் தொடர்ந்து செல்வதற்காக பயன்படுத்தும் கருவிகளே வார்த்தைகளாகும். எவ்வளவுக்கதிகமாக வார்த்தைகளை அறிந்து வைத்துக் கொண்டும் அவற்றைப் புரிந்து கொண்டும் இருக்கிறாரோ அவ்வளவுக்கு அதிகமாக அவர் சரளமாகப் பேசவும் புரிந்து கொள்ள வைக்கும் திறமையையும் பெறக் கூடும்.

ஒரு ஓவியனுக்கு துரிகையும் வர்ணமும் எவ்வளவு முக்கியமோ அதே மாதிரி பிரசங்கம் செய்பவருக்கும் மொழி வளம் அத்தியாவசியமானது. ஒரு பிரசங்கம் செய்பவர் விஸ்தாரமான படக் காட்சிகளை வார்த்தைகள் மூலமாக உண்டாக்க முடியும். அவர் ஒரு காட்சியை வருணிக்கும்பொழுது அவரது சபையினரும் அவர் வருணிக்கும் காட்சியை அவர்களால் ஏறக்குறையப் பார்க்க முடியும். ஒரு செயலுக்கமான செய்தித் தொடர்பாளருக்கு மொழி புலமை மிகவும் முக்கியமானது. மொழி புலமை அற்ற பிரசங்கம் செய்பவர் ஒருவர் கருவிகளைக் கொண்டிராத தொழில் வினைஞனைப் போலிருப்பான்.

ஒரு பிரசங்கம் செய்பவராக இருந்தால் சொற்கூட்டத்தின் மீது ஆர்வம் உள்ளவராக இருக்கவேண்டும். மிகவும் விரிவாக நூல்களைப் படித்து அறிய முயற்சி செய்யவும். நல்ல இலக்கியத்தைப் படிப்பது உமது சொல் வளத்தைப் பெருக்கும். உமக்கு பரிச்சயமில்லாத ஒரு வார்த்தையை சந்திக்க நேரிட்டால் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்க. அதன் பொருள் (அர்த்தம்) என்னவென்பதைக் கண்டு பிடிக்கவும். உமது மொழி வளத்துடன் கூட்டிச் சேர்த்துக் கொள்ளவும். அதை சரியான சமய சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்து பயன்படும். உமது மொழி வளத்தைக் கட்டி எழுப்புக. அப்படிச் செய்யும் பொழுது நீவிர் சரளமாகப் பேசும்படி ஆகக் கூடும். ஜனங்கள் உன்னை மிகுந்த ஆர்வத்துடன் கவனித்துக் கேட்பார்கள் எப்பொழுதென்றால் நீவிர் போதுமான அளவில் உமது தலைப்பை தொடர்பு படுத்திப் பேசும் பொழுதுதான்.

3. குரல்வளம்

ஒரு பிரசங்கம் செய்பவருக்கு அவரது குரல் வளமே அவருக்குள்ள சிறந்த இயற்கையான முதலீடாகும். ஆகவே அதை நன்றாகக் கவனித்துப் பாதுகாக்க நீர் முயற்சி செய்ய வேண்டும். உம்முடைய குரல் வளத்தைப் பற்றி எப்பொழுதும் விழிப்பாயிருந்து அதை உபயோகப்படுத்துவதற்கு அபிவிருத்தி செய்ய வேண்டும்.

## D. பொது இடங்களில் சொற்பொழிவாற்றுவதற்கான கோட்பாடுகள்

இங்கே ஒரு பொது ஜன பேச்சாளர் கவனத்தில் கொள்ள வேண்டிய சில கோட்பாடுகள்:

1. மூச்சுவிடுதல்

சரியாக மூச்சு விடுதல் ஒரு பேச்சாளருக்கு மிகவும் முக்கியமானது.

- உமது நாசியின் மூலமாக சுவாசிக்க பழகி அப்பியசிக்கவும்.
- உமது நுரையீரலின் அடித்தளத்தின் ஆழம் வரைக்கும் மூச்சை விடுக.
- உமது நெஞ்சிலும் நுரையீரலிலும் காற்றை நிரப்பும் படி சுவாசித்துப் பழகவும்.
- பின்னர் மூச்சை நிறுத்தி மெதுவாக மூச்சை விடவும். சுவாசம் வெளிவிடுதலை கட்டுப்படுத்தவும்.
- காற்று உமது நுரையீரலின் அடித்தளத்திலிருந்து சரியாக உமது குரல் வளை மூலமாக உமது வாயின் மேல் அண்ணத்தைத்தாக கட்டும். உமது வாயின் மேல் அண்ணம் ஒரு குரல் பலகைப் போல் செயல்படவேண்டும். உமது குரலை உயர்த்தி தாழ்த்தி உமது ருசி மொட்டுகளைத் தொடச் செய்யும் பொழுது அது அதீதமான குரலோசையை அடையும்படி செய்யும். இதை சரிவரச் செய்யக் கற்றுக் கொள்வது உமது குரல் வளக் கயிறுகளைப் பலப்படுத்தும்.

2. பேச்சு மொழியைத் தெளிவாகப் பேசுதல்

தெளிவாகப் பேசுதல் என்பது ஒரு சொற்பொழிவை தெளிவாகப் பேசும் கலையாகும். ஒரு சரளமாகப் பேசுபவர் தெளிவாகப் பேசுவார். அவரை எளிதில் புரிந்து கொள்ள முடியும். அவர் தமது வார்த்தைகளை நன்றாக உச்சரிப்பார். ஒவ்வொரு பிரசங்கம் செய்பவரும் இந்தக் கலையில் வல்லுநராகப் பிரயாசப்பட்டு எய்தல் வேண்டும். அவர் பேசுவதைக் கேட்கவும் இலகுவாக இருக்க வேண்டும். அவர் பேசுவதைக் கேட்கும்படி பாரத்தைச் சுமத்தக் கூடாது. ஆனால் அது ஒரு ஆனந்தமான அனுபவமாக இருத்தல் வேண்டும். மேலும் அனுதின உரையாடல்களிலுங்கூட அவர் தெளிவாகப் பேசுதலை அப்பியாசிக்க வேண்டும்.

3. சொல்லின் உருவ மாறுதல்

உமது சொல் உருவம் மாறுதல் பெறுவது உமது குரலின் உச்சஸ்தாயுடன் தொடர்பு உடையது. மனிதக் குரலுக்கு ஒரு விரிந்த அளவில் தொனியில் பல நியங்கள் உண்டு. நீவிர் ஒரே ஸ்தாயிலும் ஒரே தொனியிலும் எல்லா நேரங்களிலும் பேசினால் உமது குரல் மிகவும் சலிப்படையும்படி தொனிக்கும். உமது குரல் தொனியை ஏற்றி இறக்கி பேசும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பாடகன் இசைபாடும்பொழுது அந்த ஸ்தாயில் உயர்த்தியும் தாழ்த்தியும் பாடலாம். அப்படி பாடும் பொழுது பல வகையான தொனி நயங்களைக் கொண்டு வரலாம். அப்படியே பொது ஜன பேச்சாளரும் செய்யலாம். உம்முடைய குரல் இயல்பாகவே உயர்ந்த ஸ்தாய்க்கு போனாலும் தாழ்ந்த ஸ்தாயில் பேச பயிற்சி செய்து கொள்ளவும். உம்முடைய குரலின் ஸ்தாயில் பல திறப்பட்ட தொனி நயத்தை வளர்த்துக் கொள்ளவும்.

### 4. பேசும் வேகத்தின் அளவு

சில ஜனங்கள் எல்லா நேரங்களிலும் ஒரே அளவாக பேசும் போக்கில் பேசுகிறார்கள். இதுவும் சில சமயங்களில் சற்று சலிப்பாக இருக்கும். நீவிர் பேசும் பொழுது பேசும் வேகத்தை வித்தியாசப்படுத்தி பேச முயற்சிக்க வேண்டும். உமது செய்தி தூது அளிக்கும் பொழுது நிதானமான வேகத்தில் கவனிப்பதற்கு சுலபமாக இருக்க வேண்டும். ஆனால் நேரத்துக்கு நேரம் அடுத்தடுத்து நீவிர் பேசும் வேகத்தை அதிகரித்தும் அல்லது குறைத்தும் வேகத்தில் பல வகையும் கூடுதலான வற்புறுத்துதல் பேச்சுத் தலைப்பை முன் வைக்கும் பொழுதும் கையாள வேண்டும்.

### 5. பேசும் சத்தத்தின் கன அளவு

இன்னும் மற்றொரு முக்கியமான காரணம் உண்டு. உமது குரலின் கன பரிமாணத்தை வேறுபடுத்துதல் நீவிர் வற்புறுத்தி அழுத்தம் தந்து உணர்த்தும் படி செய்கிற ஒரு குறிப்புக்கு கூடுதலான அழுத்தத்தைத் தரும். இந்த செய்தியைக் கொடுப்பதில் பெரும்பான்மையான பகுதி ஒரு சம்பாஷணை பேசும் சப்த அளவிலே கொடுக்கப்படுதல் வேண்டும். அந்த பேச்சை இது யாவரும் கேட்கக் கூடிய போதுமான அளவுக்கு இருக்கும்படி உறுதிப்படுத்தும். ஆனால் அது உங்கள் சபையினரின் காதுகளைத் தாக்கும் அளவுக்கு உரத்த குரலில் அல்ல. சில பிரசங்கிப்பவர்கள் பெரிய குரல் எடுத்து பேசுவது அவசியம் என்பது போல் உணருகிறது போல் தோன்றுகிறது. இதைத் தவிர்க்க முயற்சிக்கவும். உமது செய்தித் தூது முழுவதுமே உரத்த குரலில் கொடுக்கப்படுமானால், அந்த செய்தியில் விசேஷமான அழுத்தம் தரப்பட வேண்டிய பகுதிகளுக்கு வற்புறுத்திக் கூறுவது கடினமான விஷயமாகும். உமது செய்தித் தூதை சம்பாஷணை சப்த அளவில் தொடங்குவதற்கு முயற்சிக்கவும். ஒரு விசேஷித்த குறிப்புக்கு பலமான அழுத்தம் தரும்படியாக இருக்கும்பொழுது மட்டுமே உமது குரலின் சப்த பரிமாணத்தை உயர்த்த வேண்டும். நீவிர் சமயா சமயங்களில் சத்தத்தை குறைப்பீரென்றால் அதுவும் ஒரு சிறந்த குறிப்புக்கு விசேஷித்த அழுத்தம் தருவதற்கு உதவும். உமது சபையினர் நீர் குரலின் பரிமாணத்தை குறைத்துத் தாழ்த்தும் பொழுது சிறந்த கவனத்தை அளிப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு வார்த்தையின் பேரிலும் தாபரித்து நிற்க முயற்சி செய்வார்கள்.

### 6. சற்று நிறுத்தி நிறுத்திப் பேசுதல்

ஏதோ ஒரு சமயத்தில் சற்று நின்று கடந்து போவதற்கு பயப்படவேண்டாம். நீங்கள் சொல்லப்போகிற சில குறிப்புகளுக்கு கூடுதலான அழுத்தத்தைத் தரக் கூடும். பிரசங்கம் செய்பவர்களில் சிலர் அமைதியான இடங்களைக் குறித்து அச்சப்படுவார்கள். அவர்களும் பேசும்போக்கு ஒரு நதியைப் போல சற்றும் எவ்விதமான தயக்கமின்றி ஓடி வரும். இது ஜனங்களுக்கு அதை தமக்குள் ஒன்றைக் கலந்து கொள்வதில் கடினமாக இருக்கக் கூடும்.

உமது செய்தியை கொடுக்கும்பொழுது பந்தய ஓட்டம் ஆகக்கூடாது. அதாவது அதிவேகமான போக்கும், மூச்செடுத்துக் கொள்வதற்காக சற்று நிறுத்திக் கொள்ளாமலும் ஓடுவது கூடாது. உமது கூடி வரும் சபையினருக்கு நீவிர் பேசுவதை சிந்திக்க நேரம் தேவைப்படுவதுடன் நீவிர் கொடுத்து அவர்கள் கேட்ட செய்தியை கருத்தில் அமைத்துக் கொள்ளவுங் கூட நேரம் அவசியமாகிறது. இதன் பயனாக உமது செய்தியில் தரப்பட்ட சத்தியத்தை உண்மையாகவே கிரகித்துக் கொள்ள உதவுகிறது. நீவிர் உமது செய்தியை இருதயத்தை தொடும்படி செய்து உணர்ச்சிகளையும் தூண்டி விட வேண்டும். இருதயமானது ஒரு சீரான வேகத்திலே விஷயங்களை கிரகிக்கக்கூடும். நீங்கள் பிரசங்கம் செய்யும்பொழுது வெகு விரைவாக சிறிய நிறுத்தங்கள் இன்றி பேசுவீர்களானால் உம்மை கவனித்துக் கேட்பவர்கள் பின் தங்கும்படியாக விட்டு விடுவீர்கள்.

### 7. திரும்பத் திரும்பச் சொல்லுதல்

ஒரு குறிப்பிட்ட அளவு திரும்பச் சொல்லுதல் நன்றாக இருக்கும். அது உமது குறிப்பை அழுத்தமாக வற்புறுத்தி கேட்பவர்கள் மனதில் பதியும்படி செய்கிறது. இந்த விதமான வற்புறுத்தலை நீவிர் வேண்டுமென்றே கொடுக்கும்பொழுது நீவிர் செய்வது உமக்குத் தெரிந்து செய்யப்பட்டும் அவ்வாறு செய்வதற்கு ஒரு நல்ல காரணமும் உமக்கு உண்டு.

அதே குறிப்பை பல வேறுபட்ட வழிகளில் முன் வைக்க முயற்சியுங்கள். நீவிர் பகிர்ந்து கொள்ளும் சத்தியத்தை ஜனங்களின் சிந்தனையிலும் நடவடிக்கைகளிலும் ஒரு அங்கமாக ஆக வேண்டுமென்று விரும்புகிறீர்கள். இதை நிறைவேற்றி சாதிப்பதற்கு மனதிற்கு சத்தியத்தைப் பற்றிப் போதுமான வெளிப்பாடுகளும் மேலும் அவை அவர்களை தெளிவாக உணர்ந்து அறிந்து கொள்ளும்படியாகவும் இருத்தல் வேண்டும்.

## E. பிரசங்கம் செய்பவர்களுக்கான எளிய யோசனைகள்

**1. நீவிர் நீங்களாகவே இருக்க வேண்டும்.**

நேர்மையற்ற ஏதோ ஒரு உருவச் சாயலை பெரிது படுத்திக் காட்ட முயற்சிக்காதே. நீங்கள் தாங்களாகவே இருப்பது முற்றிலுமாக இளைப்பாற்றியாக இருப்பதற்கு ஒரே வழியாகும். நீவிர் மற்றொரு பிரசங்கம் செய்பவர் போல் பாவனை செய்வது போல் செய்தால் அது உமது சபையாருக்கு பரப்பி விடப்படும். அதனால் உம்முடைய பிரசங்கம் செய்வதன் செயற்கைத் தன்மையை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். நீவிர் உம்மால் முடிந்தவரை உங்களால் சிறப்பாகச் செய்யக் கூடியதை செய்யுங்கள். ஆனால் எப்பொழுதும் இயல்பாகவும் தாங்கள் தாங்களாகவே இருங்கள்.

**2. நீவிர் உம்மையே மறந்து விட வேண்டும்**

நம்மைப் பற்றிய விழிப்புணர்வு பொது மேடை பேச்சுக்கு உண்மையானதோர் தடை ஆகும். அது தயங்கித் தயங்கி பேசவும் பேச்சில் நிச்சயமற்ற தன்மையை உண்டாக்கும் நாள்பட்ட தன்னைப் பற்றிய விழிப்புணர்வு ஒரு நபரை நாவைக் கட்டிப் போடப்பட்டவராகக் கூட ஆக்கலாம். அந்தத் தன்மையானது நீவிர் சரளமாகப் பேசுவதைக் கூட அதிகமாக சுருக்கி விடும். உமது நடபடிக்கைகளும், தோற்ற சௌந்தரியமுமே கூட சுருங்கி விடும். நீவிர் உம்மை கூடிய மட்டும் முற்றிலுமாக எந்த அவசியமான வழிகளிலும் உம்மை தயாராக்கிக் கொள்ள வேண்டும். நீவிர் அந்த பொருள் தலைப்பைப் பற்றி படிக்கும் விஷயங்கள் போதுமானதாக இருப்பதாக. உம்முடைய நோட்டு புத்தகக் குறிப்புகள் பிரிவானதாகவும் தெளிவாகவும் இருப்பதாக. நீவிர் ஜெபத்தில் தரித்திருந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப் படுவீராக. நீவிர் பகிர்ந்து கொள்ள விரும்புகிற சத்திய வார்த்தைகளால் நிரப்பப்படுவீராக. செய்தி தாயரிப்பதில் நீவிர் அறிந்திருக்கிற ஒவ்வொரு ஆயத்தத்தின் பகுதியை பற்றி கவனத்தை செலுத்துவீராக. ஆனால் பேசும்படி எழுந்து நிற்கும் போது உம்மையே நீவிர் மறந்து விடுவீராக. நீவிர் பகிர்ந்து கொள்ள விரும்புகிற சத்தியத்தில் நீவிர் முழுவதுமாக திழைத்து இருப்பீராக. நீவிர் உம்மை விட பேசுவதைக் கவனிக்கும் சபையைப் பற்றி விழிப்புடன் இருப்பீராக. நீவிர் தேவனுடைய வார்த்தை பெறுகி வரும் வாய்க்கால் ஆவிராக. அவருக்கு பூரணமாக உம்மை ஒப்புக் கொடுக்கவும் எவருடைய சார்பில் யாருடன் பேசுகிறீர்களோ அப்படிப்பட்ட தேவனையும் மக்களைப் பற்றியுமே விழிப்புடன் இருந்து கொள்வது அவசியமாகும்.

**3. நீர் பிரசங்கம் செய்யும்பொழுது ஒரு மத சார்புள்ள குரல் ஒலியுடன் பேசும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளக் கூடாது.**

இதை சில பிரசங்கிப்பவர்கள் பின்பற்றுவார்கள். அது மிகவும் அலங்கோலப்படுத்துவதாகும். அவர்களது பிரசங்க பீடத்துக் குரலானது அவர்களது இயல்பான குரலை விட மிகவும் வித்தியாசமானது. இது ஒரு நேர்மையற்ற உணர்வை கொண்டு வருகிறது. அதுவும் அந்த நபர் ஏதோ ஒரு கதா பாத்திரத்து பாகத்தை நடிப்பதை ஏறக்குறையப் போன்றது. அது அந்த நபரை சபையினரி நின்றும் தனிமைப் படுத்திக் காட்டுகிறது. அந்த கவனித்துக் கேட்கும் சபையினரை அவரை ஏதோ வேறுபட்ட பிறவியாக அல்லது இனமாகக் காண்பார்கள்.

அந்த பேசுபவரை அவரை கவனித்துக் கேட்பவர்களில் இருந்து வித்தியாசமான உலகத்தைச் சேர்ந்தவர் போல் தோன்றச் செய்யும். இது அந்த சபையினரை பேசும் அவருடன் அடையாளப் படுத்திக் கொள்வதை கடினமாக ஆக்குகிறது. ஆகவே இயல்பான குரலில் பேசும்படி பழக்கப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொரு நாளும் நீவிர் சாதாரணமாகத் தொடர்பு படுத்தி ஜீவியத்தில் பயன்படுத்தும் குரல், உச்சரிப்பு குரல் ஒலி ஆகியவற்றை கைக்கொள்ளவும். இது மக்களுக்கு உண்மையானதோர் உணர்வையும் நேர்மையையும் கொண்டு வந்து தருகிறது.

**4. மிகவும் மெதுவாகப் பேசவும் கூடாது.**

உமது சபையினர் ஒவ்வொருவரும் நீவிர் பேசுவதைத் தெளிவாகக் கவனித்துக் கேட்கிறார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். உம்முடைய வார்த்தை ஒவ்வொன்றையும் சிரமத்துடன் கவனித்துக் கேட்கும்படி இருக்கக் கூடாது. அவசிய மேற்பட்டால் நான் பேசுவதை ஒவ்வொருவராலும் தெளிவாகக் கேட்க முடிகிறதா? என்று கேளுங்கள். நீவிர் பேசுவதைப் போதுமான அளவு உமது சபையினரில் ஒரு பகுதியினரால் நன்றாகக் கேட்டு நீர் சொல்வதை பின்பற்றி வர முடியாவிட்டால் மேற்கொண்டு தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை. இது உம்முடைய நேரத்தையும் கவனித்துக் கேட்பவர் கால நேரத்தையும் வீண்விரையம் செய்வதாகும்.

**5. பெருங் கூச்சலிடாதே**

சாதாரணமான உரையாடல் பேசும் தொனியிலேயும் அளவு பரிமாணத்திலும் பேசுவதற்கு முயற்சி செய்க. அதாவது உமக்கு ஒலி பெருக்கி வசதி இருந்தாலும் அல்லது இல்லா விட்டாலும் அந்த தொனியும் பரிமாணமும் கூட்டத்தினரின் பெரிதான அளவுக்கு ஏற்றவாறு கூட்டும்படி நேரிடும்.

**6. அதாவது உமது பேச்சைத் தரும் வழி முறையில் சுவையற்ற தன்மையைத் தவிர்ப்பதற்கு உமது பேச்சின் வேகத்தையும் ஸ்தாயின் அளவையும் வேறுபடுத்தி கூற வேண்டியதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.**

**7. அந்த கவனித்து கேட்கும் சபையினரை நீவிர் சொல்வதை ஏற்றுக் கொள்ளும்படி செய்யவும்.**

அந்த சபையினரின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளவும். அவர்கள் உம்மை ஏற்றுக் கொள்ள விட்டால் உம்முடைய பிரசங்கத்தையும் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**8. பொறுத்தமான ஆடை அணியவும்**

உம்முடைய தோற்றமானது உமது சபையினரோடு செய்தியை அறிவித்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் திறமையிலிருந்து உம்மை திசை திருப்பக் கூடாது. இலட்சியமாக நீவிர் சற்று தன்னடக்கமாக யாரையும் புண்பட வைக்கக் கூடாத படியான முறையில் ஆடை அணிய வேண்டும். நீர் ஆடை அணியும் முறையினால் உமது சபையினரைப் பகைத்துக் கொள்வதன் நோக்கம் என்ன? உமது ஆடையானது தேவையற்ற கவனத்தை உம்மேல் கொண்டு வரக் கூடாது. கூடுமான வரையில் நீவிர் சத்தமாக, பொருத்தமாக தன்னடக்கத்துடன் ஆடை அணிந்திருக்க வேண்டும். நிச்சயமாக உமது ஆடை உமது சபையின் கலாச்சாரத்திற்கு வெறுப்பு உண்டாக்கும் வகையில் இருத்தல் கூடாது.

**9. சரியாக நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ளவும்**

அநேகமான சமயங்களில் ஒரு சபையினரோடு பிரசங்கிக்கும் பொழுது நின்று பேசுவதே சரியான முறையாகும். உமது இரு கால்களாலும் உறுதியாக நின்று உமக்கு ஒரு ஸ்திரமான நல்ல நிற்கும் ஸ்தானத்தைக் பெறும்படியாக நிற்க வேண்டும். உமது சபையினரை நேராகப் பார்த்து நிற்கவும். ஏதொன்றின் மேலும் சாய்ந்து நிற்பதைத் தவிர்க்கவும். அங்கே ஒரு பிரசங்க பீடமோ அல்லது மேடையோ இருந்தாலும் இந்த இடத்தை எப்படியென்றாலும் பயன்படுத்தி வேதாகமத்தையோ அல்லது குறிப்பு ஏடுகளையோ வைக்கலாம். ஆனால் சாய்ந்து நிற்கும்படி பயன்படுத்தக் கூடாது. நேராக நிற்பது உமது சுவாசத்திற்கு உதவியாக இருக்கும். மேலும் நீவிர் உமது சபையை நேராகப் பார்த்து நிற்கும்பொழுது ஒரு வித அமைதியான நம்பிக்கையின் வளர்ச்சியை உமக்குள் உண்டாக்கும்.

**10. இயல்பாக அங்குமிங்கும் நகர்ந்து போகக் கற்றுக் கொள்ளவும்.**

உமது சரீரமும் உமது குரலுங்கூட ஒரு செய்தியை எடுத்து கொண்டு வரும். நீவிர் பேசும் பொழுது எப்படி உம்மை நடத்திக் கொள்கிறீர் என்பது முக்கியமாகும். சரியான அசைவுகளுக்கு திறவுகோலாவது அந்த அசைவுகளை இயல்பாக விட்டுவிடுவது தான். தேவையற்ற சரீர சம்பந்தமான மெய்ப்பாடுகளைத் தவிர்க்கவும். நீவிர் வார்த்தைகளால் ஒன்றை விவரிக்க வேண்டுமானால் அந்த கருத்தை உமது கைகளின் அசைவுகளால் காண்பிப்பது இயல்பாகும். அந்த விதமான வருணனைகள் இயல்பாகவும் தானாகவும் பிறக்கட்டும். நீவிர் ஒரு குறிப்புக்கு அழுத்தம் தர வேண்டுமானால் உமது கைகளால் அதைக் கட்டாயமாகக் காட்டலாம். எல்லா விதமான கை அசைவுகளும் நீவிர் வற்புறுத்திக் கூறுவதற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

**11. கண்ணால் தொடர்பை உமது சபையினருடன் உண்டாக்கிக் கொண்டு அதை நடைமுறையில் நிறுத்துக.**

உமது கண்களும் கூட செய்தியைச் சொல்லும். மேல் நோக்கி விரிந்த இடத்தை வெறுமென கண்ணோக்கிப் பார்ப்பது கூடாது. நீ யாரிடம் பேசுகிறீரோ அந்த மக்களுடன் நேராக நோக்கிப் பார்த்து பேசுக. உம்முடைய கண்களை எங்கும் சுற்ற விட்டு சபையினரை நேராகப் பார்த்தால் அப்பொழுது அவர்களில் ஒவ்வொருவரும் நீவிர் அந்தந்த நபருடனே பேசுவதாகவே கருதுவார்கள்.

இந்த நடவடிக்கையால் நீவிர் பேசும் ஜனங்களோடு நல்லதோர் தொடர்பையும் பரஸ்பர உணர்வையும் ஸ்தாபித்துக் கொள்வீர்.

**12. முக பாவத் தோற்றங்களுங்கூட மிக முக்கியமானவைகள் என்பதை ஞாபகத்தில் வைக்கவும்.**

உமது முகத்திலுள்ள தோற்றங்கூட ஒரு செய்தியை சொல்லாற்றலுடன் தருகிறது. ஏதோ ஒரு தனிப்பட்ட குறிப்புக்கு அழுத்தம் தந்து சொல்லும் பொழுதுதைத் தவிர மற்ற சமயங்களில் முகத் தோற்ற வெளிப்பாடுகளைத் தவிர்க்கவும். எல்லாவற்றிற்கும் மேலாக உமது முகத்து வெளிப்பாடுகள் இயற்கையாகவும் அவைகள் தகுந்ததாகவும் இருப்பதாக.

# பிரசங்கங்களையும் வேத பாடங்களையும் ஆயத்தம் செய்வது எப்படி

## அதிகாரம் 1 - நீவிர் ஏன் முன்பாகவே திட்டம் பண்ண வேண்டும்?

ஒரு வேதாகமக் கல்லூரி பட்டதாரி வாலிபன் ஒரு கூடி வரும் சபையினருக்கு முன்னால் தன்னுடைய முதலாம் பிரசங்கத்தைச் செய்வதாக இருந்தார். அது அவருடைய முதலாவது ஆலயத் திருச்சபை ஆகும். மேலும் அவர் தேவனுடைய வசனத்தையும் தாம் நன்கு அறிந்திருப்பதாகவும் பிரசங்கம் செய்வதற்கு திறமை இருக்கிறதென்பதையும் காட்டும்படியாக விரும்பினார். அவர் வேதாகமப் பகுதியை வாசித்துக் காட்டவோ அல்லது எந்த வகையான குறிப்புகளையோ பயன்படுத்துவதற்கு விரும்பவில்லை. அவர் தன்னுடைய இருதயத்திலிருந்தே முற்றிலுமாகப் பிரசங்கிக்க ஆசைப்பட்டார். ஆகவே அவர் குறிப்புகளையோ ஒரு திட்ட யோசனைகளையோ எந்த விதமானதொரு உதவியையும் கையாளவில்லை.

அவர் பிரசங்க பீடத்தின் மீது ஏறி நின்று பிரசங்கத்தை ஆரம்பிக்கும்படி சென்றார். ஆகவே அவர் பேச விருந்த பிரசங்கத் தலைப்பாகிய வசனத்தைத தவிர வேறொன்றையும் அவருடைய ஞாபகத்துக் கொண்டு வருவதற்கு அவரால் முடியவில்லை. ஆனால் தலைப்பாகிய வசனத்தை மாத்திரம் திரும்பச் சொல்வதனால் தாம் சொல்ல விரும்பிய மற்றெல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடும் என்று நம்பினார். பிறகு அவர் வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து அந்த வசனத்தைத் திரும்பவும் சொன்னார். ''இதோ, நான் வருகிறேன்'' என்று உரத்து சத்தமாய் சொன்னார். அதனால் ஒன்றும் பயனில்லை. மேலும் அவரால் ஒன்றையும் ஞாபகப்படுத்த முடியவில்லை. அந்த வசனத்தைத் திரும்பவும் ஒரு தரம் சொல்லி நம்பிக்கையுடன் ஜெபித்துக் கொண்டே வேறு சில சிந்தனைகள் தமது ஞாபகத்திற்கு கொண்டு வரலாம் என்று நம்பியிருந்தார். ''இதோ, நான் வருகிறேன்'' என்று திரும்பவும் தடுமாற்றத்துடன் பிரசங்க பீடத்தின் மேல் சாய்ந்து கொண்டு அதன் விளைவைக் கொண்டு வர முயன்றார். சரியான அந்த நேரத்தில் தானே அந்த பிரசங்க பீடம் இடத்தை விட்டு சற்று நகர்ந்து பெயர்ந்த பொழுது முன் வரிசையில் உட்கார்ந்திருந்த ஸ்தீரியின் மடியில் போய் விழுந்தார். அவர் மிகவும் திடுக்கிட்டார். அந்த ஸ்தீரியைப் பார்த்து ''நான் வருத்தப் படுகிறேன்'' என்று சொன்னார். அதற்கு அந்த ஸ்தீரி ''அது நல்லது தான். நான் அதற்குத் தயாராக இருந்திருக்க வேண்டும். நீங்கள் வருவதாக மூன்று தடவை எச்சரிக்கை செய்தீர்'' என்று சொன்னார்.

## சனிக்கிழமை இரவின் பீதி

இது எப்படிப்பட்டது என்று உமக்கத் தெரியும். நீவிர் வாரம் முழுவதுமே ஆலோசனை கூறியும், வேலை செய்தும் போதித்தும் ஓர் ஊழியர் செய்யக்கூடிய பணிகள் அனைத்தையும் சுறுசுறுப்பாகச் செய்தீர்கள். உமக்கு ஓய்வு நாளுக்காக ஆயத்தம் ஆவதற்கு அதிகமான நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தீர். ஆனால் அநேக தேவைகள் வந்ததினால் நீவிர் அவற்றைச் சந்திக்க வேண்டியிருந்தது. இப்பொழுது இது சனிக்கிழமை இரவு. ஆனால் நீவிர் இன்னும் ஓய்வு நாளுக்காக ஒரு செய்தியையோ அல்லது பிரசங்கத்தையோ மறுநாளுக்கென்று ஆயத்தமாக்கவில்லை.

நீவிர் உமது வேதாகமத்தைத் திறக்கிறீர். பக்கங்களைப் புரட்டிக் கொண்டு பரலோகத்தை நம்பிக்கையுடன் நோக்கி ஜெபித்து, ஓ, தேவனே தேவனே உம்முடைய சத்தத்தை நான் கேட்கட்டும் என்று ஜெபிக்கிறீர். என்னவென்றாலும் சனிக்கிழமை இரவில் ஒரு சிறந்த பிரசங்கத்தை ஆயத்தம் செய்யக் கூடாமலே போயிற்று அல்லது கடைசி நேரத்தில் ஒரு பாடத்தையும் உம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நாம் எல்லோரும் கடைசி நேரத்தில் தமது செய்திக்கான விஷயங்களைத் தொடுத்து வைத்துப் பிரசங்கம் செய்பவர்களின் செய்தியைக் கேட்டு சிரமத்தை அடைகிறோம். ஒருவர் செய்யும் பிரசங்கமானது ஒரு சிந்தனையிலிருந்து மறு சிந்தனைக்கு தாவி அலைந்து திரிந்து நிற்கும் பொழுதும் நாம் என்ன சொல்வதென்று விரும்பும்பொழுது நாம் எதைச் சொல்வதென்று அறியாதிருக்கும் சமயத்திலும் நாம் ஜனங்களை வீணாக அவதிப்படும்படி விட்டு விடுகிறோம். ஒரு பிரசங்கம் செய்பவரின் ஊழியத்தில் பல விதமான செயல்பாடுகள் இருக்கின்றன. அவருடைய பிரசங்கத்தை தவிர மற்ற யாதொன்றையும் அதிகமாக பார்த்து அறிந்து கொள்வது இல்லை.

மக்கள் உமக்கிருக்கும் பிரசங்கம் செய்யவும், போதிக்கவும் பெற்றிருக்கும் திறமைகளாலே உம்மை ஒரு ஊழியர் என்று தீர்மானிக்கிறார்கள். அவர்கள் வாரந்தோறும் உம்மை சிறந்த பிரசங்கங்களையே முன் வைக்கவேண்டும் என்று தீர்மானிக்கின்றனர். அதிலும் மிகவும் சரியாகவே இந்த வேதாகமம் தேவ வசனத்தைப் போதிப்பதில் அதிகமான கவனம் தர வேண்டும் என்று புத்திமதி சொல்லுகிறது. (I தீமோத் 4:13 & II தீமோத் 4:2) ஐப் பார்க்கவும். ஜனங்களை வல்லமையாக கர்த்தரிடம் நடத்திச் செல்லக் கூடியதுமாக நாம் செய்யக் கூடிய காரியம் அது ஒன்றுதான்.

நான் உமக்கு யோசனையாகக் கூறுகிற இந்த முறையைப் பின்பற்றினால் உமக்குப் பிரசங்கிக்கும்படியாக நல்ல காரியங்கள் இருக்கவே இருக்கிறது. ஆகவே உமக்கு ஒரு தளவாட அறை நிரம்ப பொருட்களும், சிந்தனைகளும் உட்பார்வைகளும் சவால்களும், எடுத்துக் காட்டுகளும் ஆகியவை ஒரு பிரசங்கத்தையோ, செய்தி தூதையோ அல்லது பாடத்தையோ கட்டி எழுப்பவதற்கு கைவசம் தயாராக இருக்கும்.

## கறிகாய்களோ அல்லது களைகளோ?

நான் சிறு பையனாக இருக்கும்பொழுது விவசாய பண்ணையில் வளர்ந்து வந்த காலத்தில் என்னுடைய பெற்றோர் எங்கள் வீட்டிற்குப் பின்புறத்தில் தோட்டம் ஒன்று போட்டார்கள். மிகவும் கவனத்துடன் ஜாக்கிரதையாக மண்ணை உழுது அதன் உப்பு உரம் தூவி வரிசைகளாக பாத்தி வரப்புகள் அமைத்து அதன் கோட்டு இடைவெளியில் விதைகளை ஊன்றினோம். சில வாரங்கள் சென்ற பிறகு எனது பெற்றோர் வெளியில் தோட்டத்திலே களைகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். நான் 6 அல்லது 7 வயதாக இருந்தபோதிலும் நானும் அவர்களுக்கு உதவி செய்யுமாறு போனேன். நான் என்ன செய்யக் கூடும் என்று கேட்டபொழுது என்னுடைய தாயார் அந்த காய்கறிச் செடிகள் வளருவதற்கு வசதியாக களைகளை பிடுங்கி எறியச் சொன்னார். நான் அதை இப்பொழுது ஞாபகப்படுத்திப் பார்த்தபொழுது நான் வேலை செய்த பாத்தியில் வெங்காயத்தை வளர்த்து இருந்தோம். சில நிமிடங்கள் கழித்து எனக்கு முன்புறத்தில் வேலை செய்து கொண்டிருந்த தாயார் நான் எப்படி செய்கிறேன் என்பதைப் பார்க்கும்படி திரும்பினார்கள். ‘‘ஓ, இல்லை இல்லை, நீ வெங்காயத்தைத் தான் பிடுங்குகிறாய் களைகளைப் பிடுங்கவில்லை’’ என்று சொன்னார்கள். எனக்கோ ஒரு வெங்காயப் பூண்டுக்கும் களைக்கும் உள்ள வித்தியாசம் தெரியவில்லை.

நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு கருத்தும் நல்லதாக இருக்காது. நமக்க கிடைக்கும் ஒவ்வொரு சிந்தனையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டதாகாது. சில கருத்துக்களும் சிந்தனைகளும் நல்லவைகளாக இருக்கும். அவைகள் அதன் காலத்தில் கனி கொடுக்கும். ஆனால் அவற்றில் சில களைகளாக இருக்கும். நாம் அவைகளின் வேறுபாட்டை கண்டு அறிந்து கொள்ளும் வரைக்கும் அவைகளை அந்தக் காலம் வரையிலும் வளரும்படி விட்டுவிட வேண்டும். அதன் பின்னரே எவைகளைப் பிடுங்கி எறிய வேண்டும். எவைகளை நீண்ட காலம் வரையிலும் வளரும்படி விட்டுவிடவேண்டும் என்று போதுமான அனுபவத்தை அடைகிறோம்.

நீவிர் கடைசி நிமிடம் வரை ஒரு பிரசங்கத்தையோ அல்லது பாடத்தையோ தொடுத்துக் கொள்ளலாம் என்று காத்திருந்தால் நீவிர் மிகவும் அவசியமாக உம்முடைய சபையினருக்கு களைகளையும் காய்கறிகளையும், இரண்டையும் சேர்த்தே கொடுத்தவர் ஆவீர்கள். நீவிர் உம்முடைய பிரசங்கங்களையும் பாடக் குறிப்புகளையும் பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு ஏற்கனவே முன்னதாக ஆயத்தம் செய்ய ஆரம்பித்தல் உமக்கு அதன் வித்தியாசத்தை அறிந்து கொள்ள காலமும் அனுபவமும் கிடைக்கும். ஆகவே நீவிர் மக்களுக்கு ஆரோக்கியமான ஆகாரத்தையோ கொடுக்கக் கூடும்.

## அலுவலில் ஈடுபடுவதற்கு

பிரசங்கங்களையோ பாடக் குறிப்புகளையோ கட்டும்படி ஆரம்பிக்கவும். ஒரு காகிதத்தில் குறைந்தது ஏழு கருத்துக்கள் அல்லது பொருள் தலைப்புகளை பிரசங்கிக்க விரும்பும் பிரசங்கத்திற்காகவோ அல்லது கற்றுக் கொடுக்க விரும்பும் பாடத்திற்காகவோ தெரிந்தெடுத்து எழுதிக் கொள்ளவும். உமக்கு அதைத் தொடங்கிக் கொள்வது கடினமான நேரமாக இருக்குமானால் பின்வரும் வினாக்களை உமக்குப் பயன்படுமாறு உபயோகப்படுத்தவும்:-

1. நீர் எதைப்பற்றி இந்த சமயத்தில் தற்போது பலமாக உணருகிறீர்! உம்மை மிகுந்த எழுச்சியில் ஆட்கொள்வது என்ன? கோபமா? எது உம்மை செயல்பாட்டில் நடத்திச் செல்கிறது?
2. உம்முடைய சபையில் அல்லது வகுப்பில் இருக்கும் மக்கள் அறிய விரும்புவது என்ன? அவர்கள் எதைப்பற்றி அதிகமாக அறிய விரும்புகிறார்கள்?
3. அவர்கள் உம்மிடம் கேட்டுக் கொண்டிருப்பவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றி உம்மால் பிரசங்கம் செய்யவோ அல்லது பாடம் போதிக்கவோ உம்மால் முடியுமா? அதனைப் பற்றி உமக்கு கற்றுக் கொடுக்கவோ அல்லது பிரசங்கம் செய்யவோ ஒரு தடவைக்குமேல் பல முறை செய்ய முடியுமா?
4. அந்த பொருள் தலைப்புகளைப் பற்றி நீவிர் கொண்டிருக்கிற ஏதாவது ஏழு சிந்தனைகளை அட்டவணைப் படுத்துக.

## எப்படி சிறந்த பிரசங்கங்கள் செய்யப்படுகிறது?

வெளியில், உஷ்ணமாகவும் உள்ளே ஈரமான பிசுபிசுப்பும் உண்டு. குளிர் சாதனம் அதனை மிகவும் சௌகரியமாக ஆக்கியது. வெளியிலிருந்து நான்கு சக்கர ஊர்திகளின் ஹார்ன் சத்தமும் சத்தமிடுகிறவைகள் பேசுவதை மிகவும் கடினமாக ஆக்கியது. உள்பக்கத்தில் மக்கள் துதித்துப் பாடிக் கொண்டிருந்தனர். ஆகையால் நீவிர் பேச விரும்பவில்லை.

ஒரு மணி நேரம் ஆராதனையும் ஜெபமும் செய்து முடித்த பிறகு வியாக்கியானம் செய்பவர் பேசுவரை அறிமுகம் செய்யுமாறு எழுந்து நின்றார். அந்த பேச்சாளர் வசனத்தைப் பகிர்ந்து கொள்ளும்படி ஆரம்பித்த சமயம் ஒவ்வொருவரும் கவனித்துக் கேட்டனர். நாம் அந்த ஈர பிசுபிசுப்பையும் சத்தத்தையும் மறந்து விட்டோம். அந்த பேச்சாளர் சொல்ல விருந்த ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கொண்டு இருந்தோம். அவர் வல்லமையாப் பேசினார். ஒரு ஊழியராக தமக்குள் ஏதோ ஒன்றை விசேஷமாகப் பெற்றிருந்ததால் அது அவரை வல்லமையாக பயன்படுத்தியது. ஆம் அவருக்கு வசனம் தெரியும். ஒரு பிரசங்கம் செய்பவராக அவரது திறமையானது கூர்மையாகத் தீட்டப்பட்டிருந்தது. அவருக்கு மக்கள் மீது இருந்த அன்பை உம்மால் உணர முடிந்தது. ஆனால் நான் அங்கே ஆலயத்தில் உட்கார்ந்திருந்தேன்; கவனித்துக் கொண்டும் அந்தப் பேச்சாளரை வித்தியாசமான ஒருவராக எது செய்தது என்று பிரித்துப் பகுத்துப் பார்த்தேன். சுமார் ஒரு மணி நேரம் கவனித்துக் கேட்ட பிறகு அது என்ன என்பதைக் கண்டு உணர்ந்தேன்.

**வசனத்தையும், தனது சொந்த ஜீவியத்திலிருந்து அனுபவங்களையும், பரிசுத்த ஆவியானவரையும், ஒருங்கிணைத்து, ஒரு வல்லமை மிக்க நன்கு முன் வைத்துப் பேசப்பட்ட ஒரு பிரசங்கத்தையோ அல்லது பாடத்தையோ படைக்கும் திறமை அவருக்கு இருந்தது.**

<u>செயலூக்கமான செய்தி தூதுக்களுக்கு நான்கு பகுதிகள் உண்டு:</u>

1. நீ பிரசங்கம் செய்யப்போகும் பொருள் தலைப்புப் பற்றிய விஷய ஞானம்.
2. உனது ஜீவியத்தில் காணப்படும் ஆவியானவரின் புதிய உணர்வு
3. ஓர் பாத்திரம்
4. ஜீவியத்திலிருந்து அனுபவங்கள்

இவை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்தால் அவைகள் ஒன்றுக்கொன்று எவ்வாறு சரியாகப் பொருந்துகிறதென்பதை அறியலாம். இந்த கோட்பாடு தேநீர் பாத்திரம் நெருப்பால் சூடேற்றப்படுவதை உதாரணமாகக் கொண்டு விளக்கப்படுகிறது.

<u>முதல் பகுதி வார்த்தை அல்லது வசனம் ஆகும்</u>. ஒரு செயலூக்கமான போதகருக்கும், பிரசங்கம் செய்பவருக்கும் தாங்கள் போதிக்கும் பொருள் தலைப்பைப் பற்றி கொஞ்ச அறிவாவது பெற்றிருக்கவேண்டும். அவர் உண்மையாகவே செயலூக்கம் உடையவரானால் அந்தத் தலைப்பை படிப்பதற்கு அதிகமான நேரம் செலவழித்தும் தியானித்தும் ஊழியம் செய்வதைவிட அதிகமாக செய்யவேண்டும். இதன் காரணமாகத்தான் நீவிர் தானாகப் படிப்பதற்கும் தேவனுடன் ஈடுபாடு கொள்வதற்கும் தியானத்திற்கும் அதிகமான நேரம் செலவழிக்கவேண்டும். ஒரு செயலூக்கமான போதகர் வேதத்தைப் படிப்பதிலே பயன்படுத்துகிறார். அவருக்கு அவை கிடைக்குமானால் அவர் வேதாகம காலத்தில் இருந்ததுபோல வாழ்க்கையைப் பற்றிய தீட்சண்யமான உள்பார்வை தரும் புத்தகங்களைப் படித்துக் கொள்வார். மேலும் வேதாகமத்தில் தரப்படும் தூதான செய்திகளை வாழ்க்கையின் நடைமுறை வழிகளை பொருத்தி பயன்படுத்தக் கற்றுக்கொள்வார்.

நம்மில் சிலருக்கு உண்மையாகவே ‘‘அபிஷேகம்’’ பெற்றிருந்தால் நாம் போதிக்கும் பொழுது எந்த குறிப்புத் தாள்களையோ உபயோகிக்கக்கூடாது என்று நமக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. நீங்கள் படித்துக் கொண்டிருக்கும்பொழுதும் குறிப்புகளை எழுதி வைக்கக்கூடாது என்றும் மேலும் எந்த விதமான மேலோட்டமான குறிப்புத் திட்டங்களைக் கொண்டும் பேசக்கூடாது என்றும் போதித்தார்கள். ‘‘உன் வாயை விரிவாய் திற. கர்த்தர் அதை நிரப்புவார்’’ என்றும் சொன்னார்கள். ஏனென்றால் நமக்குள் ஜீவன் இல்லாவிட்டால் நமது வாயிலிருந்து எந்த விதமான ஜீவனும் வர முடியாது. நமது உதாரணத்தில் நாம் தேநீரை வசனத்தோடு ஒப்பிடுகிறோம். தேநீர் என்று தேயிலையிலிருந்து தயாரிக்கப்படவேண்டும். சிறந்த பிரசங்கங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்டாகிவர வேண்டும். ஆனால் வசனம் மாத்திரம் ஒரு பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்பதற்கு தகுதியுடையதாக்க மாட்டாது. விஷய ஞானமும் கூட, அது எவ்வளவு நல்லதாக இருந்தாலும் மக்களுக்கு ஜீவனை கொண்டு வந்து தர முடியாது. ‘‘எழுத்துக் கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது.’’ (II கொரி 3:6b).

நமது உதாரணத்தில் தேவையான இரண்டாவது துணைப்பொருள் ஜலமாகும். தேயிலைகள் மட்டும் போதாது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயருக்கு நியாயப் பிரமாணத்தைத் தெரிந்திருந்தது. நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் ஜீவியமானது வறட்சியாகவும், ஜீவன் அற்றதாகவும் இருந்தது. ஏனென்றால் அவர்களுக்கு ‘‘வசனத்தின் கர்த்தாவுடன்’’ தங்களுக்கு சொந்தமான ஐக்கியத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வேதாகமத்தை அறிந்திருந்தாலும் ஆனால் அவர்களிடம் இரண்டாவது தேவையான இரண்டாவது உடன் துணைப்பொருளை அதாவது செயலூக்கமான பிரசங்கத்துக்கு இன்றியமையாததைப் பெற்றிருக்கவில்லை. அதில் புதுமையான புத்துணர்ச்சி இருக்கவில்லை. ஆகையால் அவர் சொல்ல வேண்டியதை ஒருவரும் கவனித்துக் கேட்டார்களில்லை. ஒரு வேளை நீவிரும் யாரோ ஒருவர் சரியான போதனைகளையே ஊழியத்தில் போதித்திருப்பதைக் கேட்டிருக்கலாம். ஆனாலும் நீவிர் சற்றுக்கூட விழித்திருக்கக்கூடாதபடிக்கு, அவர் பேசியது வறட்சியாக இருக்கலாம்.

<u>இந்த இரண்டாவது உள்துணைப் பொருள் யாது? அதுதான் ‘‘பரிசுத்த ஆவியானவர்’’</u> வேதாகமத்தில், தேவனைப் பிரியப்படுத்தவும், சந்தோஷமானதோர் ஜீவியம் செய்யும்படியாக மனிதன் தெரிந்து கொள்ள அவசியமானதெல்லாம் அதில் உள்ளடங்கி இருக்கிறது. அந்த கட்டளைகள் எல்லாம் பழமையானவை ஆனாலும் இன்றைய வாழ்க்கையிலும் அவற்றைக் கைக்கொள்ளமுடியும். அவை பொறுத்தமானதுங்கூட. இந்த புதுமை உணர்ச்சியின் இரகசியம் எளிதானது. நியாயமாகவே புத்துணர்ச்சி பெறுக. பவுல் அப்போஸ்தலன் அதாவது நாம் ஆவியினால் நிறைந்து இருக்கவேண்டும் என்று கூறுகிறார். இது நமது ஜீவிய காலத்தில் ஏதோ ஒரு தடவை நேரிடுகிறதல்ல. இதற்கு பதிலாக நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு முன்பாக காத்திருந்து அவருடைய புதுமைத் தன்மையை அவரிடமிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும். அந்த ஆவியானவருடைய ஆவியானது நமது ஜீவியத்தில் தேவனிடமிருந்து நமக்குள் வந்து பிரவாகித்து பிறகு மற்றவர்களுக்குள்ளும் பெருகி ஓடுகிறது. அந்த சத்துருவினுடைய சக்தி வாய்ந்த(ஆயுதங்கள்) கருவிகளாவது வேதாகமப் பிரதியுத்தரங்களை வறட்சியான மத சார்புடைய சொற்களால் அடைத்து வைப்பது தான். பிரசங்கம் செய்வதும் போதனை செய்வதும் ஜீவியங்களை மாற்ற முடியாது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்கள் ஜனங்களுக்கு தேவனுடைய வசனத்தைப் போதித்து அவர்களை மாற்றுவதற்கு முயன்றார்கள். அது அன்றும் கிரியை செய்யவில்லை. இப்பொழுதும் அது கிரியை செய்ய முடிவதில்லை. நல்ல தத்துவம் மக்களுக்கு விடுதலை அளிக்கிறது. <u>அது தேவனுடைய வார்த்தையையும் அவருடைய வல்லமையையும் எடுத்து ஜீவியத்தை மாற்றவேண்டும்</u>. அதை உன்னுடைய ஜீவியத்தில் பெற்றிருக்காவிட்டால் அதைப்பற்றி மற்றவர்களுக்கு சொல்வதால் மாத்திரம் அதைக் கிரியை செய்யும்படி நடத்த முடியாது.

<u>மூன்றாவது அங்கமாகிய செயலூக்கமான போதனையானது உபயோகமான ஏற்றுக் கொள்வதற்கு வாஞ்சிக்கும் பாத்திரமாகும்.</u> தேயிலையும் ஜலமும் ஒரு பாத்திரத்தில் ஒன்றாகக் கலக்கப்படுகிறது. ஒரு தடவை எங்களுடைய கிறிஸ்தவ பள்ளியில் நான் (ஆசிரியர்) போதகர்களுக்கு பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தினேன். அந்த பயிற்சியின் ஒரு பகுதியாக பின்வரும் வினாக்களை அவர்கள் முன் வைத்தேன். அதற்கு பதில் சொல்லும்படி கேட்டேன்.

1. நீங்கள் பள்ளிக்கூடத்தில் பயன்படுத்திய ஒவ்வொரு புத்தகத்தின் தலைப்பையும் எழுதுங்கள்.
2. உங்கள் ஞாபகத்திலிருந்து நீங்கள் கற்றுக் கொண்ட பாடங்களின் பெயர்களை எத்தனை எழுத முடியுமோ அதை எழுதுங்கள்.
3. நீங்கள் பெற்றுக்கொண்ட விசேஷமான அனுபவங்களை விவரியுங்கள்.
4. உங்களுக்கு போதித்த ஆசிரியர்களின் பெயரை கூறுக, ஏன் அவர்களை நினைவுக் கூற முடிகிறது

அந்த பயிற்சியை எடுத்துக்கொண்ட ஆறு பேரில் ஒரே ஒரு நபருக்கு மட்டும் ஒரு பாடப் புத்தகத்தின் பெயரை ஞாபகப்படுத்த முடிந்தது. மேலும் இரண்டு பேர் சில பாடத் தலைப்புகளை ஞாபகத்தில் வைக்க முடிந்தது. அநேகருக்கு தங்களுடைய சிறப்பான அனுபவங்களையும் அலுவல்களையும் ஞாபகப்படுத்தினர். ஒவ்வொருவரும் குறைந்தது ஆறு ஆசிரியர்களை ஞாபகப்படுத்தி சொல்ல முடிந்தது. ஏன்? ஆசிரியர்கள் தான் மாணவர்கள் மீது அதிகமான தாக்கம் உடையவர்கள். அவர்கள் கற்பிக்கும் விஷயங்களோ பாடப் புத்தகங்களோ அல்ல. ஆசிரியர்கள் தங்களது ஜீவியத்தைப் பற்றி அவர்களுக்கு கதைகளைச் சொன்னார்கள். மேலும் அவர்கள் வர்ணம் கொடுக்கக் கூடியதும், வல்லமையானதுமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். அவர்களது வகுப்புகள் சாதாரணமான வறட்சியான பாடங்கள் அல்ல. அவைகள் அந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே உள்ள வல்லமையான அனுபவங்களாகும்.

இந்த சின்ன செயல்பாடு மக்களைப் பாதிப்பவர்கள் மக்கள்தான் என்று நிருபித்தது. <u>மற்றவர்கள் சொல்லுகிற காரியங்களால் நாம் தொடப்படுவதைப் போல மற்றவர்களுடைய ஜீவியத்தாலும் நாம் தொட்டு அசைக்கப்படுகிறோம். ஒரு செயலூக்கமான ஆசிரியை தன்னைத்தானே மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். ''தேறினவன் எவனும் தன் குருவைப் போல் இருப்பான்''</u> (லூக்கா 6:40) நாம் இப்பொழுது ஒரு நல்ல பிரசங்கம், செய்தி அல்லது தூது, போதனைகள் ஆகியவற்றின் மூன்று பகுதிகளையும் பரிசீலனை செய்தோம்.

- வசனம் (வேதாகம்)
- ஆவியானவர்
- பாத்திரம்

நமது எடுத்துக்காட்டும் விளக்கத்தில் அவைகள் தேயிலை, ஜலம், தேநீர் பாத்திரம் ஆகியவற்றோடு ஒப்பிடப்படுகிறது. ஆனாலும் இந்த உட்பாகப் பொருள்கள் இன்னும் தேநீராக ஆகிவிடவில்லை. இன்னும் ஒன்று அதிகமாக தேவைப்படுகிறது. அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

<u>இந்த 4வது உட்பொருள் உஷ்ணம் அல்லது அக்கினி. நமது வாழ்க்கையின் அக்கினி (அதாவது நமது ஜீவியத்தின் அனுபவங்களாகும்)</u> இந்த நெருப்பு என்ற அக்கினியை ஜலமும் தேயிலையும் குடிப்பதற்கு ஏதோ ஒன்றாக மாறும் முன்னர் ஏற்றி கொளுத்தப்படவேண்டும். நமது பிரசங்கம் செய்பவரை மிகுந்த ஆற்றல் வாய்ந்தவராக ஆக்கிய ஒரு விஷயம் என்னவென்றால் அவர் மிகுந்த கடினமான காலங்களின் வழியாக ஜீவியத்தால் வேதாகமச் சத்தியங்கள் அவரது ஜீவியத்தில் உண்மையாக ஆகிவிட்டது. அதைச் சூடுண்டாக்கும்படி செய்வது நடைமுறையைப் பூரணப்படுத்துகிறது. தேவனுடைய அடுப்பு என்ற சூளையில் அக்கினி உண்டாக்கி பாடுகளும் அனுபவங்களும் என்ற சூட்டடுப்பில் சுட்டு அதனால் உண்டாகும் அறிவு ஞானமாகிறது.

நீவிர் யோசுவாவினுடைய ஜீவியத்தை ஞாபகத்தில் வைத்திருக்கலாம். நாற்பது ஆண்டுகளாக அவன் மோசேயையும் அவன் வனாந்திரத்தில் ஜனங்களையும்கூட சேவித்தான். அந்த நாற்பது ஆண்டுகளே யோசுவாவை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அந்த ஜனங்களை நடத்திச் செல்வதற்காக தயாராக ஆயத்தம் செய்தது. உமக்கு தேவனுடைய வசனத்தைப் பற்றி சுமாராக நன்றாகத் தெரிந்திருக்கலாம். நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று ஜீவனுள்ளவர்களாய் இருக்கலாம். நீங்கள் ஒரு விருப்பமான ஆயத்த பாண்டமாக இருக்கலாம். ஆனாலும் நீங்கள் அதனுள் அடங்கிய உட்பொருள்கள் சிறிது காலம் கொதித்துக் கலந்தாலன்றி அக்காலம் வரையிலும் நீவிர் எப்பொழுதுமே முற்றிலும் செயலூக்கம் உடையவர்களாக ஒரு போதும் ஆக முடியாது. இப்பொழுது நீங்கள் உஷ்ணத்தை உணருவீர்களானால் சற்று இளைப்பாறிக் கொள்ளுங்கள். வேத வசனமும் (பரிசுத்த) ஆவியும் ஒருங்கிணைந்து நல்லதொன்றை உண்டாக்கப்போகிறது. பிரசங்கம் செய்யும் ஒருவர் தமக்குத் தெரிந்து கிரியை செய்யக் கூடியதோர் முறையை பிரசங்கம் செய்வதற்கும் பாடம் ஆயத்தம் செய்வதற்காகவும் கற்றுக் கொள்கிறார் என்பதற்காக ஒரு செயலூக்கமுள்ள ஊழியராக ஆக

முடியாது. நல்லதான கருவிகள் நன்கு ஊழியம் செய்வதற்கு உதவுகிறது. ஒரு அபிஷேகத்தையும் விஷய ஞானத்தையும் ஒருங்கே பெற்ற பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படும் பிரசங்கம் செய்பவர் ஒருவருக்குப் பதிலாளாக யாருமே இருக்கமுடியாது.

### ஊழியத்தை செய்யும் படியாக

நீவிர் ஏற்கனவே உமது பிரசங்கத்திற்கும் பாடத் தலைப்புகளுக்கும் நீர் பெற்றிருக்கிற குறிப்புகளை எழுதி விட்டீர்கள். உம்முடைய ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆன சில குறிப்புகளை நீங்கள் குறிப்பு அட்டவணைப்படுத்தியிருக்கிறீர்கள். உம்முடைய குறிப்புத் தாளைத் திரும்பப் பார்க்கவும். உம்முடைய அட்டவணைக் குறிப்பிலுள்ள எந்தக் குறிப்பை உங்கள் அனுபவத்தில் சந்திக்கிறீர்கள். உம்முடைய ஜீவியத்தில் எவ்வாறு தேவன் சத்தியத்தை இடைபட வைக்கிறார். இப்பொழுது உம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய வார்த்தையை விளக்கிச் சொல்லவும் செய்து காண்பிக்கும்படியாகவும் கிரியை செய்கிற அனுபவங்களில் சிலவற்றைக் குறித்து எழுதவும் உம்முடைய சொந்தமான தனிப்பட்ட அனுபவங்களையே பயன்படுத்துக.

## அதிகாரம் 2 - முன்பாகவே எப்படி திட்டம் பண்ணுவது?

### தேவனுடைய வார்த்தையை எல்லா இடங்களிலும் கவனித்துக் கேட்பதெப்படி என்று கற்றுக்கொள்ளுதல்

இயேசு எருசலேம் நகரத்திற்குள் கழுதையின் மேல் ஏறிவந்த பொழுது தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் ஜனங்கள் வரிசையாக நின்று துதித்து ஆர்ப்பரித்தார்கள். “குருத்தோலைகளைப் பிடித்து வீசிக் கொண்டு ஓசன்னா கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” என்று ஆர்ப்பரித்து மகிமையைச் செலுத்தினார்கள். இயேசு சிறிது காலம் போதித்த பிறகு தேவன் வானத்திலிருந்து பேசினார். இந்தக் கதையில் மிகவும் குறிப்பிடத்தக்க விவரமாவது தேவன் பேசினார் என்ற விஷயமல்ல. இதில் ஆச்சரியமான குறிப்பாவது அநேக ஜனங்கள் அவர் போதித்துப் பேசிய பொழுதெல்லாம் அவரை இன்னார் என்று அறிந்து கொள்ளவில்லை. சிலர் அதை இடி முழக்கம் என்றார்கள். மற்றவர்களில் சிலர் அதை தேவதூதன் என்று எண்ணினார்கள். தேவனுடைய சத்தம் இன்னதென்று அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் அது வானத்திலிருந்து உண்டாயிற்று. ஆனால் அவர்கள் முன்னாட்களில் வானத்திலிருந்து கேட்ட ஒரே காரியம் இடி முழுக்கம் மட்டுந்தான். நம்மைப் போலவே அவர்களும் தேவனிடமிருந்து வரும் சத்தத்தை ஒரு சில இடங்களில் மட்டுமே கேட்டுப் பழகிப் போய் இருந்தார்கள். நமக்குள்ள பிரச்சனையாவது அவர் உண்மையாகவே பேசும்பொழுது நாம் அவரைக் கவனித்து செவிகொடுத்துக் கேட்பதில்லை. நீவிர் தேவன் உம்முடன் பேசும்படி அவருக்காக காத்திருப்பீரானால் ஒரு உள்ளான மனதில் பேசும் சத்தத்தாலோ அல்லது வேதாகமத்தின் மூலமாகவோ மாத்திரம் பேசுவதாயிருந்தால் அது வேதாகமத்து பக்கங்களிலிருந்து குறித்து வருவதுபோல் தோன்றும். மேலும் அடிக்கடி தேவன் அவ்வாறு பேசும்பொழுது நீ தேவன் சொல்வதைக் கேட்க முடியாது.

ஒரு சமயத்தில் கர்த்தர் எரேமியாவை குயவன் வீட்டிற்கு அனுப்பினார். அங்கே கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகும் என்றும் சொன்னார். (எரேமியா 18:1-6) பகுதியை வாசிக்கவும் எப்படி? அங்கே ஆவிக்குரிய பிரகாரமாக நேரடியான சம்பந்தம் உடைய ஒரு ஜீவியத்தின் அனுபவத்தைப் பார்க்கும் படியாகவும் செய்தார். செய்தித்தூதுகளுக்கான சிறந்த கோட்பாடுகளும் எடுத்துக்காட்டுகளும் புத்தகங்களில் இருந்து கிடைப்பதில்லை. ஆனால் அவை ஜீவியத்திலிருந்து அதைக் கவனிப்பதாலும் அவ்வாறு ஜீவிப்பதாலுமே பெற முடிகிறது. நாம் இன்று ஜீவிக்கிற பிரகாரம் நம் ஜீவியத்திலும் உண்மையான சத்தியத்தைக் கண்டு பிடிக்கக் கூடுமானால் உம்முடைய ஜனங்களும் அதைத் தங்கள் சொந்த ஜீவியத்தில் கடைபிடிக்க அவர்களுக்கு உதவும். இயேசு தாம் ஜீவித்த பிரகாரமாகவே தமது ஜீவியத்தை பயன்படுத்தி சத்தியத்தை விளக்கிப் போதித்தார்.

உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் என் வீட்டில் தலைமைத்துவத்தைப் பற்றி ஒரு பிரசங்கத்தை ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். தானாகவே தீர்மானத்தை எடுக்கக்கூடாத ஒரு மனிதனைப் பின்பற்றுவதற்கு மனைவிமார்கள் அதை முடியாததும் கடினமானதுமான காரியமாகப்

பார்க்கிறார்கள் என்று கணவன்மார்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பினேன். இந்த செய்தித் தலைப்பை பிரசங்கம் செய்வதற்கு முன்னர் நான் மற்றொரு நகரத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். அங்கே நான் இருக்கும்பொழுது அந்த இடத்து எஜமானாகிய போதகர் என்னை ஒரு உணவு விடுதிக்கு இரவு சாப்பாடு சாப்பிட அழைத்துச் சென்றார். நாங்கள் உணவு உண்ட பிறகு நாங்கள் வெளியே போகிற அகன்ற நடைபாதை வழியாக நடந்து வந்து கொண்டிருந்தோம். அந்த ஹாலின் ஒரு பக்கத்து மேடையில் செய்தித் தாள்கள் அடுக்குப் பலகையில் வைக்கப்பட்டிருந்தது. அது ஒரு பெரிய ஹோட்டலாக இருந்தபடியால் அந்த செய்தித்தாள் அடுக்கை கவனிப்பவர் ஒரு டசன் வித்தியாசமான செய்தி ஏடுகளை வைத்திருந்தார். அவைகள் தேசத்தின் பல பகுதிகளைச் சார்ந்தவைகளும் விற்பனைக்காகப் பரப்பப்பட்டிருந்தன். அந்த மேடையின் கரையோரத்தில் சற்று நேரம் நாங்கள் நின்று அந்த இடைவெளிப் பாதையின் வழியாக ஜனங்கள் வருவதையும் போவதையும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். நாங்கள் விடுதியை விட்டு வெளியே வருவதற்கு சற்று முன்பு ஒரு தம்பதியினர் எங்களைக் கடந்து விடுதியை நோக்கிச் சென்றனர். அந்த தம்பதி வந்தபொழுது அந்த மனிதன் சற்று நின்று, ''ஒரு நிமிடம் காத்திரு.'' நான் ஒரு செய்தித் தாள் வாங்க வேண்டுமென்று அந்த ஸ்தீரியிடம் சொன்னான். அவன் செய்தித்தாள் அடுக்கு பலகை மேடைக்கு சென்று அங்கே ஒரு செய்தித்தாளை எடுத்துக்கொண்டான். அதைத் திருப்பிப் பார்த்து வைத்துவிட்டு மற்றொரு பதிப்பை எடுத்தான். எடுத்துக்கொள்வதும், பார்ப்பதும், திரும்ப வைப்பதுமாக இருந்தான். அந்த ஸ்தீரி மிகவும் சிடுசிடுப்புற்று அவன் அப்படிச் செய்த பொழுதெல்லாம் அவ்வாறு நின்றிருந்தாள். கடைசியாக அவள் தழுதழுத்த குரலில், ''நல்லதுதான் ஏதாவது வாங்குங்கள்'' என்றாள். அவளுடைய கணவன் ஒரு முடிவான தீர்மானம் எடுக்க கூடாதபொழுது அவள் ஏமாற்றம் அடைந்தாள்.

இங்கே பிரசங்கத்திற்கேற்ற சிறந்த உதாரணமாய் இருந்தது. இதைப்பற்றி பின்னொரு சமயம் பேசலாம். சிலர் இதைப் பார்த்திருக்கலாம். இது பார்ப்பதற்கு ஏதோ ஸ்வராஸ்யமானது என்று எண்ணி இருக்கலாம். இது தான் ஜீவியத்தில் தேவன் பேசுகிறதாகும். நாம் அவர் சொன்னதைக் கவனித்துக் கேட்காமல் இருக்கலாம். ஏனென்றால் அங்கே அவரது குரலைக் கேட்டுப் பழக்கமில்லை. அவர் பேசுகிறார். ஆனால் நாம் கவனித்துக் கேட்பதில்லை. அங்கே இந்த அப்பியாசத்தை நீங்கள் பயனுள்ளதாகக் கண்டு கொள்ளலாம். வீட்டை விட்டு வெளியே வாருங்கள். வெளியில் காலாற உலாவச் செல்லுங்கள். உங்களது பழகிப்போன சாதாரணமான சூழ்நிலையிலிருந்து சற்று வெளியில் வாருங்கள். நீங்கள் வெளியில் அப்படி உலாவச் செல்லும் பொழுது ஏதோ ஒரு பொருளைக் கவனித்துப் பார்க்கவும் அல்லது ஒரு சம்பவத்தைப் பார்க்கவும். அதிலே சில ஆவிக்குரிய பிரகாரமான சத்தியத்தையோ அல்லது கோட்பாட்டையோ அதிலே பார்க்கலாம். நீங்கள் பார்த்ததிலிருந்து ஒரு செய்தித் தூதை விரிவாக தோற்றுவியுங்கள் அல்லது நீங்கள் பார்த்ததை ஒரு உதாரணமாக அந்த செய்தியில் பயன்படுத்துங்கள். என்னுடைய நண்பன் ஒருவன் இதைச் செய்தபொழுது ஒரு துருப்பிடித்த ஆணியைக் கண்டெடுத்தான். அவர் அதைப் பற்றிச் சிந்தித்தபொழுது அவர் புரிந்து கொண்டதாவது பிரகாசமும் புதியதுமான ஒன்று எப்படி துருவடைந்து பயனற்றதாகிறது. பிறகு அதிலிருந்து பாவம் எப்படி மக்களை கறைபடுத்துகிறது என்ற செய்தித் தூதை ஆயத்தம் செய்து கொண்டார்.

மேலும் நல்லவர்களான வேதாகத் தொடர்பு கொள்பவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும். மற்ற பிரசங்கம் செய்யும் நல்ல பேச்சாளர்கள் சொல்லுகிறதை கவனித்துக் கற்றுக்கொள்ளவும். எதுவுமே மூலாதாரமாக உண்டானதல்ல. ஆதலால் மற்றவர்களிடமிருந்து அவர்களுடைய கருத்துக்களைக் கடனாகப் பெற்றுக்கொள்வதைக் குறித்துக் குற்ற உணர்வை கொண்டிருக்கக் கூடாது. அப்படிக் கடனாகப் பெறுவதாக இருந்தால் நன்னெறிப்படி உம்முடைய சபையினரிடம் அதை சொன்னது யார் என்பதைச் சொல்லவும். ஒரு மனிதன் நன்றாகத் தொடர்பு படுத்தி பேசுகிறவர் என்றால் அவர் பேசும் வழி முறையைக் கூர்ந்து படித்தும் அவர் பேசுவதற்கு பயன்படுத்தும் வார்த்தைகளை கவனித்தும் அவர் தெரிந்து எடுத்து பயன்படுத்தும் திருஷ்டாந்தங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நீ சொல்ல வேண்டியதை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் அதையும் வற்புறுத்திக் கூறக் கூடிய ஒரு வழி இருக்கலாம். மிகவும் அதிக பிரசங்கங்களிலும், போதனைப் பாடங்களிலும் திக்கித் திக்கி பேசுவதும் தடுமாற்றமே நிரம்பி உள்ளன. ஒரு மனிதன் நல்ல வேதாகமச் செய்தி தொடர்பாளராக இருந்தால் அவனிடமிருந்து கற்றுக் கொள்ளவும்.

## என்னுடைய தவறுகளிலிருந்து போதனைகளைக் கற்றுக்கொள்ளவும்

அது பின்வருமாறு ஒய்வுநாளில் ஆலய ஆராதனை, ஆலோசனை கூறுதல், வாரத்தில் மூன்று நாள் இரவு போதனை வகுப்புகள் போதிப்பது. நான் எங்களுடைய கிறிஸ்தவ பள்ளியில் கற்றுக் கொடுத்தேன். எங்களுடைய புதிய கட்டடத்தில் சனிக்கிழமை வேலை செய்தேன், ஆலய ஆராதனை ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஆலோசனை கூறுவதும் அதிகமான ஊழியக் கிரியை செயல்பாடுகளும் கொண்டிருந்தேன்.

உம்முடைய வேலைத் திட்டமானது என்னுடையதை விட சற்று சுறுசுறுப்பாக குறைந்திருக்கலாம். நான் ''இருந்தேன்'' என்று சொன்னதைக் கவனிக்கவும். அதற்குப் பின் பல ஆண்டுகளில் நான் சில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தேன். நான் திருச்சபை ஊழிய சம்பந்தமான நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக இருந்ததால் நான் ஓய்வு எடுத்துக் கொள்ள நேரம் கிடைக்கவில்லை. தேவன் என்னுடன் பேசுவதை மற்ற எந்த இடங்களிலும் கேட்க முடியவில்லை. நான் ஓடிக் கொண்டிருப்பதைத் தவிர நான் வேறெங்கும் போக முடியவில்லை. என்னுடைய வேலை அட்டவணைத் திட்டத்தின் பாரமானது வாழ்க்கையின் மற்ற கோணங்களை அனுபவிப்பதைத் தவிர்த்தது. என்னுடைய மனைவி, குழந்தைகள், தனி மனிதனாக நானாக எல்லாரும் சேர்ந்து ஒன்றாகக் கறைபட்டவர்களாக ஆனோம். நான் சுறுசுறுப்பாக மற்ற அலுவல்களில் ஈடுபட்டதால் அவர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போக்க முடியவில்லை.

நாம் தேவனைப் பற்றிய முதல் வெளிப்படுத்துதலை ஆதியாகமம் என்ற புத்தகத்தில் காண்கிறோம். அங்கு அவர் தம்முடைய படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறார். நல்ல பிரசங்கங்களும் வல்லமையான பாடத் தலைப்புகளுக்கும் படைப்பாற்றல் தேவைப்படுகிறது. படைப்பாற்றல் என்பது ஒன்றை புதிதாக உண்டாக்குவது அல்லது பழைய காரியங்களைப் புதிதான வழியில் ஒழுங்குபடுத்தி வைப்பதாகும். படைப்பாற்றல் என்பது ஒரு தளர்த்தியான சூழ்நிலையில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. நீவிர் அழுத்தத்தினால் பாதிக்கப்படாதபொழுது நீவர் சில படைப்பாற்றல் பெற்ற கருத்துக்களோடு முன் வரலாம். எத்தனை தரம் இயேசு தம் சீஷர்களுக்கு போதித்த பிறகு அவர்களை சிறிது நேர அவகாசத்திற்கு மலைகளுக்கு அழைத்துச் சென்றார். ஒன்றுக்கு மேல் பல சமயங்களில் இயேசு ஒரு சுறுசுறுப்பான சந்திப்பு செயல்பாட்டுக்கு பிறகு மலைகளுக்கு (ஜெபிக்கும் படியாக) போனார். ஆகவே நாமும் சற்று இளைப்பாறிக் கொள்ள படித்துக் கொள்ளவேண்டும்.

நீவிர் ஏற்கனவே திட்டமிட ஆரம்பிக்கும் பொழுது, எப்பக்கத்திலும் திரும்பி கவனிக்கும்பொழுதும், நீவிர் இளைப்பாற்றிக் கொள்வதற்காகக் கற்றுக்கொள்ளும் பொழுதும் நீவிர் நிரம்ப கோட்பாடுகளையோ, சிந்தனைகளையோ, எடுத்துக்காட்டுகளையோ, மேலும் குறிக்கோள்களையோ சேகரித்துக் கொள்வதற்கு என்று நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளாது. இவைகள் அனைத்தையும் எப்படி உம்மால் கண்டு கொள்ளமுடியும்? இவைகள் அனைத்தையும் ஒன்றுபட வைத்துக்கொண்டு ஒரு பிரசங்கமாகவோ அல்லது பாடத் தலைப்பாகவே உருவாக்கும் வரைக்கும் என்ன செய்யப் போகிறீர்? நீவிர் அவற்றில் சிலவற்றை சில நாட்கள் மட்டுமே ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். நீவிர் அநேகக் கருத்துக்களைப் பெற்றிருக்கும்போது அவற்றை உம்மால் ஞாபகப்படுத்த முடியுமா? ஆகவே அவற்றை பின்னொரு நாள் சந்திக்க நேரும்பொழுது அதே வண்ணம் பின்னொரு நாளுக்காக கண்டு பிடித்துக் கொள்ளும் படியாக எவ்வாறு அவற்றைப் பாதுகாப்பில் வைப்பீர்? அவ்வாறு செய்வதற்கென்று கீழே ஓர் கையாளும் எளிய முறையாக அவற்றை குறித்து வைத்துக் கொண்டு சேமிப்பில் வைத்துக்கொள்வதற்காகக் கொடுக்கப்படுகிறது.

## ஒரு பிரசங்கத்தையும், ஒரு பாடத்திட்ட அமைப்பையும் பயன்படுத்தியும்

இந்த விதமான நல்லதொரு செய்தித்தூது உருவாகுவதற்கு பல வாரங்களும் மாதங்களும் எடுத்துக் கொள்கிறபடியால் நீவிர் உருவாக்கும் அந்த விதமான எல்லா செய்திகளும் ஏதாவது ஒரு வழியில் வைத்துக்கொண்டு சரியான வகையான ஒழுங்கில் கொண்டுவர வழி ஒன்று தேவைப்படும். இதற்கென்று நான் ஒரு பிரசங்கத்தையோ அல்லது பாடத்திட்ட அமைப்பையோ பயன்படுத்துவேன். ஆனால் அதை எங்கும் நான் விலைக்கு வாங்கி விடவில்லை. அது எனக்கு என்று நானே உருவாக்கிக் கொண்ட வடிவமாகும். நான் பல வார காலங்களை எடுத்துக்கொண்டு வரிசையாக பிரசங்கம் செய்து விட்டு அடுத்த தலைப்புக்குப் போக முயல்வேன். ஆகவே நான் ஒரு இடத்தையும்

சேர்த்துக் கொண்டு அந்த செய்தி வரிசையின் பெயரில் எழுதினேன். உதாரணமாக ஒரு சமயம் கோடை காலத்தில் "யுத்தத்திற்கான நமது சர்வாயுதவர்க்கங்கள்" என்ற தலைப்பில் பிரசங்கித்தேன். ஆகவே அந்த படிவத்தில் அந்த வரிசையின் பெயர் 'யுத்தத்திற்கான நமது ஆயுதங்கள்' என்று போகும்.

ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் ஒரு தலைப்புக் கொடுக்கப்பட்டது. அதனால் பிரசங்கத்தில் எதைப்பற்றி பேசப்பட்டதென்று மக்கள் அறிந்து கொள்வார்கள். மேலும் அந்த படிவத்தில் இடத்தின் பெயரையும் இணைத்துக் கொண்டேன். அந்த பிரசங்கத்தின் முக்கியமான பகுதியும் அந்த பாட அமைப்புத் திட்டமும் அதன் நோக்கத்தை அறிவிக்கும்படியாக செய்தேன். தாங்கள் ஒரு பிரசங்கத்தையோ அல்லது பாடத்தலைப்பையோ ஆயத்தம் செய்ய தொடங்கும் பொழுது அதற்கான காரணத்தையும் பற்றி விளக்கவுரை தரவும். அதைப்பற்றி ஏன் பிரசங்கிக்கப் போகிறீர்? நீவிர் அதைப் போதித்ததின் பலாபலனாக என்ன நேரிட விரும்புகிறீர். அதைக் கேட்டுக் கவனிப்பவர்களுக்காக அது எதைச் சாதிக்கவேண்டும் என்று விரும்புகிறீர்?

**ஒரு பிரசங்கம் அல்லது பாடத்தலைப்புக்கு என்று மூன்று விதமான விரிந்த நோக்கங்கள் உண்டு:**

1. விஷயத்தை அறிவிக்க,
2. அவர்களை நயந்து நம்பும்படி செய்ய,
3. தூண்டப்பட்டு செயல்பட.

ஒவ்வொரு செய்தி தூதும் இந்த மூன்று வகையான வரிசைக்குள் ஏதோ ஒன்றின் கீழ் அமையும். சில பிரசங்கங்கள் அல்லது பாடத் தலைப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட வரிசையின் கீழ்வரும். ஆனால் ஒவ்வொன்றும் குறைந்தது ஒன்றையாவது உள்ளடக்கும். உமது பிரசங்கத்தின் விஷய நோக்கமானது சொல்லப்படுகிற ஏதோ விதத்தில் வாசிக்கப்படலாம். "என்னுடைய கூடிவரும் சபையில் ஒவ்வொரு நபரையும் குறைந்த இரண்டு பேருக்காவது அடுத்த வாரத்தில் சாட்சியாக தூண்டப்பட்டு செயல்பட விரும்புகிறேன்'' என்பது ஆகும்.

ஒரு குறிப்பிட்டுச் சொல்லப்படுகிற நோக்கமின்றி செய்தித்தூது ஒன்றைப் பிரசங்கிப்பதோ அல்லது பாடத் தலைப்பைப் போதிப்பதோ ஒரு இலக்குமில்லால் ஒரு துப்பாக்கிக் கொண்டு சுடுவதைப் போலாகும். அது மிகுந்த சத்தத்தை உண்டுபண்ணுவதுடன் கவனத்தையும் ஈர்த்து பெறும். ஆனால் வேட்டைப் பொருளைப் பிடிக்கமுடியாது. அதே மாதிரி வேதாகமப் பிரசங்கங்கள் நோக்கத்தையே காட்டுகின்றன. மேலும் அதன் புத்தகங்களும் நிருபங்களும் அவ்வண்ணமே செய்கின்றன. (யோவான் 20:30-31, I தெச 4:13-18, I தெச 4:1)படிக்கவும்.

ஒரு பிரசங்கத்தின் முக்கியமான பகுதியும், பாட ஆயத்தத் திட்டமும் ஒரு குறிப்பிட்டுச் சொல்லப்படுகிற நோக்கமானால் பிரசங்கத்தினுடையதும் பாடத்திட்ட அமைப்பினுடையதுமான சிறந்த பகுதிகள் அதன் முகவுரையும் முடிவுரையும் ஆகும். ஜனங்களின் கவனத்தைப் பெற்று செய்தியைக் கேட்கக் கூடிய மனப்போக்கை உண்டாக்கி, அவர்களை இன்னும் அதிகமாகக் கேட்க வேண்டும் என்று ஆசைப் படும்படி வைக்கக் கூடிய ஒரு முகவுரையை தோற்றுவித்து உம்முடைய நோக்கத்தைத் தொகுத்துக் கொண்டு ஒரு நடவடிக்கை அடி எடுத்து வைக்கும் படி செய்கிறதும் உம்முடைய சிந்தனைகளை ஒரு கூடரான முனைக்கு கொண்டு வரக்கூடியதாக்குக. உம்முடைய செய்தித் தூதை அறிமுகப்படுத்துவதற்கு முடிவுரை கூறுவதற்கும் பிரசங்க பாடத் திட்ட அமைப்பில் தரக்கூடிய பல வழிகளையும் குறிப்பிடுக. மீதியாகவுள்ள பக்கங்களில் உம்முடைய சிந்தனையில் பிறக்கும் சிறந்த சிந்தனைகளை உம்முடைய பிரசங்கத்தில் அல்லது பாடத் தலைப்போடு சேர்க்க விரும்புகிறவற்றை எழுதி வைக்கலாம். இந்த சமயத்தில் எந்தக் குறிப்பிட்ட வரிசையையும் பற்றிக் கவலைப்படக்கூடாது. மனதில் எழுகின்ற எந்தவொரு குறிப்பையும் எழுதி வைக்கவும். உம்முடைய பிரசங்கத்தில் பின்னர் பயன்படுத்தக் கூடியவற்றை தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். உம்முடைய குறிப்பிட்டுச் சொல்லும் நோக்கத்தை மனதில் கொள்ளவும். அந்த பிரசங்கமும் பாடத் தலைப்பு திட்ட அமைப்பும் உம்முடைய பூரணமாக்கப்பட்ட செய்தி அல்ல.

## வேலை செய்யும்படி போகவும்

இப்பொழுது பிரசங்கத் திட்டத்தின் அமைப்பை உண்டாக்குக. ஒரு காகிதத்தை எடுத்து இந்த திருஷ்டாந்தத்தில் சொல்லப்பட்டது போல பிரசங்க திட்ட அமைப்பை உண்டாக்கிக் கொள்க.

பிறகு முன்னால் சேகரித்து வைத்த கோட்பாடுகளை எடுத்து ஒரு பிரசங்கம் அல்லது பாடத் தலைப்பை ஆரம்பிக்கவும். பின்வருபவற்றைப் பற்றி நிச்சயப்படுத்திக் கொள்க.

1. உமது செய்தித்தூதுவின் நோக்கத்தை வரையறுத்து விளக்கஞ் செய்க. ''நான் இந்தச் செய்தி தூதை பிரசங்கிக்க விரும்புகிறேன் ஏனென்றால்'' என்று ஆரம்பிக்கவும்
2. கருத்துக்களை அட்டவணைப்படுத்துக. வேதாகமப் பகுதிகளை திருஷ்டாந்தங்களையும் அதற்குப் பொருந்தக் கூடியவற்றை வரிசையாக எழுதுக.
3. முடிவுரையைத் திட்டமிடுக. இந்த பிரசங்கத்தை எப்படி முடிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இதன் முடிவுரை ஒரு செயல் பாட்டு நடவடிக்கையாக இருத்தல் அவசியம். உம்மை கவனித்துக் கேட்டவர்களை ஏதாவது கிரியை செய்யும்படி தூண்டுக. அவர்களை நீவிர் பேசுவதை மட்டும் கவனிக்க விடாதீர். தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

## அதிகாரம் 3 - படிப்பதற்கென்று நேரத்தையும் இடத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவும்

உன்னையே முட்டாள் ஆக்கிக் கொள்ளாதே. நீவிர் பிரசங்கிக்கும் உன் ஜனங்கள் நீவிர் எப்பொழுது ஆயத்தம் செய்ய நேரம் எடுத்துக் கொண்டீர் என்பதையும் எப்பொழுது நேரம் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் சொல்லி விடுவார்கள். அங்கே அநேகமான அவசரத் தேவைகள் இருக்கலாம். ஆனால் படிப்பு என்பது கூட முக்கியமானது. வாரத்தில் ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட நேரத்தை பிரசங்கமும் பாடத் தலைப்புகளையும் ஆயத்தம் படுத்துவதற்காக கால அட்டவணையில் ஒதுக்கி வைத்துக் கொள்ளவும். ''பிரசங்கங்களும், பாடத் தலைப்புகளும்'' என்று நான் சொன்னதைக் கவனிக்கவும். அந்த வாரத்தில் கொடுக்கும் செய்தியை மட்டும் அல்ல. நீவிர் அந்த குறிப்பிட்ட வாரத்தில் தரக்கூடிய பிரசங்கங்களையும் பாடத் தலைப்புகளையும் பற்றியவைகளைக் குறித்து ஆயத்த வேலை செய்து கொள்ளவும். மேலும் வருங்காலத்தில் செய்திகளைக் குறித்து ஆயத்தமும் அதன் கூட குறிப்புகளும் வேதாகமப் பகுதிகளையும் திருஷ்டாந்தகளையும் கூடுதலாகச் சேர்த்து அதன் உருவத்தை பட்டை தீட்டி உருவாக்குக.

உம்முடைய குடும்பத்தாரும் கூடிவரும் சபையினரும் எப்பொழுது, எங்கே நீவிர் படித்துக் கொண்டு இருப்பீரென்பதைத் தெரிந்து கொள்ளட்டும். அந்த நேரத்தில் உம்மை தனித்து விட்டு விடும்படி அவர்களை உற்சாகப்படுத்துதல் வேண்டும். உமக்கென்று நல்லதோர் நேரத்தைத் தெரிந்து கொள்ளும்வரை நீவிர் விட்டுக் கொடுக்க வேண்டியதிருக்கும். ஆனால் ஒரு நேரத்தைக் குறிப்பிடவும். அதை அமல்படுத்தவும் அஞ்சவேண்டாம். ஆனால் பிரசங்க ஆயத்த நேரத்தை ''உண்மையான ஊழியமாகக்'' கருதப் படாத ஓர் போக்குக் காணப்படுகிறது. ஆனாலும் அது மிகவும் முக்கியமானது தான்.

இப்படி நேரத்தை ஒதுக்குவது முக்கியமென்றால் ஓர் இடத்தை ஒதுக்கி வைத்துக் கொள்ளுவதும் முக்கியமானதாகும். இந்த இடம் உமது இல்லத்திலோ அல்லது ஆலயத்திலோ படிப்பு அறையாக இருக்கலாம் அல்லது ஓர் அறையிலுள்ள மூலைப் பகுதியாக இருக்கலாம். ஆனால் அது தனிப்பட்டதாகவும் அமைதலாகவும் இருக்கவேண்டும். அந்த இடமானது மற்றவர்களுடைய வேலை செய்யும் இடத்தை விட்டுத் தனிப்பட்ட இடமாக இருக்கவேண்டும். அது சௌகரியமான இடமாக இருத்தல் அவசியம்.

உம்முடைய ஆவியை பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ளும்படி தயாராக வைத்து இருக்கவும். சற்று அதிகமான நேரத்தை ஜெபத்திலும் ஆராதனையிலும் செலவழிக்கவும். அதுவும் பரிசுத்த ஆவியானவர் தாம் உம்முடைய செய்தி தூதில் எதை மாத்திரம் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை செய்வதற்கு உதவி செய்வார். வேதாகமம் ஆனது தேவன் நமக்கு தந்த வெளிப்படுத்துதல் ஆகும். அது வெறும் சரித்திர புத்தகம் அல்ல. அது தேவன் மனிதனுடன் கொண்டுள்ள ஈடுபாட்டைப் பற்றிய குறிப்புரையும் மேலும் தேவன் எப்படி தம்மை நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார் என்பதையும் சொல்வதாகும். அது மனிதன் தேவனைத் தேடிக் கண்டுபிடிக்கும் அடங்கிய குறிப்பு புத்தகமும் அல்ல. தேவன் என்றுமே ஒரு பொழுதும் காணமல் போகவில்லை. மனிதன் தான் இடிக்கப்பட்டு

போனவன். தேவன் மனிதனை எப்படித் தேடிக் கண்டு பிடித்தார் என்பதை வேதாகமம் கூறுகிறது. இந்த அனுபவத்தின் பரீட்சையே அதன் வேதாகமத்தின் அஸ்திபாரம் ஆகும். அநேகமான சமயங்களில் வேதாகமத்தை நமது அனுபவங்களால் நிருபிக்க முயலுகிறோம். அதற்கு பதிலாக நமது அனுபவங்களை வேதாகமத்தின் அடிப்படையில் நிருபித்தல் வேண்டும். தாங்கள் மரணம் அடைந்து பின்னர், மிகுந்த பிரகாசமும் (இனிய) நேர்த்தியான சங்கீதமும் நிறைந்ததோர் இடத்திற்குச் சென்று வந்ததாகச் சொல்லும் மக்களைப் பற்றி நான் படித்திருக்கிறேன். சில கிறிஸ்தவர்கள் தங்களது அனுபவங்களைக் கொண்டு அல்லாமல் இரட்சிக்கப்படாத மக்கள் அவர்களது மரணத்திற்குப் பிறகு ஒரு நல்ல இடத்திற்குப் போவதாக விவிலியம் சொல்லுவதில்லை. நமது பிரசங்கங்களையும் பாடத் தலைப்புகளையும் விளக்குவதற்கு அனுபவத்திலிருந்து திருஷ்டாந்தங்களை எடுத்து விளக்கிச் சொல்லவேண்டும். ஆனால் அந்த அனுபவங்கள் வேதாகமச் சத்தியங்களால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## இந்த மாதிரியான வழிகளில் வேதாகமத்தைப் படிக்கவும்

வேதாகமத்தை முழுவதுமாக வாசிக்கவும். முழு வேதாகமத்தையும் படித்து அதை மேலோட்டமாகப் பார்த்துக் கொள்ளவும். ஒரு புத்தகம் எப்படி மற்ற புத்தகத்தோடு தொடர்புடையது என்பதைக் கண்டறிந்து கொள்ளவும். ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கவும். அந்த புத்தகம் எழுதப்பட்டப்பொழுது அது எந்த வெளிப்புற அமைப்பில் அமைந்தது என்பதைக் கவனிக்கவும். அந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் அந்த இடத்து சரித்திரத்தில் என்ன சம்பவித்தது? அந்தப் புத்தகம் ஏன் எமுதப்பட்டது? இவைகள் அனைத்து விசேஷித்த உண்மையாக புதிய ஏற்பாட்டு பிரசங்கங்களைப் படிக்கும்பொழுது வெளிப்படும்.

வேதாகமத்தை நீர் படிக்கும்பொழுது அது உம்மைத் தூண்டி விழிப்படையச் செய்யட்டும். அதன் செய்தித் தூதுகளால் சவால்களைப் பெற்று உயர்த்தப் படவேண்டும். அதைப் பிடித்து உன் ஜீவியத்தில் அதை ஐக்கியப் படுத்திக் கொள்ளவும். உனது சபைக்கு மாத்திரம் அல்ல. ஊழியர் தாமே வேதாகமத்தை மற்றவர்களுக்காகப் படிக்கக் கூடும். ஆனால் அவர் வசிக்கும் இடத்தில் அந்த வேதாகமம் எப்பொழுதுமே தொடக்கூடாது. ஆனால் அவர் தமது செய்தித் தூதுகளால் சபையினரைத் தொடுவதில் கருத்தாய் இருக்க வேண்டும். மேலும் அது அவரைத் தொடும்படி அனுமதிக்க வேண்டும். வேறுபட்ட பாடத் தலைப்புகளில் படிக்கவும். உதாரணமாக ‘துதித்தல்’ என்பது வேதாகமம் முழுவதிலுமே படிக்கக்கூடிய தூண்டி எழுப்பும் தலைப்புப் பொருளாகும்.

## படிக்கவேண்டிய (ஆலோசனை) வார்த்தைகள்

வேதாகமத்தை கவனத்துடன் படி. விவரங்களுக்கும், பெயர்கள், அர்த்த விளக்கங்கள், இடங்கள் இவற்றிற்கு விசேஷித்த கவனம் அளிக்கவும். யாரோ ஒருவர் பேசுவது போல அழுத்தத்தோடு வாசிக்கக் கற்றுக் கொள்ளவும். ஜெபத்துடன் அதைப் படிக்கவும். தேவன் தாமே உன்னுடன் பேசும்படி கேட்பாயாக. அதை ஒழுங்காகப் படி. அதை ஒரு வரிசை முறைப்படி படிக்கவும்.

# அதிகாரம் 4 - உங்களுடைய பிரசங்கத்தை அல்லது பாடங்களை ஆயத்தம் செய்யும்போது.

## அவர்களுடைய கவனத்தைப் பெற்று வைத்துக் கொள்ளவும்

இரண்டு மனிதர்கள் மூடு பனியில் மீன் பிடித்தார்கள். அவர்கள் மூடு பனிக் கட்டிகளின் மேல் ஒரு மணிக்கு அதிகமாக நின்றிருந்தும் ஒன்றும் பிடிக்கவில்லை. ஆனாலும் அவர்களுக்கு சில அடிகள் தூரம் இருந்த மனிதன் ஒன்றுக்கு பிறகு ஒவ்வொரு மீனாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்தார்கள். அந்த இரண்டு மனிதர்களும் மீன் பிடித்துக் கொண்டிருந்த மனிதனிடம் இரகசியத்தை கேட்கும்படி தீர்மானித்தார்கள். அவனிடம் அருகில் நடந்து போய். ஆனாலும் நீ சில மீன்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய் என்பதைப் பார்ப்பதை நாங்கள் தவிர்க்க முடியவில்லை. நீ உன்னுடைய இரகசியத்தைச் சொல்ல முடியுமா? நாங்கள் ஒன்றையும் பிடிக்க முடியவில்லை என்றார்கள். பதில் சொன்னான். அந்த இருவரும் அவனைப் பார்த்து, “எங்களை மன்னித்து விடு. எங்களால் அவனைப்

பார்த்து, புரிந்து கொள்ள முடியவில்லை. நீ என்ன சொன்னாய்'' என்றார்கள். அந்த சமயத்தில் அந்த மனிதன் தன் வாயிலிருந்த ஏதோ ஒன்றை உமிழ்ந்து விட்டு பிறகு சொன்னதாவது, ''நீங்கள் அந்த புழுக்களை சூடாக அனலுண்டாக்கி வெதுவெதுப்பாக வைத்திருக்க வேண்டும்'' என்றான். ஒரு கூட்டத்து மக்களுடைய கவனத்தையும், மரியாதையையும் வாரா வாரமாக பிடியில் வைத்திருப்பது எளிதான காரியமல்ல. மேலும் நீவிர் என்னத்தை பற்றி பிரசங்கம் செய்கிறீர் அல்லது எப்படி பிரசங்கிக்கிறீர் என்பது பற்றி கவலையீனமாக இருக்கவும் முடியாது. ஆகவே மறுபடியும் ''புழுக்களை சூடுண்டாக்கி வெதுவெதுப்பாக வைத்திருக்க வேண்டும்''. உம்முடைய பிரசங்கம்/பாடத் தலைப்பு அமைப்புத் திட்டத்தில் நீவிர் அதன் முகவுரை, அதன் முழுப் பகுதியான சரீரம், உம்முடைய செய்தித்தூதின் முடிவுரை ஆகியவற்றை உண்டாக்கினீர். இப்பொழுது அவற்றை ஒருங்கிணைத்து அதன் முற்றுப் பெற்ற வடிவமாக உருவாக்கவேண்டும். நான் உமக்கு உமது பிரசங்கத்தின் மேலும் பாடத் தலைப்பின் புற குறிப்புப் பகுதிகளை வைத்திருக்கும்படி சிபாரிசு செய்வேன். அவைகள் கலைஞனின் திறமையான கிரியைகள் நீவிர் அவைகளில் மிகவும் அதிகமான காலத்தையும் முயற்சியையும் முதலீடு செய்திருக்கிறீர். என்னுடைய நம்பிக்கையில் ஒரு செய்தித் தூதானது இரண்டு அல்லது மூன்று தரம் பிரசங்கிக்கப்படாவிட்டால் அது சிறந்ததாக இருக்க முடியாது.

அடிக்கடி நீவிர் கடந்த காலத்தில் பிரசங்கித்த பிரசங்கத்தின் சில குறிப்புகளை நினைவு படுத்தலாம். ஆகவே அவைகளை சேகரித்து சேமித்து வைக்க ஒரு எளிதான வழி உமக்குத் தேவைப்படுகிறது. நான் ஒரு புறக்குறிப்புத் திட்டத்தைப் பிரசங்கிப்பதற்குப் பயன்படுத்துகிறேன். ஆனால் நான் ஒரு ஒழுங்குப்படுத்தப்பட்ட திட்ட அமைப்பை பின்பற்றுவதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. நீவிர் அந்தப் பிரசங்கக் குறிப்புகளை வரிசைப் படுத்த எண்களை உபயோகிக்கலாம் அல்லது எழுத்து முறையைப் பின்பற்றலாம். நீவிர் உமக்கு உதவக் கூடிய ஒரு வடிவ அமைப்பைக் கண்டு பிடித்துக் கொண்டு வேலை செய்யவும் அது உமது நோக்கத்திற்கென்று உதவும்.

<u>உமது செய்தித் தூதின் முகவுரையில்</u> தூண்டிலை போடும் சில நிமிட நேரம் சற்று நின்று உமது சபையின் கவனத்தைப் பிடித்து இழுத்துக் கொள்ளவும். தேவன் ஒரு தடவை எரிகிற முட்செடியைக் கொண்டு மோசேயின் கவனத்தைக் கவர்ந்தார். முகவுரையில் அந்தப் பிரசங்கத்தில் மக்களுக்கு என்ன சொல்லப் போகிறீர் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தவும்.

<u>அந்த பிரசங்கத்தின் சரீரமாகிய பகுதியில்</u> அவர்களுக்குச் சொல்லுங்கள். உங்களது செய்தித் தூதை குறிப்புக் குறிப்பாக உங்களது நோக்கத்தைப் பார்த்துக் கட்டி எழுப்புங்கள். உங்களது சிறப்பான குறிப்புகளுடன் மேற்கொண்டு சொல்வீராக. ஒவ்வொரு குறிப்பும் அடுத்தடுத்த குறிப்புகளுக்குக் கடந்து செல்வதாக அல்லது ஒவ்வொரு குறிப்பும் வற்புறுத்திச் சொல்லப்படும் முக்கியமான குறிப்புக்கு ஆதரவு தந்து உதவுவதாக. திருஷ்டாந்தங்கள் சத்தியத்திற்கு பலகணிகள் ஆகும். உமது செய்தியை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும் பொழுது அவைகள் ஒளியை உள்ளே வர விடுகின்றன. அப்பொழுது பல உவமைகளையும் திருஷ்டாந்தங்களையும் தொகுத்துக் கொள்ள உமக்கு சமயம் கிடைத்தது. அவைகளைப் பயன்படுத்துக.

உம்மை அளவு படுத்திக் கொள்க. உமது செய்தித் தலைப்பில் இருந்து உமது பிரசங்கத்தை அங்குமிங்கும் அலைய விடாமல் ஜாக்கிரதையாக இருப்பீராக. நீவிர் எடுத்துப் பேசும் தலைப்பை விட்டு விட்டு ஏதோ ஒன்றைப் பற்றி பேசும்படியாக இழுத்துக் கொண்டு போகப்படுவது சுலபமாகும். ஆகவே உமது நேரத்தையும், பேசும் தலைப்பையும் நீவிர் சொல்லவிருக்கும் தலைப்பையும் குறிப்பிட்டதோர் அளவிற்கு வைத்துக் கொள்வது நல்லது.

<u>முடிவுரையில்</u> ஜனங்களுக்கு நீவிர் ஏற்கனவே பேசியதைத் திரும்பச் சொல்லவும். உம்முடைய குறிப்புகளை சராம்சமாகக் கொண்டு வந்து உம்முடைய சிந்தனைகளை ஒரு காரண காரியமான முடிவுக்குக் கொண்டு வரவும். பேசப்படும் செய்தியோடு சம்பந்தமில்லாத முடிவுரைகளையுடைய எண்ணிக்கை பலவான செய்திகளைக் கேட்கும்படி அமர்ந்திருந்தேன். நாம் அடிக்கடி பிரசங்க பீடத்திலிருந்து கிறிஸ்துவுடைய இரண்டாவது வருகையைப் பற்றி நமது செய்தியில் யாதொன்றையும் குறிப்பிடாமல் இருந்துங்கூட அவ்வாறு ஒரு அழைப்பைத் தருவதற்கு பல முறை முயற்சிக்கிறோம். ஒரே சீராக செயல்படுங்கள். ஒரு செயல்பாட்டு நடவடிக்கையை எடுத்துக் கொண்டு மக்களைத் தாங்கள் கவனித்துக் கேட்பதை விட அதிகமாகக் கிரியை செய்யும்படி தூண்டி விடுங்கள். ஆகவே சபையினரை முன்னாக வரும்படி அழைத்து கர்த்தருக்கென்று ஓர் ஒப்புக் கொடுத்தலைச் செய்யும்

படியாகவோ அல்லது அந்த சமயத்திலே ஏதாவது செய்யும்படி கூறுங்கள். ஒரு வல்லமையான கிரியையான நடவடிக்கை பிரசங்கத்திற்கும் பாடத்தலைப்புக்கும் இடையே வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

## முடிவுரை

ஆகையால் பெற்றுக் கொள்வீர்களாக. ஓர் சாதாரணமான உபயோகிப்பதற்கு எளிதான முறையை பிரசங்கங்களுக்கும் பாடத் தலைப்புகளுக்குமாக பயன் படுத்துங்கள். நீண்ட காலத் திட்டம் போடுதல், ஒழுங்கில் அமைந்த ஆவிக்குரிய வகுப்புப் பாடங்கள் மிகவும் கவனத்துடன் செய்யும் கிரியைகள் ஆனவை செயலூக்கமான பிரசங்கித்தலுக்கும், போதனைக்கும் கூடுதலாகப் பயன் அளிக்கிறது. நீவிர் ஓய்வு நாள் காலை நேரத்தை நம்பிக்கையுடன் அணுகலாம். மேலும் நீங்கள் தத்துவமான சத்தியங்களை நடைமுறையான வழிகளில் சம்பந்தப்படுத்திக் கொள்ள ஏதுவாக்க கண்டு கொள்ளுவீர்கள். உமது ஜனங்கள் தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தை சிறப்பாகக் கிரியை செய்யும்படியாகச் செயல் படுவார்கள்.

நீவிர் உமது சிந்தனைகளை, ஒழுங்காக இணைக்கவும், பிரசங்கங்களையும் பாடத் தலைப்புகளைக் கட்டி எழுப்பவும் பூரணமாக எழுதப்பட்ட புறக் குறிப்புகளைச் சேமிக்கவும் செய்வதற்கு சுலபமான உபயோக முறைகளைக் கற்றுக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது இவைகளை நடைமுறை பழக்கத்தில் செயல்படுத்த வேண்டும். இந்தக் கட்டுரைப் படிப்பின் சமயத்திலே நீவிர் ஒரு பிரசங்கத்தையோ அல்லது பாடத் தலைப்பையோ ஆயத்தம் செய்யும்படி ஈடுபட்டிருப்பீர்களானால் நீவிர் ஒரு மகத்தான ஆரம்பத்திற்கே வந்து விட்டவர்களாக ஆவீர்கள்.

# நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் கற்றுக்கொடுக்கும் பாடங்கள்

## போதிப்பதில் நம்முடைய ஆண்டவரின் தனிப்பட்ட மாதிரி

போதகர் சீஷத்துவ பொறுப்புகளுக்கு மற்றொருவரை ஏன் நியமிக்கக்கூடாது என்பதற்காக மற்றொரு காரணம் இதுவாகும். அவர் தன்னுடைய சொந்த வாழ்க்கையின் தரத்தையும், வளர்ச்சியளவையும் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து, பவுல் இதை செய்தார்கள். அதன் பிறகு அவர்கள் தங்களுடைய சீஷர்கள், சீஷத்துவத்தை மற்றவர்களிடம் செய்ய எதிர்பார்த்தார்கள். அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட பெரிய கட்டளை, நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். ''நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.'' (மத்தேயு 28: 20)

பவுலும் இதே காரியத்தை தீமோத்தேயுவிடம் சொல்லுகிறான்: ''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி'' (2 தீமோ. 2:2).

## அவர்களுடைய போதனை

அவர்களுடைய சீஷர்களோடு உள்ள நடக்கையிலும், வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்துவும், பவுலம் கற்பனை பாடத்தின் மூலம் ஒவ்வொரு சிக்கல்களையும் தொட்டார்கள். தங்களுடைய வாழ்க்கையின் மாதிரியின் மூலமாக, உதாரணங்கள் மற்றும் உவமைகள் மூலமாக வேத வசனத்திலிருந்து அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் கடந்துபோன கதாபாத்திரங்கள் குறிப்பிடுவதின் மூலமாக, போதனை மூலமாக, கண்ணோடு கண் கொண்டிருக்கும் வார்த்தைகள் மூலமாக, சம்பாஷணைகள் மூலமாக, கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு பாடத்தையும், ஒன்றையும் விடாமல் போதித்தார்கள். தலைமை போதகர் தன்னுடைய உடன் ஊழியர்கள் மற்றும் சீஷர்களிடம் நேரம் செலவழிக்காத பட்சத்தில் தன்னுடைய சிந்தனை, திட்டங்கள், கனவுகளை ஒருபோதும் பகிர்ந்துக் கொள்ள முடியாது.

இயேசுவும், பவுலும் தங்களுடைய சீஷர்களுடன் பகிர்ந்துக் கொண்ட பலதரப்பட்ட காரியங்களை இப்போது பார்ப்போமாக. ஒவ்வொரு நாள் வாழ்க்கையின் காரியங்கள், உபதேசங்கள், மிகுந்த பரந்த பகுதிகளைக் கொண்ட தலைப்புகள் மேலோட்ட பார்வையாக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. அவைகள் பின்வருவன:

| <u>பாடங்கள்</u> | <u>இயேசு</u> | <u>பவுல்</u> |
|---|---|---|
| 1. ஞானத்தை குறித்து | மத் 7:24 | 2 தீமோ.3:15 |
| 2. மொடக்குடியிலிருந்து விலகுதல் | லூக்.1:15 | ரோமர் 14:21 |
| 3. கணக்கொப்புவித்தல் | மத்.12:36 | ரோமர் 14:12 |
| 4. பின்மாறுதல் | யோவான் 6:66 | II தீமோ 4:10 |
| 5. ஞானஸ்நானம் | மாற்கு 16:16 | அப் 22:16 |
| 6. உதவியாய் இருத்தல் | லூக்கா 10:34 | I கொரி 16:15 |
| 7. உபதேசிக்கக் கூடியவர்களாயிருத்தல் | லூக்கா 11:1 | அப் 9:6 |
| 8. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தூஷணம் செய்தல் | மாற்கு 3:29 | எபே 4:30 |
| 9. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் | மத் 26:28 | ரோமர் 5:9 |
| 10. சகோதர அன்பு | மத் 22:39 | 1 தெச 3:12 |

| | | |
|---|---|---|
| 11. தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்பட்ட | யோவான் 1:29 | 1 கொரி 5:7 |
| 12. அறம் மிகுந்த தன்மை | மத் 7:3 | கலா 6:1 |
| 13. தூய, கற்புள்ள | யோவான் 15:2 | 1 கொரி 11:32 |
| 14. உயர் குல பெற்றோரின் பிள்ளைகள் | மாற்கு 7:10 | எபேசி 6:1-3 |
| 15. கிறிஸ்துவே இரட்சகர் | லூக்கா 19:10 | 1 தீமோ 1:15 |
| 16. கிறிஸ்து நியாயாதிபதி | யோவான் 5:22 | 2 தீமோத் 4:1 |
| 17. உலகத்தின் ஒளி கிறிஸ்து | யோவான் 8:12 | 2 கொரி 4:6 |
| 18. கிறிஸ்துவின் அன்பு | யோவான் 15:9 | 2 கொரி 5:14 |
| 19. கிறிஸ்துவின் வல்லமை | யோவான் 10:18 | ரோமர் 1:4 |
| 20. குடிமக்களின் கடமைகள் | மத் 22:21 | ரோமர் 13:1 |
| 21. கட்டுப்படுத்த இயலாதவற்றைக் குறித்த கரிசனை | மத் 23:37 | பிலிப் 3:18 |
| 22. சாப்பிடுதலைக் குறித்த காரியங்கள் | லூக்கா 10:8 | 1 கொரி 10:25 |
| 23. கிறிஸ்துவின் அறிக்கை | லூக்கா 12:8 | பிலிப் 2:11 |
| 24. புனிதப்படுத்துதல் | யோவான் 15:13 | 2 கொரி 8:9 |
| 25. பரிசுத்தவான்களோடு மன நிறைவாயிருத்தல் | லூக்கா 4:6 | எபேசி 6:12 |
| 26. மனநிறைவு | லூக்கா 3:14 | பிலிப் 4:11 |
| 27. தைரியம் | யோவான் 19:11 | பிலிப் 1:28 |
| 28. இச்சித்தல் கண்டிக்கப்படுதல் | லூக்கா 12:15 | எபேசி 5:3 |
| 29. சுயநம்பிக்கையின் ஆபத்து | மத் 26:33 | 1 கொரி 10:12 |
| 30. தாமதம் | லூக்கா 13:25 | எபி 12:17 |
| 31. கிறிஸ்துவை மறுதலித்தல் | மத் 10:33 | 2 தீமோ 2:12 |
| 32. அவரை சார்ந்திருத்தல் | யோவான் 15:5 | 1 கொரி 3:5 |
| 33. பிரிவினைகள் | லூக்கா 11:17 | 1 கொரி 3:3 |
| 34. விவாகரத்து | மாற்கு 10:9 | 1 கொரி 7:10-11 |
| 35. மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இராதே | யோவான் 12:43 | கொலோ. 3:22 |
| 36. ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காதே | மாற்கு 10:24 | 1 தீமோத் 6:17 |
| 37. இருமனமுள்ள நிலைமை | லூக்கா 16:13 | 1 கொரி 10:21 |
| 38. கணவனின் கடமை | மாற்கு 10:7 | எபேசி 5:25 |
| 39. மனைவியின் கடமை | I கொரி 7:10 | எபேசி 5:22 |
| 40. சத்துருவின் கடமை | மத் 5:44 | ரோமர் 12:20 |
| 41. அயல்வீட்டுக்காரருக்கு செய்யவேண்டிய கடமை | மாற்கு 12:31 | ரோமர் 13:10 |
| 42. எதிர்ப்பவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை | லூக்கா 4:8 | எபேசி 4:27 |
| 43. தேவனைத் தேட செய்ய வேண்டிய கடமை | லூக்கா 11:10 | அப் 17:27 |
| 44. பெலவீனருக்கு செய்ய வேண்டிய கடமை | மத் 25:35-36 | ரோமர் 15:1 |
| 45. உற்சாகமூட்டுதல் | மத் 14:27 | அப் 27:22 |
| 46. கஷ்டத்தை அனுபவித்தல் | மத் 10:22 | எபி 12:7 |

| | | |
|---|---|---|
| 47. மனிதர்களின் சமத்துவம் | மத் 23:8 | ரோமர் 10:12 |
| 48. தீமையைப் பேசுதல் | மத் 12:34 | எபேசி 4:31 |
| 49. தீய எண்ணங்கள் | மத் 15:19 | தீத்து 1:15 |
| 50. கீழ்ப்படிதலின் உதாரணங்கள் | மத் 15:10 | ரோமர் 5:19 |
| 51. உபவாசத்தின் உதாரணங்கள் | லூக்கா 4:1,2 | அப் 9:9 |
| 52. அச்சுறுத்திக் கைப்பற்றுதல் | மத் 23:25 | கொலோ 4:1 |
| 53. விசுவாசம் | மத் 17:20 | எபேசி 6:16 |
| 54. பொய்யான மதங்கள் | மாற்கு 7:6 | தீத்து 1:16 |
| 55. உபவாசமும், ஜெபமும் | மத் 17:21 | 1 கொரி 7:5 |
| 56. மனிதனுக்குப் பயப்படும் பயம் | யோவான் 12:42 | கலா 2:12 |
| 57. முகஸ்துதி | லூக்கா 20:21 | I தெச 2:5 |
| 58. முறைமையியல் | மத் 23:33 | கலா 4:10 |
| 59. கனிநிறைவு | யோவான் 15:16 | பிலிப் 1:11 |
| 60. முழுமையான வெளிப்படுத்துதல் | யோவான் 16:13 | 1 கொரி 13:12 |
| 61. துன்மார்க்கரின் எதிர்காலம் | மத் 8:12 | 2 தெச 1:9 |
| 62. உதாரத்துவமாய் கொடுத்தல் | லூக்கா 6:38 | 2 கொரி 9:7 |
| 63. ஒருவருடைய வாழ்க்கையைக் கொடுத்தல் | மத் 16:25 | அப் 20:35 |
| 64. தேவன் காணக்கூடாதவர் | யோவான் 5:37 | கொலோ 1:15 |
| 65. தேவன் பலவீனரை உபயோகிக்கிறார் | யோவான் 6:9 | 1 கொரி 1:27 |
| 66. தேவனுடைய கோபாக்கினை | யோவான் 3:36 | ரோமர் 1:18 |
| 67. நன்மைக்குப் பதில் தீமை | மத் 5:44 | ரோமர் 12:20-21 |
| 68. நல்ல விளைவை உண்டாக்குதல் | மாற்கு 9:50 | 1 கொரி 7:16 |
| 69. தேவனுடைய நன்மை | மத் 19:17 | ரோமர் 2:4 |
| 70. நன்றியுணர்வு | லூக்கா 19:37 | கொலோ 1:12 |
| 71. சேவை செய்வதில் அரைமனது | மத் 25:27 | கலா 6:9 |
| 72. பரபரப்பு | மத் 28:27 | எபேசி 5:16 |
| 73. மனிதனின் உதவியற்ற தன்மை | யோவான் 6:44 | ரோமர் 7:18 |
| 74. பரிசுத்த ஆவியானவர் | யோவான் 14:17 | 1 கொரி 6:16 |
| 75. பரிசுத்த ஆவியானவர் தலைவராக | யோவான் 16:13 | ரோமர் 8:14 |
| 76. பரிசுத்த ஆவியானவர் போதகராக | யோவான் 14:26 | 1 கொரி 2:13 |
| 77. பரிசுத்த ஆவியானவர் வாழ்க்கை கொடுக்கிறவர் | யோவான் 6:63 | 2 கொரி 3:6 |
| 78. நேர்மை | லூக்கா 3:13 | 1 கொரி 5:10 |
| 79. மனித இரக்கம் | லூக்கா 10:33-34 | அப் 16:33 |
| 80. தாழ்மை | லூக்கா 14:10 | ரோமர் 12:3 |
| 81. ஒழுங்கீனம் | யோவான் 11:24 | எபி 12:17 |
| 82. பொறுமையின்மை இழப்பை சந்திக்கும் | மத் 5:44 | கொலோ 3:13 |

| | | |
|---|---|---|
| 83. சுயகட்டுப்பாட்டின் முக்கியத்துவம் | லூக்கா 10:34 | அப் 16:33 |
| 84. இரக்கத்தின் முக்கியத்துவம் | லூக்கா 13:7-9 | ரோமர் 9:22 |
| 85. நீடியப் பொறுமையின் முக்கியத்துவம் | லூக்கா 6:29 | 2 தீமோத் 2:25 |
| 86. தயவின் முக்கியத்துவம் | லூக்கா 6:46 | ரோமர் 2:1 |
| 87. இசைவற்றத் தன்மை | லூக்கா 17:17-18 | ரோமர் 1:21 |
| 88. நன்றி உணர்வற்றத்தன்மை | யோவான் 17:9 | ரோமர் 8:34 |
| 89. பரிந்துப் பேசுதல் | யோவான் 15:11 | எபி 12:2 |
| 90. மகிழ்ச்சி | மத் 7:1 | ரோமர் 14:13 |
| 91. நியாயந்தீர்த்தல் தடை செய்யப்பட்டுள்ளது | யோவான் 5:30 | ரோமர் 2:2 |
| 92. நீயாயத் தீர்ப்பு | மத் 16:27 | 2 கொரி 5:10 |
| 93. கிரியைகளின்படி நீயாயந் தீர்த்தல் | மத் 25:34 | 2 தெச 1:5 |
| 94. இராஜ்ஜியம் | மாற்கு 9:1 | 1 கொரி 4:20 |
| 95. இராஜ்ஜியத்தின் வல்லமை | யோவான் 16:12 | 2 கொரி 13:12 |
| 96. அறிவை கொடுக்க மறுக்கப்பட்டுள்ளது | யோவான் 12:24 | 2 கொரி 4:11 |
| 97. இறப்பிலிருந்து ஜீவன் | லூக்கா 20:38 | ரோமர் 14:8 |
| 98. தேவனுக்காக வாழுதல் | யோவான் 6:53 | எபே 2:1 |
| 99. மனிதன் பாவத்தில் மரித்துப்போயிருக்கிறான் | யோவான் 3:16 | 1 கொரி 6:20 |
| 100. எல்லையற்ற நிலை என்ற மதிப்பை உடைய மனிதன் | மாற்கு 9:17 | அப் 27:20 |
| 101. மனிதனின் கடைக்கோடி | லூக்கா 1:50 | எபே 2:4 |
| 102. இரக்கம் | யோவான் 14:13 | பிலிப் 2:9-11 |
| 103. வல்லமையான இயேசுவின் நாமம் | மத் 27:5 | 1 தீமோ 6:9 |
| 104. பொருளாசை சரீரத்தில், மனதில் கொண்டுவரும் உபவத்திரவம் | யோவான் 6:43 | 1 கொரி 10:10 |
| 105. முறுமுறுத்தல் | யோவான் 3:8 | எபேசி 5:32 |
| 106. இரகசிய அறிவு | லூக்கா 14:18 | எபி 2:3 |
| 107. இரட்சிப்பை புறக்கணித்தல் | யோவான் 3:18 | ரோமர் 8:1 |
| 108. ஏற்றுக் கொள்வோருக்கு கடிந்துக் கொள்ளுதல் இல்லை | யோவான் 6:68 | 1 கொரி 3:11 |
| 109. இரட்சிப்புக்கு மாற்று வழியில்லை | மத் 6:9 | எபேசி 3:14 |
| 110. குறிப்பிடத்தக்க ஜெபங்கள் | எபி 5:8 | அப் 26:19 |
| 111. கீழ்ப்படிதல் | எபி 5:8 | அப் 26:19 |
| 112. தன்னைத் தானே பலியாக அர்ப்பணித்தல் | யோவான் 15:13 | கலா 1:4 |
| 113. மது அருந்துதல் | லூக் 21:34 | ரோமர் 13:13 |
| 114. நம்முடைய பரலோக வீடு | யோவான் 14:2 | 2 கொரி 5:1 |
| 115. கிறிஸ்துவிடம் நம்முடைய அன்பு | யோவான் 16:27 | எபே 6:24 |

| | | |
|---|---|---|
| 116. ஆவிக்குரிய அஸ்திபாரம் | மத் 7:24 | 2 தீமோ 2:19 |
| 117. வலிமிகுந்த நினைவுகள் | லூக்கா 16:25 | I கொரி 15:9 |
| 118. பொறுமை | லூக்கா 21:19 | ரோமர் 12:12 |
| 119. சமாதானம் | லூக்கா 1:78,79 | ரோமர் 14:17 |
| 120. விசுவாசிகளுக்கு சமாதானம் வாக்குப் பண்ணப்பட்டுள்ளது | யோவான் 14:27 | பிலிப் 4:7 |
| 121. ஐசுவரியத்தின் ஆபத்து | மாற்கு 4:19 | 1 தீமோ 6:9 |
| 122. முடிவுபரியந்தம் நிலைத்திருத்தல் | யோவான் 15:9 | கலா 6:9 |
| 123. ஜெபம் | மத் 26:41 | எபே 6:18 |
| 124. ஜெபம் மிகுந்த தன்மை | லூக்கா 2:37 | 1 தெச 3:10 |
| 125. கடமையின் அழுத்தம் | யோவான் 9:4 | 1 கொரி 9:16 |
| 126. நிச்சயமின்மை | லூக்கா 9:61 | அப் 17:32 |
| 127. அகத்தூண்டுதலுக்குரிய வாக்குத்தத்தங்கள் | லூக்கா 21:15 | 1 கொரி 2:13 |
| 128. பாதிக்கப்பட்டவர்களுக்கு வாக்குத்தத்தங்கள் | யோவான் 14:1 | 2 கொரி 4:17 |
| 129. தேவனுடைய வேலைக்காரருக்குரிய வாக்குத்தத்தங்கள் | மாற்கு 9:41 | 1 கொரி 3:14 |
| 130. சோதிக்கப்படுகிறவனுக்குரிய வாக்குத்தத்தங்கள் | லூக்கா 10:19 | 1 கொரி 10:13 |
| 131. அவருக்கு சொந்தமானதை பாதுகாத்தல் | லூக்கா 12:7 | 2 தீமோ 4:18 |
| 132. தூய்மை | மத் 5:8 | 1 தீமோ 1:5 |
| 133. வருகையின் நோக்கம் | மத் 25:31-32 | 1 கொரி 4:5 |
| 134. சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் நிலைமை | லூக்கா 10:39 | 1 தெச 2:13 |
| 135. மறுஜென்மம் அடைதல் | யோவான் 1:13 | 2 கொரி 5:17 |
| 136. எளியோரை நினைவுகூறுதல் | மத் 19:21 | கலா 2:10 |
| 137. பாவமன்னிப்பு | லூக்கா 3:3 | எபி 9:28 |
| 138. மனந்திரும்புதல் | மத் 3:2 | அப் 17:30 |
| 139. தீமையை கட்டுப்படுத்துதல் | மத் 6:19 | 2 கொரி 10:5 |
| 140. குற்றச்சாட்டு | லூக்கா 17:3 | 1 தெச 5:20 |
| 141. உபத்திரவத்தில் பின்வாங்குதல் | மாற்கு 14:26 | அப் 21:14 |
| 142. தோற்றத்தின் விளைவு | யோவான் 14:3 | கொலோ 3:4 |
| 143. உயிர்த்தெழுதல் | யோவான் 6:40 | 2 கொரி 4:14 |
| 144. பதிலுக்கு பதில் செய்தல் | மத் 5:39 | ரோமர் 12:17 |
23 கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்கு பங்காளிகள் ஆகாதிருங்கள் (எபேசி 5:7)
24 நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் (எபேசி 5:17)
25 மதுபான வெறி கொள்ளாமல் இருங்கள் (எபேசி 5:18)
26 நன்மை செய்வதிலே சோர்ந்து போகாதிருங்கள் (II தெச 3:13)
27 கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது வெட்கப்படாதிரு (II தீமோத் 1:8)
28 நீங்கள் அசதியாய் இராதிருங்கள் (எபி 6:12)
29 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் (எபி 13:2)
30 பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் (எபி 13:9)

<u>நம்ப வேண்டிய (அ) விசுவாசிக்க வேண்டிய 4 காரியங்கள்:</u>

1 சுவிசேஷங்கள் (மாற்கு 1:15)
2 தேவன் உண்டென்று (எபி 11:6)
3 இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்க வேண்டும் (I யோவான் 3:23)
4 தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும் (எபி 13:9)

<u>நம்பக் கூடாத ஒரே காரியம்:</u>

நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் (I யோவான் 4:1)

<u>14 எச்சரிக்கைகள் அல்லது எச்சரிக்கையாய் இருங்கள்:</u>

1 கள்ளத்தீர்க்கதரிசிகள் (மத் 7:15)
2 மனிதர்கள் (மத் 10:17)
3 பரிசேயருடைய புளித்தமாவு (மத் 16:6-12)
4 ஏரோதுடைய புளித்த மாவு (மாற்கு 8:15)
5 மாய்மாலம் (லூக்கா 12:1)
6 பொருளாசையைக் குறித்து (லூக்கா 12:15)
7 சதுசேயர் (மாற்கு 12:38; லூக்கா 20:46)
8 அசட்டைக்காரரே பிரமித்து அழிந்து போங்கள் (அப் 13:40-41)
9 நாய்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள் (கள்ளப் போதகர்கள்) (பிலிப் 3:2; ஏசாயா 56:10)
10 பொல்லாத வேலையாட்களுக்கு (பிலிப் 3:2)
11 சுன்னத்துக்காரர் (யூதர்) (பிலிப் 3:2)
12 லௌகிக ஞானம் கொள்ளை கொண்டு போகாத படிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் (கொலோ 2:8)
13 மாயமான தந்திரத்தால் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் (கொலோ 2:8)
14 போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் (II பேதுரு 3:17)

<u>இரண்டு வகையான பிரிவினரை ஆசீர்வதிக்கும்படியாக:</u>

1 உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் (மத் 5:44; லூக்கா 6:28)
2 உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் (ரோமர் 12:14)

<u>எடுத்து எறிந்து போட வேண்டிய அல்லது விட்டெறிய வேண்டிய மூன்று காரியங்கள்:</u>

1 உன் கண்ணிலிருக்கிற உத்திரம் (மத் 7:5; லூக்கா 6:42)
2 பிசாசுகளைத் துரத்துங்கள் (மத் 10:8)
3 உங்கள் கவலையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் (I பேதுரு 5:7)

**எடுத்து எறிந்து விடக் கூடாத ஒரு காரியம்:**

1 ஆதலால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை தேவன் பேரில் நம்பிக்கையை விட்டு விடாதிருங்கள் (எபி 10:35)

**ஒப்படைக்கப்பட்ட 5 காரியங்கள்:**

1 குற்றம் சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படிக்கு (I தீமோத் 5:7)
2 ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாய் இராமல் (தாழ்மையுள்ளவர்களாக) (I தீமோத் 6:17)
3 ஐசுவரியமுள்ளவர்கள் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் (I தீமோத் 6:17)
4 நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாக (I தீமோத் 6:18)
5 ஐசுவரியமுள்ளவர்கள் நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படியாக (I தீமோத் 6:19)

**இரு வகுப்பினரை ஆறுதல்படுத்த:**

1 இந்த வார்த்தைகளால் ஒருவரை ஒருவர் தேற்றுங்கள் (உடன் கிறிஸ்தவர்களை) (I தெச 4:18; 5:11)
2 திடனற்றவர்களை (மனதுடையவர்களைத்) தேற்றுங்கள் (I தெச 5:14)

**மனதில் (கருத்தில்) கவனிக்க வேண்டிய 5 காரியங்கள்:**

1 காகங்கள் (லூக்கா 12:24)
2 காட்டு புஷ்பங்கள் (லூக்கா 12:27-28)
3 சத்தியம் (II தீமோத் 2:7)
4 நீயும் போதிக்கப்படாத படிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு (கலா 6:1)
5 கிறிஸ்து (எபி 3:1; 12:3)

**தொடர்ந்து செய்யவேண்டிய மூன்று காரியங்கள்:**

1 அன்பு (யோவான் 15:9)
2 ஜெபம் (ரோமர் 12:12; கொலோ 4:2)
3 சத்தியம் (II தீமோத் 3:14)

**நாடிப் பெற வேண்டியவைகள்:**

1 முக்கியமான (ஆவியின்) வரங்கள் (I கொரி 12:11)
2 தீர்க்கதரிசனம் சொல்ல (I கொரி 14:39 உடன் நாடிப் பெறக் கூடாதவை (யாத் 20:17; உபா 5:21)

**செய்ய வேண்டியவை 10 "செய்" எனப்படுபவை:**

1 உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் (மத் 5:44; லூக்கா 6:27)
2 மற்றவர்கள் உங்களுக்கு எதைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத் 7:12; லூக்கா 6:31)
3 ஒருவருக்கும் இடுக்கண் செய்யாதிருங்கள் (லூக்கா 3:14)
4 நன்மை செய்யுங்கள் (லூக்கா 6:35; ரோமர் 13:3)
5 அப்படியே செய் (தேவனை முன் வைத்து ஜீவிப்பாய்) பிழைப்பாய் (லூக்கா 10:28)
6 எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (I கொரி 10:31; கொலோ 3:17,23)
7 எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் (பிலிப் 2:14)
8 என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ அவைகளைச் செய்யுங்கள் (பிலிப் 4:9)
9 புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து (I தெச 4:11)
10 சுவிசேஷகனுடைய வேலையைச் செய் (II தீமோத் 4:5)

**பத்து "செய்யக் கூடாதவை" "செய்யாதே" என்பன**

1 மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உன் தர்மத்தைச் செய்யாதே (மத் 6:1)
2 தர்மஞ்செய்யும் போது உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே (மத் 6:2)
3 நீங்கள் கைக் கொள்ளும்படி (பரிசேயர்) அவர்கள் சொல்லுகிற யாவையும் கைக் கொண்டு செய்யுங்கள். (மத் 23:3-33)
4 வசனத்தினாலும், நாவினாலும் மாத்திரம் அன்பு கூறாதேயுங்கள் (I யோவான் 3:18)
5 கட்டுக் கதைகளுக்கும் கவனியாதேயுங்கள் என்று கட்டளையிடுவாயாக (I தீமோத் 1:3)
6 வம்ச வரலாறுகளை கவனியாதபடி இருக்க கட்டளையிடுவாயாக (I தீமோத் 1:4)
7 மோசம் போகாதிருங்கள் (யாக் 1:16)
8 விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (யாக் 2:11)
9 கொலை செய்யாதிருப்பாயாக (யாக் 2:11)
10 முன்னே அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி நடவாமல் (I பேதுரு 1:14)

**சகித்துக் கொள்ள வேண்டிய இரண்டு காரியங்கள்:**

1 அயுக்தமான (II தீமோத் 2:23)
2 தீங்கனுபவி (II தீமோத் 4:5)

**யாருக்குப் பயப்பட வேண்டும்:**

தேவனுக்கு (மத் 10:28; லூக்கா 12:5; I பேதுரு 2:7; வெளி 14:7)

**பயப்படக் கூடாத 3 காரியங்கள்:**

1 மனிதன் (மத் 10:28; லூக்கா 12:5)
2 சரீரத்தை கொல்லுகிறவர்களுக்கு (மத் 10:26)
3 ஆகாரக் குறைவு (மத் 10:31; மாற்கு 6:8-9; லூக்கா 12:7)

**போஷிக்க வேண்டியவை ஐந்து:**

1 சத்துருக்கள் (ரோமர் 12:20)
2 ஆட்டுக்குட்டிகள் (யோவான் 21:16)
3 ஆடுகள் (யோவான் 21:16-17)
4 தேவனுடைய மந்தை (I பேதுரு 5:2)
5 சரீரமாகிய சபை (அப் 20:28)

**விட்டு ஓடிவிட வேண்டியவை நான்கு**

1 வேசித்தனம் (I கொரி 6:18)
2 விக்கிரக ஆராதனை (I கொரி 10:14)
3 மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகள் (I தீமோத் 6:9-11)
4 பாலியத்துக்குரிய இச்சைகள் (II தீமோத் 2:22)

**கைப்பிடித்துக் கொண்டு பின்பற்ற வேண்டியவை பத்து காரியங்கள்:**

1 கிறிஸ்து (மத் 4:19; 8:22; 16:24; மாற்கு 8:34; 10:21; லூக்கா 9:23; யோவான் 21:19)
2 அன்பு (I கொரி 14:1; I தீமோத் 6:11; II தீமோத் 2:22)
3 நன்மை (I தெச 5:15; II தீமோத் 2:22)
4 நீதி (I தீமோத் 6:11; II தீமோத் 2:22)
5 தேவபக்தி (I தீமோத் 6:11)
6 விசுவாசம் (I தீமோத் 6:11; II தீமோத் 2:22)
7 பொறுமை (I தீமோத் 6:11)
8 சாந்த குணம் (I தீமோத் 6:11)
9 சமாதானம் (II தீமோத் 2:22; எபி 12:14)
10 பரிசுத்தம் (எபி 12:14)

**தாராளமாக கொடுத்தல் பற்றியவை 7 காரியங்கள்:**

1.கட்டளை: கொடுங்கள் (லூக்கா 6:38)

2.யாருக்கு கொடுக்க வேண்டும்:
கேட்கிறவனுக்குக் கொடு (மத் 5:42; லூக்கா 6:30)
பரிசுத்தவான்களுடைய குறைவில் (ரோமர் 12:13)
தேவனுக்கு (கொலோ 3:17; வெளி 14:7)

3.யாருக்குக் கொடுக்கக் கூடாது:
பரிசுத்தமானதை நாய்களுக்கு (மத் 7:6)
பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள் (எபேசி 4:27)

4.எதைக் கொடுக்க வேண்டும்:
பரிசுத்தமானதை இலவசமாய் கொடுங்கள் (மத் 7:6; 10:8)
எல்லாவற்றிக்காகவும் தேவனை ஸ்தோத்தரித்து (எபேசி 5:20; பிலிப் 4:6; கொலோ 3:17; I தெச 5:18)
வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் (I தீமோத் 4:13)
தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி (I தீமோத் 4:15)
(தேவனுக்கு பயந்து) அவரை மகிமைப்படுத்துங்கள் (வெளி 14:7)

5.எதைக் கொடுக்கக் கூடாது:
இடறலைக் கொடுக்கக்கூடாது (I கொரி 10:32)
கட்டுக்கதைகளுக்கும், மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடுக்கக்கூடாது (தீத்து 1:13)

6.எப்படிக் கொடுப்பது:
இலவசமாய் கொடுங்கள் (மத் 10:8; II கொரி 9:16)
எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் (லூக்கா 6:38)
தன் தன் வரவுக்குத்தக்கதாக (I கொரி 16:2)
ஒருவனுக்கு மன விருப்பம் இருந்தால் (II கொரி 8:12)
உற்சாகமாய் (II கொரி 9:17)

7.கொடுத்தலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள்:
எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவினால் (லூக்கா 6:3; II கொரி 9:6)
பலனை அடைவான் (மத் 10:42)
சகலவித கிருபையும் பெருக (II கொரி 9:9)
சம்பூர்ணமாக (II கொரி 9:8)
அவனுடைய நீதி என்றென்றும் நிற்கும் (II கொரி 9:9)
விதையை அளித்துப் அதைப் பெருகப் பண்ணி (II கொரி 9:10)
சம்பூர்ண பலனுள்ளதாய் (II கொரி 9:12)

**"போ" என்ற ஐந்து**

1 இரண்டு மைல் தூரம் போ (மத் 5:41)
2 உபதேசம் பண்ணுங்கள் (மத் 28:19-20)
3 உலகம் எங்கு போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15)
4 வீட்டுக்கு வீடு போகாதிருங்கள் (லூக்கா 10:7)
5 நீயும் போய் அந்தப் படியே செய் (லூக்கா 10:37)

**7 "வைத்திருத்தல்" - வைத்திரு**

1 விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் (மாற்கு 11:22; ரோமர் 14:22-23)
2 அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் (எபேசி 5:11)
3 பட்சபாதமின்றி மனிதரை கனப்படுத்துதல் (I தீமோத் 5:21; யாக் 2:1-10)
4 நேர்மையான சம்பாஷணை (I பேதுரு 2:12)
5 மன உருக்கம் (I பேதுரு 3:8; யூதா 22)

6 நல்மனச் சாட்சி (I பேதுரு 3:16)
7 ஊக்கமான அன்பு (I பேதுரு 4:8)

**பதினான்கு பிடித்துக் கொள்ள வேண்டிய, பிடித்துக் கொண்டுள்ள 7 காரியங்கள்:**

1 ஜீவ வசனத்தை பிடித்துக் கொண்டு (பிலிப் 2:14)
2 நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் (I தெச 5:21)
3 கிறிஸ்தவ பாரம் பரியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் (I தீமோத் 1:19; 3:9)
4 விசுவாசத்தை (I தீமோத் 1:19)
5 நல்மனச் சாட்சியை (I தீமோத் 1:19)
6 ஆரோக்கியமான உபதேசம் (I தீமோத் 1:19)
7 நான் (கிறிஸ்து) வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள் (வெளி 2:25)
8 உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு (வெளி 3:11)
9 கீரிடத்தை (வெளி 3:11)
10 ஊழியர்களின் நற்பெயரைப் பற்றிக் கொண்டு கனப்படுத்துங்கள் (பிலிப் 2:29)
11 நித்திய ஜீவன் (I தீமோத் 6:12,19)
12 நம்பிக்கையை பற்றிக் கொள் (எபி 6:18)
13 நம்பிக்கையினால் உண்டாகும் தைரியத்தைப் பற்றிக் கொண்டு (எபி 3:6,14)
14 கேட்டுப் பெற்றுக் கொண்டதைப் பற்றிக் கொண்டிரு (வெளி 3:3)

**6 கனப்படுத்த வேண்டிய ஆறு வகுப்பினர்:**

1 தகப்பனை (லூக்கா 18:20; எபேசி 6:2)
2 தாயாரை (மத் 19:19; மாற்கு 10:19)
3 (பிறரை) ஒருவருக்கொருவரை (ரோமர் 12:10)
4 விதவைகளை (I தீமோத் 5:3)
5 எல்லாரையும் (மனிதர்களையும்) (I பேதுரு 2:17)
6 இராஜாக்கள் (ஆட்சி செய்பவர்கள்) (I பேதுரு 2:17)

**7 கைக்கொள்ள வேண்டியவை (காத்துக் கொள்ளவும்):**

1 கற்பனைகள் (மத் 19:17; யோவான் 14:15)
2 கிறிஸ்தவர்கள் - ஆறுவகைப் பிரிவினரோடு கலந்திருக்கக் கூடாது (I கொரி 5:11)
3 உன்னைச் சுத்தவானாக (I தீமோத் 5:22)
4 கிறிஸ்து வரும்வரை சுவிசேஷத்து கற்பனையைக் கைக்கொள்ளும்படி (I தீமோத் 6:14)
5 நற்பொருளைக் காத்துக்கொள் (II தீமோத் 1:14)
6 விக்கிரகங்களுக்கு விலகிக் காத்துக் கொள்ளவும் (I யோவான் 5:21)
7 தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ள (யூதா 21)

**அப்பால் வைக்க வேண்டியவை 6 காரியங்கள்:**

1 கொடிய துர்க்குணம் (யாக் 1:21)
2 சகலவித கபடம் (I பேதுரு 2:2)
3 வஞ்சகங்களையும் (I பேதுரு 2:2)
4 மாய்மாலங்கள் (I பேதுரு 2:2)
5 பொறாமைகள் (I பேதுரு 2:2)
6 சகலவித புறங்கூறுதல் (I பேதுரு 2:2)

**நடக்கட்டும், நட 100 காரியங்கள்:**

1 உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது (மத் 5:16)
2 உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் (மத் 5:37; யாக் 5:12)
3 பகைவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு (மத் 5:40; லூக்கா 6:29)
4 குருடனுக்கு குருடன் வழிகாட்டுவது (மத் 15:4)
5 தன்னைத் தான் வெறுத்து (மத் 16:24; மாற்கு 8:34; லூக்கா 9:23)

6 தன் சிலுவையை எடுத்துக் கொண்டு (மத் 16:24; மாற்கு 8:34; 10:21; லூக்கா 9:23)
7 கேட்கக் கடவன் (மாற்கு 4:23; லூக்கா 14:35)
8 ஆகாரத்தை உடையவன் (இல்லாதவனுக்கு) அப்படியே செய்யக் கடவன் (லூக்கா 3:11)
9 அரைகள் கட்டப்பட்டதாக (லூக்கா 12:35)
10 பணப்பையையும் சாமான்பையையும் உடையவன் அவைகளை எடுத்துக் கொள்ளக் கடவன் (லூக்கா 22:36)
11 வஸ்திரத்தை விற்று ஒன்றை (பட்டயத்தை) கொள்ளக் கடவன் (லூக்கா 22:36)
12 உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக (ரோமர் 12:9)
13 எந்த மனுஷனும் மேலான அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்படிய வேண்டும் (ரோமர் 13:1)
14 நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று (ஓய்வு நாளாக) விசேஷித்துக் கொள்ளுகிறான் (ரோமர் 14:5-7; கொலோ 2:14-17)
15 இன்ன விதமாய் கட்டுகிறான் (கிறிஸ்துவின் மேல்) என்று பார்க்கக் கடவன் (I கொரி 3:10)
16 ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாது இருப்பானாக (I கொரி 3:18)
17 தன் சொந்த மனைவியை உடையவனாய் இருக்க வேண்டும். (I கொரி 7:2)
18 அவளவள் சொந்த புருஷனை உடையவளாய் இருக்க வேண்டும் (I கொரி 7:2)
19 புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக் கடவன் (I கொரி 7:4-5)
20 அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம் பண்ணக் கடவர்கள் (I கொரி 7:9)
21 பிரிந்து போனால் அவள் விவாகம் இல்லாதிருக்கக் கடவள் அல்லது புருஷனோடு ஒப்புரவாகக் கடவள். (I கொரி 7:11)
22 ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும். (I கொரி 7:15)
23 கர்த்தர் அவனவனை அழைத்தது எப்படியோ அப்படியே அவனவன் நடக்கக் கடவன். (I கொரி 7:17-24)
24 ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால் அப்படி இல்லாதிருக்க வகை தேடானாக. (I கொரி 7:18)
25 ஒருவன் விருத்தசேதனம் இல்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால் விருத்தசேதனம் பெறாதிருப்பானாக (I கொரி 7:18)
26 ஒருவன் தன் புத்திரி விவாகம்பண்ணுவது அவசியமென்று நினைத்தால் தன் மனதின்படியே செய்யட்டும். (I கொரி 7:36-38)
27 தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன். (I கொரி 10:12)
28 ஒவ்வொருவனும் தன் சுய பிரயோஜனத்தை நாடாமல் பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன் (I கொரி 10:24)
29 முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஸ்தீரியானவள் தலைமயிரைக் கத்தரித்துப் போடக்கடவள். (I கொரி 11:6)
30 தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிறைக்கப்படுகிறதும் ஸ்தீரிக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள். (I கொரி 11:6)
31 எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்து அறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். (I கொரி 11:28)
32 ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக் கடவன் (I கொரி 11:34)
33 அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதன் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன். (I கொரி 14:13)
34 சகலமும் பக்தி விருத்திக்கு ஏதுவாகச் செய்யப்படக்கடவது. (I கொரி 14:26)
35 அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால் (ஆராதனையில்) இரண்டு பேர் மட்டில் அல்லது மூன்று பேர் மட்டும் பேசட்டும். (I கொரி 14:27)
36 ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். (I கொரி 14:27)
37 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. (பிலிப் 2:5)
38 உங்கள் சாந்தகுணம் (எல்லாருக்கும்) மனுஷருக்கும் தெரிந்திருக்கக்கடவது. (பிலிப் 4:5)
39 உங்களுடைய விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலிப் 4:6)

40 போஜனம், பானத்தைக் குறித்தாவது பண்டிகை நாள், மாதப் பிறப்பு, ஓய்வு நாள்களைக் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. (கொலோ 2:14-17; ரோமர் 14:5-7)

41 தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையில் விருப்பம் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை இழ்நது போகும்படி வஞ்சியாதிருப்பானாக.். (கொலோ 2:18)

42 தேவ சமாதனம் உங்கள் இருதயத்தை ஆளக்கடவது. (கொலோ 3:15)

43 வார்த்தையினால் கிறிஸ்து இயேசுவின் நாமத்தினால் செய்து (கொலோ 3:17)

44 உங்கள் வசனம் கிருபை பொருந்தினதாய் இருப்பதாக (கொலோ 4:6)

45 ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். கிறிஸ்துவின் நாள் சமீபமாய் இருக்கிறது. (II தெச 2:2,3)

46 உன் இளமையைக் குறித்து அசட்டை பண்ணாதபடிக்கு மாதிரியாயிரு. (I தீமோத் 4:12)

47 அர்த்தஞ் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். (I கொரி 14:28)

48 தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள். (II கொரி 14:29)

49 சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது. (I கொரி 14:10)

50 ஸ்தீரிகள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே அல்லது சபையிலே அமர்ந்திருந்து கற்றுக் கொள்ளவேண்டும். (I கொரி 14:34,35)

51 கர்த்தருடைய கற்பனைகள் என்று ஆவியின் வரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். (I கொரி 14:37)

52 ஒருவன் அறியாதவனாய் இருந்தால் அறியாதவனாய் இருக்கட்டும். (I கொரி 14:38)

53 சகலமும் கிரமமாய் செய்யப்படக்கடவது. (I கொரி 14:40)

54 அவனவன் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் (தேவன் ஆசீர்வதித்தபடி) கொடுக்கக் கடவன். (I கொரி 16:2)

55 உங்கள் காரியங்கள் எல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது. (I கொரி 16:4)

56 அவனவன் உற்சாகமாகக் கொடுக்கக்கடவன். (II கொரி 9:7)

57 ஒருவன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறாமல் போனால் அவன் சபிக்கப்பட்டவன். (I கொரி 16:22)

58 அவனவன் தன் சுய கிரியைகளைச் சோதித்துப் பார்க்கக் கடவன் (கலா 6:4)

59 உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன் (கலா 6:6)

60 திருடகிறவன் இனி திருடாமல் இருக்கக் கடவன். (எபேசி 4:28)

61 குறைச்சலுள்ளவர்களுக்கு கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன். (எபேசி 4:28)

62 கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயில் இருந்து புறப்படவேண்டாம். (எபேசி 4:29)

63 கசப்பு, கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்றெந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபேசி 4:31)

64 வீண் வார்த்தைகளினாலே மோசம் போகாதபடி எச்சரிக்கையாய் இருங்கள். (எபேசி 5:6)

65 மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். (எபேசி 5:22)

66 புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். (எபேசி 5:25)

67 மனைவியும், புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்கக்கடவள் (எபேசி 5:33)

68 சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள். (பிலிப் 1:27)

69 ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் இருங்கள். (பிலிப் 2:3)

70 ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையாக எண்ணக்கடவர்கள். (பிலிப் 2:3)

71 நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்கள் இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணப்படவேண்டும். (I தீமோத் 5:17)

72 வேலைக்காரர் தங்கள் எஜமான்களை எல்லா கனத்திற்கும் பாத்திரராக எண்ணக்கடவர்கள். (I தீமோத் 6:1)

73 அவ்வாறு எஜமான்களும் வேலைக்காரரைக் கனம் பண்ணவேண்டும். விசுவாசிகளும் பிரியருமாய் இருக்கிறார்கள். (I தீமோத் 6:2)

74 கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன். (II தீமோத் 2:19)
75 ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடாதிருப்பாயாக. (தீத்து 2:15)
76 சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. (எபி 13:1)
77 பேராசை பண ஆசை இல்லாதவர்களாக இருங்கள். (எபி 13:5)
78 பொறுமையானது பூரணக் கிரியை செய்யக் கடவது. (யாக் 1:4)
79 ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் தேவனிடத்தில் கேட்கக் கடவன். (யாக் 1:5)
80 ஆனாலும் அவன் விசுவாசத்தோடே கேட்கக் கடவன். (யாக் 1:6)
81 தாழ்ந்த சகோதரன் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பராட்டக்கடவன். (யாக் 1:9)
82 ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பராட்டக்கடவன். (யாக் 1:10)
83 தேவன் ஒருவரையும் சோதிக்கிறவரும் அல்ல. (யாக் 1:13)
84 யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும் பேசுகிறதற்கு பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாகவும் இருக்கக் கடவர்கள். (யாக் 1:19)
85 உங்களில் ஞானியானவன் தன் கிரியையாலே விவேகத்தையும் ஞானத்தையும் காட்டக்கடவன். (யாக் 3:13)
86 இரு மனமுள்ளவர்களே நீங்கள் துக்கித்து அழுங்கள். (யாக் 4:9)
87 உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன். (யாக் 5:13)
88 மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். (யாக் 5:13)
89 ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. (யாக் 5:14)
90 மூப்பர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி ஜெபம் பண்ணக்கடவர்கள். (யாக் 5:14)
91 புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் இருதயத்தில் மறைந்திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக்கடவது. (I பேதுரு 3:3-4)
92 ஒவ்வொருவனும் பொல்லாப்புக்குத் தன் நாவையும் கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். (I பேதுரு 3:10)
93 ஒவ்வொருவனும் பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து சமாதானத்தைத் தேடி பின் தொடரக்கடவன். (I பேதுரு 3:11)
94 ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக்கடவன். (I பேதுரு 4:11)
95 ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது பொல்லாங்கு செய்தவனாயாவது அந்நிய காரியங்களில் தலையிட்டு பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. (I பேதுரு 4:15)
96 ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாதிருந்து தேவனை மகிமைப்படுத்தக்கடவன். (I பேதுரு 4:16)
97 பாடனுபவிக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தேவனுக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள். (I பேதுரு 4:19)
98 நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு தந்த வாக்குத்தத்தம். (I யோவான் 2:24-25)
99 நீங்கள் நீதியைச் செய்கிறதில் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். (I யோவான் 3:17)
100. காதுள்ளவன் கேட்கக் கடவன். (வெளி 2:7,11,17,29; 3:6,13,22)

<u>12 செய்யக் கூடாதவைகள் செய்யாதே:</u>

1 உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருப்பதாக (மத் 6:3)
2 தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன். (மத் 19:6)
3 உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். (ரோமர் 14:16)
4 உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோமர் 6:12)
5 புசிக்கிறவன் புசியாது இருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக. (ரோமர் 14:3)
6 புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனை குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. (ரோமர் 14:3)
7 மனைவியானவள் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது. (I கொரி 7:10)
8 புருஷனும் தன் மனைவியைத் தள்ளி விடக்கூடாது. (I கொரி 7:11)

9 கிறிஸ்தவன் அவிசுவாசியான புருஷன்/ஸ்தீரி வாசமாயிருக்க சம்மதமிருந்தால் தள்ளி விடாதிருக்க கடவன்/கடவள். (I கொரி 7:11-12)
10 சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது. (எபேசி 4:26)
11 வேசித்தனமும், அசுத்தமும், பொருளாசையும் அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தகாதவைகள். (எபேசி 5:3-4)
12 தகுதியற்ற விதவைகளும் சபையால் ஆதரிக்கப்படவேண்டும். (I தீமோத் 5:9-16)

<u>42 காரியங்கள் நாம் செய்வோம் என்பன - "நாம் செய்ய":</u>

1 பகலிலே நடக்கிறவர்கள் போல சீராய் நடக்கக் கடவோம். (ரோமர் 13:12)
2 அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளி விடக் கடவோம். (ரோமர் 13:12)
3 ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக் கடவோம். (ரோமர் 13:12)
4 சமாதானத்துக்கடுத்தவைகளை நாடக் கடவோம். (ரோமர் 14:19)
5 பக்தி விருத்தி உண்டாக்கத் தக்கவைகளை நாடக்கடவோம். (ரோமர் 14:19)
6 பிறனுடைய பக்தி விருத்திக்கேதுவாக நன்மையுண்டாகும்படி பிரியமாய் நடக்கக்கடவோம். (ரோமர் 15:2-3)
7 துப்பரவு உண்மையாக இருப்போம். (I கொரி 5:8)
8 வேசித்தனம் பண்ணாதிருப்போமாக (I கொரி 10:8)
9 கிறிஸ்துவை பரீட்சை பாராதிருப்போமாக (I கொரி 10:9)
10 முறுமுறுக்காதிருங்கள் (I கொரி 10:10)
11 மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க சுத்திகரிக்கக் கடவோம். (II கொரி 7:1)
12 பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்தக் கடவோம். (II கொரி 7:1)
13 ஆவிக்கேற்றபடி நடக்கக் கடவோம். (கலாத் 5:25)
14 வீண் புகழ்ச்சியை விரும்பாமல் இருக்கக் கடவோம். (கலாத் 5:26)
15 ஒருவரை ஒருவர் கோப மூட்டாமல் இருக்கக் கடவோம். (கலாத் 5:26)
16 பொறாமை கொள்ளாமல் இருக்கக் கடவோம். (கலாத் 5:26)
17 நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. (கலாத் 6:9)
18 எல்லோருக்கும் மனிதருக்கும் நன்மை செய்யக் கடவோம். (கலாத் 6:10)
19 விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக் கடவோம். (கலாத் 6:10)
20 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்கிறேன். (பிலிப் 3:14-15)
21 ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாய் இருப்போமாக. (பிலிப் 3:16)
22 ஒரே சிந்தையாய் இருப்போமாக (பிலிப் 3:16)
23 மற்றவர் (ஆவியில்) தூங்குகிறது போல நாம் தூங்காமல் இருக்கக் கடவோம். (I தெச 5:6)
24 நாம் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம். (I தெச 5:6-8)
25 உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதும் என்றிருக்கக் கடவோம். (I தீமோத் 6:8)
26 இளைப்பாறுதலில் ஒருவனும் அடையாமல் போகாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம். (எபி 4:1-2)
27 விசுவாசித்தவர்களாகிய நாமோ இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். (எபி 4:1-2)
28 நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் உறுதியாய் இருக்கக் கடவோம். (எபி 10:23)
29 தைரியமாய் கிருபாசனத் தண்டையில் சேரக் கடவோம். (எபி 4:16; 10:19-23)
30 பூரணராகும்படி கடந்து போவோமாக. (எபி 6:1)
31 விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக் கடவோம். (எபி 10:22)
32 அன்புக்கும் நற்கிரியைக்கும் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கக்கடவோம். (எபி 10:24)
33 சபை கூடி வருதலை விட்டு விடக்கூடாது. (எபி 10:25)

34 ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். (எபி 10:25)
35 பாரமான யாவற்றையும் தள்ளி விடக் கடவோம். (எபி 12:1)
36 பாவத்தையும் தள்ளி விடக் கடவோம். (எபி 12:1)
37 ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம். (எபி 12:1)
38 இயேசுவை நோக்கி ஓடக் கடவோம். (எபி 12:1)
39 கிருபையை பற்றிக் கொள்ளக் கடவோம் (எபி 12:28)
40 அவருடைய நிந்தையைச் சுமக்கக் கடவோம். (எபி 13:13)
41 ஸ்தோத்திர பலியை தேவனுக்குச் செலுத்தக் கடவோம். (எபி 13:15)
42 ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கக் கடவோம். (யோவான் 4:7,11)

<u>8 காரியங்கள் செய்யாதிருக்கக் கடவோம் - செய்யக் கூடாது:</u>

1 வாக்குவாதம் பொறாமை உடையவர்களாய் நடவாமல் இருக்கக்கடவோம் (ரோமர் 13:13)
2 (மதுபான) வெறி உடையவர்களாய் நடவாமல் இருக்கக் கடவோம். (ரோமர் 13:13)
3 களியாட்டு உடையவர்களாய் நடவாமல் இருக்கக் கடவோம். (ரோமர் 13:13)
4 வாக்குவாதம் உடையவர்களாய் நடவாமல் இருக்கக் கடவோம். (ரோமர் 13:13)
5 கலகம் செய்யாமல் செய்து நடவாமல் இருக்கக் கடவோம். (ரோமர் 13:13)
6 பொறாமை உடையவர்களாய் நடவாமல் இருக்கக் கடவோம். (ரோமர் 13:13)
7 ஒருவரையொருவர் குற்றவாளிகள் என்று சந்தேகக் காரியங்களில் தீர்க்காதிருக்கக்கடவோம். (ரோமர் 14:13)
8 சகோதரனுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடாதிருக்கக் கடவோம். (ரோமர் 14:13)

<u>ஜீவிக்க மூன்று வழிகள்:</u>

1 எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள். (ரோமர் 12:18; I கொரி 13:11)
2 கவலையற்றவர்களாகவும் தேவைக்கு மிஞ்சிய கவனம் இல்லாதவர்களாக இருங்கள். (I கொரி 7:28-35)
3 மனுஷருடைய இச்சைகளின் படி பிழைக்காமல் (I பேதுரு 4:2)

<u>அன்பு கூறும்படி 4 கட்டளைகள் - அன்பு:</u>

1 சத்துருக்களை சிநேகியுங்கள் (மத் 5:44; லூக்கா 6:27,35)
2 ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34; 15:12,17; கலா 5:14; I பேதுரு 2:17; I யோவான் 3:23; II யோவான் 5)
3 சகோதரரிடத்தில் அன்பு கூறுங்கள். (I பேதுரு 2:17)
4 தன் சகோதரனிடத்தில் அன்பு கூறுங்கள் (I யோவான் 4:21)

<u>அன்பு கூறாதிருக்க 2 காரியங்கள்:</u>

1 உலகத்தில் அன்பு கூறாதிருங்கள். (I யோவான் 2:15)
2 உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள் (I யோவான் 2:15)

<u>அன்பு கூறும்படியான மூன்று வழிகள்:</u>

1 சுத்த இருதயத்தோடே ஊக்கமாய் அன்பு கூறுங்கள். (I பேதுரு 1:22)
2 சுத்த இருதயத்தோடே அன்பு கூறுங்கள். (I பேதுரு 1:22)
3 சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் (I பேதுரு 3:8)

<u>ஜெபத்தை ஏறெடுக்க ஒருவர்:</u>

உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு (மத் 6:6; யோவான் 10:23-26)

<u>ஜெபிக்கக் கூடாத இரு வழிகள்:</u>

1 அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். (மத் 6:7)
2 ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போல் இருக்க வேண்டாம். (மத் 6:5)

**ஜெபிக்க வேண்டிய மூன்று காரியங்கள்:**

1 உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபியுங்கள் (மத் 5:44; லூக்கா 6:28)
2 கேளுங்கள் தேடுங்கள் தட்டுங்கள் (மத் 7:7-11)
3 பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுங்கள் (யூதா 20)

**சோதித்து அறிய (நிரூபிக்க) 4 காரியங்கள்:**

1 உங்களை நீங்களே சோதித்து (II கொரி 13:5)
2 கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று (எபேசி 5:10)
3 எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து (I தெச 5:21)
4 மூப்பனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை (I தீமோத் 5:19)

**புறம்பே தள்ளி விட வேண்டிய 8 காரியங்கள் - புறம்பே தள்ளி:**

1 புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து (I கொரி 5:12)
2 பொய்களைக் களைந்து (எபேசி 4:25)
3 சகல விதக் கசப்பும் (எபேசி 4:31)
4 கோபமும் (எபேசி 4:31)
5 மூர்க்கமும் (எபேசி 4:31)
6 கூக்குரலும் (எபேசி 4:31)
7 தூஷணமும் (எபேசி 4:31)
8 துர்க்குணமும் (எபேசி 4:31)

**6 பின்னுக்குத் தள்ளு - தள்ளி விட:**

1 கெட்டுப் போகிற பழைய மனுஷனை (எபேசி 4:22; கொலோ 3:9)
2 கோபம் (கொலோ 3:8)
3 மூர்க்கம் (கொலோ 3:8)
4 பொறாமை (கொலோ 3:8)
5 தூஷணம் (கொலோ 3:8)
6 வம்பு வார்த்தை (கொலோ 3:8)

**12 அணிந்து கொள்ள வேண்டியவை - அணிய:**

1 கிறிஸ்து (ரோமர் 13:14)
2 ஒளியின் ஆயுதங்கள் (ரோமர் 13:14)
3 புதிய மனிதனை (எபேசி 4:24; கொலோ 3:10)
4 சர்வாயுத வர்க்கத்தை (எபேசி 6:11,13)
5 உருக்கமான இரக்கத்தை (கொலோ 3:12)
6 தயவை (கொலோ 3:12)
7 மனத் தாழ்மையை (கொலோ 3:12)
8 சாந்தத்தை (கொலோ 3:12)
9 நீடிய பொறுமை (கொலோ 3:13)
10 அன்பு (கொலோ 3:14)
11 விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம் (I தெச 5:8)
12 இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீரா (I தெச 5:8)

**கடிந்து கொள்ளக் கூடாத ஓர் பிரிவினர்:**

1 முதியோர் (I தீமோத் 5:1)

**கடிந்து சொல்ல வேண்டிய மூன்று காரியங்கள்:**

1 பாவஞ் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள் (I தீமோத் 5:20)
2 சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷர்களுக்கு செவி கொடாமல் கடிந்து செல் (தீத்து 1:13)

3 அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவர்களைக் கடிந்து கொள் (எபேசி 5:11)

**கடிந்து கொள்ள இரண்டு வழிகள்:**

1 சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள் (தீத்து 2:15)
2 நீடிய சாந்தத்தோடு கடிந்து கொள் (II தீமோத் 5:16)

**சந்தோஷப்பட 2 (காரியங்கள்) கட்டளைகள்:**

1 சந்தோஷப்பட்டு களிகூறுங்கள் (மத் 5:12; ரோமர் 15:10)
2 எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள் (I தெச 5:16)

**சந்தோஷப்பட 4 காரியங்கள்:**

1 நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள் (ரோமர் 12:12)
2 சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள் (ரோமர் 12:15)
3 கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள் (பிலி 3:1; 4:4)
4 நீங்கள் களிகூர்ந்து மகிழுங்கள் (I பேதுரு 4:13)

**ஞாபகத்துக்கு 5 காரியங்கள்:**

1 இவ்வுலகத்தில் கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். (எபேசி 2:5,12)
2 தீங்கனுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள் (எபி 13:3)
3 வசனத்தைப் போதித்து நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். (எபி 13:7)
4 கேட்டுப் பெற்றுக் கொண்ட வார்த்தைகளை நினைவு கூறுங்கள். (யூதா 17:18; வெளி 3:3)
5 எந்த நிலையில் பின்வாங்கி இருந்ததால் என்பதை நினைத்து மனந்திரும்பு (வெளி 2:5)

**தேட வேண்டிய 4 காரியங்கள்:**

1 முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுங்கள் (மத் 6:33; லூக்கா 12:31)
2 தேவனிடம் கேளுங்கள், தேடுங்கள் (மத் 7:7)
3 சபைக்கு பக்தி விருத்தி உண்டாக நாடுங்கள் (I கொரி 14:12)
4 மேலானவைகளைத் தேடுங்கள் (கொலோ 3:1)

**நிலைத்து நிற்க ஓர் கட்டளை:**

உபதேசித்த முறைமைகளை கிறிஸ்தவ பாரம்பரியத்தை கைக் கொள்ளுங்கள் (II தெச 2:15)

**உறுதியாய் நிற்க மூன்று வழிகள்:**

1 சத்தியம் என்னும் கச்சையை அரையில் கட்டினவர்களாக (எபேசி 6:14-15)
2 நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாக (எபேசி 6:14-15)
3 சமாதானத்தின் சுவிசேஷத்தின் ஆயத்தம் என்ற பாதரட்சையை கால்களில் தொடுத்தவர்களாக (எபேசி 6:14-15)

**5 காரியங்கள் - நிற்பதற்காக:**

1 விசுவாசத்திலே நிலைத்திருங்கள் (I கொரி 16:13)
2 சுயாதீன நிலைமையில் நிலை கொண்டு இருங்கள் (கலா 5:1)
3 ஒரே ஆவியில் உறுதியாய் நின்று இருங்கள் (பிலிப் 1:27)
4 ஒரே ஆத்துமாவினால் உறுதியாய் போராடி நிலைத்திருங்கள் (பிலிப் 1:27)
5 கர்த்தருக்குள் நிலைத்திருங்கள் (பிலிப் 4:1)

**யோசனை செய்ய 8 காரியங்கள் (சிந்திக்க):**

1 தன்னைக் குறித்து மிஞ்சி எண்ணாமல் (ரோமர் 12:3; I கொரி 3:18)

2 உண்மையுள்ளவைகள் எவைகளோ
3 ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ
4 நீதியுள்ளவைகள் எவைகளோ
5 கற்புள்ளவைகள் எவைகளோ
6 அன்புள்ளவைகள் எவைகளோ
7 நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ
8 புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ (பிலிப் 4:8)

<u>சிந்திக்க ஒரு வழி:</u>

தெளிந்த எண்ணமுள்ளவனாய் இருக்க வேண்டும் (ரோமர் 12:3)

<u>பணிந்து போக 5 கட்டளைகள்</u>:

1 ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபேசி 5:21)
2 தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (யாக் 4:7)
3 மனுஷருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியுங்கள் (I பேதுரு 2:13)
4 இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள் (I பேதுரு 5:5)
5 மனைவிகளே உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் (எபேசி 5:22; கொலோ 3:18; I பேதுரு 3:1-6)

<u>12 கவலைப்படுகிறவை - கவலைப் படு:</u>

1 ஜீவியத்தின் தேவைகளுக்காக கவலைப்படாதிருங்கள் (மத் 6:25,31; லூக்கா 12:22-30)
2 நாளைக்காக கவலைப்படாதிருங்கள் (மத் 6:34)
3 ஒப்புக் கொடுக்கப்படும் பொழுது எப்படி என்ன பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள். (மத் 10:19; மாற்கு 13:9-11; லூக்கா 2:11-12; 21:14)
4 என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:29)
5 அடிமையாய் அழைக்கப்பட்டிருந்தால் கவலைப்படாதே (I கொரி 7:21)
6 இந்த கர்த்தருடைய பந்தியை (அவரை) கிறிஸ்துவை நினைவு கூறும்படி செய்யுங்கள் (I கொரி 11:24-26)
7 விசுவாசம் என்னும் கேடகத்தை பிடித்தவர்களாய் நில்லுங்கள் (எபேசி 6:16)
8 இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை அணிந்து கொள்ளுங்கள் (எபேசி 6:17)
9 தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள் (எபேசி 6:17)
10 தேவனுடைய மந்தையை ஆதாயத்திற்காக அல்ல கண்காணிப்பு செய்யுங்கள் (I பேதுரு 5:2)
11 உற்சாக மனதோடு கண்காணிப்பு செய்யுங்கள் (I பேதுரு 5:2)
12 தாழ்ந்த இடத்தில் உட்காருங்கள் (லூக்கா 14:10)

<u>18 “எச்சரிக்கையாயிரு”</u> <u>என்பன - எச்சரிக்கையாயிரு:</u>

1 மனுஷர் காணவேண்டுமென்று உங்கள் தானதர்மத்தை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (மத் 6:1)
2 இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (மத் 18:10)
3 ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (மத் 24:4; மாற்கு 13:5; லூக்கா 21:8)
4 நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள் (மாற்கு 4:24)
5 நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள் (லூக்கா 8:18)
6 உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு (லூக்கா 11:35)
7 உன் சகோதரன் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்தால் அவனைக் கடிந்து கொள் (லூக்கா 17:3)
8 உங்கள் இருதயம் (மதுபான) வெறியினால் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (லூக்கா 21:34)

9 உங்கள் இருதயங்கள் பெருந் திண்டியினால் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (லூக்கா 21:34)
10 லௌகீகக் கவலைகளால் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (லூக்கா 21:34)
11 நீங்களோ (உங்களைக் குறித்து) எச்சரிக்கையாய் இருங்கள் (மாற்கு 13:9; லூக்கா 21:34; அப் 20:28)
12 பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த தமது சபையாகிய மந்தை முழுவதையுங் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (அப் 20:28)
13 தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவன் (I கொரி 10:12)
14 விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவன். (I கொரி 10:12)
15 ஊழியத்தைக் குறித்து அதை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக (கொலோ 4:17)
16 ஒருவரில் ஒருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (கலா 5:15)
17 உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு (I தீமோத் 4:16)
18 தேவனை விட்டு விலகுவதற்கு (பின்வாங்குவதற்கு) ஏதுவான பொல்லாத இருதயம் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (எபி 3:12)

<u>4 நீ செய்வாயாக - நீ செய்</u>

1 உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக (மத் 4:10; லூக்கா 4:8)
2 உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொள்வாயாக. (மத் 4:10)
3 பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக (மத் 5:43; 19:19; மத் 22:39; மாற்கு 12:31; லூக்கா 10:27; ரோமர் 13:9; கலா 5:14)
4 கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்பு கூறுவாயாக (மத் 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27)

<u>8 நீ செய்யாதிருப்பாயாக என்பன - செய்யாதிருப்பாயாக:</u>

1 உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக (மத் 4:7; லூக்கா 4:12)
2 கொலை செய்யாதிருப்பாயாக (மத் 5:21; 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9)
3 விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (மத் 5:27-28; 19:18; லூக்கா 18:20; ரோமர் 13:9)
4 மனுஷர் காணும்படியாக ஜெபம் பண்ண வேண்டாம் (மத் 6:5)
5 களவு செய்யாதிருப்பாயாக (மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9)
6 பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக (மத் 19:18; மாற்கு 10:19; லூக்கா 18:20; ரோமர் 13:9)
7 இச்சியாதிருப்பாயாக (ரோமர் 13:9)
8 போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக (I கொரி 9:9; I தீமோத் 5:18)

<u>2 நடக்கக் கூடாத வழிகள்:</u>

1 புற ஜாதிகள் (பாவிகள்) நடக்கிறது போல நடவாமலிருங்கள் (எபேசி 4:17)
2 ஞானமற்றவர்களைப் போல நடவாதிருங்கள் (எபேசி 5:15)

<u>7 நடக்க வேண்டிய வழிகள்:</u>

1 ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள் (கலா 5:16)
2 அன்பிலே நடந்து கொள்ளுங்கள் (எபேசி 5:2)
3 வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் (எபேசி 5:8-9; I யோவான் 1:7)
4 வேண்டுதலோடு விழித்துக் கொண்டு இருங்கள் (எபேசி 6:18)
5 கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே விசுவாசத்தில் பெருகுவீர்களாக (கொலோ 2:6-7; II கொரி 5:17-18)
6 ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (கொலோ 4:5)
7 யோக்கியமாய் நடந்து சொந்த அலுவல்களைப் பார்த்து வேலை செய்யுங்கள். (I தெச 4:12)

200 பல வேறுபட்ட கட்டளைகள்:

1 தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள் (ரோமர் 12:9)
2 கண்காணியானவன் போதக சமர்த்தனாய் இருக்க வேண்டும்.(I தீமோத் 3:2-7; தீத்து 1:6-9)
3 என்னில் (கிறிஸ்துவில்) நிலைத்திருங்கள். (யோவான் 15:4)
4 பாத்திரமானவன் யாரென்று விசாரித்து அவனிடத்தில் தங்கியிருங்கள். (மத் 10:11-13; மாற்கு 6:10; லூக்கா 9:4;10:5-8)
5 பொய்யாய் குற்றஞ் சாட்டாதிருங்கள். (லூக்கா 3:14)
6 கிறிஸ்தவ (ஒழுக்க நெறிகளை) அன்புடன் கூட்டி வழங்குங்கள். (II பேதுரு 1:5-7)
7 அப்பிரயோஜனமற்ற ஊழியக்காரர் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள். லூக்கா 17:10
8 ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லுங்கள். (கொலோ 3:16)
9 சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக கருதி புத்தி சொல்லுங்கள். (II தெச 3:15)
10 எதிராளியோடு நல்மனம் பொருந்து. (மத் 5:25)
11 என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனசாட்சியை குற்றமாய் எண்ணிவிடக்கூடாது. (I கொரி 10:25-30)
12 தன் தன் சரீரத்தை பரிசுத்தமாக மோக இச்சைக்குட்படாமல் ஆண்டுகொள்ளுங்கள். (I தெச 4:5)
13 துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படலாகாது. (யாக் 3:10)
14 நீங்கள் உபவாசிக்கும் போது உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தை கழுவு. (மத் 6:17)
15 கிறிஸ்து பாடுபட்டபடியால் அந்த சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள். (I பேதுரு 4:1)
16 நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். (ரோமர் 12:19)
17 நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு. கிறிஸ்து உன்னை பிரகாசிப்பார். (எபேசி 5:14)
18 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலா 6:2)
19 விசுவாசத்தில் நிலைத்திருந்து புருஷராய் இருங்கள். (I கொரி 16:13)
20 பொய்யான உபதேசம் செய்பவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமல் இருங்கள். (II யோவான் 10:11)
21 மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். (மத் 3:8; லூக்கா 3:8)
22 கர்த்தருக்கேற்ற போதனையிலும் சிட்சையிலும் பிள்ளைகளை வளர்ப்பீர்களாக. (எபேசி 6:4)
23 பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். (யூதா 20)
24 விருந்து பண்ணும்போது ஏழைகளை அழைப்பாயாக. (லூக்கா 14:13)
25 பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். (எபேசி 6:1; கொலோ 3:20)
26 குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள். (மத் 10:8)
27 பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். (யாக் 4:8)
28 தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள். (ரோமர் 12:9)
29 உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாக (வரி) வாங்காதிருங்கள்.(லூக்கா 3:13)
30 நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்து போங்கள்.(II கொரி 6:17)
31 இவைகளை நீ கட்டளையிட்டு போதித்துக் கொண்டிரு. (I தீமோத் 4:11; 6:2)
32 என்னிடத்தில் கேட்டவைகளை (சத்தியத்தை) போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர் இடத்தில் ஒப்புவி. (II தீமோத் 2:2)
33 உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள். (யாக் 5:16)
34 நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்பொழுது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். (யாக் 1:2)
35 உனக்கு இடறல் உண்டாக்கும் அவயவத்தை தறித்து எறிந்து போடு. (மத் 5:29-30; 18:8-9)
36 கண்காணியானவன் மனச்சாட்சியிலே காத்துக் கொள்கிறவனாகவும் இருக்க வேண்டும். (I தீமோத் 3:8-12)
37 வஞ்சனை செய்யாதிருப்பாயாக. (மாற்கு 10:19)
38 அன்பை நாடுங்கள். ஆவியின் ஞான வரங்களை விரும்புங்கள். (I கொரி 14:1)

39 திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருங்கள். (I பேதுரு 2:2-3)
40 தீர்க்க தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள். (I தெச 5:20)
41 போஜனத்தினாலே யாருக்கும் இடறல் உண்டாக்கி கெடுக்காதே. (ரோமர் 14:15; I கொரி 8:13)
42 தேவனிடத்தில் (நெருங்கி) சேருங்கள். (யாக் 4:8)
43 அமைதலோடே வேலை செய்து சொந்த சாப்பாட்டை சாப்பிடுங்கள். (II தெச 3:12)
44 ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாகப் போராட வேண்டும். (யூதா 3)
45 பாட்டுகளினாலே ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி கொள்ள வேண்டும். (எபேசி 5:19)
46 ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.(I தெச 5:11)
47 இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். (மத் 7:13; லூக்கா 11:24)
48 நீங்கள் விசுவாசம் உள்ளவர்களோயென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். (II கொரி 13:5)
49 தேவ பக்திக்கு ஏதுவான முயற்சி பண்ணு. (I தீமோத் 4:7-8)
50 வேலைக்காரர் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்படிந்திருக்க வேண்டும் என்று புத்தி சொல்லு. (தீத்து 2:9-10)
51 நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். (எபி 3:13)
52 பயப்படாதே, சிறு மந்தையே .... (லூக்கா 12:32)
53 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு. (I தீமோத் 6:12)
54 சாமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கவும் நாடுங்கள். (எபி 12:14)
55 ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ 3:13)
56 சிறு பிள்ளைகள் என்னிடம் வருவதற்குத் தடை பண்ணாதிருங்கள். (மத் 19:14; மாற்கு 10:4; லூக்கா 18:16)
57 அந்நிய பாஷைகளைப் பேசுவதற்குத் தடை பண்ணாதிருங்கள். (I கொரி 14:39)
58 தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். (எபி 13:16)
59 ஏழெழுபது தரம் மட்டும் மன்னிக்கவும். (மத் 18:22)
60 குறையை (ஒருவனுக்கு) அவனுக்கு மன்னியுங்கள். (மாற்கு 11:25-26; லூக்கா 6:37; எபேசி 4:32; கொலோ 3:13)
61 அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால் கவலைப் படாதே. (I கொரி 7:21)
62 உங்கள் மனதின் அரைகளைக் கட்டிக் கொண்டு. (I பேதுரு 1:13)
63 கோபாக்கினைக்கு இடங்கொடாதேயுங்கள். (ரோமர் 12:19)
64 உன் சத்துரு தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங் கொடு. (ரோமர் 12:20)
65 எதிரியானவன் உங்களைக் குறித்து பொல்லாங்கு சொல்வதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத் தக்கதாக. (தீத்து 2:8)
66 உங்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (I கொரி 6:20; உடன் ரோமர் 12:1-2)
67 பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபேசி 4:30)
68 இயேசுக் கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்... (II பேதுரு 3:18)
69 ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள். (யாக் 5:9)
70 உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். (எபி 3:8-15)
71 மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள். (யூதா 22)
72 பாவஞ் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள். (I தீமோத் 5:20)
73 ஏக அன்புள்ளவர்களாய் இருங்கள். (பிலிப் 2:2)
74 அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் கடிந்து கொள்ளுங்கள். (எபேசி 5:11)
75 வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள். (மத் 10:8; லூக்கா 10:9)
76 சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாக இருக்கும்படி அவர்களை சேர்த்துக் கொள்ளுங்கள். (III யோவான் 8)
77 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப் படுங்கள். (யாக் 4:10; I பேதுரு 5:6)
78 புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் (எபேசி 5:25,28; கொலோ 3:19; I பேதுரு 3:7)

79 புருஷர்களே உங்கள் மனைவிகள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள். (கொலோ 3:19)
80 எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். (II தீமோத் 2:25-26)
81 மற்றவர்களை அவர்களுடைய வயதிற்கு ஏற்றவாறு பாவித்து புத்தி சொல்லு. (I தீமோத் 5:1-2)
82 மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். (மத் 7:1; லூக்கா 6:17)
83 வேதத்தில் நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தேவனுக்கு முன்பாக உனக்கு விசுவாசமிருந்தால் இருக்கட்டும். (ரோமர் 14:22-23)
84 அவனவன் தன்தன் சரீரத்தை ஆண்டு கொள்ளும்படி அறிந்திருக்க வேண்டும். (I தெச 4:5)
85 பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்.(மத் 6:19)
86 பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். (மத் 6:20)
87 நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். (I தீமோத் 6:12)
88 புருஷனானவன் தன் தாய் தகப்பனை விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். (மத் 19:5; மாற்கு 10:7; எபேசி 5:31)
89 கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். (லூக்கா 6:35)
90 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். (கொலோ 3:9)
91 நெகிழ்ந்த கைகளைத் திரும்ப நிமிர்த்துங்கள். (எபி 12:12)
92 அவனவன் தனக்கானவைகளை அல்ல பிறனுக்கானவைகளை நோக்குவானாக.(பிலிப் 2:4)
93 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (எபி 12:15)
94 யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி விடாதபடி எச்சரிக்கையாய் இருங்கள். (எபி 12:15)
95 ஒருவனும் வேசிக் கள்ளனாக இராதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். (எபி 12:16-17)
96 பூரண பலனைப் பெறும்படி எச்சரிக்கையாய் இருங்கள்.(II யோவான் 8)
97 நித்திய ஜீவனுக்கேதுவாக கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்.(யூதா21
98 பொல்லாங்கானவைகளை இச்சியாதிருங்கள். (I கொரி 10:6)
99 மரம் நல்லதென்றோ கெட்டதென்றோ அதின் கனியினால் சொல்லுங்கள். (மத் 12:33)
100 துர் இச்சைகளுக்கு இடமாக உடலை பேணாமல் இருங்கள். (ரோமர் 13:14)
101 உன் ஊழியத்தை நிறைவேற்று (II தீமோத் 4:5)
102 உங்கள் வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். (எபி 12:13)
103 உபதேசத்திற்கு விரோதமாக இடறல்களை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (ரோமர் 16:17; பிலிப் 3:17)
104 வசனத்திற்கு ஒருவன் கீழப்படியாமற்போனால் அவனோடே கலவாதிருங்கள்.(II தெச 3:14)
105 உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப் படாதிருங்கள். (I யோவான் 3:13)
106 எஜமான்களே வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளை (நன்மை) செய்யுங்கள். (எபேசி 6:9; கொலோ 4:1)
107 (உனக்கு அளிக்கப்பட்ட உபதேசத்தை வரத்தை) இவைகளையே சிந்தித்துக் கொண்டு இவைகளிலே நிலைத்திரு. (I தீமோத் 4:15)
108 மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் இருங்கள். (ரோமர் 12:16)
109 நல்ல உக்கிராணக்காரர் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். (I பேதுரு 4:10)
110 மாம்ச இச்சையை உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப் போடுங்கள். (கொலோ 3:5; ரோமர் 8:12-13)
111 நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் (இருதயத்தில்) இருங்கள். (லூக்கா 12:29)
112 தன் சகோதரனை வஞ்சியாமலும் இருப்பானாக. (I தெச 4:6)
113 உனக்கு அளிக்கப்பட்ட ஆவியின் வரங்களைப் பற்றி அசதியாய் இராதே. (I தீமோத் 4:14 உடன் II தீமோத் 1:16)
114 உங்களை (ஆளுகிறவர்களை) நடத்துகிறவர்களுக்கு கீழ்படிந்து அடங்குங்கள் (எபி 13:17)
115 உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. (மத் 5:39; லூக்கா 6:29)
116 ஒருவன் மேலும் சீக்கிரமாய் கை வைக்காதே. (I தீமோத் 5:22)

117 அன்பு கூறுகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்குக் கடன்படாதிருங்கள். (ரோமர் 13:8)
118 தீமையை நன்மையினால் வெல்லு. (ரோமர் 12:21)
119 பயத்துடனே நடந்து கொள்ளுங்கள். (I பேதுரு 1:47)
120 எவனுக்கு வரி செலுத்தவேண்டுமோ அவனுக்கு வரி செலுத்துங்கள். (ரோமர் 13:6)
121 எவனுக்கு தீர்வை செலுத்த வேண்டுமோ அவனுக்குத் தீர்வை செலுத்துங்கள். (ரோமர் 13:7)
122 எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள். (ரோமர் 15:11)
123 பிரசங்கியுங்கள். (மத் 10:7; மாற்கு 16:15; II தீமோத் 4:2)
124 உங்கள் சரீரங்களை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கவேண்டும். (ரோமர் 12:1)
125 யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். (ரோமர் 12:17)
126 பிதாக்களே பிள்ளைகளை கோபப்படுத்தாதிருங்கள். (எபேசி 6:4; கொலோ 3:21)
127 பழைய புளித்த மாவை புறம்பே களித்துப் போடுங்கள். (I கொரி 5:7)
128 உங்கள் இருதயங்களைப் பரிசுத்தப் படுத்துங்கள். (யாக் 4:8)
129 இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரித்துப் புத்தி சொல்லு. (II தீமோத் 2:14)
130 (பரிசுத்த) ஆவியை அவித்துப் போடாதிருங்கள். (I தெச 5:19)
131 மரித்தோரை (உயிரோடே) எழுப்புங்கள். (மத் 10:8)
132 விசுவாசத்தில் பலவீனமுள்ளவனை சேர்த்துக் கொள்ளுங்கள். (ரோமர் 14:1)
133 ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள். (ரோமர் 15:7)
134 வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். (யாக் 1:21)
135 அப்படியே நீங்களும் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6:11)
136 இயேசுக் கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்து இருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6:11)
137 தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். நீங்களே இதை நிதானித்துப் பாருங்கள். (I கொரி 10:15)
138 காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். (எபேசி 5:16; கொலோ 4:5)
139 வேதப் புரட்டனாய் இருக்கிறவனுக்கு புத்தி சொன்ன பின்பு அவனை விட்டு விலகு. (தீத்து 3:10)
140 இளவயதுள்ள விதவைகளை அந்தக் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளாதே. (தர்ம பணத்தில் உதவி பெறுவதிலிருந்து) (I தீமோத் 5:11)
141 எல்லா மனிதர்களுக்கும் அவர்கள் செய்ய வேண்டிய 7 காரியங்களை நினைப்பூட்டுவாயாக. (தீத்து 3:1-2)
142 தீமைக்குத் தீமையை சரிக்கட்டாமல் ஆசீர்வதியுங்கள். (I பேதுரு 3:9; ரோமர் 12:17)
143 மனந்திரும்புங்கள் (மத் 3:2; மாற்கு 1:15; அப் 2:38; 3:19; வெளி 2:6; 3:19)
144 தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். (மத் 5:38-39)
145 பிசாசானவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (யாக் 4:1; I பேதுரு 5:9)
146 ஒருவன் குற்றத்தில் அகப்பட்டால் சாந்தமுள்ள ஆவியோடே அவனை சீர் பொருந்தப் பண்ணுங்கள். (கலா 6:1)
147 நீங்கள் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடுங்கள். (I கொரி 9:24)
148 வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். (லூக்கா 10:4)
149 உங்களை நடத்துகிறவர்களை (ஆளுபவர்களை) வாழ்த்துங்கள். (எபி 13:24)
150 கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயத்திலே பரிசுத்தப் படுத்துங்கள். (I பேதுரு 3:15)
151 சிலருக்கு இரக்கம் பாராட்டி பயத்தோடே இரட்சியுங்கள். (யூதா 23)
152 வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். (யோவான் 5:39)
153 என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள். (லூக்கா 12:23)
154 உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள். (லூக்கா 12:33)
155 ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து விடுவது நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோமர் 12:1)

156 வேலைக்காரரே உங்கள் எஜமான்களாய் இருக்கிறவர்களுக்கு கீழ்படிந்து தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். (எபேசி 6:5-8; கொலோ 3:22-25; I பேதுரு 2:18)

157 தீர்ப்பு செய்கிறதற்கு சபையில் அற்பமாய் எண்ணப்படுகிறவர்களை நியமித்துக் கொள்ளுங்கள். (I கொரி 6:4)

158 பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ 3:2)

159 உங்களை ஏற்றுக் கொள்ளாமல் உங்கள் வார்த்தைகளைக் கேளாமல் போனால் ஊரை விட்டுப் புறப்படும் போது உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள். (மத் 10:14; மாற்கு 6:11; லூக்கா 9:5; 10:10-11)

160 மற்ற ஊழியர்களிடத்திலும் அன்பு காட்டுங்கள். (லூக்கா 9:49,50)

161 உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பித்துக் கொள். (தீத்து 2:7)

162 தீத்துவுடைய 4 நற்கிரியைகளின் மாதிரியை காட்டுக. (தீத்து 2:7-8)

163 நீங்கள் பாவஞ்செய்யாமல் தெளிந்தவர்களாய் இருங்கள்.(I கொரி 15:34)

164 உங்கள் இருதயத்திலே பக்தியுடன் பாடுங்கள். (கொலோ 3:16)

165 சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு. (II தீமோத் 2:26)

166 நியாயத்தீர்ப்பு அடையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி அதற்கேற்றபடி செய்யுங்கள். (யாக் 2:12)

167 அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். (எபேசி 4:25)

168 ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. (தீத்து 2:1)

169 சகோதர ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள். (யாக் 4:11)

170 உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். (யாக் 5:8)

171 தளர்ந்த முழங்கால்களைத் திரும்ப நிமிர்த்துங்கள். (எபி 12:12)

172 சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள். (பிலிப் 1:27)

173 அமைதலாயிருக்கும்படி நாடுங்கள். (I தெச 4:11)

174 தேவனுக்கு முன்பாக உன்னை உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இரு. (I தீமோத் 2:15)

175 பலவீனரைத் தாங்குங்கள். (I தெச 5:14)

176 தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். (I தெச 5:15)

177 சத்தியம் பண்ணாதிருங்கள். (யாக் 5:12; மத் 5:33-36)

178 போஜனம் பண்ணக் கூடிவரும் பொழுது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். (I கொரி 11:33)

179 உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள். (லூக்கா 24:49; அப் 1:4-8)

180 ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு தேவனை ஸ்தோத்தரியுங்கள். (கொலோ 3:16)

181 வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும் வேண்டிக் கொண்டபடியே செய்வாயாக. (I தீமோத் 1:3)

182 உன் சகோதரன் குற்றஞ் செய்தால் அவனிடம் தனியாக அதை மட்டும் முதலாவதாக அவனிடம் சொல்லி உணர்த்து. (மத் 15:15-17)

183 நீ ஊழியம் செய்யும்பொழுது உன்னுடைய தேவைகளுக்காக தேவனை விசுவாசித்து நம்பு. (மத் 10:9; லூக்கா 9:3; 10:4)

184 கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். (எபேசி 5:17)

185 இந்த சுயாதீனத்தை மாம்சத்திற்கு ஏதுவாக (பாவம் செய்யும்படி) அனுசரியாமல் இருங்கள். (கலா 5:13; I பேதுரு 1:16)

186 முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். (I பேதுரு 4:9)

187 ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள். (I தெச 5:14)

188 விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். (மத் 24:42; 25:13; மாற்கு 13:33-35; லூக்கா 21:36; எபேசி 6:18; கொலோ 4:2)

189 எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாக இரு. (II தீமோத் 4:5; I கொரி 16:13)

190 அழுகிறவர்களுடனே அழுங்கள். (ரோமர் 12:15)

191 ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும்.
(II தெச 3:6,14)

192 கெட்ட சிந்தையுள்ளவர்களை விட்டு விலகு. (I தீமோத் 6:3-6)

193 ஸ்தீரிகளும் கண்காணிகளும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
(I தீமோத் 3:1)

194 மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். (எபேசி 5:22)

195 உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்ய வேண்டும். (I தெச 4:11-12)

196 ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது.
(II தெச 3:10-11)

197 உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். (பிலிப் 2:12)

198 நீங்கள் உங்கள் அவயவங்களைப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். (ரோமர் 6:13)

199 உங்கள் அவயவங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். (ரோமர் 6:13)

200 நீதிக்குரிய அவயவங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். (ரோமர் 6:13)

# புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்கள் (வெளி 22:20)

## மத்தேயு சுவிசேஷத்திலுள்ள வாக்குத்தத்தங்கள்:

1 பாவங்களை நீக்கி இரட்சிப்பு (மத் 1:21)

2 ஆவியினால் ஞானஸ்நானம் (3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; 24:49; யோவான் 1:33; 7:37-39; அப் 1:5,8; 2:17-21, 38-39; 11:16: கலா 3:14)

3 வார்த்தையினால் ஜீவன் (மத் 4:4; லூக்கா 4:4)

4 தூதர்களால் பாதுகாப்பு (மத் 4:6; லூக்கா 4:10-11; எபி 1:14)

5 ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் வல்லமை (மத் 4:19; மாற்கு 1:17)

6 பரலோக இராஜ்ஜியம் (மத் 5:3,10; 7:21; 8:11; 19:14; 25:34; மாற்கு 10:14; லூக்கா 6:20; 12:32; 13:29; 18:16; யாக்கோபு 2:5)

7 ஆறுதல் (மத் 5:4; லூக்கா 6:21; 2 கொரி 1:4,7; 7:6)

8 பூமி, ஓர் சுதந்திரம் (மத் 5:5)

9 நீதியால் நிரப்பப்படுதல் (மத் 5:6; லூக்கா 6:21)

10 இரக்கம் (மத் 5:7; லூக்கா 1:50; யாக்கோபு 5:11)

11 தரிசனமான தேவன் (மத் 5:8; வெளி 22:4)

12 குமாரத்துவம் (மத் 5:9,45; லூக்கா 6:35; யோவான் 1:12; ரோமர் 8:14;16; கலா 3:7-9,26; எபி 3:6; 1யோவான் 3:2,10)

13 நீதியினிமித்தம் துன்பப்படுதலுக்கு ஆசீர்வாதம் (மத் 5:11)

14 மகத்தான ஈவுகள் (மத் 5:12; 6:4,6,18;10:42; மாற்கு 9:41; லூக்கா 6:23;35;14:14; யோவான் 4:36; 1கொரி 3:8-15; 15:58; எபி 10:35; யாக் 1:25)

15 மகத்துவம் (மத் 5:19; 18:4; லூக்கா 9:48)

16 பாவ மன்னிப்பு (மத் 6:14; 12:31; 18:35; மாற்கு 11:25-26; லூக்கா 5:24; அப் 10:43; 13:38-39; 26:18; ரோமர் 3:25; 4:7-8; எபே 1:7; கொலோ 1:14; 1யோவான் 1:9;2:12)

17 ஜீவியத்திற்கு அவசியமானவை (மத் 6:30;33; லூக்கா 11:9-13;12:31)

18 ஜெபங்களுக்கு பிரதி உத்தரங்கள் (மத் 7:7-11; 17:20; 18:19; 21:21-22; மாற்கு 9:23;11:22-24; லூக்கா 11:1-13; 18:1-8; யோவான் 14:12-14;15:7;16; 16:23-26; ரோமர் 8:32; எபி 11:6; யாக் 1:17; 1 பேதுரு 3:12; 1 யோவான் 3:20-22; 5:14-15)

19 எல்லா நல்ல ஈவுகள் (7:11)

20 கலகக்காரருக்கு நரக ஆக்கினை (மத் 7:22-23; 8:11-12; 13:41-42,49-50; 25:41,46; மாற்கு 9:42-49; லூக்கா 3:17; 12;46; 1 கொரி 3:17; 6:9,13; யாக் 2:13; 2 பேதுரு 2:12-13; வெளி 14:9-11; 20:10-15; 21:8; 22:15 உடன் ஏசாயா 66:22-24)

21 சரீர சொஸ்தமாக்குதல் (மத் 8:18; 9:29; 13:15; 17:20; 21-22; மாற்கு 9:23; 11:22-24; 16:15-20; லூக்கா 4:18; யோவான் 10:10; 14:12; அப் 28:27; ரோமர் 8:11; யாக் 5:14-16; 1 பேதுரு 2:24)

22 விசுவாசத்தின் படி ஜெபத்திற்கு உத்தரவுகள் (மத் 9:29; எபி 11:6; யாக் 1:5-8)

23 நரகத்தில் ஆக்கினையின் அளவுகள் (மத் 10:15;11:22-24;12:41-42;23:14)

24 தூண்டுதல் (மத் 10:19; லூக்கா 12:12)

25 ஆவியில் விதைக்கப்பட்ட ஜீவியத்தின் முடிவின் இரட்சிப்பு (மத் 10:22; 24:13; மாற்கு 13:13; ரோமர் 6:16-23; 8:23-25; கலா 6:7-8; 1 பேதுரு 1:5,9,13)

26 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (10:23; 16:27; 23:39; 24:27-31; 25:31-46; 26:54; மாற்கு 13:24-27; 14:62; லூக்கா 21:27-28; அப் 1:11; 3:20-21; ரோமர் 11:26; 2 தெச 1:7-10; 2:8-12; தீத்து 2:13; எபி 9:28; 10:37)

27 எல்லா இரகசியமும் வெளியரங்கமாகுதல் (10:26; லூக்கா 12:3; மாற்கு 4:22; ரோமர் 2:12-16)

28 தெய்வச் செயல் (10:29; லூக்கா 12:6,24,28; ரோமர் 8:28-30; 1 பேதுரு 5:7)

29 தெய்வீக அங்கீகாரம் (10:32; லூக்கா 12:8; வெளி 2:5)

30 தெய்வீக மறுப்பு (10:33; மாற்கு 8:38; லூக்கா 9:26; 12:9)

31 ஜீவன் அல்லது மரணம் (10:39; 16:25; மாற்கு 4:35; லூக்கா 9:26; 12:9)

32 தீர்க்கதரிசிகளுக்கு பலன் (10:41)

33 நீதிமானுக்கு வரும் பலன் (10:41)

34 ஆத்துமா இளைப்பாறுதல் (11:28-30; எபி 4:9)

35 மன்னிக்கக் கூடாத ஒரே பாவம் (12:32; மாற்கு 3:28; லூக்கா 12:10)

36 நுட்ப விவரங்களுக்கு ஆக்கினை (12:36-37; 15:13; மாற்கு 9:47; ரோமர் 2:16)

37 பெறுகுகிற அல்லது குறைகிற ஆசீர்வாதங்கள் (13:12; 25:29; மாற்கு 4:24-25; லூக்கா 8:18; 19:26)

38 கீழ்ப்படிதலினால் மனந்திரும்புதல் (13:15; அப் 3:19; யாக் 5:19-20)

39 நீதிமான்கள் உயர்த்தப்படுதல் (13:43)

40 நல்லவற்றையும் தீயவைகளையும் பிரித்தெடுத்தல் (13:41-43,49-50)

41 ஒரு சபையைக் கட்டுதல் (16:18)

42 ஒரு வெற்றி காணும் சபை (16:18)

43 கட்டுகிறதற்கும் கட்டவிழ்ப்பதற்கும் வல்லமை (16:19; 18:18; யோவான் 14:12; 20:23)

44 கிரியைக்குத் தக்கதாக பலன் (16:27; 1கொரி 3:11-15; 2கொரி 5:10)

45 அளவற்ற வல்லமை (17:20; 18:18; மாற்கு 9:23; 11:22-24; 16:15-20; லூக்கா 10:19; 17:6; 24:49; யோவான் 14:12; அப் 1:8)

46 கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதல் (18:5; லூக்கா 9:48)

47 காணமற் போனவற்றிற்கு இரட்சிப்பு (18:11; லூக்கா 5:32; யோவான் 5:25; 10:9; வெளி 22:17)

48 இப்பொழுதே தெய்வீக பிரசன்னம் (18:20; 20:23) இனி மேலும் (வெளி 7:15; 21:3-7)

49 பிரபஞ்சத்து ஆசீர்வாதங்கள் (19:29; மாற்கு 10:30; லூக்கா 18:30; மத் 21:21-22)

50 நித்திய ஜீவன் (19:29; மாற்கு 10:30; லூக்கா 18:29-30; யோவான் 3:15-16,36; 4:14; 5:24; 6:27 கவனத்திற்கு 47,50,58; 8:51; 10:27-29; 20:31; ரோமர் 2:7; 6:22-23; தீத்து 1:2; 1 யோவான் 2:25; 5:11-12)

51 தாழ்மையினால் மேன்மை (19:30; 20:16; 23:12; மாற்கு 10:31; லூக்கா 13:30; 14:11; 18:14; யாக் 4:10; 1பேதுரு 5:6)

52 மீட்கும் பொருள் (20:28; மாற்கு 10:45; 1 தீமோத் 2:6)

53 உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. (22:30; மாற்கு 12:25; லூக்கா 20:35)

54 தேவனுடைய வார்த்தைகள் என்றும் மாறாதவை (24:35; மாற்கு 13:31; லூக்கா 21:33; 1பேதுரு 1:25)

55 பரிசுத்தவான்களுடைய ஆளுகை (25:21,23; 1கொரி 6:2-3; 2 தீமோத் 2:12; வெளி 5:10)

56 பாவ நிவாரணம் (26:28; லூக்கா 22:19-20; யோவான் 1:29; ரோமர் 3:25; 5:11; எபேசி 1:7)

57 மறுமைக்கான ஆகாரம் (26:29; மாற்கு 14:25; லூக்கா 22:16,18,30; வெளி 2:7,17; 7:11; 19:7-10)

பின்வரும் தலைப்புகளின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்கள் முன்னால் கூறப்பட்ட தலைப்புகளின் கீழ் அட்டவணைப்படுத்தப் பாடாதது மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

## மாற்கு சுவிசேஷத்தில் வாக்குத்தத்தங்கள்:

58 விதைக்கிறதையே அறுப்பான் (4:24; லூக்கா 6:38; கலா 6:7-8)

59 துன்பப்படுதல் (10:30)

60 சுவிசேஷத்தின் அடையாளங்கள் (16:15-20)

## லூக்கா சுவிசேஷத்தில் வாக்குத்தத்தங்கள்:

61 கிறிஸ்துவுக்கும் அவருடைய பரிசுத்தவான்களுக்கம் ஒரு முடிவில்லாத நித்திய இராஜ்ஜியம் (1:32-33; 12:32; வெளி 5:10; 11:15; 22:4-5)

62 சத்துருக்களினின்றும் இரட்சிப்பு (1:74)

63 சமாதானம் (1:79; யோவான் 14:27; 16:33)

64 சந்தோஷம் (2:10-11; 1பேதுரு 4:13-14)

65 (மாம்சமான யாவருக்கும்) தேவனுடைய இரட்சிப்பு (3:6; அப் 10:35; 13:26,47; 15:17;28:28; ரோமர் 1:16; 10:9-13; கலா 3:22)

66 அனுக்கிரக வருஷம் (காலம்) (4:18-19; 2 கொரி 6:2)

67 மனுஷருடைய ஜீவனுக்கு இரட்சிப்பு (9:56;21:18)

68 (விசாரணைக்காரனது) பொறுப்பு (12:48)

69 சரீரத்தின் சாகாவரம் (20:36; ரோமர் 2:7; 1கொரி 15:42-54; 2கொரி 5:1-8)

70 ஞானம் (21:15; யாக் 1:5)

71 சகல பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் (21:36; யோவான் 14:1-3; 16:16; 1கொரி 15:23;51-58; எபேசி 5:27; பிலிப் 3:21; கொலோ 3:4; 1தெச 3:13; 4:13-17; 5:9-10,23; 2 தெச 2:7; யாக் 5:7; 1யோவனர் 3:2)

## யோவான் சுவிசேஷத்தில் வாக்குத்தத்தங்கள்:

72 ஆக்கினையிலிருந்து நித்திய மீட்பு (3:16-18; ரோமர் 8:1; எபி 9:13-16)

73 பசியோ தாகமோ இல்லாத ஒரு நிலைமை (4:14; 6:35)

74 எல்லா மனிதருக்கும் உயிர்த்தெழுதல் (5:28-29; 6:40,44; 14:19; அப் 24:15; 1கொரி 6:14; 15:20-58)

75 நம்பிக்கையின் பூரண நிச்சயம் (6:37; பிலிப் 1:6; 2 தீமோத் 1:12; 2:11-13; எபி 6:1-20; 1 பேதுரு 1:5,9,13)

76 உள்ளே வாசம் செய்யும் கிறிஸ்து (6:56-57)

77 உபதேசம் (அறிவு) (7:17; 14:20,26; 1 கொரி 1:30; 2:12; 12:8-11)

78 உலகத்திற்கு (ஜீவ) ஒளி (8:12)

79 விடுதலை (8:32,36)

80 கனம் (பண்ணுதல்) (12:26; ரோமர் 2:8-10)

81 பொதுவான கையளித்தல் (12:32)

82 வாசஸ்தலங்கள் (14:1-3)

83 பெரிய (மகத்தான) கிரியைகள் (14:12)

84 பிதாவுக்கு அன்பு (14:21)

85 தேவனுடைய வெளிப்பாடு (14:21)

86 வாசம் செய்யும் பிரசன்னம் (14:23; 15:10; பிலிப் 4:9)

87 சுத்திகரித்தல் (சுத்தம் செய்தல்) (15:2)

88 கனி கொடுத்தல் (15:5; 2 பேதுரு 1:8)

89 பரிசுத்த ஆவியானவர் (அளவின்படியே) (16:7-13; ரோமர் 8:14-16; எல்லா நிறைவின்படியே லூக்கா 11:13; 24:49; யோவான் 7:37-39; 14:12-18,26; அப் 1:8; 2:16-21,38; 5:32)

90 (வழி) நடத்துதல் (16:13-15)

## அப்போஸ்தலர் நடபடிகளில் வாக்குத்தத்தங்கள்:

91 நீதிமானாகுதல் (13:38-39; ரோமர் 2:13; 3:24-28; 5:1-2; 8:33; கலா 2:16; 3:24)

92 இஸ்ரவேலரின் மீட்பு (15:16-17; ரோமர் 15:25-29; மத் 24:31; மாற்கு 13:27)

93 தேவனுடைய அருகாமை (17:27; எபே 2:13; யாக் 4:8)

94 பக்தி விருத்தி (20:32)

95 நித்தியமான சுதந்திரம் (26:17; 1 கொரி 2:9; எபே 1:1; 1 பேதுரு 1:4; வெளி 21:7)

96 (அடிமைத்தனத்திலிருந்து) விடுதலை (26:18; ரோமர் 8:21)

## ரோமர் நிருபத்தில் வாக்குத்தத்தங்கள்:

97 தேவனுடைய நல்ல தயவு (2:4; 11:22)

98 நீதியுள்ள தீர்ப்பு (2:6, 12-16; 8:33; 1 கொரி 3:11-15; 4:5; 11:31)

99 உக்கிர கோபாக்கினை (2:8-9)

100 மகிமை, கனம் (2:10; 8-18)

101 தேவனுடைய பட்சபாதமின்மை (2:11)

102 தேவ நீதி (3:22; 4:5,16,24; 5:19; 1கொரி 1:30)

103 கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு, கிரியைகளினால் உண்டானதல்ல (3:24-31; எபேசி 2:8-9; 2 தெச 2:13; தீத்து 2:11-12)

104 எல்லா மனிதருக்கும் தேவன் (3:29-30)

105 கோபாக்கினைக்கு நீங்கலாக இரட்சிப்பு (5:9-10)

106 ஜெயம் (5:17; 8:4,13; 8:37; 2கொரி 2:14; 1யோவான் 5:4)

107 அதிகமாய் பெருகின கிருபை (5:20-21)

108 புதுமையான ஜீவன் (6:5,8)

109 ஆவியின் சிந்தை (8:6)

110 சிருஷ்டி புதுப்பிக்கப்படுதல் (8:21; எபேசி 1:10,12; வெளி 3:7; 22:3)

111 தெய்வீகமான உதவி (8:26-27,31,34; 14:4; 1கொரி 10:13)

112 சீக்கிரமாகவே நிறைவேறும் காரியம் (9:28)

113 புறஜாதிகளுக்கு இரட்சிப்பு (9:25-26; 11:11-12; 15:21)

114 இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு (9:27; 11:23-29; எபி 8:10-12; 10:17)

115 தைரியம் கிறிஸ்துவைப் பற்றி வெட்கப்படுவதில்லை (9:33; 10:11; 1பேதுரு 2:6)

116 கிறிஸ்துவில் நியாயப்பிரமாணத்தின் முடிவு (10:4)

117 எல்லா மனிதருக்கும் சமீபமாய் வார்த்தை இருக்கிறது (10:8)

118 இரட்சிப்பின் எளிமை(10:9-10; 1கொரி 15:2; 1யோவான் 1:9; 2தெச 2:13)

119 விசுவாசம் (10:17; 1கொரி 12:9)

120 பரிசுத்தம் (11:16; எபேசி 1:4; 5:27; கொலோ 1:22 உடன் எபி 12:14)

121 தேவன் மாறாதவர் (11:29)

122 கோபாக்கினை (12:19)

123 ஆசீர்வாதம் அல்லது சாபம் (13:2-3)

124 நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம் (14:17)

125 ஆளும்படிக்கு எழும்புகிற மேசியா (15:12)

126 சாத்தானுடைய தோல்வி நசுக்கிப் போடுவார். (16:20; உடன் வெளி 12:7-12; 20:1-10)

## 1 கொரிந்தியர் நிருபத்தில் வாக்குத்தத்தங்கள்:

127 முடிவுபரியந்தம் ஸ்திரப்படுத்துதல் (1:8)

128 அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1:9; 10:13; 1தெச 5:24; 2 தெச 3:3; எபி 10:23; 13:5)

129 கிறிஸ்துவே, நமக்கு ஞானம், நீதி, பரிசுத்தமும், மீட்பும் ஆனார். (1:30)

130 அளவற்ற ஆசீர்வாதங்கள் உங்களுடையதே. (3:21-23; எபேசி 1:3)

131 ஒன்பது ஆவிக்குரிய வரங்கள் (12:8-11)

132 ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் (12:13)

133 ஒருக்காலும் ஒழியாத (நித்தியமான) அன்பு (13:8)

134 நிறைவு (பரிபூரணம்) (13:10; 1பேதுரு 5:10)

135 அறியப்பட்டிருக்கிறபடியே அறிவோம். (13:12; 15:35-54)

136 பூமியிலே கலகத்தை அழித்து கீழப்படுத்துவார். (15:24-28; எபேசி 1:10; வெளி 21:22)

137 பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் (15:26)

## 2 கொரிந்தியரில் வாக்குத்தத்தங்கள்:

138 வாக்குத்தத்தங்கள் அனைத்தும் உண்மையானவை ‘ஆம்’ என்றும் ‘ஆமென்’ என்றும் (1:20)

139 கர்த்தரிடத்தில் திரும்பும்போது அந்த முக்காடு எடுபட்டுப்போம். (3:16)

140 விடுதலை (3:17; கலா 5:13)

141 மகிமையாய் மறுரூபப்படுகிறோம் (3:18)

142 புறம்பான மனுஷன் அழிந்து உள்ளான மனுஷன் புதிதாக்கப்படுகிறது. (4:16-17)

143 தெய்வீக ஐக்கியம் (6:16; எபி 8:10; யாக் 4:8; 1யோவான் 1:7; வெளி 3:20)

144 தெய்வீகமான ஏற்றுக் கொள்ளுதல் (6:17)

145 தெய்வீகமான பிதா (6:18; மத் 7:11; லூக்கா 11:13; எபி 12:5-10)

146 ஐசுவரியம் (8:9)

147 பெருக்கமான அறுவடை(9:6)

148 எல்லாவற்றிலும் பூர்த்தி (9:8)

149 என்றென்றும் நிற்கும் (நித்தியமான) (நீதி 9:9)

150 நீதியின் விளைச்சல் வர்த்திக்கப்படுதல் (9:10)

151 சம்பூரணமுள்ளவர்கள் ஆனது (9:11)

152 ஆவிக்குரிய போராயுதங்கள் (10:4-5; எபேசி 6:10-18)

153 பூரணமான பலம் (12:9)

154 தேவனுடைய வல்லமையால் பிழைத்திருத்தல் (13:4)

## கலாத்தியரில் வாக்குத்தத்தங்கள்:

155 பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுவித்தல் (1:4)

156 ஆபிரகாமுடைய ஆசீர்வாதம் (3:14)

157 ஆபிரகாமின் சந்ததி (3:29; ரோமர் 8:17; தீத்து 3:7)

158 புத்திர சுவிகாரத்தை அடையும்படி (4:5-7;31; எபேசி 1:5)

159 பாவத்திற்கு நித்திய மரணம் (5:21)

## எபேசியரில் வாக்குத்தத்தங்கள்:

160 பாவ மன்னிப்பாகிய மீட்பு (1:7; கொலோ 1:14; எபி 2:9-15; 9:11-15)

161 சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும். (1:10; அப் 3:21; 1கொரி 15:24-28; வெளி 21)

162 தைரியமும் சேரும் சிலாக்கியமும் (12:18; 3:12; எபி 4:14-16; 10:19-23)

163 ஒரே நகரத்தாரும் ஒரே வீட்டாரும் பரலோக குடியுரிமை (2:19; பிலிப் 3:20)

164 தேவனுடைய அளவற்ற வல்லமை (3:20)

165 மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரை (4:30; 1:13; யோவான் 6:21; ரோமர் 4:11; 2கொரி 1:22)

166 பரிசுத்தமாகுதல் (5:26; எபி 10:10)

167 நீடித்த வாழ்நாள் (தீர்க்காயுசு) (6:3)

## பிலிப்பியர் & தீமோத்தேயு நிருபங்களில் வாக்குத்தத்தங்கள்:

168 தேவ சமாதானம் காத்துக் கொள்ளும் (4:7)

169 குறைவையெல்லாம் நிறைவாக்குவார். (பிலிப் 4:19)

170 எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று சித்தமுள்ளவராயிருக்கிறார். (1 தீமோத் 2:4; 2 பேதுரு 3:9; வெளி 22:17)

171 தேவ பக்தியின் ஆதாயம் (1 தீமோத் 4:8)

172 பலம், அன்பு, தெளிந்த புத்தி (2 தீமோத் 1:7)

173 கனமும்(பிரயோஜனமும்) உபயோகம் (2 தீமோத் 2:21)

174 நீதியின் கிரீடம் (2 தீமோத் 4:8)

## எபிரெயரில் வாக்குத்தத்தங்கள்:

175 பணிவிடை ஆவிகள் (1:14)

176 சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய (2:18)

177 கிறிஸ்துவினிடத்தில் பங்கு (3:14)

178 பிரதான ஆசாரியர் (4:14-16; 6:20)

179 முற்று முடிய இரட்சிப்பு (7:25)

180 ஓர் சிறந்த உடன்படிக்கை (எபி 1:6)

181 புது உடன்படிக்கை (8:8-12; 10:16-17)

182 தேவனுடைய சமூகத்திலே பிரத்தியட்சமாகும்படி (9:24)

183 பரலோகத்தில் நிலையுள்ளதும் மேன்மையுள்ளதுமான சுதந்திரம் (10:34)

184 பரிசுத்தமான பரம தேசம் (11:10-16;13:14)

185 விசேஷித்த நன்மையானதொன்றை (11:40)

186 சிட்சித்து (புத்திமதி) சிட்சை (12:6,11; வெளி 3:19)

187 இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். (13:8)

## யாக்கோபு எழுதிய நிருபத்தின் வாக்குத்தத்தங்கள்:

188 அவரிடத்தில் யாதொரு மாறுதலுமில்லை (1:17)

189 தேவனிடத்தில் கேட்கக் கடவன் (1:5-8; எபி 11:6; மத் 21:21-22)

190 ஜீவ கிரிடம் (1:12; வெளி 2:10)

191 கிருபை (4:6; 1பேதுரு 1:13; 5:5)

192 சாத்தானுக்கு எதிர்த்து நின்றால் அவன் உங்களை விட்டு ஓடிப் போவான். (4:7; 1 பேதுரு 5:8-9)

193 துன்பப்படுகிறவர்களுக்கு கர்த்தர் மிகுந்த இரக்கமுள்ளவராயிருக்கிறார். (யாக் 5:11)

## <u>I,II பேதுரு எழுதின் நிருபங்களின் வாக்குத்தத்தங்கள்:</u>

194 மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள் (1 பேதுரு 1:23; 1 யோவான் 5:1)

195 மகிமையின் கிரீடம் (1 பேதுரு 5:4)

196 தேவ பக்திக்கு வேண்டிய யாவற்றையும் (2 பேதுரு 1:3)

197 அருமையான வாக்குத்தத்தங்களும் (2 பேதுரு 1:4)

198 தேவ பக்தியோடே (2 பேதுரு 1:7)

199 உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி (2 பேதுரு 1:4)

200 ஒருக்காலும் இடறி விழுவதில்லை (பாதுகாப்பு) (2 பேதுரு 1:10)

201 நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் (2 பேதுரு 1:11)

202 புதிய வானமும் புதிய பூமியும் (2 பேதுரு 3:13; வெளி 21:22)

## <u>I,II யோவான் நிருபங்களின் வாக்குத்தத்தங்கள்:</u>

203 சகல பாவங்களை நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7,9)

204 பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவர் (1 யோவான் 2:1-2)

205 நியாயத் தீர்ப்பு நாளில் நமக்கு தைரியம் (1 யோவான் 4:17)

206 தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சி (1 யோவான் 5:10-11)

207 ஜீவனை (மறுபடியும் புதிதாக்கப்பட்ட) (1 யோவான் 5:16; யாக் 5:19-20)

208 நிலைநிற்கும் என்றென்றுமுள்ள சத்தியம் (2 யோவான் 2)

209 கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவன் பிதாவையும் குமாரனையும் உடையவன். (2 யோவான் 9)

## <u>வெளிப்படுத்தின விசேஷத்தின் வாக்குத்தத்தங்கள்:</u>

210 வசனங்களை வாசிக்கிறவன் பாக்கியவான். (வெளி 1:3)

211 ஜீவவிருட்சம் (வெளி 2:7, 22:2)

212 இரண்டாம் மரணத்தால் சேதப்படுவதில்லை.(வெளி 2:11)

213 வெண்மையான குறிக்கல் (வெளி 2:17)

214 புதிய நாமம் (வெளி 2:17)

215 ஜாதிகளை ஆளும்படி ஜாதிகள் மேல் அதிகாரம் (வெளி 2:26-27; 3:21; 5:9-10; 22:4-5)

216 விடி வெள்ளி நட்சத்திரம் (வெளி 2:28)

217 வெண் வஸ்திரம் (வெளி 3:4-5; 7:9; 19:8)

218 ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தைக் கிறுக்கிப் போடாமல் (வெளி 3:5; உடன் யாத் 32:32; சங் 69:25-28)

219 தேவனுடைய ஆலயத்தில் ஓர் தூண் (வெளி 3:12)

220 தேவனுடைய ஆலயத்திலிருந்து ஒருக்காலும் நீங்குவதில்லை.(வெளி 3:12; யோவான் 14:1-3)

221 என் தேவனுடைய நாமத்தையும் (வெளி 3:12)

222 என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் (வெளி 3:12)

223 கிறிஸ்துவுடைய புதிய நாமம் (வெளி 3:12)

224 பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேம் (வெளி 3:12;21:2;9-10)

225 எல்லா தேவைகளும் நித்தியமாக சந்தித்தல் (வெளி 7:16)

226 வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல்படுவதில்லை. (வெளி 7:16)

227 ஆட்டுக் குட்டியானவரே இவர்களை மேய்த்து (தெய்வீக நடத்துதல்) (வெளி 7:17)

228 கண்ணீர் யாவையும் துடைப்பார். (வெளி 7:17; 21:4)

229 உலகத்தின் ராஜ்யங்கள் கர்த்தருக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய ராஜ்யங்கள் ஆயின. (வெளி 11:15; 19:11-21; 20:1-10)

230 தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள். (வெளி 14:13)

231 அவர்களுடைய கிரியைகள் அவர்கள் கூடப்போம். (வெளி 14:13)

232 ஆசாரியராயிருந்து அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளி 20:4-6; 1:5-6; 5:10; 22:4-5)

233 மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. (வெளி 21:3)

234 இனி மரணமுமில்லை. (வெளி 21:4)

235 இனி துக்கமுமில்லை. (வெளி 21:4)

236 இனி வருத்தமும் இல்லை. (வெளி 21:4)

237 முந்தினவைகள் ஒழிந்து போயின. (வெளி 21:5)

238 ஜீவ தண்ணீர் ஊற்றிலிருந்து இலவசமாய் கொடுப்பேன். (வெளி 21:6; 22:3,17)

239 இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதிலே ஜீவித்து என்றென்றும் பெருகுவார்கள்.(வெளி 21:24-27; 11:15; 22:4-5)

240 ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். (வெளி 22:2)

241 இனி ஒரு சாபமுமிராது. (வெளி 22:3)

242 ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்கள். (வெளி 22:14)

243 வாசல் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் (வெளி 22:14; உடன் 21:8; 22:15)

244 இதோடு எதையாகிலும் கூட்டினால் புஸ்தகத்தில் கூட்டுவார். (வெளி 22:18-19)

245 (கலகக்காரர்களின்) அவனுடைய பெயர்களை ஜீவ புஸ்தகத்திலிருந்து தேவன் எடுத்துப் போடுவார்.(வெளி 22:19 உடன் 3:5; யாத் 32:32; சங் 69:25-29)

246 பரிசுத்த நகரத்திலிருந்து அவனுடைய பங்கை எடுத்துப் போடுவார். (வெளி 22:19)

247 அவர்களுக்கு வெளிப்படுத்தலிலுள்ள ஆசீர்வாதங்களின் பங்கை எடுத்துப்போடுவார். (வெளி 22:19)

248 கர்த்தராகிய இயேசுவே வாரும் நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். (வெளி 22:7,12,20; உடன் 3:11)

## வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் இழைக்கப்பட்டதுமான பாவங்களின் அட்டவணை (370 வகைகள்)

1 நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தல் (ஆதி 3)

2 மனுஷனுடைய அக்கிரமம் (ஆதி 6:5-7)

3 (மதுவைக்) குடித்து வெறி கொள்ளுதல் (ஆதி 9:21; 19:33-38; I கொரி 6:9; கலா 5:19-21)

4 தேவனை அவமதித்தல் (ஆதி 11:1-9)

5 வஞ்சனை (ஆதி 12:12-13; 20:2; 26:7-8; 27:14,27)

6 பகை (ஆதி 27:41 உடன் கலா 5:20)

7 ஓரினச் சேர்க்கை (ஆதி 19; ரோமர் 1)

8 தகாத பாலுறவு (ஆதி 35:21-22; I கொரி 5)

9 பிறர் மீது அதிகப்படியான சலுகை எடுத்துக் கொள்ளுதல் (ஆதி 25:29-34; 27:35-36; 29:23-25)

10 பொய் சொல்லுதல் (ஆதி 26:7-8; 27:19-21)

11 பொறாமையுடன் (ஆதி 31:1-2; I சாமு 18:8-11)

12 கற்பழிப்பு (ஆதி 34:2; II சாமு 13:20)

13 கொலை செய்ய வகை தேடுதல் (ஆதி 37:18-22)

14 உயர்வு கண்டு பொறாமைப்படு (ஆதி 37:11; ரோமர் 1:29; II கொரி 12:10)

15 பரியாசம் (நகைப்புக்கு) ஏளனம் செய் (ஆதி 37:19; நீதி 17:5)

16 கடத்திச் செல்லுதல் (ஆதி 37:27-28; I தீமோத் 1:11)

17 விபச்சாரம் (ஆதி 38:13-18; I சாமு 11:4)

18 முறுமுறுப்பு (ஆதி, யாத்3:11; மேலும் பார்க்க 5:19)

19 கலகம் (யாத் 32:1-6; யூதா)

20 பொய் சாட்சி சொல்லுதல் (யாத் 20:16; நீதி 35:11)

21 விக்கிரகாராதனை (யாத் 32:1-6; யூதா)

22 தேவ தூஷணம் (லேவி 24:10-23)

23 தேவனை இழிவாக பேசுதல் (எண் 11:20)

24 ஓய்வு நாள் மீறுதல் (எண் 15:32-36)

25 தேவனை எரிச்சலூட்டுதல் (உபா 9:7-8,22;32:16-21)

26 இச்சித்தல் (யோசுவா 7:1; I இராஜா 21:1-4)

27 திருட்டு (யோசுவா 7:21; I கொரி 6:9)

28 தேவனை மறத்தல் (நியா 2:11-13)

29 தேவனை புறக்கணித்தல் (நியா 2:16-19)

30 தேவனுடைய உடன்படிக்கை (நியா 2:16-19)

31 அஞ்ஞானிகளுடன் உடன்படிக்கை (நியா 2:2)

32 மேடைகளை அகற்ற மறுத்தல் (நியா 2:2)

33 விக்கிரகங்களுடன் ஒழுக்கமற்ற செயல்கள் (நியா 2:17)

34 தேவர்களை குனிந்து பணிதல் (நியா 2:17)

35 விரைவில் வழி விட்டுப் போகுதல் (நியா 2:17)

36 கட்டளைகளை மீறுதல் (நியா 2:17)

37 தங்களைத் தான் கெடுத்துக் கொள்ளுதல் (நியா 2:19)

38 தேவர்களை சேவித்தல் (நியா 2:19; 3:6)

39 சுய நலம் (நியா 2:19)

40 பிடிவாதம் (நியா 2:19)

41 தேவனை மறத்தல் (நியா 3:7)

42 மனிதர்கள் தேவனை வெறுக்கும்படி செய்தல் (I சாமு 2:17)

43 உடன்படிக்கைப் பெட்டிக்குள் உற்றுப் பார்த்தல் (I சாமு 6:19-20)

44 தீய வழியில் வந்த ஆதாயம் (I சாமு 2:17)

45 இலஞ்சம் வாங்குதல் (I சாமு 8:3)

46 தீர்ப்பை புரட்டுதல் (I சாமு 8:3)

47 இரத்தத்தோடு உண்ணுதல் (I சாமு 14:32)

48 கர்த்தருடைய வார்த்தையை தள்ளிவிடுதல் (I சாமு 15:23)

49 அஞ்சனம் பார்த்தல் (I சாமு 28)

50 ஆசாரியனுடைய பணியில் உட்பிரவேசித்தல் (I சாமு 13:1-14)

51 மனிதர்கள் சொந்த சுதந்திரத்திலிருந்தும் உண்மையான ஆராதனையிலிருந்தும் துரத்திவிடுதல் (I சாமு 22:1-4)

52 தேவனுடைய பிள்ளைகளின் மத்தியில் பிரிவினை உண்டாக்குதல் (I சாமு 22:1-4)

53 பகையின் வித்துக்களை விதைத்தல் (I சாமு 22:7)

54 புருஷனை அவமதித்தல் (II சாமு 11:12-13)

55 பிறரை (மதுபான) வெறி கொள்ளச் செய்தல் (II சாமு 11:12-13)

56 உண்மையான ஆராதனை போல நடித்து செய்தல் (I இராஜா 12:28-33)

57 உயர்ந்த சகல மேட்டின்மேல் மேடைகளை உண்டாக்குதல் (I இராஜா 14:22-23)

58 சிலைகளை உண்டாக்கினார்கள் (I இராஜா 14:23)

59 தோப்புகளை உண்டாக்கினார்கள் (I இராஜா 17:8)

60 மற்ற தேவர்களுக்கு அஞ்சினார்கள் (I இராஜா 17:7)

61 சுற்றிலும் இருக்கிறவர்களைப்போல வீணான விக்கிரகங்களைப் பின்பற்றுதல்(II இராஜா 17:14)

62 தேவர்களுக்கு தூபங்காட்டி (II இராஜா 17:11)

63 தேவனுக்குச் செவி கொடாமல் (II இராஜா 17:14)

64 கடின இருதயமுள்ள (II இராஜா 17:14; எசேக் 3:7)

65 மாய்மாலஞ் செய்யும் வீணராகி (II இராஜா 17:15)

66 தங்கள் பிள்ளைகளை நரபலியாகச் செலுத்தி (II இராஜா 17:17)

67 குறிகேட்டு (II இராஜா 17:17)

68 நிமித்தங்கள் பார்த்து (II இராஜா 17:17)

69 வானத்தின் சேனைகளைப் பணிந்து கொண்டு (II இராஜா 17:16)

70 நாள் பார்த்து (II இராஜா 21:6)

71 குறி சொல்லுகிறவர்களை வைத்து (II இராஜா 21:6)

72 மந்திரவாதிகளை கலந்து விசாரித்து (II இராஜா 21:6)

73 அதிகமான பொல்லாப்பு செய்து (II இராஜா 21:9)

74 தங்களைத் தாழ்த்த மறுத்து (II நாளா 7:14)

75 மனம் மேட்டிமையாகி (II நாளா 26:6)

76 ஆலய பணி முட்டுகளை துண்டு துண்டாக்கி (II நாளா 28:24)

77 கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப் போட்டு (II நாளா 28:25)

78 தேவர்களுக்கு மேடைகளை உண்டாக்கி (II நாளா 28:25)

79 கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டுத் திருப்பி முதுகைக் காட்டினார்கள் (II நாளா 29:6)

80 கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணி (II நாளா 36:16)

81 ஸ்தானாபதிகளைப் பரியாசம் பண்ணி தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால் (II நாளா 36:16)

82 கலப்புத் திருமணம் செய்தால் (எஸ்றா 9)

83 தேவனுடைய மகிமையை அவமானப்படுத்தியதால் (சங் 4:2)

84 வீணானதை விரும்பினதால் (சங் 4:2)

85 பிதாக்களைப் போல வழி விலகியதால் (சங் 5:9; 78:57)

86 உள்ளம் கேடுபாடுள்ளதால் (சங் 5:9)

87 இச்சகம் பேசியதால் (சங் 5:9)

88 முகஸ்துதி பேசியதால் (சங் 5:9; 12:2-3)

89 தீவினையைப் பொருத்தி பொய்யை பேசுவதால் (சங் 7:14)

90 கொடுமை அவர்கள் தலைமேல் இருப்பதால் (சங் 7:16)

91 சிறுமைப்பட்டவனைத் துன்பப்படுத்துவதால் (சங் 10:2)

92 நீதிமான்களுக்கு கண்ணி வைப்பதால் (சங் 10:2)

93 சதி மோசங்கள் செய்வதால் (சங் 10:2)

94 பெருமை பராட்டுவதால் (சங் 10:2)

95 மறைவிடங்களில் பதுங்கி குற்றமற்றவர்களை கொலை செய்வதால் (சங் 10:8)

96 கொடுமையாய் நிற்பதால் (சங் 10:10)

97 இருமனதாகப் பேசுவதால் (சங் 12:2)

98 பெருமை பேசும் நாவை உடையவர்களாய் இருப்பதால் (சங் 12:3; 17:10)

99 எளியவர்களை கொடுமைப்படுத்துவதால் பெரு மூச்சுவிடுவதால் (சங் 12:5)

100 தங்களை தாங்கள் கெடுத்துக் கொள்வதால் (சங் 14:1; 73:8)

101 நன்மைக்குப் பதிலாகத் தீமை செய்வதால் (சங் 35:12)

102 எனக்கு ஆபத்து உண்டானபோது சந்தோஷப்பட்டார்கள் (சங் 35:15)

103 அவர்களுக்குத் தெய்வ பயம் இல்லை (சங் 36:1)

104 தனக்குத் தானே இச்சகம் பேசுகிறார்கள் (சங் 36:2)

105 புத்தியாய் நடந்து கொள்வதையும் நன்மை செய்வதையும் தீங்குக்கு விட்டுவிட்டார்கள் (சங் 36:3)

106 படுக்கையின் மேல் பொல்லாப்பை சதி செய்கிறார்கள் (சங் 36:4)

107 பொல்லாப்பை வெறுக்காது விரும்புகிறார்கள் (சங் 36:4)

108 சமாதானமாய் இருக்கிறவர்களுக்கு விரோதமாக வாழ விரும்புகிறார்கள் (சங் 55:20)

109 உடன்படிக்கையை மீறுகிறார்கள் (சங் 55:20; II தீமோத் 3:3)

110 நியாயக் கேடு செய்கிறார்கள் (சங் 58:2)

111 அபத்தம் பேச விரும்பி உள்ளத்தில் சபிக்கிறார்கள் (சங் 62:4)

112 சத்துரு பயத்தை உண்டாக்குகிறான் (சங் 64:1)

113 துன்மார்க்கருடைய இரகசிய ஆலோசனைக்கு (சங் 64:2)

114 தேவனை பரீட்சை பார்த்தார்கள் (சங் 78;18;41,56)

115 இரட்சிப்பை நம்பவில்லை (சங் 78:21)

116 அவரை விசனப்படுத்தினார்கள் (சங் 78:40)

117 பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள் (சங் 78:41)

118 அவர்களோ மதிகெட்டு திரும்பாதிருப்பார்களாக (சங் 85:8)

119 கடினமாய் பேசி பெருமை பாராட்டுகிறார்கள் (சங் 94:4)

120 எது வரைக்கும் கடினமாய் பேசுவார்கள் (சங் 94:4)

121 உமது ஜனத்தை (பரிசுத்தவான்களை) நொறுக்குகிறார்கள் (சங் 94:5)

122 உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள் (சங் 94:5)

123 தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிறார்கள் (சங் 94:20)

124 குற்றமில்லா இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள் (சங் 94:20)

125 உமது அதிசயத்தை உணரமாட்டார்கள் (சங் 106:7)

126 கிருபையின் திரட்சியை நினையாமல் இருப்பார்கள் (சங் 106:7)

127 அவருடைய கிரியைகளை மறந்தார்கள் (சங் 106:13)

128 தேவனை மறந்தார்கள் (சங் 106:13)

129 இச்சையுள்ளவர்கள் ஆனார்கள் (சங் 106:14)

130 தங்கள் பிசாசுகளுக்கு பலியிட்டு வந்தார்கள் பலியை புசித்தார்கள் (சங் 106:13)

131 தங்கள் கிரியைகளினாலும் அசுத்தமாகி சோரம் போனார்கள் (சங் 106:29,39)

132 தங்கள் குமாரர் குமாரத்திகளை பிசாசுக்கு பலியிட்டார்கள் (சங் 106:37)

133 முகாந்தரமில்லாமல் போர் செய்தார்கள் (சங் 109:3)

134 என் சிநேகத்திற்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள் (சங் 109:4)

135 நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமை செய்கிறார்கள் (சங் 109:5)

136 என் சிநேகத்திற்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள் (சங் 109:4)

137 அவன் தயை செய்ய நினையாமல் சாபத்தை விரும்பினான் (சங் 109:16,17)

138 சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தினான் (சங் 109:16)

139 யுத்தம் செய்ய நாடோறும் கூட்டம் கூடுகிறார்கள் (சங் 140:2)

140 பாவிகளோடு நடவாமல் (நீதி 1:10-19)

141 ஞானத்தை வெறுக்கிறார்கள் (நீதி 1:22)

142 அவர்கள் அறிவை வெறுத்தார்கள் (நீதி 1:29)

143 என் கடிந்து கொள்ளுதலை வெறுக்கிறார்கள் (நீதி 1:25)

144 என் ஆலோசனையை தள்ளினார்கள் (நீதி 1:25)

145 பெற்றோரின் ஆலோசனை மறவாதே (நீதி 3:1)

146 மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பாளவன் (நீதி 3:32)

147 துன்மார்க்கன் தன் கண்களால் சைகை காட்டுகிறான் (நீதி 6:13)

148 கர்த்தர் வெறுக்கிறவை மேட்டிமையின் கண் (நீதி 6:17)

149 வேசியின் கால்கள் வீட்டில் தரிக்கிறதில்லை (நீதி 7:11-12)

150 அவள் வாயாடியும் அடங்காதவள் (நீதி 7:11)

151 பிறனை அவமதிக்கிறவன் பாவஞ் செய்கிறான் (நீதி 14:21)

152 தகப்பனை பரியாசம் பண்ணி தாயின் கட்டளைகளை அசட்டை பண்ணுதல் (நீதி 15:32; 30:17; 23:22)

153 பொய்யன் கேடுள்ள நாவுக்கு செவி கொடுக்கிறான் (நீதி 17:4)

154 நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ அவன் வீட்டை விட்டு தீமை நீங்காது (நீதி 17:13)

155 நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவன் கர்த்தருக்கு அருவருப்பானவன் (நீதி 17:15)

156 மதியீனமுள்ளவனின் மனது கர்த்தருக்கு விரோதமாய் தாங்கலடையும் (நீதி 19:3)

157 மதுபானவெறி (நீதி 23:30-35)

158 பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறது மனதுக்கு சஞ்சலமானது (பிரசங்கி 1:17; 2:3)

159 என் உள்ளத்திலே சந்தோஷத்தையும் (பாவமான) இன்பத்தையும் அனுபவி என்று சொன்னேன் (பிரசங்கி 2:1-3)

160 என் இருதயத்தை மதுபானத்தாலும் வெறியாலும் சீராட்டிக் கொண்டிருக்க வகை தேடினேன் (பிரசங்கி 2:3)

161 எனக்காக சங்கீதக்காரர், காரிகள், ஐசுவரியம் முதலான இன்பமானவற்றைச் சம்பாதித்தேன் (பிரசங்கி 2:3-8)

162 என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் தடைபண்ணவில்லை (பிரசங்கி 2:10)

163 மதிகேட்டின் ஆகாமியத்தையும், புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறிய மனதை செலுத்தினேன் (பிரசங்கி 7:25)

164 தங்கள் கையின் கிரியைகளால் உண்டுபண்ணினதைப் பணிந்து கொள்கிறார்கள் (ஏசாயா 2:8)

165 கர்த்தரின் கிரியைகளை நோக்குகிறதுமில்லை (ஏசாயா 5:12)

166 சேனைகளின் கர்த்தரிடத்தில் அவரைத் தேடாமல் இருக்கிறார்கள் (ஏசாயா 9:13-16;22;12-14)

167 நியாயத்தைப் புரட்ட கட்டளைகளை எழுதுகிறார்கள் (ஏசாயா 10:1)

168 அநியாயமான தீர்ப்புச் செய்கிறார்கள் (ஏசாயா 10:2)

169 அனைவரும் மாயக்காராய் இருக்கிறார்கள் (ஏசாயா 9:17; மத் 6:1-8; 23:1-33)

170 எல்லாருடைய வாயும் ஆகாமியம் பேசும் (ஏசாயா 9:17)

171 தேவனுடைய இந்த வார்த்தையை வெறுத்து இழிவு படுத்துகிறீர்கள் (ஏசாயா 30:12)

172 இடுக்கமும் தாறுமாறும் (பொல்லாப்பை) ஆனவைகளை நம்பி சார்ந்து கொள்ளுகிறீர்கள் (பிரசங்கி 30:12)

173 நீ கடினமுள்ளவன் என்று அறிந்திருக்கிறேன் (ஏசாயா 48:4)

174 நாள் பார்க்கிறவரின் பிள்ளைகளாய் இருக்கிறீர்கள் (ஏசாயா 57:3)

175 தங்கள் மனதின் எண்ணத்தின் படி நடக்கிறார்கள் (ஏசாயா 65:5)

176 அசுத்தமான உணவை சாப்பிடுகிறார்கள் (ஏசாயா 65:4)

177 உன்னைப் பார்க்கிலும் பரிசுத்தன் என்கிறார்கள் (ஏசாயா 65:5)

178 தேவனை விட்டு தூரப்பட்டு மாயையைப் பின்பற்றுகிறார்கள் (ஏரேமியா 2:5)

179 கர்த்தர் எங்கேயென்று விசாரிப்பதில்லை (ஏரேமியா 2:6-8)

180 பாகாலைக் கொண்டு தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (ஏரேமியா 2:8)

181 வீணானவற்றைப் பின்பற்றினார்கள் (ஏரேமியா 2:8)

182 நீ வேசியாய் திரிகிறாய் (ஏரேமியா 2:20)

183 நீ உண்டுபண்ணின தேவர்களின் இலக்கமும் பட்டணங்களின் இலக்கமும் சரி (ஏரேமியா 2:28)

184 நீ உன் பொல்லாத வழிகளைக் கற்றுக் கொடுத்தாய் (ஏரேமியா 2:33)

185 பொல்லாத வழிகளை விட்டுத் திருமபும்படி புத்தியை ஏற்றுக் கொள்வதில்லை (ஏரேமியா 5:3)

186 தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணையிடுகிறார்கள் (ஏரேமியா 5:7)

187 கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ணினார்கள் (ஏரேமியா 5:11; ஓசியா 5:7; 6:7)

188 மதியீனமும் முட்டாள்தனமும் உடையவர்கள் (ஏரேமியா 5:21)

189 பாவங்களைச் செய்ய பதுங்கி கண்ணி வைக்கிறார்கள் (ஏரேமியா 5:26)

190 துன்மார்க்கரைக் கண்டிக்காமல் விடுகிறார்கள் (ஏரேமியா 5:28)

191 குருவி பிடிக்கப் பதுங்குகிறதுபோல மனுஷரைப் பிடிக்கக் கண்ணி வைக்கிறார்கள் (ஏரேமியா 5:26)

192 நீங்கள் அறியாத பொய்யான தேவர்களைப் பின்பற்றுகிறீர்கள் (ஏரேமியா 7:9)

193 தேவனுடைய வார்த்தையை வெறுக்கிறீர்கள் (ஏரேமியா 7:10)

194 தேவன் கூப்பிட்டும் ஜனங்கள் உத்தரவு கொடுக்கவில்லை. (ஏரேமியா 7:13)

195 பொய் வார்த்தைகளை நம்பச் செய்கிறீர்கள் (ஏரேமியா 7:9)

196 இந்தப் பாவங்களைச் செய்ய விடுதலை பெற்றிருக்கிறோம் என்று சொல்வீர்கள் (ஏரேமியா 7:10)

197 வேதபாரகரின் அறியாமையாகிய கள்ள எழுத்தாணி (ஏரேமியா 8:7-8)

198 பிரமாணத்தின்படி கேளாமலும் நடவாமலும் கீழப்படியாமலும் இருந்தார்கள் (ஏரேமியா 9:13; 11:8)

199 கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தை மறந்தார்கள் (ஏரேமியா 9:13)

200 இருதயக் கடினப்போக்கின் பின் தொடர்ந்தார்கள் (ஏரேமியா 9:13)

201 தேவனுக்கு விரோதமாய் என் உடன்படிக்கையை மீறி சதி செய்கிறார்கள் (ஏரேமியா 11:10)

202 பாகாலுக்கு பலிபீடத்தின் எண்ணிக்கையை அதிகரித்தார்கள் (ஏரேமியா 11:13)

203 துர்ச்சனரோ மகா தீவினை செய்தார்கள் (ஏரேமியா 11:15)

204 பொல்லாப்பு நடக்கும்போது களிகூர்ந்தார்கள் (ஏரேமியா 11:15)

205 தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டாம் என்று தடுத்தார்கள் (ஏரேமியா 11:21)

206 கர்த்தருடைய வார்த்தை எங்கே என்று கேள்வி எழுப்புகிறார்கள் (ஏரேமியா 17:15)

207 எங்கள் யோசனையின் படியே நடப்போம் என்கிறார்கள் (ஏரேமியா 18:12)

208 தேசம் சாபத்தினால் துக்கிக்கிறது (ஏரேமியா 23:10)

209 மேய்ப்பர்கள் ஆடுகளைக் கெடுத்து சிதறடிக்கிறார்கள் (ஏரேமியா 23:1)

210 என் ஜனத்தை மோசம் போக்கினார்கள் (ஏரேமியா 23:13)

211 வஞ்சகமாய் நடந்து பொல்லாப்பை விட்டு திரும்பாத படிக்குத் திடப்படுத்துகிறார்கள் (ஏரேமியா 23:14)

212 பொய் தீர்க்கதரிசனம் தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கண்டேன் (ஏரேமியா 23:25)

213 உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள் (ஏரேமியா 29:9)

214 பொய்யான வார்த்தையை என் நாமத்தைச் சொல்லி உரைத்தார்கள் (ஏரேமியா 29:23-29)

215 கர்த்தருக்கு விரோதமாய் கலகமுண்டாகப் பேசினான் (ஏரேமியா 29:32)

216 அபத்தமான தரிசனையைத் தரிசித்து பொய்க் குறியைச் சொல்லுகிறீர்கள் (எசேக் 13:1-10)

217 நீயோவென்றால் உன் அழகை நம்பினாய் (எசேக் 16:15)

218 அந்நியரைச் சேர்த்துக் கொள்கிற விபச்சார ஸ்தீரியைப் போல் இருக்கிறாய் (எசேக் 16:32)

219 நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி நீதிக்கேடு செய்யும்பொழுது அவன் நீதி நினைக்கப்படுவதில்லை (எசேக் 3:20)

220 என் ஓய்வு நாட்களைப் பரிசுத்தமாக்குங்கள் (எசேக் 20:16-20)

221 உனக்குள் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்கினார்கள் (எசேக் 22:7)

222 பரிசுத்த வஸ்துக்களை அசட்டை பண்ணி விட்டார்கள் (எசேக் 22:8)

223 வட்டிக்குக் கொடாமலும் பொலிசை வாங்காமல் வழக்கை உண்மையாய் தீர்க்கவேண்டும் (எசேக் 18:8,13,16-17; 22:62)

224 பரிதானம் வாங்குகிறவர்களாய் என்னை மறந்து விட்டீர்கள் (எசேக் 22:12)

225 அவர்கள் நடுவில் என்னை அவர்களால் கனஈனம் பண்ணப்படுகிறேன் (எசேக் 22:26)

226 தூர ஸ்தீரியோடு சோரதிருங்கள் (எசேக் 18:6)

227 என் நியாயங்களின் படி செய்து என் கட்டளைகளின் படி நடந்தால் அவன் பிழைக்கவே பிழைப்பான் (எசேக் 18:7,12,16)

228 தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு நியாயங்களைக் கைக்கொண்டு உண்மையாயிருந்தால் பிழைப்பான்(எசேக் 18:7,12,16)

229 நீ என்னை மறந்து புறம்பே தள்ளி விட்டாய் (எசேக் 23:35)

230 நீதிமான் தன் நீதியை நம்பி அநியாயஞ் செய்தால் அநியாயத்தில் சாவான் (எசேக் 33:13)

231 மந்தையையோ மேய்க்காமல் போகிறீர்கள் (எசேக் 34:2-6)

232 என் ஆலயத்தைப் பரிசுத்த குலைச்சல் ஆக்கும்படி என் உடன்படிக்கையை மீறினார்கள் (எசேக் 44:7)

233 அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களில் திராட்சரசம் குடித்தீர்கள் (தானி 5:23)

234 என் ஜனத்தின் பாவத்தைத் தின்று பசி தாகமாய் இருக்கிறார்கள் (ஓசியா 4:8)

235 அவர்கள் அக்கிரமத்தின் பேரில் தின்றாலும் திருப்தியடையார்கள் (ஓசியா 4:8)

236 கட்டையினிடத்தில்(மரத்தால் ஆன) விக்கிரகத்தினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள் (ஓசியா 4:12)

237 அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்று இருக்கிறார்கள் (ஓசியா 4:12)

238 அவர்களில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறவன் ஒருவனுமில்லை (ஓசியா 7:7,10,14)

239 அவர்கள் வஞ்சனை செய்கிறார்கள் (ஓசியா 7:2,10,14)

240 பறிகாரரின் கூட்டத்தார் கொள்ளையிடுகிறார்கள் (ஓசியா 7:1)

241 எனக்கு விரோதமாய் பொல்லாப்பு நினைக்கிறார்கள் (ஓசியா 7:15)

242 நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள் (ஓசியா 7:16)

243 அவர்கள் சபையில் கேள்வியானது படியே அவர்களை தண்டிப்பேன் முன்னாள் உணர்வின் படியே (ஓசியா 7:11,12)

244 இஸ்ரவேலின் அகந்தை அவன் முகத்துக்கு முன்பாக சாட்சியிடுகிறது (ஓசியா 7:10,14,11:5)

245 உங்கள் வழியையும், திரளையும் நம்பினீர்கள் (ஓசியா 8:4; 10:13)

246 தங்களை தப்பிதமான வழிகளில் போக அனுமதிக்கிறார்கள் (ஓசியா 9:7-9)

247 அவன் நாள்தோறும் பொய்யையும் கேட்டையும் வர்த்திக்கப் பண்ணி உடன்படிக்கை பண்ணுகிறார்கள் (ஓசியா 12:1)

248 நீ உனக்குக் கேடு உண்டாக்கிக் கொண்டாய் (ஓசியா 13:9)

249 விவேகமில்லாமல் அவன் நிற்கவில்லை (ஓசியா 13:13)

250 அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள். எல்லா முகங்களும் கருகிப்போகும். (யோவேல் 2:6)

251 உங்களுக்கு தானியத்தையும் திராட்ச ரசத்தையும் கொடுத்தேன் (யோவேல் 2:19)

252 உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் (யோவேல் 2:12)

253 கடிந்து கொள்ளுகிறவனை அவர்கள் வெறுத்து யதார்த்தமாய் பேசுகிறவனை வெறுக்கிறார்கள் (ஆமோஸ் 5:10)

254 நீதிமானை ஒடுக்குகிறீர்கள் (ஆமோஸ் 5:12)

255 பரிதானம் வாங்குகிறீர்கள் (ஆமோஸ் 5:12)

256 தீங்கு நாள் தூரமென்று எண்ணி தீர்ப்பு இல்லை என்று தங்கள் ஏமாற்றிக் கொள்கிறார்கள் (ஆமோஸ் 6:3)

257 லௌகிகமான வாழ்க்கை நடத்தி பாவஞ் செய்கிறார்கள் (ஆமோஸ் 6:4-6)

258 மனச் சாட்சியைக் கடினப்படுத்துகிறார்கள் (ஆமோஸ் 6:5-6)

259 (விக்கிரகங்களிலே) வீண் காரியத்தில் மகிழுகிறார்கள் (ஆமோஸ் 6:13)

260 தேசத்தில் எளிமையானவர்களை விழுங்குகிறார்கள் (ஆமோஸ் 8:4)

261 தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப் பண்ணுகிறார்கள் (ஆமோஸ் 8:4)

262 பாவத்தை விரும்பி நேசிக்கிறவர்களே இதைக் கேளுங்கள் (ஆமோஸ் 8:5-6)

263 தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள் (மீகா 3:11)

264 ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள் (மீகா 3:11)

265 தீர்க்கதரிசிகள் பணத்திற்குக் குறிசொல்லுகிறார்கள் (மீகா 3:11)

266 நன்மையை வெறுத்துத் தீமையை விரும்புகிறார்கள் (மீகா 3:2)

267 நியாயத்தை அருவருக்கிறார்கள் (மீகா 3:9)

268 செம்மையானவைகளைக் கோணலாக்குகிறார்கள் (மீகா 3:9)

269 கொள்ளையும் கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது (ஆபகூக் 1:3)

270 வழக்கையும் வாதையும் எழுப்புகிறார்கள் (ஆபகூக் 1:3)

271 கர்த்தரை எப்படி சிநேகித்தீர் என்று பொய்யராக்குகிறார்கள் (மல்கியா 1:2)

272 என் நாமத்தை அசட்டை பண்ணுகிறார்கள் (ஆசாரியர்கள்) (மல்கியா 1:6)

273 என் பீடத்தின் மேல் அசுத்தமான பலிகளைப் படைக்கிறார்கள் (மல்கியா 1:7-8)

274 என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினால் இகழ்ச்சி அடைய பண்ணுகிறார்கள் (மல்கியா 1:7)

275 கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்த குலைச்சல் ஆக்குகிறார்கள் (மல்கியா 2:11)

276 கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய தசமபாகங்களைத் திருடுகிறார்கள் (மல்கியா 3:10-13)

277 தள்ளிவிடுதலைச் செய்கிறவன் அப்படிப்பட்ட கொடுமையை தன் வஸ்திரத்தால் மூடுகிறான் (மல்கியா 2:16)

278 வார்த்தைகளால் கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள் (மல்கியா 2:17)

279 கர்த்தருக்கு விரோதமாய் பேசிய பேச்சு கடினமாயிருக்கிறது (மல்கியா 3:13)

280 இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான் (மத் 2:16)

281 நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப்போல் மனுஷர் காணும்படி வீதிகளிலும் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ணவேண்டாம் (மத் 6:5)

282 வீண் வார்த்தைகளைச் சொல்லி அலப்பாதேயுங்கள் (மத் 6:7)

283 மனுஷர்களுடைய தப்பிதங்களை நீங்கள் மன்னியாதிருந்தால் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் (மத் 6:14-15)

284 என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் (மத் 6:25-34)

285 பிசாசுகளின் தலைவனாகிய பெயல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்று பரிசுத்த ஆவியின் கிரியைகளைப் பற்றி தவறாகப் பொருத்தி பேசுகிறார்கள் (மத் 12:24)

286 சத்துரு பழி வாங்குவதற்காகக் களைகளை விதைத்தான் (மத் 13:24-30)

287 பொய்யான உபதேசங்களைச் செய்கிறார்கள் (மத் 16:6-12)

288 இயேசுவை கடிந்து கொள்ளத் தொடங்கினான் (மத் 16:22-25)

289 அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் பரம பிதாவும் உங்களுக்கு அப்படியே செய்வார் (மத் 18:23-35)

290 உனக்கு உண்டானவைகளை அதாவது பிரபஞ்சத்து உடைமைகளை நேசிக்காது விற்றுத் தரித்திரக்கு கொடுக்க வேண்டும். (மத் 19:16-22)

291 கூலிக்கு மேல் தரும்படி முறுமுறுக்கக் கூடாது (மத் 20:1-16)

292 எவர்களுக்கு இடம் ஆயத்தம் பண்ணப்பட்டதோ அவர்களுக்குத் தான் கிடைக்கும். அதனால் பெறுவோம் என்று எண்ணுவது கூடாத காரியம் (மத் 20:20-23)

293 மற்ற பத்துப்பேரும் அதைக் கேட்டு அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சல் (பொறாமை) ஆனார்கள் (மத் 20:24-28)

294 பொறுப்பை இடம் பெயர்த்தல் (மத் 23:1-4)

295 தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படியெல்லாம் நடந்தது (மத் 23:5)

296 விருந்துகளிலும் ஜெப ஆலயங்களிலும் முதன்மையான இடங்களை விரும்புதல் (மத் 23:6)

297 சந்தை வெளிகளில் வந்தனங்களை மனுஷரால் ரபீ ரபீ என்று அழைக்கப்பட விரும்புதல் (மத் 23:7)

298 நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள் (மத் 23:7-12)

299 மனுஷர் பிரவேசியாத படி பரலோக ராஜ்ஜியத்தை பூட்டிப் போடுகிறார்கள் (மத் 23:13)

300 மாய்மாலமான வாழ்க்கை வாழுதல் (மத் 23:14)

301 ஒருவனை தங்கள் மார்க்கத்தான் ஆக ஆக்கும்படி சுற்றி திரிகிறார்கள் (பரிசேயர்) அவன் அப்படி ஆகும்பொழுது இரட்டிப்பான நரகத்தின் ஆள் ஆக்குகிறீர்கள் (மத் 23:15)

302 பொய்யான ஆணைகளை இடுகிறார்கள் (மத் 23:16-22)

303 தேவையற்றவைகளை கண்டிப்பாக்கி உட்புறத்தைச் சுத்தமாக்குவதில்லை (மத் 23:23-24)

304 மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள் உள்ளத்திலோ அக்கிரமத்தால் நிறைந்திருக்கிறீர்கள் (மத் 23:25-26)

305 உள்ளத்திலோ மாயத்தால் நிறைந்திருக்கிறீர்கள் (மத் 23:29-33)

306 ஆயத்தமற்ற புத்தியில்லாத கன்னிகைகள் (மத் 25:1-13)

307 விழிப்பில்லாத கன்னிகைகள் (மத் 25:1-13)

308 பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரன் (மத் 25:14-30)

309 பொறுப்பில் விசுவாசமில்லாமை (மத் 25:45-51)

310 கிறிஸ்துவை மறுதலித்தல் (மத் 26:60-75)

311 கிறிஸ்து உயிரோடு எழுந்ததை மறுதலித்தல் (மத் 28:12-15; I கொரி 15:1-19)

312 தலைவனாக இருக்க முயற்சி செய்தல் (லூக்கா 22:24-27)

313 காண்கிறவர்கள் குருடராகும்படியாக நியாயத் தீர்ப்புச் செய்ய (யோவான் 9:41; 15:22-24)

314 இயேசுவைக் காட்டிக் கொடுத்தல் (யோவான் 19:11)

315 இயேசுவைப் பிடித்து அவரை கட்டி காவலுக்கு கொண்டு போனார்கள் (யோவான் 19:11)

316 இயேசு சிலுவையில் அறையப்படுதல் (அப் 2:23; 3:14-19)

317 பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொல்லுதல் (அப் 5:3)

318 கடினமான கழுத்துள்ளவர்களாய் (அப் 7:51)

319 கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சியாக மரித்தல் (அப் 7:60)

320 கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துதல் (அப் 8:1-3; 9:1-2; கலா 1:132; I தீமோத் 1:13)

321 சீமோன் ஆவி தந்தருளப்படுகிறதைக் கண்டபோது பணத்தைக் கொண்டு வந்து எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான் (அப் 8:18-23)

322 அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகை தேடி அந்த எலிமா என்பவன் அவர்களோடு எதிர்த்து நின்றான் (அப் 13:6-12)

323 அவர்கள் தேவனை அறிந்தும் தேவனென்று மகிமைப்படுத்தாது இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:21)

324 தேவனை ஸ்தோத்தரியாமலும் வீணரானார்கள் (ரோமர் 1:21)

325 அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லியும் பயித்தியகாரர் ஆனார்கள் (ரோமர் 1:21)

326 அழிவில்லாத தேவ மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், பிராணிகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள் (ரோமர் 1:23)

327 இச்சைகளினாலே தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:24)

328 தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றினார்கள் (ரோமர் 1:23)

329 சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் (ரோமர் 1:25)

330 இச்சை ரோகங்களுக்கு (இழிவான) ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:26)

331 பெண்கள் சுபாவ அநுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள் (ரோமர் 1:26)

332 அவர்கள் சகலவித அநியாயத்தினால் நிறைந்தவர்கள் ஆனார்கள் (ரோமர் 1:29)

333 வேசித்தனத்தினால் நிறைந்திருக்கிறது (ரோமர் 1:29; I கொரி 15)

334 துரோகத்தினாலும் நிறைந்திருக்கிறது (ரோமர் 1:29)

335 குரோதத்தினாலும் நிறைந்திருக்கிறது (ரோமர் 1:29)

336 கொலையினாலும் நிறைந்திருக்கிறது (ரோமர் 1:29; கலா 5:21)

337 வாக்குவாதங்களாலும் நிறைந்திருக்கிறது (ரோமர் 1:29; II கொரி 12:20)

338 வஞ்சகத்தாலும் நிறைந்தவர்கள் (ரோமர் 1:29)

339 வன்மத்தாலும் நிறைந்தவர்கள் (ரோமர் 1:29)

340 புறங்கூறுகிறவர்களுமாய் (ரோமர் 1:30)

341 தேவ பகைஞருமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

342 தூராகிருதம் பண்ணுகிறவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

343 அகந்தையுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

344 வீம்புக்காரருமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

345 பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

346 பெற்றோருக்குக் கீழ்படியாதவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:30)

347 சுபாவ அன்பில்லாதவர்களும் (ரோமர் 1:30)

348 உணர்வில்லாதவர்களும் (ரோமர் 1:30)

349 அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமா? (ரோமர் 3:3; 11:20)

350 வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது (ரோமர் 3:14)

351 பிரிவினைகளில்லாமல் (I கொரி 1:10; 3:3)

352 சுயபுணர்ச்சிக்காரரும் (I கொரி 6:9)

353 ஆண்புணர்ச்சிக்காரரும் (I கொரி 6:9)

354 திருடரும் (I கொரி 6:9)

355 கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர் வேஷத்தை தரித்துக் கொண்டவர்கள் (II கொரி 11:12-20)

356 கோபங்கள் உங்களுக்கு உண்டாயிருக்குமென்றால் (II கொரி 12:20; கலா 5:19-21)

357 விரோதங்கள் (II கொரி 12:20; கலா 5:19-21)

358 இறுமாப்பு உங்களிடத்தில் உண்டாயிருக்குமென்றால் (II கொரி 12:20)

359 கலகங்கள் (II கொரி 12:20; கலா 5:19-21)

360 அசுத்தம் (II கொரி 12:21; கலா 5:19-21)

361 கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாய் இருக்கிறார்கள் (கலா 1:7-11; 2:11-14)

362 மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ (கலா 3:3; 5:16-26; ரோமர் 6:14-23; 8:1-13)

363 இறுமாப்படைந்திருக்கிறார்கள் (I கொரி 4:18)

364 சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள் (லூக்கா 8:13; கலா 1:6-8; 4:9-11; 5:1-4 கொலோ 1:23; எபி 12:12-15; II பேதுரு 1:4-11; 2:20-22; வெளி 2:5)

365 ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் பலவித இச்சைகளில் விழுகிறார்கள் (I தீமோத் 6:9-10; 17-19)

இங்கே மேலே கூறப்பட்ட பல பாவங்களில் பெரும்பான்மையானவை வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டபடியே செய்யப்பட்டவைகள் ஆகும். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட 2713 பிரமாணத்துக் கட்டளைகளும், புதிய ஏற்பாட்டில் அட்டவனைப்படுத்தப்பட்ட 1050 கட்டளைகளும் அந்தந்த கால கட்டங்களில் மனித சமுதாயத்தில் கண்டனஞ் செய்து கண்டித்துக் கூறப்படும் பல நூற்றுக்கணக்கான பாவங்களையும் வெளிப்படுத்துகிறது.

<u>கீழே கூறப்படும் ஆத்துமாக்களை ஆக்கினைக்குள்ளாக்கும் பாவங்களின் அட்டவணையைப் பார்க்கவும்:</u>

(மாற்கு 7:19-21; ரோமர் 1:29-32; I கொரி 6:9-10; II கொரி 12:20-21; கலாத் 3:19-22; எபேசி 4:17-21; கொலோ 3:5-10; I தீமோத் 1:8-21; 4:1-8; 5:11-13; 6:3-10; II தீமோத் 3:1-13; 4:1-4; எபி 12:12-17; I பேதுரு 3:8-13; வெளி 21:8; 22:15)